# தேடவைக்கும் திருவள்ளுவர்



மெய்யப்பன் பதிப்பகம்

தமிழண்ணல்

# தேடவைக்கும் திருவள்ளுவர்!

தமிழண்ணல்

மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை.
சென்னை-600108.

முதல் பதிப்பு : ஏப்ரல், 2008

திருவள்ளுவர் ஆண்டு : 2039

**விலை : ரூ. 50.00**

மணிவாசகர் வெளியீட்டு எண் : 1484

நினைவில் வாழும்

நிறுவனர்

**ச. மெய்யப்பனார்**



டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

**'வள்ளுவம்'** இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் **'தமிழவேள்'** என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் **'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

**'பதிப்புச் செம்மல்'** என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம் :

**மணிவாசகர் நூலகம்**

12-B, மேல சன்னதி, **சிதம்பரம்** - 608001. **✆:230069**

31, சிங்கர் தெரு, பாரிமுனை, **சென்னை** - 600108. **✆:25361039**

6, சிவஞானம் தெரு, **தி. நகர், சென்னை** - 600017. **✆:24357832**

110, வடக்கு ஆவணி மூல வீதி, **மதுரை** - 625001. **✆:2622853**

15, ராஜ வீதி, **கோயமுத்தூர்** - 641001. **✆:2397155**

78, செரி சாலை, **சேலம்**-636001. **✆:3207722**

28, நந்தி கோயில் தெரு, **திருச்சி** - 620002. **✆:2706450**

---

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ்,

சென்னை – 600 021, தொலைபேசி : 25954528

# இந்நூல் ஒரு பல்சுவை விருந்து

*நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த*
*மறைமொழி தானே மந்திரம் என்ப* (தொல்.1434)

நிறைமொழி – பலவகைப் பண்பும் அறிவும் நிறைந்த சொற்கள். ஆணையிற் கிளத்தல் – தங்கள் ஆன்றமைந்தமைந்த சான்றாண்மையாலும் கல்விப் புலமையாலும், தம் ஆற்றல் தோன்றக் கூறிய (Authoritative), பொருள் பொதிந்த சொற்களே 'மந்திரம்' எனப்படும்.

*நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து*
*மறைமொழி காட்டி விடும்.* (குறள். 20)

'மந்திரம்' என்பது தேவபாடை; மேலுலகக் கடவுளர்கள் அருளியவை என்பதை மறுப்பன இவை. **நிலத்து** மறைமொழி என்ற அடைமொழி ஏன்? நினைத்துப் பாருங்கள்.

மாந்தர்கள் – சான்றோர்கள் மொழிபவை இவை. இவை 'மந்திரம்' ஆவது, மனிதனை வாழவைக்கும் தன்மை காரணமாகக் கூறப்படுவது.

இவை பொருள் பொதிந்து, உள்ளீடாகக் கனிச் சுரங்கம்போல் இருப்பதால் 'மறை' எனப்பட்டன. மறைந்திருக்கும் வாழ்வியல் உண்மைகளைத் தேடிக்கொண்டே இருக்க வேண்டும். தேடத்தேடத் தெளிவு தரும்; தேடியவர்க்கு நல்வாழ்வு தரும்.

திருமூலரின் திருமந்திரம் - நம் தமிழ் மந்திரம்.

வடவரின் 'மறையோர் ஆறு' – மறைத்து வைப்பதால் வந்தது. மற்றவர்க்கு மறைத்து விடுவதால், வேண்டும்போது இடைச் செருகல் சேர்க்கலாம்; எல்லாம் எங்களதே என வாதிடலாம்.

இந்நூலில் யான் 1949–இல் எழுதிய கட்டுரைகள்; பதிப்புச் செம்மல், புதுச்சேரிப் பல்கலைக் கழகத்தில், நிறுவிய அறக்கட்டளையில், முதன்முதலாக, மூதறிஞர் வ.சுப. மா. பற்றிப் பேசவைத்ததன் சாரம், இன்றைய தொகுப்பு நூல்களில் இடம் பெற்றவை, வானொலி உரைகள் எனப் பல்வகையின உள; இவை படிப்பவர்க்குப் பல்சுவை விருந்தாகப் பயன்படும்.

ஆழ்ந்து படிப்பவர்களை, திருவள்ளுவரின் அருகில் சென்று பழக வைக்கும் என்பது உறுதி.

**தமிழண்ணல்**

# உள்ளுறை

பக்கம்

1. திருக்குறள் கற்கும் நெறிமுறைகள் ... 5
2. திருக்குறள் – உலகின் முதல் தன் முன்னேற்றச் சிந்தனை நூல் ... 14
3. தமிழிய வள்ளுவம் – இறைவழிபாட்டு மறுமலர்ச்சி ... 33
4. வழிகாட்டுமா வள்ளுவப் பெண்ணியம் ... 48
5. காமத்துப்பால் – பாலியல் வாழ்வின் பயிற்சிக் களம் ... 54
6. வடவர் சாற்றிய தவமும் வள்ளுவர் போற்றிய தவமும் ... 63
7. வள்ளுவர் செய்த புதுமையும் புரட்சியும் ... 68
8. புரைதீர் கிளவி ... 73
9. வள்ளுவர் வகுத்த தமிழர் இயக்கம் ... 77
10. மாணிக்க வள்ளுவம் ... 86
11. திருக்குறள் – 'செல்வம்' ... 100
12. திருக்குறள் – 'அறிவு' ... 108
13. திருக்குறள் – 'அறம்' ... 122
14. குறள் நெறி: பொருள் செயல் வகை ... 136
15. குறள் நெறி: ஒற்றாடல் ... 149

# 1. திருக்குறள் கற்கும் நெறிமுறைகள்

உலகிற்குத் தமிழனின் கொடை திருக்குறள். உலக மானுட வாழ்வுக்கு நெறிமுறை வகுத்த மாமறை அது. இந்தியத் தேசிய நூலாகும். பண்பாட்டின் பிழிவு என்பதையும், தமிழர்தம் பண்பாடு உலகளாவிய பொது நோக்குடையதென்பதையும், அதனாலேயே அது உலகப் பொதுமறையாகும் தகுதியும் பெற்றுள்ள தென்பதையும் நாம் அறிதல் வேண்டும்.

திருக்குறள் தமிழனின் அடையாளம் காட்டும் நூல் என்பதைத் தமிழராகிய அனைவரும் ஒப்புதல் வேண்டும். நாம் எக்குலம், சமயம், நாடு சார்ந்து வாழ்பவராயினும் திருக்குறள் நம் பொதுமறை என ஏற்றலும் குறள்நெறி வாழ்வைப் பேணுதலும் வேண்டும். திருக்குறளை நம் நீதிமன்ற உறுதிமொழி நூலாக - பிரமாண நூலாக ஏற்றல் வேண்டும் அதற்கு முன்னோடியாக, நம் நிகழ்வுகள், சடங்குகள், கூட்டங்களில் திருக்குறளை வைத்து, உறுதிமொழி எடுத்துக் கொள்ளும் பழக்கம் தமிழ்கூறும் நல்லுலகமெங்கும் பரவ வேண்டும்.

திருக்குறள் மூலத்தை முக்கிய நாட்களில், வழிபாட்டு நேரங்களில், காலை மாலையில், குழந்தைப் பருவம் முதல் முதுமை முடிய ஓதும் பழக்கம் வேண்டும். திருக்குறள் முற்றோதுதல், திருமுறை முற்றோதுதல், திவ்வியப் பிரபந்தம் முற்றோதுதல் மூன்றும் அடிக்கடி, கூட்டு வழிபாடாக நடத்த வேண்டும்.

நயம் காணும் முயற்சியில் இறங்குதல் தவறன்று. ஆர்வ மிகுதியால் நம் கருத்தைத் திருக்குறளில் ஏற்றிப் பார்க்கும் போக்கு தவறாகும். புதுமையுடன் உரை எழுதி, படிப்பவரை வியக்க வைக்க வேண்டுமென்று, இல்லாதவற்றையும் வள்ளுவத்தில் ஏற்றிப் பார்க்கும் கற்பனை முயற்சியிலும் ஈடுபடலாகாது.

**'திருக்குறள் மூலம்'**, முதலில் அனைவருக்கும் நன்கு விளங்க வேண்டும். மாணவர்கள் பாடநூல் போலப் படிக்க இடம் தரவேண்டும். மக்கள் குறளில் என்னதான் சொல்லியிருக்கிற தென்பதை, முற்றும் உணருமாறு விளக்கங்கள் அமைய வேண்டும். அதற்காக விரித்தெழுதி, ஆய்வுரை போலாகி, ஓரளவு படிக்க ஆசைப்படுவாரையும், அயர்ச்சியடைய வைக்கவும் கூடாது.

'சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல்' என்ற உத்தி பயன் படுத்தப்பட வேண்டும்.

## திருக்குறளின் உள்ளார்ந்த கருத்து

*எடுத்துப் படிப்பவர் எவர்க்கும் விளங்கிவிட வேண்டும்.*
*வள்ளுவர் உள்ளம் – உட்கிடை – உள்ளொளி யாதெனத்*
*தெள்ளத் தெளிவுற வேண்டும்.*

இவையே ஒரு நுண்பொருளுரையின் குறிக்கோளாகும்.

திருக்குறளில் முழுமைப் பார்வை தேவை. அதாவது ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளையும், முழுவதும் பயில்வார்க்கே, தனி ஒரு குறளின் உண்மைப் பொருள் விளங்கும். இதற்கு குறள் மூலங்களையே திரும்பத்திரும்பப் படிக்க வேண்டும். மூலத்தை இவ்வாறு படித்துணர நுண்பொருளுரைகளை, ஒரு கைவிளக்காக மட்டுமே பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

குறளுக்குள்ளேயே குறளுக்கு உரை தேடவேண்டும். இயலுமானால், குறள்கள் வழியாகவே குறள் உரை விளக்கம் அமைய வேண்டும். 'ஒழுக்கத்து நீத்தார்' (21) என்பதற்கு உரை, 'பொய்தீர் ஒழுக்க நெறி' (6) என்பதில்தான் உளது. நூல் முழுவதும் இவ்வாறு தேடலாம். பொய்தீர் ஒழுக்க நெறி நின்று நீத்தாரென்பதே பொருந்தும் உரை. 'தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் உரிய ஒழுக்கம்' எனப் பரிமேலழகரும் பிறரும் எழுதி இருப்பன பொருந்தா உரைகளாகும்.

சங்க இலக்கியப் பின்னணியில் எழுந்தது குறள், தொல் காப்பியம், சங்க இலக்கியம், இரட்டைக் காப்பியம் (சிலப்பதிகாரம், மணிமேகலை) ஆகியவை. திருக்குறளை விளங்கிக் கொள்ள உதவுமிடங்கள் பலவுள. 'தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார், தோன்றலின் தோன்றாமை நன்று' (236) என்ற குறளுக்கு விளக்கம் பெற, புறநானூற்று ஒளவையின் பாடல் ஒன்று உதவுகிறது.

*...இல்இறைச் செரீஇய ஞெலிகோல் போல*
*தோன்றாது இருக்கவும் வல்லன்; மற்றதன்*
*கான்றுபடு கனைஎரி போலத்*
*தோன்றவும் வல்லன், தான் தோன்றுங் காலே* **(315)**

வீட்டு இறப்பிலே செருகிய தீக்கடைகோல் போல அமைதியாய் இருக்கும் இயல்பும் அதியமானிடம் உண்டு, கடைந்ததும் அது பற்றி

எரிவது போலப்போரில் இறங்கிவிட்டால் விளங்கித் தோன்றும் வீரமும் அவனிடம் உண்டு. எதிலும் எங்கும் தோன்றுங்கால், விளங்கிப் புகழுடன் தோன்ற வேண்டும் என்பதே இதன் பொருள் என்பது இதனால் விளங்கும். முன்னைய உரையாசிரியர்கள், “பிறந்தால் புகழோடு பிறக்க வேண்டும்; இன்றேல் விலங்காகப் பிறந்திருக்கலாம்” என எழுதுவன பொருந்தா.

தொல்காப்பியம் முதலாய பழந்தமிழ் நூல்கள் உணர்த்தும் சமுதாயப் பின்புலமும், குறளுக்கு உரை காணத்துணை செய்யும். ‘தெய்வம் தொழாஅள் கொழுநற்றொழுது எழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை’ *(55)* என்பதற்கு உரைகாணச் சங்கப் பாடல்கள் உணர்த்தும் சமுதாயப் பின்புலம் பற்றிய அறிவே உறுதுணையாகும். ‘ஒள்ளிழை மகளிர் உயர் பிறை தொழூஉம், புல்லென் மாலை’ *(239)* என்பது அகநானூறு. கன்னிப் பெண்கள் நல்ல கணவன் வாய்க்க, பிறைதொழுதல், ஒரு சடங்காக நடந்த காலம் அது. ‘பிறை தொழுக என்றல்’ என்பது ஓர் அகத்துறை. தோழி அவ்வாறு சொல்லியும், தலைவி மற்ற பெண்களுடன் சேர்ந்து பிறை தொழாது நின்றால், அவள் யாரையோ மனத்தினுள் வரித்துவிட்டாள் என்பது பொருள். இவ்வாறு தோழி, தலைவியின் களவொழுக்க இரகசியத்தைக் கண்டு கொள்வாள். எனவே ‘தெய்வம் தொழாது, கணவனைத் தொழுதெழுவாள்’ என்பது பிறை தொழாது, திருமணம் செய்து கொண்டு, மங்கல மடந்தையாய் வாழ்பவள் என்றே பொருள்படும். ‘பெய்யெனப் பெய்யும் மழை’ என்பதற்கும், விளக்கம் பெறக் கலித்தொகை உதவுகிறது. ‘அருமழை தரல் வேண்டின், தருகிற்கும் பெருமையளே’ *(39)*. ‘கில்’ ஆற்றலை உணர்த்தும் இடைச் சொல் என்பது இலக்கணம். மழையைப் பெய்விக்க வேண்டுமென்றால், அவ்வாறு தரவும் வல்லவள் என்பது குறிப்பு ‘இவன் ஊரையே விற்று விடுவான்; மணலைக் கயிறாகத் திரிப்பான்’ என்பன போலும் உலக வழக்குகள், அவ்வாறு செய்துவிடுவர் என்பதை நேரே உணர்த்துவன அல்ல. எல்லாத் திறமையும் ஆற்றலும் உள்ளவர் என்பது கருத்து. ‘மழையையும் பெய்விக்கக் கூடிய அவ்வளவு ‘சிறந்த ஆற்றலைக் கற்புவாழ்வு தரும்’ என்பதே குறிப்பு. இவைபோல, திருக்குறள் உரைகாண, அன்றைய சமுதாயச் சூழல், வாழ்க்கை நடைமுறைகளையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

அக்காலச் சமயப் பின்னணி பற்றியும் முழுவதும் தெரிந் திருந்தாலன்றிப் பொருள் காணலில் தடுமாற்றம் ஏற்படும்.

அன்று வைதிகம், சமணம், பௌத்தம் மூன்றும் நன்கு பரவி, ஒன்றுடன் ஒன்று பகைத்து, சமயப் பூசல்களால் ஒன்று ஓங்கிய காலத்தில் மற்றவை தாழ்ந்து இவ்வாறு ஊசலாடிய காலம் அது. திருவள்ளுவர் இம்மூன்றனையும் நன்கு அறிந்த நிலையில், தமது நூலைப் படைத்ததால்தான், தமது கோட்பாடுகளை ஒரு நிறுவனச் சமயமாக்காது, பொதுமை போற்றிக் கூறிச் சென்றார். அவர் மட்டும், தாமும் ஒரு நிறுவனச் சமயத்தைத் தோற்று வித்திருந்தால், இன்று நாடெங்கும் 'வள்ளுவ மடங்கள்' தோன்றி, வளர்ந்திருக்கும். கல்லாடர் "சமயக் கணக்கர் மதிவழி கூறாது, உலகியல் கூறி, பொருள் இது என்ற வள்ளுவன்", எனக் கூறி இருப்பது முற்றிலும் பொருந்தும்.

சமண, புத்த சமயங்கள் வேள்விகளை மறுத்தன. அவை போல உயிர்க்கொலை செய்யும் யாகங்கள், வேள்விகளை இவரும் மறுக்கின்றார். பிறப்பால் சாதி என்பதை மறுத்து, ஒழுக்கமே குலம், குடிக்கு, அளவுகோல் என அறுதியிடுகிறார். புத்த, சமண சமயங்கள் கடுந்துறவைப் போதித்தன. எனினும் நாட்டில், போலித் துறவே, இன்று போல் அன்றும் பரவிக் கிடந்ததால், இல்லறம் ஒன்றே அறமாகுமென்றும் துறவும் பிறரால் பழிக்கப்படாத நிலையில் ஏற்கப்படலாம் என்றும் கூறுகிறார். போலித்துறவு தவம் போன்றவற்றை மிகவும் கடிந்து கூறுகின்றார். இத்தகைய, அவரது காலத்துப் பின்னணியை வைத்தே, குறளுக்கு உரைகாண வேண்டும். 'இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை' (41) என்ற குறள்,அன்றைய வைதிகப் பின்னணியில் எழுந்தது. பிரம்மச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் என்ற நான்கு நிலைகள் அன்று விரிவாகப் பேசப்பட்டன. இல்லறம் பெருமைப்படுத்தப்படவில்லை. வாழ்க்கையில் 'வெறுப்பு நோக்கையே' சமயங்கள் போதித்தன. திருவள்ளுவர் அதை மாற்றி, இயல்பாக உண்மையாகத் தத்தம் நிலையில் வாழும் ஏனைய மூவர்க்கும் இல்லறத்தானே துணை எனக்கூறி, இல்லறத்தானுக்கு ஏற்றம் தருகிறார். இவ்வாறு அன்றைய சமயப் பின்புலத்தை அறிந்து, பொருள் காண்பதே நெறியும் முறையுமாகும்.

திருவள்ளுவர் ஒன்றே முக்கால் அடியில், சுருங்கக் கூற எடுத்துக் கொண்டதால், அதற்கெனப் பல உத்திகளைக் கையாள வேண்டி யிருந்தது. சொல், தொடர், குறிப்புப் பொருள் எனப் பலவற்றில், நுட்பமான உத்திகளைக் கையாள்கிறார். இன்று ஒரு மிகப் பெரிய

ஆய்வு நூலாக விரிக்கக் கூடியன அதிலுள. 'வரைவின் மகளிர்' அதிகாரத்தில் 'பரத்தையர்' எனக் குலப் பெயரைக் குறிக்கவே இல்லை. இன்று 'பாலியல் தொழிலினர்' என, வேறு விதமாகக் குறிப்பது போல், அவர் திருமணமாகாத மகளிர் என ஆள்வது மிகுந்த தொலை நோக்குடைய சிந்தனையாகும்.

சிலவற்றை வரையறை விதிகளாகத் தருகிறார். அதனை ஒரு வாய்பாடாகக் கொண்டு, எதனுடனும் பொருத்திப் பார்க்கலாம். 'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து, அதனை அவன்கண் விடல்' (517) என்பது, எச்சூழலுக்கும் பொருத்திப் பார்க்கக் கூடியதல்லவா? இதுபோல, இன்னும் நுட்பமாய்க் கூறுமிடங்கள் பலவுள. அவற்றைத் தேடிக் காண்பதே திருக்குறட் கல்வியாகும்.

சில குறள்கள் அதிகாரப் பொருளுடன், பொதுப் பொருளும் தருகின்றன. ஓரதிகாரத்திற்குப் பத்துக் குறள் என்னும் போது, அவ்வவ்வதிகாரத்திற்கே அவையவை உரியன என்பது மறுக்க வியலாது. வைப்பு முறை மாறினும், குறள் அதற்குரியதேயாம். 'குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள், மிகை நாடி மிக்க கொளல்' (504) என்ற குறள் 'தெரிந்து தெளிதலில்' வருகிறது. ஒருவரை வேலைக்கு அமர்த்தும்பொழுது, இவ்வாறு குணம்நாடிக் குற்றமும் நாடவேண்டும் என்பதே முதற்கருத்து, ஒரு நூலைத் திறனாயும் போதுகூட, நாம் 'குணம் நாடிக் குற்றமும் நாட' வேண்டுமென உரை காண்பன துணைப் பொருள்களே. அதிகாரத்தை நினைவிற் கொள்ளாது, பொருள்கூற முற்படுதல், அத்துணைச் சிறப்புடைய தாகாது.

திருக்குறள், மனிதன் எவ்வகையிலேனும் உலக வாழ்வில் வெற்றி பெற வேண்டுமென்பதற்கே எழுதப்பட்டதாகும். இன்று மேனாட்டார் தன்முயற்சி, தன்னம்பிக்கை, தன் முன்னேற்றம் என்ற கருத்தில் எழுதும் நூல்கள் மிகப்பல. அவை தமிழிலும் மொழியாக்கம் பெற்று வருகின்றன. முன்னரே பலர் எழுதியிருந்தாலும், தமிழில் டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி, இதன்வழி பல நூல்களை எழுதி, மக்களிடையே ஓர் எழுச்சியை ஏற்படுத்த முயல்கிறார். உலகில் முதன் முதலாகத் 'தன் முன்னேற்ற' நூல் எழுதிய பெருமை, திருவள்ளுவரையே சேரும். இந்நோக்கிலும் பொருள் காண வேண்டும். 'தன்னைத்தான் காதலனாயின்' (209); 'தன்னைத்தான் காக்கின்' (305); 'வகை அறிந்து, தற்செய்து, தற்காப்ப' (878) என்றிவ்வாறு வரும் நூற்றுக் கணக்கான குறள்கள் தன்னம்பிக்கை ஊட்டுவன; தன் முன்னேற்றத்துக்கு வழி காட்டுவன.

திருவள்ளுவர் **'தேடல்'** உத்திக்கு, வழிவகுத்துத் தம் நூலையாத்துள்ளார். 'நவில் தொறும் நூல் நயம்' காணுமாறு குறள் எழுதப்பட்டுள்ளது. அதனால் ஆயிரக்கணக்கானவர் உரை எழுதியும், பொழிவாற்றியும், ஆராய்ந்தும் குறள் நுண் பொருளைத் தேடுகின்றனர். 'குறுகத் தறித்த குறளாக' இருப்பதால், இது தேவைப்படுகிறது. இவை அனைத்தும், வள்ளுவர் உள்ளத்தைக் கண்டு மகிழவே முனைகின்றன. அதனால் திருக்குறளும் நிலை பேறடைகிறது.

வள்ளுவப் பெருமகன் **'இயைபு'** உத்தியைப் பயன்படுத்து கிறார். ஒரு குறளோடு இயைபு படுத்திப் பார்க்குமாறு, பிறிதொரு குறளைப் பிறிதோரிடத்தில் வைத்துள்ளார். 'செயற்கரிய செய்வார் பெரியர், சிறியர் செயற்கரிய செய்கலாதார்' *(26)* என்ற குறள் பெரியவர் பற்றிப் பேசுகிறது. 'பெருமை' அதிகாரத்தில், 'பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின், அருமை உடைய செயல்' *(975)* எனவரும் குறளுடன், முன்சுட்டிய குறள் இயைபுடையதாகிறது. இக்குறள் முன்னைய குறளுக்கு உரைபோலவும் உளது. இத்தகைய இயைபு படுத்தி நோக்க வேண்டிய குறள்கள் பலவுள.

நடையை வைத்தும் உத்திகளை வைத்தும், திருக்குறளுக்கு உரை தேட வேண்டுமென மூதறிஞர் வ.சுப. மாணிக்கம் சுட்டிக் காட்டியுள்ளார். 'அறத்தாறு இதுவென வேண்டா, சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை' *(37)* என்ற குறளில், 'இதை அறநெறி என்று காட்ட வேண்டாம்' என்பதே பொருளாகும். இதை நிறுவ, 'மழித்தலும் நீட்டலும் வேண்டா' *(280)* 'அஞ்சாமை அல்லால் துணை வேண்டா' *(497)* எனவரும், இதே நடையுடைய பல குறள்களும் வேண்டாம் என்றே பொருள்படுதலை மூதறிஞர் எடுத்துக் காட்டுகின்றார்.

மேலைச் சிவபுரி இராம. முத்தப்பன் தம் தந்தையார் கூறியதாக, ஒரு குறளுக்கு வாழ்க்கையொடு பொருந்திய உரை ஒன்றைக் கூறினார். அக்குறள், 'குற்றம் இலனாய், குடிசெய்து வாழ்வானைச் சுற்றமாச் சுற்றும் உலகு' *(1025)* என்பதாகும். நம் பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடி ஓர் ஊருக்குப் போகிறோம். "அந்தப் பையனா, அவனுடைய அப்பா ஒரு கொலை மட்டும் செய்தவர். இப்போது விடுதலையாகி வந்துவிட்டார். பையன் ஒவ்வொருக்கால் குடிப்பான். மற்றபடி ஒரு குற்றமும் இல்லை" என்று ஊரார் சொன்னால், அந்தப் பையனுக்கு நம் பெண்ணைக் கொடுப்போமா? சம்பந்தம் வைத்துக் கொள்வோமா? 'சுற்றமாச் சுற்ற' நம் மனம் ஒப்புமா? குற்றமில்லாத குடி வழியா, பையனா என்றுதானே தேடுவோம்.

வேறு ஓர் ஊருக்குப் போகிறோம். "பையனுக்கு அப்பா இல்லை. இரண்டு தங்கைகள். அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைக்கவே இத்தனை நாளாகப் பாடுபட்டான். இப்போது, அவர்கள் இருவருக்கும் திருமணம் முடித்து விட்டதால், இவனுக்குப் பெண் பார்க்கிறார்கள்" என்று ஊரார் சொன்னால், பொறுப்பு மிக்க கடமையுணர்வுடைய அவனுக்கு நம் பெண்ணைத் தர நாம் மனம் ஒப்புவோம். அக்குடும்பத்தில் சம்பந்தம் - உறவு வைத்துக் கொள்வோம். அதுதான் 'சுற்றமாச் சுற்றுதல்' ஆகும். இங்ஙனம் அன்றாட வாழ்வொடும், வரலாற்று நிகழ்ச்சி களோடும், கதைகளொடும், சிறுசிறு பொருத்தமான உலக நிகழ்வுகளோடும் பொருத்தி உரை விளக்கம் காண்பதால் குழந்தைகள், பள்ளி மாணவர்களைத் திருக்குறட் செயலூக்கி களாக்க இயலும்.

நூலை முழுமையாக உணர்வோர்க்கே, அந்நூலுள் 'மணியில் திகழ்தரும் நூல்போல்' (1273), உள்ளோட்டமாக ஓடும் கருத்து நீரோட்டம் புலப்படும். "இந்தியச் சமயங்கள், தத்துவங்கள் அனைத்தும் உலக வாழ்க்கையை வெறுப்பு நோக்குடன் அணுகவே பெரிதும் முயல்கின்றன; திருக்குறள் ஒன்றே உலக வாழ்க்கையை முழுவதும் விருப்பு நோக்கோடு அணுகச் செய்கின்றது. திருக்குறளில் வானமிழ்தம் (தேவாமிர்தம்), இந்திரன், தாமரைக் கண்ணான் உலகு, அளறு போலும் புராண மரபுக் கூறுகளாம் தொன்மங்கள் மிகக் குறைவாக ஆங்காங்கு இடம் பெறுகின்றன. ஆனால் "தூரத்து மேகங்கள் போல் காணப்படும். அவை இவ்வுலக வாழ்வு பற்றிய நெறிகளை வலியுறுத்த உதவியாக வருகின்றனவே தவிர, அவை பற்றிய கற்பனைகளை விளக்கவோ, விரிக்கவோ முனையவில்லை". நாமும் குறள் முழுதும் ஓடும் பொது நீரோட்டமனைய கொள்கை களைக் கண்டு கொண்டுதான் குறள்களுக்கு விளக்கம் காண வேண்டும். திருவள்ளுவர் மேலுலகம் பற்றி அக்கறைப்படவில்லை. அவர் கவலையெல்லாம் இவ்வுலகைப் பற்றியேயாம்.

உண்மையான துறவறத்தை அவர் வெறுக்கவில்லை; மறுக்கவில்லை. ஆனால் போலிகளை மிகக் கடிந்துகூறுகிறார். இல்லறமே அறம் - வாழ்வு நெறி என்பது அவர் கோட்பாடு. இல்லறத் துறவு, இல்லற வேள்வி என்பனவே அவர் போற்றுவன. ஏழு பிறப்பு என, மறுபிறப்பை, பிறவிச் சுழற்சியை ஒப்பும் அவர், அதிலிருந்து விடுபடுவது ஒன்றையே கூறி முடிக்கின்றார். ஊழ் பற்றி, அது முன்வினைப் பயன் என்பது மட்டுமன்றி, பருவ காலச் சுழற்சி போல அமைகின்ற உலகச் சூழல் திருப்பங்களே ஆகும் என்னுமாறு அவர் விளக்கம் புதுமையாய்ச் செல்கிறது.

சில குறள்கள் பழைமையை மாற்றிப் புதுவிளக்கம் தருகின்றன. "அந்தணர் என்போர் அறவோர்மற்று எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக லான்" (30) என்பது அந்தணர் என்ற சொல்லுக்குப் புதுவிளக்கம். அச்சொல் குலம் பற்றியதன்று என்பது கருத்து.

'இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம் செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்' (91) என்பது இன்சொல்லுக்கு இலக்கணம் கூறுகிறது. தவம், துறவு, வாய்மை போன்ற பல அதிகார முதற்குறள்கள், அவ்வவ் அதிகாரத் தலைப்புக்கு இலக்கணம் கூறுவதுபோல் அமைந்துள்ளமை காண்க.

மடைமாற்று என்பது ஓர் உளவியல். பல இடங்களில் அவர் மக்களைப் புதிய பயனுள்ள நெறிகளில் செலுத்தி, பயனற்ற, வேண்டாத நெறிகளைத் தாமே கைவிடுமாறு செய்ய முயல்கிறார். அவியுணவு என்று, வேள்வியில் தீ வளர்த்து, அதில் உயிரினங்களைப் போட்டு, தேவர்களுக்கு 'அர்ப்பணம்' செய்வதாகக் கூறுவதில், அவருக்குச் சற்றும் உடன்பாடில்லை. "அவி சொரிந்து ஆயிரம் வேட்டலை" விட, உயிரைக் கொல்லாமையே நன்று என்பது அவர் கருத்து.

விருந்து படைப்பதை ஒரு வேள்வியாக அவர் விளக்குகிறார். கண்கண்ட உலக விருந்தினர்க்கு விருந்து படைப்பது, கண் காணாத தேவர்களுக்கு உணவுதரச் செய்யும் வேள்வியின் பயனைத் தருமென்று, மாந்தன் கருத்தைத் திசை திருப்புகிறார்; மடை மாற்றுகிறார்; நல்வழிக்குச் செலுத்துகிறார். இத்தகைய இடங்கள் நீரோட்டம் போல, நூல் முழுவதும் பரந்து, ஆழ்ந்து, நிறைந்து கிடக்கின்றன. பிராயச்சித்தம், கழுவாய் என்பதை அவர் குறிப்பிடவில்லை. பிற சமயங்கள் யாவும், இன்றைய அரசியல் கட்சிகள் போல, "எங்களிடம் வாருங்கள்! எல்லாப் பாவத்துக்கும் மன்னிப்பு வாங்கித் தருகிறோம். இன்ன இன்ன பாவத்துக்கு, இவையிவை பிராயச்சித்தச் சடங்குகளாகும். கொஞ்சம் பணம் செலவழித்து, பரிகாரம் செய்தால் போதும். செய்த பாவத்துக்கும், செய்யப் போகிற பாவத்துக்கும் பரிகாரம் கிடைக்கும்." என்று நாளும் நூல்களை எழுதி, பேசி, விளம்பரம் செய்ய வேண்டியவை ஆயின. திருவள்ளுவர் ஒருவரே, இந்தியச் சிந்தனையில், செய்த பாவத்தை அனுபவித்தே தீரவேண்டும் என்றவர். பரிகாரத்துக்கும் மன்னிப்புக்கும் வழி சொல்லாதவர். நல்லதைச் செய்வதன் மூலமே அல்லதைப் போக்க முடியுமென்றவர்.

இன்றைய இந்தியா கெட்டுக் குட்டிச் சுவரானதற்கு, இப் ‘பாவ விமோசன, பரிகார, பிராயச்சித்த, கழுவாய் தேடும்’ சடங்குகளையும் நம்பிக்கைகளையும் பரப்பியதே அடிப்படைக் காரணமாகும்.

திருக்குறளில் பண்புருவ இறைவழிபாடு, தலைமைப் பண்பை அடைதல், ஆளுமை மேம்பாடு, திறமைகளின் உச்சத்தைத் தொடுதல், காதல் வாழ்வு, பழகும் பண்பாடு, குடும்பநலம், ஆட்சித் திறன், தன்னம்பிக்கை, தன்முயற்சித்தவம், துன்பத்திற்குத் துன்பம், வினைக்கோட்பாடு, நட்புறவு, அயல்நாட்டுறவு, மனிதரைக் கொண்டு ஆளுதல், குடிமைப் பயிற்சி என மிகப் பல துறைகளாகத் தனித்தனியே பிரித்து நோக்கக் கூடிய கூறுகள் உள. இவை அனைத்தையும் விளங்கிக் கொள்ளவும், இவற்றின் வழி பயிற்சி பெறவும் முனைந்தால்தான் குறள்வழி வாழ்வும், ஆட்சியும் பிறவும் அமையும்.

திருக்குறளின் உள்ளொளியைத் ‘தேடல்’ நடந்து கொண்டே இருக்கிறது; இன்னும் நடக்கும்.

திருவள்ளுவரின் உட்கிடையை அறிந்து பெரிதும் அருகிற் செல்லுதல், ஓரளவு சென்று தடுமாறுதல், மிக விலகிப் போய்விடுதல், திரும்பி விடுதலெனப் பலவாறு இம்முயற்சி நடந்து வருகிறது.

நாமனைவரும் ஒவ்வொரு வகையில் திருவள்ளுவரை அணுகவே முயல்கிறோம்.

இங்குக் கூறிய, ‘கற்கும் நெறி முறைகளை’யும், இன்ன பிறவற்றையும் அளவு கோல்களாகக் கொண்டு, அறிவியல் முறையில் அணுகினால், வள்ளுவத்தின் உள்ளொளி தெள்ளிதிற் புலனாகும். அதை நாமும் உணர்ந்து, பிறர்க்கும் உணர்த்தி, நம் உள்ளொளியைப் பெருக்கினால், ‘உலப்பிலா ஆனந்தமாய், தேனினைச் சொரியும்’ குறள் நுண்பொருளைச் சிக்கெனப் பற்றிக் கொள்ளலாம். அங்ஙனம் முயன்று முழு வெற்றி பெறும் நாளே, திருக்குறளைத் தமிழன் தன் அடையாள நூலாகக் காட்டிக் கொள்ளும் நன்னாளாகும்.

திருக்குறள் நுண் பொருளுரை – முன்னுரை (1999)

# 2. திருக்குறள் - உலகின் முதல் தன்முன்னேற்றச் சிந்தனை நூல்

திருக்குறளின் உயிரோட்டத்தை இவ்வளவு காலமாகியும் நாம் கண்டு கொண்டோமா என்பதில் எனக்கு ஐயப்பாடு இருக்கிறது.

> "சமயக் கணக்கர் மதிவழி கூறாது
> உலகியல் கூறி, 'பொருள் இது' என்ற
> வள்ளுவன் தனக்கு....." (1420 – 22)

என்ற கல்லாடக் கருத்தை இதுகாறும் திருக்குறளுடன் நிறைவுறப் பொருத்தி ஆராய்ந்தோமா என்றால், அதிலும் குறையே காணப்படு கிறது. திருவள்ளுவர் சமயவாதிகளின் சிந்தனை வழியில் செல்லாமல் தமக்கெனப் புதுவழி கண்டார். அதனால் அவர்களை அவர் அறியவில்லை என்பதன்று. அவர்கள் கருத்துக்கள் அனைத்தையும் அறிந்து, அவற்றுள் ஒவ்வாதன அனைத்தையும் தள்ளிவிட்டுப் புதிய தடம் வகுத்தார். 'உலகியல்' கூறி என்பது மிகவும் ஆழமான சொல்லாட்சி. இவ்வுலக நடைக்கு அப்பாற்பட்டது எதுவும் அவர்க்கு உடன்பாடில்லை.

செருமானிய நாட்டுப் பெருமகன் ஆல்பர்ட்டு சுவைட்சர், மொழி பெயர்ப்பைப் படித்த அளவிலேயே திருக்குறளின் உயிரோட்டத்தைக் கண்டு கொண்டார். அவருடைய நூல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. 'இந்தியச் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்' (Indian thought and its development) என்பதில், அவர் மிக அழுத்தமான பல கருத்துக்களை - குறளுக்கு எனச் சில பக்கங்களே ஒதுக்கியிருப்பினும் - நன்கு வெளியிட் டுள்ளார். (பக்.197 - 205). மனு தரும சாத்திரம், பிராமணியச் சிந்தனை, வைதிக சமயம், பௌத்தம், பகவத்கீதை இவற்றின் வேறுபட்டதாக வள்ளுவர் சிந்தனை யிருப்பதை அவர் தொட்டுக் காட்டுகிறார். "What a difference between the Kural and Laws of Manu..." எனத் தொடங்கி அவர் வேறுபாடுகளைக் குறிக்கும் போக்கும் வியப்படையும் போக்கும் நம்மைத் தலைநிமிரச் செய்கின்றன. திருவள்ளுவர் உலகில் வாழும் மனிதருக்கு, இவ்வுலக 'ஏற்பு' மனத்துடன், வாழ்வாங்கு வாழ நூல் எழுதியவர். இவ்வுலக

வெறுப்பும் மறுப்பும், இல்லறத்தை விட்டு ஓடுவதும் மறுவுலகச் சிந்தனைகளில் மூழ்குவதும் அவர்க்கு உடன்பாடானவை அல்ல. அவர் கூறும் மறுவுலகக் குறிப்புக்கள் சிலவும் கூட, இவ்வுலக வாழ்வை மேம்படுத்தத் தூண்டு கோலாகும் அளவேயாகும்.

"In the laws of Manu, under the dominance of the Brahmanic spirit, world and life affirmation is still just tolerated alongside world and life negation.

In the Kural, world and life negation is only like distant cloud in the sky...

So a natural and ethical world and life affirmation of this kind was precent among the people of India at beginning of our era, although nothing of it can be found in Brahmanism, Buddhism and Bhagavad - Gita Hinduism...

There hardly exists in the literature of the world, a collection of maxims in which we find so much lofty wisdom..." (pp. 197-201)

சுவைட்சரின் இக்கருத்துக்கள் திருக்குறளில் பொருந்தியிருக்கு மாற்றை நாமும் அரைகுறையாக அறிவோமாயினும், அதனை இதுகாறும் நன்கு தெளிவுபடுத்திக் கொண்டோமில்லை. திருவள்ளுவருடைய சிந்தனைகள் என்பன தமிழர் பண்பாட்டுச் சிந்தனைகள். நாம் உண்மையில், பழங்கால நிலவழி வழிபாட்டின் வழிவந்தவர்கள். நம்முடன் கலந்த வைதிக சமயச் சிந்தனைகள் பல நமக்குப் புறம்பானவை. ஆனால் இன்றும் நாம், நம்மை இந்துக்கள் எனக் கூறிக்கொண்டு வைதிய கலாச்சார அடிப்படைகளையும் பின்பற்றிக் கொண்டு, திருக்குறளையும் நம் வேதமெனப் பாராட்டிக் கொண்டு தெளிவின்றிக் குழம்பிக் கிடக்கின்றோம்.

திருவள்ளுவர் 'சமயக் கணக்கர்' மதிவழி கூறாதவர். எனவே அவர் வகுத்தது 'சீக்கிய சமயம்' போலத் தனிச் சமயமாகும் தகுதியுடையதேனும் அதை இதுகாறும் நாம் 'தமிழர் சமயம்' எனப் படைத்துக் கொண்டோமில்லை. ஆனால் இன்று தமிழையும், தமிழரையும் அலைக்கழிக்கும் போக்குடையார் தொகை பெருகி வருதலால், நாம் இன்று 'தமிழர்சமயம்' காணும் ஆர்வம் கொள்ள வேண்டும். 'நான் இந்து அல்லன்; வைதிகன் அல்லன்; தமிழ்ச் சமயம் சார்ந்தவன்' எனக் குறிக்கும் நாள் வரவேண்டும். ஆங்கிலத்தில் சமயம் (Religion) என்பதை நிரப்ப நேர்ந்தால் தமிழ்ச் சமயம் (Tamil Religion) எனக் குறிக்க வேண்டும். நம் தமிழ்ச் சமயத்திற்குத்

திருக்குறளே வேதப் புத்தகம். இதற்கான சமயவிதிகள், கோயில்கள், வழிபாட்டு முறைகள், வாழ்வியற் சடங்குகள் வகுக்கப்பட வேண்டும். அவை உலகெங்குமுள்ள தமிழரை இனங்காட்டுவதாக இருக்க வேண்டும். முதற்கண் அடித்தளத்திலுள்ள தமிழர னைவரையும் இத்தமிழ்ச் சமயத்தைப் பின்பற்றுமாறு, சமயப் பரப்புத் திட்டங்கள் வகுக்க வேண்டும்.

### வாழ்வு நூல்

திருக்குறள் ஒரு 'வாழ்வு நூல்' என்பதை முதலில் நினைவிற் கொள்ளுதல் தகும். நீதி நூல் என்பதற்கும் வாழ்வு நூல் என்பதற்கும் நிரம்ப வேறுபாடுண்டு. நீதி நூல்கள் சமயச் சார்பும் அறநெறியை விதிகளாக வகுத்துக் கூறும் போக்கும் மிக்கன. வாழ்வு நூலென்பது வள்ளுவர் புதுமையாகக் கண்டது. இது நீதி நூலுடன் ஒற்றுமை யுடையது என்பதைத் தவிரத் தனக்கெனப் பல தனித் தன்மைகளை யுடையது. இங்ஙனம் திருவள்ளுவர் வாழ்வு நூலாக எழுதியதற்கு, தமிழர் பண்பாடே அடித்தளமாகும். தொல்காப்பியத்தில் இதற்கான அடிப்படைகளைக் காண்கிறோம்.

ஏனைய சமயச் சார்புடைய நீதி நூல்களில் காணப்படும் வாழ்வியற் சிந்தனைகள் பல திருக்குறளுக்கும் பொருந்தி வருவனவே. எனினும் பார்வை, நோக்கு, நடைமுறைப் படுத்துதல் போன்றவற்றில் இவை வேறுபடுகின்றன. எனவே முற்றிலுமான தெளிவுடையார்க்கன்றிப் பிறருக்கு இது குழப்பமாகவே நீடிக்கும். நுண்மாண் நுழைபுலமும் திட்ப நுட்பச் சிந்தனையும் உடையவர்களே இவற்றைக் காலப்போக்கில் தாமும் உணர்ந்து, உலகிற்கும் உணர்த்த வேண்டும்.

### வாழ்வு நூல் அறங்கூறும் முறைகள்

வாழ்வு நூல் அறங்கூறும் நெறிகளில் வேறுபாடிருக்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டுக் காண்போம். திருவள்ளுவர் தனிமனிதனின் பக்கத்தில் நின்று, அவனுடைய நிறைகுறைகளை அறிந்து, அவனை முன்னேற்றுவதற்கு, ஊக்கப்படுத்துவதற்கு, உற்சாகமூட்டுவதற்கு முயல்கிறார். எவ்வளவு கீழ்நிலையிலுள்ள வனையும் படிப்படியாக முன்னேற்றி உயர்ந்த நிலைக்குக் கொண்டு போகவும், குறை களைந்து மனிதத்துவத்தின் நிறை வளர்த்து ஒருவனை முழுமை பெற்ற மனிதனாக்கவும் அவர் எடுத்துக் கொள்ளும் சொல்வழி முயற்சிகள் பலவாகும். எவ்வாறெல்லாம் சொல்லிச் சொல்லி, அவனைத் திருத்தி விடலாம். உயர்த்திவிடலாம். முன்னேற்றிவிடலாம் என்று அவர் எத்தனையோ சோதனை முயற்சிகள் செய்து பார்க்கிறார். அவருடைய சொல்நடைகளை வைத்து இவற்றை அறியலாம்.

கல்லாதவனைப் பார்த்து, 'கற்க' என்பார். கற்பவனைக் 'கசடறக் கற்க' என்பார். கசடறக் கற்றவனை 'அதற்குத்தக நிற்க' என்பார்.

'கற்க வசதியின்றிப் போனதே' என வருந்துபவனைப் பார்த்து, 'கற்றிலனாயினும் கேட்க' என்பார். கேட்கும் விழைவு மிக்கவனைப் பார்த்து, 'எனைத்தானும் நல்லவை கேட்க' என்பார். 'காது கேட்கவில்லை; கண் தெரியவில்லை' என்றெல்லாம் வருந்துபவர்களைப் பார்த்து 'பொறி இன்மை யார்க்கும் பழியன்று' என்பார்.

ஒருவனைப் பார்த்து 'நீ வறியவனாகி விடாதே! உன்னைக் காப்பாற்றிக் கொள். நீ வறியவனாகி விட்டால் ஈன்ற தாய்கூடப் பிறன் போல நோக்க நேரும்' என விழிப்புணர்த்துவார். 'கஞ்சித் தண்ணீராயினும் உன் முயற்சியிற் கிடைத்ததை, உண்டு வாழப் பழகு' என்பார். 'ஐயோ, கடவுள் என்னை இப்படி இரந்து வாழும்படி படைத்துவிட்டாரே' எனக் கூக்குரலிடுபவனைப் பார்த்து, 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்' (1063) என்று திட்டுவார். வேறுவழியின்றி ஒன்றை இரந்து நின்று பிறரிடம் கேட்கும் நிலை உலகில் ஒரு நாளில் மக்களிடம் ஆயிரம் முறை ஏற்படுகிறது. இரத்தல் இழிவென்று உணரவேண்டும்தான். அதை மீறி மகனுக்குப் படிப்பு என்று, மகளுக்குத் திருமணமென்று இரத்தற்குத் தள்ளப்படும் ஆயிரக்கணக்கானவர்களை என்ன செய்வது? 'இரந்து கேட்கத் தக்கவர்களைக் கண்டால் இரக்க' என்றும் 'இரப்பும் ஓர் ஏஎர் உடைத்து' என்றும் 'இரத்தலும் ஈதலே போலும்' என்றும் 'இரப்பாரைஇல்லாத ஞாலம் மரப்பாவை உலகம்' என்றும் அவர் கூறுவன, உலக நடைமுறைகள் அத்தனையையும் உடன் வைத்துச் சிந்திக்க வைக்கின்றன.

'இரவு', 'இகல்' போன்ற பல அதிகாரங்களை நாம் இன்னும் ஆழமாக வாழ்க்கையுடன் வைத்துப் பொருத்திப் பார்க்க வேண்டும்.

'ஈவோமா வேண்டாமா' என்று தயங்கி நிற்பவனைப் பார்த்து 'மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று' (222) என்று தூண்டுவார். ஈத்துவக்கும் இன்பம், இசைபட வாழ்தல் என்றெல்லாம் ஊக்கப்படுத்துவார். பிறர்க்கு ஈயும் பழக்கமுடையவனைப் பார்த்து,

*'ஆற்றின் அளவறிந்து ஈக! அதுபொருள்*
*போற்றி வழங்கும் நெறி'* **(47)**

என்பார். 'முறைப்படி திட்டமிட்டு, உன்னிடம் இருக்கும் செல்வத்தின் அளவிற்கு ஏற்ப, நல்லவழியில் ஈவாயாக! பொருளைக் காத்துப் போற்றி வழங்கும் நெறி அதுவேயாகும்' என்பது இதன் கருத்து. ஒருவன் கொடுத்து, மேலும் செல்வத்தை வளர்த்து, மேலும் கொடுத்து என இவ்வாறு தானம் வளர்ந்தால் கொடையும் வளரும்.

தே. உ.

அல்லாமல் முதற் கொடையிலேயே, கொடுப்பவன் தன்னை அழித்துக் கொள்ளுமாறு கொடுத்தால், மேலும் மேலும் கொடுப்பதும் தடைப்படுமல்லவா? மேன்மேலும் கொடுப்பதற் கேனும், ஒருவன் இவ்வாறு திட்டமிட்டுக் கொடுப்பது நல்ல தன்றோ! திருக்குறள் வாழ்வியலைச் சார்ந்து அறங்கூறும் நூலென் பதற்கு இதைவிடவும் சான்று வேண்டுமோ?

'ஒப்புரவு' அதிகாரத்தில் 'ஒப்புரவினால் வரும் கேடு எனின் அஃது ஒருவன் விற்றுக்கோள் தக்கது உடைத்து' (220) என்றார் திருவள்ளுவர். 'சத்திரம் சாவடி கட்டுகிறேன் என்று கைப்பொருளை இழந்து நாசமாய்ப் போகாதே' என்று யாரேனும் தடுக்கலாம். 'பொதுநலம் என்று பணத்தை விட்டுவிட்டால் என் குடும்பம் தெருவில் நிற்குமே' என்று சிலர் தயங்கலாம். அச்சமயத்தில் அவனைப் பார்த்து, ஒப்புரவினால் கேடு வரவே வராது என வற்புறுத்துவார். இறுதியில் 'அப்படியே கேடு வந்தாலும் அதனை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளலாம்' என அவனை ஊக்கப் படுத்துவதை இக்குறள் காட்டுகிறது.

ஒருவன் ஒப்புரவு செய்ய முந்துகின்ற நல்ல உள்ளமுடைய வனாக, இயல்பிலேயே இருக்கிறான். அவன் பல ஒப்புரவுகளையும் செய்து வருகிறான். மருததுவமனை கட்டுவதற்குப் பத்து இலட்சம், கல்லூரிக் கட்டிடம் கட்ட எட்டு இலட்சம், தருமசாலை நடத்த இருபது நூறாயிரம் என அள்ளி வழங்குகிறானென்று வைத்துக் கொள்ளுங்கள். அவனிடம்,

*'உளவரை தூக்காத ஒப்புர வாண்மை*
*வளவரை வல்லைக் கெடும்'* *(480)*

என்பார் திருவள்ளுவர். 'உன்னிடமிருக்கும் செல்வத்தினளவு தெரியாது அகலக்கால் வைத்தால், செல்வமனைத்தையும் இழந்து போவாய்' என விழிப்பேற்படுத்துவார்.

இவ்வாறு திருவள்ளுவர் தனிமனிதனின் பக்கத்தில் தோன்றாத் துணையாய் நின்று வழிகாட்டுவதையும், ஊக்கப்படுத்துவதையும் மனத்திற் கொண்டே, நாம் திருக்குறளை அணுக வேண்டும். இதுவே திருக்குறள் பற்றிய 'நேரிய பார்வை' (Proper perspective) ஆகும்.

### உரை விளக்கம் - ஒரு கைவிளக்கே

திருக்குறளுக்கு உரைவிளக்கம் காண்பதும் நயம் கண்டுகூறி மகிழ்வதும் ஆராய்ச்சி செய்வதும் தேவையற்றவை அல்ல

என்பதுண்மையே. ஆயினும் அவற்றின் பயன்பாடு என்ன? உரைக்காகவா உரை, ஆராய்ச்சிக்காகவா ஆராய்ச்சி? கைவிளக்கின் பயன் பிறிதொரு பொருளை அதன் ஒளிவீச்சில் காண்பதாகும். அப்பொருளைக் கண்ட அளவில் கைவிளக்கை அணைத்து விட்டு; அப்பொருளால் வேண்டும் பயன் கொள்கிறோம். அவ்வாறன்றி, ஒளிவீச்சின் அழகு கருதி அதை அடித்தடித்து விளையாடுவது, சிறுபிள்ளைகள் செயலன்றோ? கைவிளக்குப் போன்றனவே உரை ஆராய்ச்சிகள். அவற்றின்வழி நாம் திருக்குறளின் உயிர்க் கருத்தை, உயிரோட்டத்தை, உண்மைப் பொருளைக் கண்டு கொள்ள வேண்டும். அவ்வளவில் உரையின் பயன்பாடு நிறைவடைகிறது. அதன்பின் அவ்வுண்மைப் பொருளைப் பற்றிக் கொண்டு, செயலில் இறங்கவேண்டும். அதாவது குறட்கருத்தைப் பயன் கொள்ள வேண்டும். அல்லாமல் உரை நய ஆராய்ச்சியிலேயே மூழ்கித் திளைப்பது, சிறுபிள்ளைத்தனமாக மட்டுமன்று, குறளை நாம் இதுகாறும் வாழ்வில் பயன்கொள்ளத் தடையாகவுமல்லவா ஆகிவிட்டது!

ஏணியின் பயன் பரணில் உள்ள பொருளைக் கண்டு, எடுத்துப் பயன் கொள்ளத் தானே? பாலத்தின் பயன் ஆற்றைக் கடக்கத்தானே?

நாம் ஏணி ஏற்றமும் பால உலாவலுமல்லவா செய்து கொண்டிருக்கிறோம்!

நாம் திருக்குறளை முழுமையாகக் கற்க வேண்டும்; கற்றுத் தமிழரனைவரும் அறியச் செய்ய வேண்டும். அதன்வழி தமிழரை ஒழுங்குற வாழப் பழக்க வேண்டும். அப்போதல்லவா தமிழர் பண்பாடு புத்துயிர் பெறும்?

### பலவகைப் பார்வைகள்

திருக்குறளைப் பல்வகைப் பார்வைகளில் இதுகாறும் ஆராய்ந்துள்ளார்கள். அவற்றுள் வாழ்க்கையில் வைத்து உரைத்துப் பார்க்கும் பார்வைகள் மிகமிகக் குறைவேயாகும். டாக்டர் மு.வவின் 'திருக்குறள் அல்லது வாழ்க்கை விளக்க'மும், டாக்டர் வ.சு.பமா. வின் 'வள்ளுவ'மும் வாழ்க்கைப் பார்வையில் எழுதப்பட்டவை யாகும். அதிகாரத் தலைப்புகள் பல, வள்ளுவ வாழ்க்கைச் சிந்தனையைப் புலப்படுத்துவன. இலக்கணம் போலச் சில வாழ்வு மதிப்புகட்குத் திருவள்ளுவர் புதிய வரையறைகள் தருவார். இவை எல்லாம் இடம் நோக்கிப் பொருந்திய பார்வையில் எண்ணத் தகுவனவாகும்.

'அடக்கமுடைமை' என்றால் பணிந்து போவது, பிறருக்கு அடங்கிப் போவது என்றுதான் கருதுவோம். திருவள்ளுவர் சினத்தை அடக்குதல், வாய் நீளாமல் அடக்குதல் என்பனவற்றைச்

சிறப்பாகக் குறிப்பிடுவார். எவ்வளவு மேனிலையினராயினும் ஆரவாரமின்றிப் போதலையும் குறிப்பார். 'கற்றடங்கல்', 'அறிவறிந்து ஆற்றின் அடங்கல்' என்று கல்வி கேள்வி அறிவுகளால் நிறைந்திருப்பதையும் - அதாவது பண்பும் அறிவும் திறனும் அடங்கியிருப்பதாக அடக்கமுடைமையையும் அவர் சிந்திப்பது புலனாகிறது.

'மக்கட்பேறு' என்ற அதிகாரத்தில், ஆண் பெண் வேறுபாடு கருதாது, 'மக்கள்' என்ற பொதுச் சொல்லையே திருவள்ளுவர் ஏழு குறள்களில் ஆள்கிறார். பிற இடத்தும் மகனுக்கு என்பது மகளுக்கும் கொள்ளக் கிடக்குமாறே சொல்நடையுள்ளது. ஆனால் இடைக்காலத்து உரையாசிரியர்கள் 'புதல்வரைப் பெறுதல்' என அதிகாரத் தலைப்பை மாற்றினர். திருக்குறள் நிலவுடைமைச் சமுதாயத்தில் பிறந்த, பூர்ஷ்வா இலக்கியம் - ஆணாதிக்க நூல் - எனப் பிதற்றுபவர்கள் இடைக்கால வைதிக நெறியில் ஏற்பட்ட இம்மாற்றத்தை எண்ணிப் பார்க்க வேண்டும்.

'பொச்சாத்தல்' என்பது கொண்ட கடமையை மறப்பது. ஒருவன் மிகமுயன்று ஒரு பெரும்பதவியை அடைகிறான். அடைந்ததும் அவ்வெற்றி மிதப்பில் முன்பு கூறிய, தன் கடமைகளை மறக்கிறான். அதுவே பொச்சாத்தலாகும். ஒரு பொருளை வைத்த இடம் மறந்து போகும் மறதி அன்று இது.

*'புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது*
*இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்'* **(538)**

ஒருவன் தான் புகழ்ந்து பேசியவற்றைச் செய்து முடிக்க வேண்டும். இன்றேல் அவனுக்கு ஏழு பிறவியும் பயனற்று ஒழியும். அதாவது இப்பிறவி பயனின்றி ஒழிவது திண்ணமென்பது பெறப்படுகிறது. 'உனக்கு ஏழேழு சென்மத்துக்கும் படிப்பு வராது' என்று வசை கூறுகிறோமல்லவா? அது போன்ற திட்டு இது. இதற்கு 'நீதி நூலுடையார் உயர்த்துக் கூறியவற்றைக் கடைப்பிடித்துச் செல்ல வேண்டும்' எனத் திருக்குறள் உரையாசிரியர்கள் கூறுவன, அத்துணைப் பொருந்துவன அல்ல. ஒருவன் தன் மிதப்புக் காரணமாகக் கொண்ட கடமைகளை மறந்து விடுவதையும், தான் புகழ்ந்து உயர்த்துப் பேசியவற்றை மறந்து விடுவதையுமே இவ்வாறு திருவள்ளுவர் கடிகின்றார். 'பொச்சாவாமை' என்ற அதிகாரக் குறளாகிய இது, தமிழர்களுக்கு மிகவும் பொருந்தும். தமிழ் மொழியை அவர்கள் வானளாவப் புகழ்வர். ஆனால் அவர்கள் ஒரு வரி பிழையின்றி எழுதித் தமிழை வளர்க்க மாட்டார்கள். இந்திய மக்கட்கும் இது மிகவும் பொருந்தி வரும். தேர்தல் நேரத்தில் நாட்டினைப் பற்றிப் புகழ்ந்துபேசி, பாரத நாட்டை முன்னேற்றப் போவதாக வாக்குறுதிகளை அள்ளி விடுவார்கள். ஆட்சியைப்

பிடித்த பிறகு அவற்றை மறந்தே போய்விடுவார்கள். இவர்களைப் போன்றவர்கட்காக எழுதப்பட்ட வாழ்க்கை வள்ளுவந்தான் இது.

'புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும்' என்பதை இன்று நாடு முழுவதும் வீடுதோறும் நிலைவாயிற்படியில் எழுதித் தொங்க விடலாம் என்று தோன்றுகிறது. அதிலும் அரசியல்வாதிகள் வீடுகளிலும் அவர்களுடைய நெற்றியிலும் எழுதித் தொங்கவிட வேண்டும்.

'வினைத்தூய்மை', 'வினைத்திட்பம்', 'வினைசெயல்வகை' என்ற மூன்று அதிகாரங்களும் பொது நிருவாகம் அல்லது ஆட்சியியல் பற்றியவை. இவற்றுள் பின்னவை இரண்டற்கும் முன்னதாக 'வினைத் தூய்மை'யை வலியுறுத்தும் திறம் நோக்குக, இன்று இந்திய நாட்டில் திறமைக் குறைவு இல்லை; தூய்மைக் குறைவே நம் அரசியலையும் ஆட்சியையும் சாய்க்கடை ஆக்கிவிட்டது. அதனால் நம் அன்றாட வாழ்வனைத்தும் புழைக்கடையாய்ச் சாய்க்கடை ஓடும் பாழிடங்களாகி விட்டன.

'தெரிந்து செயல் வகை', 'வினை செயல் வகை', 'பொருள் செயல் வகை' என வருவனவற்றை ஒப்பு நோக்கி, அவை வாழ்வுக்குப் பயன்படுமாற்றை உணருங்கள். 'தெரிந்து தெளிதல்', 'தெரிந்து வினையாடல்' என்பன மேலாண்மை பற்றியன. இங்ஙனம் இவை வாழ்வொடு பொருந்துமாற்றைக் கண்டு மகிழ முற்பட்டால் பயனுண்டாகும். எனவேதான் இன்றைய வாழ்வுப் பார்வைகளுடன் நாம் குறளை அணுக வேண்டியுள்ளது. இன்றேல் எக்காலத்துக்கும் உரியது குறளென எக்களிப்பதால் பயனேது?

**சொல் விளக்க வரையறைகள்**

சிலபோது திருவள்ளுவர் குறிப்பிடும் சொற்கள், தொடர்கள், கலைச் சொல்லாக்கங்களாகக் காணப்படும். வாழ்வியல் மற்றும் நீதியியல் கலைச்சொற் களஞ்சியங்களாகத் தொகுக்கவும் விளக்கவும் தக்கன அவை. 'சேர்ந்தாரைக் கொல்லி', 'செப்பம்', 'ஆற்றின் அடங்கல்', 'வழுக்காமை' 'மகிழ்ச்சியின் மைந்துறுதல்' என இவ்வாறு நூற்றுக்கணக்கில் தொகுக்கலாம். இவை எல்லாம் வாழ்க்கை விளக்கம் பெறுமாறமைய வேண்டும்.

சிலசமயம் தாம் கூறும் அறங்கட்கு, சொற்பொருள் அல்லது கலைச்சொல் விளக்கம் போலப் புதிய வரையறைகள் தருவார் திருவள்ளுவர். அவற்றுட் சில முற்றிலும் புதுமையாக, இன்றும் புரட்சிகரமாகத் தோன்றும். அவற்றை நன்கு அறிந்தால், வாழ்க்கையில் அவற்றுக்குள்ள பிடிப்புப் புலனாகும்.

'ஒழுக்கத்து நீத்தார்' என நீத்தாருக்கு இலக்கணம் கூறுவார். வெறும் நீத்தாரல்லர்; ஒழுக்க நெறி தவறாது பற்று நீங்கி நிற்பவர்களே 'நீத்தார்' எனும் சிறப்புக்குரியவர் என்பதாம். 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்' (34) என்றது, அறம் இதுதான் என அதன் அடிப்படையைச் சுட்ட வந்த வரையறையாகும்.

*'மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்*
*வளத்தக்காள் வாழ்க்கைத் துணை'* *(51)*

*'உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை*
*அற்றே தவத்திற்கு உரு'* *(261)*

என்பன வாழ்க்கைத் துணையாவது யாது? தவமாவது யாது? என விளக்குதல் காண்க. தவம் பற்றிய விளக்கம் நம் பழைய கற்பனைக்கு மறுதலையானது; புரட்சிகரமானது.

*'இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்*
*செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.'* *(91)*

'இன்சொல்லாவது யாதென்றால்' எனத் தொடங்கும் இது, ஈரம் கலந்து என்பதால் அன்பு, அருள், இரக்கம் யாவும் கலந்தமைவதைக் குறிக்கிறது. 'படிறுஇலவாம்' என்பதே மிக முக்கியம். பலர் உள்ளொன்று வைத்து, இனிமையாகப் பேசி ஏமாற்றுவார்கள். கடைக்காரன் இனிமையாகப் பேசி, விற்காத சரக்கை நம் தலைமீது கட்டிவிடுவதில்லையா? 'செம்பொருள் கண்டார்' என்று, சொல்பவரை வைத்தும் இன்சொல்லை எடைபோடச் சொல்கிறார் திருவள்ளுவர்.

*'வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்*
*தீமை இலாத சொலல்'* *(241)*

என்பதும், வாய்மை பற்றிய இலக்கண வரையறை ஒன்றை, மிகப் புதுமையாக, புரட்சியாக, வாதத்திற்குரியதாக நம் முன் வைக்கவில்லையா?

'அறிவு' என்றால் என்ன என்றும், 'அறம்' என்றால் என்ன என்றும், 'செல்வம்' என்பது என்ன என்றும் அவர் பல்வேறு இடங்களில், பலவகையான விளக்கம் தருகிறார். அவை அவற்றின் பன்முகப் பயன்பாடு நோக்கியவை ஆகும்.

'ஒப்புரவு' என்பது 'கைம்மாறு வேண்டா கடப்பாடு.' 'வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை.' பொச்சாப்பு என்பது என்ன? 'சிறந்த உவகை மகிழ்ச்சியில் சோர்வு.' இங்ஙனம் எண்ணிப்

பார்த்தால், திருவள்ளுவர் குறிப்பிடும் புதுமையான வரையறைகள் நம் உள்ளத்தை ஈர்க்கும்; நம்மைத் துள்ளி எழ வைக்கும்; வாழவழி காட்டும்; தமிழ்ப் பண்பாட்டைக் காத்து, உலகமானுடம் வெல்ல வழிவகுக்கும்.

'துறவு' அதிகாரம் முதற்குறள், அதன் இலக்கணத்தைத்தான் கூறுகிறது.

*'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்*
*அதனின் அதனின் இலன்'.* *(341)*

துறவு என்றதும் துவராடை பூண்பதா? வீட்டை விட்டு ஓடுவதா? காட்டிற்குள் ஏகுவதா? முற்றத் துறந்ததாக நடிப்பதா? அல்ல அல்ல. வெளிநாட்டுத் துணிகளை மறுத்து, உள்நாட்டு முரட்டுக் கதராடைகளையே அணிந்து வாழ்ந்த பெரும் செல்வர்கள் கைக்கொண்டது துறவில்லையா? அன்றாடம் சிறுசிறு பற்றுக்களை வேண்டாமென ஒதுக்குகிறோம்; ஆசைகளை அடக்குகிறோம். ஒரு தாய் தன் நோஞ்சான் குழந்தையை வளர்க்க ஊண் துறந்து, உறக்கம் துறந்து, பாடுபடுவனயாவும் பலவும் துறவில்லையா? மாதச் சம்பளக்காரன், வாரக் கடன் தவணைகளை அடைப்பதற்காக, அன்றன்று பலவற்றைத் துறந்து, சொத்துக்களை மீட்பதிலே துறவும் தவமும் இல்லையா?

இங்ஙனம் எண்ணிப் பார்க்கப் பார்க்கவே, நாம் திருவள்ளுவரின் அருகில் செல்கிறோம். அவரும் நம் பக்கலில் நின்று, அணைத்தும் அதட்டியும்; கனிந்தும் கடிந்தும்; தன்னியல்பாயும் சமர்த்தாகவும் வாழவழி காட்டுகிறார். அதாவது நம் வாழுந்திறனை வளர்க்கிறார்.

ஒரு தொழிலாளிக்குத் தொழிலில் பழகிப் பழகி அத்திறன் கை வருவது போல, பேச்சாளிக்குப் பேசிப் பேசியே பேச்சுத் திறன் வளர்வது போல, குறள் வழியாக வாழ்ந்து வாழ்ந்து ஒருவன் வாழுந்திறனைப் பெற வேண்டும்; அதனைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

**'தன்' முன்னேற்றம்**

'தன்' என்ற புள்ளியிலிருந்தே, மன்பதை என்ற கோடு இழுக்கப்படுகிறது. இந்தப் புள்ளியின்றிக் கோடுமில்லை; கோடு என்பது புள்ளிகளின் சேர்க்கையே என்பதும் தெளிவுபட வேண்டும்.

திருவள்ளுவர் 'தன் முன்னேற்றம்' என இன்று நாம் குறிக்கும் வாழ்க்கை முன்னேற்றத்தையே அன்று கருதினார். இங்ஙனம் அறம் சொல்லும் போக்கினால் திருக்குறள் முன்னாளைய அறநூல்கள் அனைத்தினின்றும் வேறுபடுகிறது. பிறநூல்களில் இம்முறை, இக்கருத்து இல்லை என்பதன்று கருத்து. திருவள்ளுவருக்கு முதலும் முடிவும் இதுவே கருத்தாய், தாமே திட்டமிட்டுக் கூறுவதால் இத் தனித்தன்மை இப்பேரற நூலில் படிந்துள்ளது. இன்று உலக மெங்கும் 'தன் முன்னேற்ற' நெறிமுறை நூல்கள் ஆயிரம் வகை களாய்ப் பல்கியுள்ளன. நூற்றுக்கணக்கான வகைகளில் பயில கங்கள், பயிற்சிப் பட்டறைகள் இதற்கென நடத்தப்படுகின்றன. ஆயினும் இவ்வகையில் 'தன்முன்னேற்றச் சிந்தனை'யுள்ள முதல் நூல் யாத்தவர் திருவள்ளுவரே யாவார்.

தன் முன்னேற்றம், நலம், சிறப்பு நாடுவதைச் சிலர் 'இது தன்னலமல்லவா?' எனக் கூறுவர். சிலர் 'தன் நினைப்பு, தன் முனைப்பு இவற்றை அறவே களைதலன்றோ சமயங்கள் காட்டும் வழி' என்பர். ஆணவம், அகங்காரம், அவா, ஆசைக்கு வித்திடுவ தன்றோ இத் 'தன்' முயற்சி என்பர். இவர்கள் எல்லோருமே தவறான இடத்திலிருந்து பார்த்துக் குழம்புகின்றவர் ஆவர். பிறர் நலத்தைக் குலைப்பதுதான் தன்னலமாகும். தன்னைக் காத்துக் கொள்வது, தன்னைப் பிறர்க்குதவுமாறு வளர்த்துக் கொள்வது எல்லாம் 'தன்'னிலிருந்தே தொடங்க வேண்டும். இதை நன்கு உணர்ந்தவர் திருவள்ளுவர். எனவேதான் அவர் எவ்அறத்தையும் 'தன்'னில் தொடங்கியே கூற முற்படுகிறார்.

தொல்காப்பியர்,

*"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது*
*தான்அமர்ந்து வரூஉம் மேவற் றாகும்"* *(169)*

என்று கூறியது இவண் நினையத்தகும். இன்பவுணர்வு என்பது உயிரியல்பு; அது 'தான்' விரும்பி இயல்பாகத் 'தன்'னிடத்து மலர்ந்துஅமைவதாகும். இன்பம் போலவே முன்னேற்றமென்பதும் உயிரியல்பாகும். அவாவறுத்தல், மெய்ப்பொருளுணர்வு, துறவு, தவம் என்பனவும் 'தன்' தூய்மை - தனது உயிரைத் தூய்மைப்படுத்தி ஒளியுடையதாக்கிக் கொள்ளும் அரிய முயற்சி - தனது சீவனைச் சிவமாக்கிக் கொள்ளும் புனித முயற்சியேயன்றோ!

திருவள்ளுவரைப் பொறுத்தவரை முன்னேற்றம், உயர்வு, சிறப்பு என்பன 'தன்'னில் தொடங்குவன; தன்னை மையமிட்டன; தன் முன்னேற்றம் என்பதே உலக முன்னேற்றம் ஆகும்.

## ‘தன்’னில் தொடங்குவது முன்னேற்றம்

தன்னைத் தியாகம் செய்வதால், தன்னையே இழப்பதால் உலகிற்கு உதவுவதென்பதும் ‘தன்’னின் உயர்வையே சுட்டும். உயர்ந்த குறிக்கோளுக்காகத் தன்னை இழப்பவனின் சிறப்பும் புகழும்கூட அத் ‘தன்’ என்பதன் உயர்ந்த சிறப்புள்ள இழப்பேயன்றி வேறன்று.

திருவள்ளுவர் ‘தன்’னை வற்புறுத்துமிடங்கள் பலவாகும். அவற்றுட் சிலவற்றைக் காண்போம்.

*‘தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு*
*ஐம்புலத்தாறு ஓம்பல் தலை’* **(இல்வாழ்க்கை, 43)**

ஒருவனது வருமானத்தை ஆறாகப் பகுத்து, ஆறில் ஒன்றை அரசனுக்குக் கடமையாகக் கட்டுவர். இஃது அக்கால வழக்கம், திருவள்ளுவர் எஞ்சிய ஐந்து பகுதியையும் பகுத்து வாழுமாறு கூறும்போது ‘தனக்கும்’ ஒரு பகுதி ஒதுக்கச் சொல்கிறார். இங்கு மற்றவர்களுக்குக் கொடுப்பதைச் சொன்னால் போதாதா? போதாதுதான். ஏனெனில் பரிமேலழகர் கூறுவது போலத் ‘தான் உளனாக வைத்து அறஞ்செய்ய வேண்டுதலின், தன்னை ஓம்புதலும் அறனாயிற்று.’ ஞானியும் தன்னை வைத்தே உலகைப் பார்க்கின் றான். தன்னை உயர்த்து, உயர்த்துக் கொண்டு பார்க்கப் பார்க்கவே அவன் உலகப் பார்வையும் உயர்கிறது.

## ‘தன்’னைத்தான் காதலிக்க வேண்டும்

நாம் பிறரைக் காதலிக்கிறோம். யார் யாரையோ காதலிக் கிறோம். எந்தெந்தப் பொருளையோ காதலிக்கிறோம். திருவள்ளுவர் ஒருவர்தான் தன்னைத் தான் காதலிக்க வேண்டுமென்று கூறியுள்ளார். கண்ணை இமை காப்பதுபோல் காப்பதல்லவா காதல்? அன்பு மழை பொழிந்து, ஆருயிராய்ப் பேணுவதல்லவா காதல்!

*‘தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்*
*துன்னற்க தீவினைப் பால்’* **(தீவினையச்சம், 209)**

‘முதலில் நீ உன்னை விரும்பு, உன் நலன் உயர்வில் அக்கறை வை, உன்னையே நீ காதலி! பிறகு உலக உயிர்கள்மீது உன் காதல் இயல்பாக ஏற்படும்’ என்பது வள்ளுவச் சிந்தனை. தன்னைக் காதலிப்பது என்றால், தற்காதலால் பிறருடைய அனைத்தையும் கவர்ந்து கொள்ளத் தூண்டுவது என்பதன்று. காதலியைப் பேணுவது, போற்றுவது, காப்பது போலத் தன்னைக் காக்க நினைப்பவனும் பிறருக்குத் துன்பம் செய்யமாட்டான். தன் உடலை நலமாக வைத்துக் கொள்வது; தான் சுத்தமாக நோய் நொடியின் றியிருப்பது; தன் திறமை, அறிவு ஆற்றலை வளர்த்துக் கொள்வது எல்லாம் தன்னைக் காதலிப்பதன் பயன்களாகும்.

### தன்னைத்தான் காக்க வேண்டும்

தன்னைக் காத்துக் கொள்வது உயிரியற்கை. எறும்பும் மழை வருமென உணர்ந்தால் 'முட்டை கொண்டு மேட்டு நிலம் நோக்கி' ஏறும்! கையைத் தட்டியதும் கண் இமைகள் மூடிக் கொள்கின்றனவே, ஏன்? காத்துக் கொள்வதென்பது அனிச்சைச் செயலன்றோ?

*'தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்*
*தன்னையே கொல்லும் சினம்'* *(வெகுளாமை, 205)*

தன்னைக் காத்துக் கொள்ளுதல், பிற மன்னுயிர்களைக் காப்பதற்கு நிகரானதேயாகும். தன் உடல் நலமில்லாத ஒருவர் எவ்வாறு பிறர் உடல்நலம் காக்க முடியும்? நோயாளி மருத்துவ அறிஞனாக முடியுமா?

### தற்செய்து தற்காக்க வேண்டும்

திருவள்ளுவர் தன்னை வலுப்படுத்திக் கொண்டு, எதற்கும் ஏற்றாற் போல் பணி செய்ய ஆயத்தமாவதையும் வற்புறுத்துகிறார்.

*'வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்*
*பகைவர்கண் பட்ட செருக்கு'* *(பகைத்திறம் தெரிதல், 878)*

என்பதும் அவர் வாக்கு. தன்னைச் செய்து கொள்ளுதலாவது, தன்னை ஆயத்தப்படுத்தி, தகுதிப்படுத்தி, வலுப்படுத்தி உருவாக்கிக் கொள்வது. ஓர் அலுவலகத்தில் வேலை செய்பவனும் மேன்மேலும் தன்னைத் தகுதிப்படுத்திக் காத்துக் கொண்டால்தான் போட்டியாளர்கள், பொறாமைக்காரர்களிடமிருந்து தப்பமுடியும்.

### தன்னைத்தான் கொண்டொழுக வேண்டும்

பிறர் சொல்லியோ, கட்டாயப்படுத்தியோ என்றில்லாமல் தானாகவே தன்னை வரன் முறைப் படுத்திக் கொள்பவன் எளிதில் முன்னேறுவான். ஒரு பெண்ணின் ஒழுக்கமென்பது, அவளை அவளாகவே கட்டுப்படுத்திக் காத்துக் கொள்வதைப் பொறுத்திருக்கிறது. ஓர் ஆண்மகனின் உயர்வும் அசைவிலா அவனது நடையைப் பொறுத்திருக்கிறது.

பெண்கள் மனத்திண்மையுடையவர்கள். அசைவிலா உள்ளம் உடையவர்கள். எளிதில் சலனப்படாதவர்கள். ஒரே சிந்தனை ஒருமை மனம் என்பது அவர்களின் பிறவியியல்பு. பெருமை வேண்டுபவனும் இங்ஙனம் 'ஒருமை' பேண வேண்டும் என்பார் திருவள்ளுவர்.

*'ஒருமை மகளிரே போலப் பெருமையும்*
*தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு.'* *(பெருமை, 974)*

தற்கட்டுப்பாடு அரிய பண்பாகும். ஒருவரை மற்றவர் தூண்டலாம்; உயர்வைப் புகுத்த முடியாது. முட்டுக்கொடுக்கும் சுவர் விழுந்து விடும். தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளுதல், தனக்குத் தானே வழியமைத்துக் கொள்ளுதல், தன் முன்னேற்றம் கருதித் தவிர்ப்பன தவிர்த்தும் கடிவன கடிந்தும் கொள்ளுவன கொண்டும் வாழ்தல் கடினமாகும். கசப்பு மருந்து குடித்து உடல் நலம் காப்பது போன்றது 'தன்னைத்தான் கொண்டொழுகுவது!' ஆயினும் அதுவே உயர்வுக்கு அடித்தளமாகும்.

இப்பண்பு, 'தான்' என்ற உணர்வு இயல்பாக இருப்பதால் திருவள்ளுவர் பல இடங்களில், 'தன்னுயிர்க்கு இன்னாமை தான் அறிவான், மன்னுயிர்க்கு இன்னா செயல் கூடாது' (318) என்பது போலத் 'தன்'னைச் சுட்டியே, மாந்தனை நன்னெறிக்கண் நிறுத்த முயல்வார். வண்டியைச் சிறிது தூரம் போகிற வழியில் விட்டுத்தான் திருப்ப வேண்டும். மற்றவர்க்குத் தீங்கு செய்யும் இயல்புடையவர் களை, அவர்களுக்கு வரும் துன்பம், தீங்கைக் காட்டியே திருத்த முடியுமா என்று திருவள்ளுவர் எடுக்கும் முயற்சிகள் பலவாகும்.

## தன் முன்னேற்றமே உலக முன்னேற்றம்

தன்னை வளர்த்துக் கொள்ளப் பிறரைத் துன்புறுத்துவது; தன் குடும்பம் வாழப் பிற குடும்பங்களைச் சீர்குலைப்பது; தன் சாதியினரைக் காப்பதாக எண்ணிக் கொண்டு பிற இனத்தவரை வருத்துவது - இவை எல்லாம் தன் முன்னேற்றம் என்பதில் அடங்கா. தீமை ஒரு நச்சு வளையம். அது எப்போதும் எய்தவனிடமே திரும்ப வரும். தீமையால் தீமைதான் விளையும். ஒரு பக்கத்திற்குச் செய்யப்படும் தீங்கு மறுபக்கத்திற்கு நன்மை விளைவிக்கும் என நம்புவது ஒருமனக் கோளாறு. பிறருக்குச் செய்யும் தீங்குகளும் தன்னழிவுக்கு இடப்படும் வித்துக்களே. பிறரை வாழ வைக்கத் தான் வாழ நினைப்பதே தன் முன்னேற்றம்.

பிறிதொரு வகையாகச் சொன்னால், தன் முன்னேற்றம் என்பது உலக முன்னேற்றமே. அதாவது உயர்வு தன்னில் தொடங்குகிறது.

உலக அழிவு என்பதும், பிறர் துயரம் என்பதும் தனது அழிவு, துயரத்திற்கு இடப்படும் கால்கோள்கள் என்பதை நன்கு பதியும்படி உலக மானிடர்க்கு எடுத்துரைக்க வேண்டும்.

தனது உயர்வு உலக உயர்வுமாகும் என்பதைத் திருவள்ளுவர் எடுத்துரைக்கும் பாங்கினைக் கருதிப் பாருங்கள்.

*'தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய*
*மன்னுயிர் எல்லாம் தொழும்'* *(தவம், 268)*

'தன் உயிரைத் தான் முழுமையாகப் பெறுதல்' என்பது யாது? நம் உயிர் தனித்துவம் உடையது. ஒவ்வோருயிரும் சில தனிப் பண்புகளுடன் படைக்கப் பெற்றுள்ளது. அப்பண்பை அவ்வுயிர் முழுமை பெற வளர்த்துக் கொள்ளுதலே. 'தன் உயிர் தான் அறப் பெறுதல்' ஆகும். சில பண்புகள் நம் பிறவியிலமைந்திருந்தாலும் அவை அரைகுறையாகவே இருக்கும். நாம் அதை முழுமை பெற வளர்த்துக் கொண்டு, உலகில் ஒளி வீசித் திகழ வேண்டும். இசையுணர்வு பிறவியிலமைந்தவன், அதை வளர்த்துக் கொண்டு மேலே மேலே உயர்வதுதான், தன் உயிர் தான் அறப் பெறுதலாகும். அவனை உலகம் கொண்டாடும்; புகழும்; பாராட்டும்; வணங்கும்!

அறிவுடைமையும் அவ்வாறே வளர்க்கப்பட வேண்டும். தம்மைவிடத் தம் மக்கள் அறிவுவளர்ச்சியில் மேம்படச் செய்ய வேண்டும். மனிதர்கள் பரம்பரைக்குப் பரம்பரை, இத்தனை அங்குல அளவு உடல் வளர்ச்சி பெற்றுள்ளனர் என்று சில நாடுகளில் புள்ளி விவரம் எடுத்துள்ளனர். அறிவு வளர்ச்சி பற்றி அவ்வாறு கணிக்க முடிவதில்லை. ஆயினும் திருவள்ளுவர் வழிவழியாகச் சிறிது சிறிதேனும் அறிவு வளர்ச்சி காட்ட வேண்டும் என்று கருதுகிறார்.

*'தம்மில்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து*
*மன்னுயிர்க் கெல்லாம் இனிது'* *(மக்கட்பேறு, 68)*

அஃதெப்படிப் பொருந்தும்? அவனவன் தன் உயிரை முழுமை பெற வளர்த்துக் கொண்டால் - தன் திறப் பண்புகளை முழுமை யாக்கிக் கொண்டால் - அவனுக்கு நன்மை. இதில் ஏனைய உயிர்கள் ஏன் அவனைத் தொழ வேண்டும்? தம்மைவிடத் தம் மக்கள் அறிவு மிகுதி உடையவரானால் பெற்றோர்க்கும் பிள்ளைகட்கும் நல்லது. இதில் உலக உயிர்க்கெல்லாம் என்ன இனிமையுள்ளது,

கிரிக்கட்டு வீரர் அதில் திறம் பெறப் பெற அவருக்கு நல்லது. ஆனால் உலகம் அவரைப் பாராட்டிச் சீராட்டி மகிழ்வதேன்? முன்னைய அறிஞன், திறமைசாலியை விடப் பின் வருபவன் கூடுதல் அறிவும் திறமையுமுடையவனானால், அங்ஙனம் ஆனவனுக்குத் தானே நல்லது. இதற்கு உலகம் இன்புறுவானேன்?

ஆனால் உலகம் மகிழ்கிறது, கொண்டாடுகிறது, இன்புறுகிறது. ஏன்? தன்முன்னேற்றம் என்பதுதான் உலக முன்னேற்றம் என்பதை, மன்னுயிர்கள் தாமாக உணர்கின்றன என்பதற்கு இதைவிட வேறு சான்று என்ன வேண்டும்?

## விளங்கித் தோன்றுவதே முன்னேற்றம்

முன்னேற்றம் என்பதுதான் என்ன? உலகம் பழிக்க முன்னேறுவது, செல்வம் குவிப்பது, சொத்துச் சேர்ப்பது எல்லாம் முன்னேற்றம் எனப்படா. புகழொடு எதிலும் விளங்கித் தோன்ற வேண்டும். இன்றேல் அத்துறையில் தான் ஈடுபடாமலிருப்பதே உத்தமம். பழியொடு வரும் செல்வமுடையானை, உலகம் செல்வன் என எண்ணாது; கொள்ளையன் என்று தான் நினைக்கும்.

*'தோன்றில் புகழொடு தோன்றுக, அஃதிலார்*
*தோன்றலில் தோன்றாமை நன்று.'* *(புகழ், 236)*

## தன் முயற்சித் தவம்

திருவள்ளுவர் இருவகைத் தவங்களைக் கருதுகிறார். ஒன்று முன்பே நாமறிந்த துறவறத்தவம்; மற்றது அவர் புதுமையாக நமக்கு உணர்த்தும் இல்லறத்தவம். துறவுத்தவம் உலகில் மிக அரிதாய்ப் பிறக்கும் ஞானிகள், காடு சென்று அமைதி தேடிக் கண்மூடி உள்முக நோக்கில் தியானம் செய்யும் தவமாகும். திருவள்ளுவர் தவம் பற்றிய பத்துக் குறள்களிலும், இல்லறத் தவம் பற்றியே பேசுகிறார்.

அவருக்குத் தன்முயற்சி என்பதே தவமாகும். ஒருவன் தன் கடமைகளை ஒழுங்குற, இடையறாது, ஒருமுக நோக்காக ஆற்றுவதே அவனது தவமாகும். அத்தவ முயற்சியில், முயற்சியால் வரும் துன்பங்கள், உழைப்புத் துயரங்கள், பிற தடைகள் யாவும் நேரலாம். அவற்றால் அவன் துவண்டு விடாமல், தனக்கு வரும் துன்பங்களைத் தாங்கிக் கொள்ள வேண்டும்.

தவத்திற்குத் திருவள்ளுவர் குறிப்பிடும் பிறிதொரு சொல் 'நோற்றல்'. நோற்றலாவது தாங்கிக் கொள்ளுதல், நோன்பு என விரதமிருப்பது, பசியைத் தாங்கிக் கொள்வதாகும். தனக்கு வந்தமையும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதும்தான் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாதிருப்பதுமே தவம் என்பார் திருவள்ளுவர்.

*'உற்றநோய் நோன்றல், உயிர்க்குறுகண் செய்யாமை*
*அற்றே தவத்திற்கு உரு'* *(தவம், 261)*

பிறரை வருத்தாமல் நாம் வளம்பெற முடியாதென்றும் மற்றவர்களைத் துன்புறுத்தியே ஒருவர் உயர முடியுமென்றும் நம்பு மிவ்வுலகத்தில், பிற சிற்றுயிர்கட்கும் துன்பம் செய்யாதிருப்பதை 'நோற்றல்' என்றார் திருவள்ளுவர். 'தவத்திற்கு உரு' என்ற தொடர் சிந்திக்கத் தக்கது. கண்மூடித் தியானத்திலமரும் போதி மரத்தடிப்

புத்தர் போன்ற திருவுருவம், துறவுத் தவமாதல் போல், இல்லறத் தவத்தின் திருவுருவம் இது என்றார்; அதற்கொரு பண்புருவம் கற்பித்தார்.

இவை இரண்டும் - அதாவது நமக்கு வந்தமையும் துன்பங்களைத் தாங்கிக் கொள்வதும் பிற உயிர்கட்குத் துன்பம் செய்யாமையும் - வாழ்க்கையில் கடைப்பிடித்துப் பார்த்தால்தான் அவை 'தவம்' போலக் கடினப்பட்டுச் செய்யத் தகுவன என்பது புலனாகும்.

தவம் செய்வதலாவது அவரவர் தத்தம் கடமையை முழுமை பெறச் செய்வதாகும். ஆசிரியனுக்கு ஆசிரியத் தொழில் தவம்; மருத்துவ அறிஞனுக்கு மருத்துவம் பார்ப்பது மருத்துவத் தவம்; மாணவனுக்குக் கல்வி தவம்; தொழிலாளிக்குத் தான் செய்யும் தொழில் தவம். இதில் ஏற்றத் தாழ்வில்லை. சிலர்தான் தம் தொழிலைக் கண்ணும் கருத்துமாக, ஒருமுகப்படுத்தி, இரவு பகல் பாராது முழுமை பெறச் செய்கின்றனர். தாம் ஈடுபட்ட தொழில் சிறக்கப் பாடுபட்டுத் தாமும் சிறப்புறுவதே தவமாகும்.

*'தவம்செய்வார் தங்கருமம் செய்வார்மற் றல்லார்*
*அவம்செய்வார் ஆசையுட் பட்டு'* *(தவம், 266)*

தம் கடமையை விட்டு விட்டு, மற்றொன்றைச் செய்ய முற்படுவது தவமன்று; அது அவம் ஆகும் என்று நகைப்புத் தோன்ற ஒரு சொல்லை ஆள்கிறார் திருவள்ளுவர். 'தவம்' என்ற அதிகாரத்திற்குப் பரிமேலழகர் முதலாய உரையாசிரியர்கள் எழுதிய உரைகள் பொருந்தாதவை. அவ்வதிகாரத்தை முழுதும் கற்பார் உண்மை உணர்வர். திருக்குறள் மூலத்தையே திரும்பத் திரும்பப் படித்தால் உண்மை விளங்கி விடும். திருவள்ளுவர் மொழிகள், தொல்காப்பியர் குறிப்பிடுவது போல மந்திரங்களாகும். 'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப' (1434) என்பது தொல்காப்பியம். எனவே திருக்குறள் மூலச் சொற்களையே உச்சரித்து, குறள் மூலத்தையே மந்திரம் போல் சொல்லிச் சொல்லிப் பழக வேண்டும். மேலும் திருக்குறள் முழுமையும் பயிலப் பயிலத் திருக்குறட் பொருள் விளங்கிவிடும். 'தவம்' என்ற அதிகாரத்தை முழுவதும் திரும்பத் திரும்பப், படித்தால், வள்ளுவர் உள்ளம் புலனாகும். 'திருக்குறள் மூலமும் திருவள்ளுவர் உரையும்' தான் இனி நமக்குத் தேவை என, யான் அடிக்கடி கூறுவதுண்டு. அதற்குக் காரணம் பல திருக்குறள்கட்கான விளக்கம் அக்குறள்களுக் குள்ளேயே படிந்து கிடக்கிறது. நாம் இயைபுபடுத்தியும் இணைத்தும் பொருத்தியும் சிந்தித்தால் உண்மை விளங்கி விடும்.

துறவுத் தவத்தை மேற்கொள்ளத் தக்கார் உலகில் மிகச் சிலரே யாவர். அல்லாதார் பலர் போலி நடிப்பில் உலகை ஏமாற்றுவதை அறவே வெறுப்பவர் திருவள்ளுவர். அவ் ஒரு சிலரும் அத் தவத்தைத் தம் கருமமாக மேற்கொண்டு, அதன்படி ஒழுகுவோர் ஆதல் வேண்டும். இன்றேல் அதுவும் தவமாகாது, அவமாகி விடும்.

*'தவமும் தவமுடையார்க்கு ஆகும்; அவம்அதனை*
*அஃதிலார் மேற்கொள் வது'* *(தவம், 262)*

இல்லறத் தவம், ஆசிரியத் தவம், மருத்துவத் தவம் போலத் துறவுத் தவமும் ஒருவகையாகும். பிற பல அவரவர் கடமையாதல் போல, துறவுத் தவம் துறவிகட்கு - ஞானிகட்குரிய கடமையாகும். எனவே தான் 'ஏனைய துறவுத் தவமும், அத்தவத்தைத் தம் கடமையாகக் கொண்டொழுகுவார்க்கே பொருந்துவதாகும்; அத்தகுதியிலாதார் அதனை மேற்கொள்வது அவமாகும் என்று திருவள்ளுவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

'தவம்' அதிகார முதற்குறளில், தாம் சொல்லும் தவம் இதுவெனப் புது விளக்கம் தந்துள்ள திருவள்ளுவர், அதை ஒட்டியே ஏனைய ஒன்பது குறள்களையும் படைத்துள்ளார். இதுபோலவே, 'துறவு' என்ற அதிகாரத்திற்கும் அவர் தந்துள்ள புதுமையான விளக்கம் கருதற்பாலது. 'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன்' (341) என்ற அவ்விளக்கம், இல்லறத்தி லிருந்து கொண்டே, சிறிது சிறிதாகத் துறவு மனங்கொண்டு விடுபடுவதன் விளக்கமாகும். துறவு என்றதும் முற்றிலும் உலகைவிட்டு ஓடுவது போன்ற ஒரு மாயைத் தோற்றம் உருவாகிறது. இன்றைய இந்துமதத் துறவிகள் அனைவரும் ஒருவகையில் 'சகல போக போக்கியங்களிலும்' மூழ்கித் திளைப்பவர்களாகக் காணப் படுவதை, நீங்கள் ஒருகணம் எண்ணிப் பாருங்கள். திருவள்ளுவரின் ஆற்றல்மிக்க, புரட்சிக் கருத்தின் ஆளுமை அப்போது உங்கட்குப் புலனாகும்.

மற்றொரு தவக் குறளில், 'உற்ற நோய் (துன்பம்) நோன்றல்' என்பதைத் திருவள்ளுவர் விரித்துரைக்கிறார்.

*'சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்*
*சுடச்சுட நோற்கிற் பவர்க்கு'* *(தவம், 267)*

துன்பங்கள் வாழ்வில் அலைமோதும், அவற்றைத் தாங்கிக் கொண்டு, பொறுத்துக் கொண்டு முன்னேறுபவர்கள்தான், வாழ்வில் ஒளிவீசித் திகழ்வார்கள்! தங்கம் சுடச்சுட ஒளிகூடுவதை உவமை கூறிய நுட்பம் கருதற்பாலது.

உலகில் வறுமைக்குக் காரணம் இவ் இல்லறத்தவம் செய்வார் தொகை சுருங்கியமையே என்கிறார் வள்ளுவப் பெருமான். உலகில் இலர் பலராகிய காரணம் யாதெனில், நோற்பார் சிலர் நோலாதார் பலர் (270) எனத் தவத்தின் அருமையை எடுத்தோதுகிறார்.

திருக்குறள் தனிமனித முன்னேற்றத்தையே உயிரோட்டமாக உடையது என்பதற்கு இத் 'தவம்' என்ற அதிகாரம் தக்க சான்றாகும். வேந்தன், அமைச்சன், தூதுவன், படைமறவன், காதலன், காதலி, துறவி, மேலாளன், உழவன், குடிஞன் (Citizen) என யாவராயினும் அவரவர் திறமும் நெறியும் கூறும் இத்தமிழ் மறையுள் தனிமனித முன்னேற்றம் என்பது ஊடு இழையாக ஓடிப் பரந்து கிடக்கிறது. ஆலமரத்தின் அடிமரம் போல, 'தவம்' என்ற அதிகாரமும் தனிமனித வாழ்வின் முழுமையும் வெற்றியும் சீரும் செல்வமும் சிறப்பும் பொங்கிப் பெருகுமாற்றை விதந்தோதி வழிகாட்டுகிறது. இத்தவத்தாலேயே ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும் கைகூடும்; ஏன் - கூற்றங் குதித்தலும் கை கூடும் என ஊக்கப்படுத்து கிறது. நாடித் துடிப்பின் வழி மாந்தனின் உயிரோட்டத்தை உய்த்துணர்வது போல, இத் 'தவ' அதிகாரத்தின் வழி, திருக்குறளின் உயிரோட்டத்தை நன்கு கண்டு கொள்ள முடிகிறது.

**தமிழ் உலா, 2, ச.மெ. மணிவிழா வெளியீடு (1993)**

# 3. தமிழிய வள்ளுவம்
# இறை வழிபாட்டு மறுமலர்ச்சி

## பொதுமறைத் தமிழ்முறை வழிபாட்டியக்கம்

தமிழ் மொழியும் பண்பாடும் வரலாறு தெரிந்த காலத்திலிருந்தே சரியத் தொடங்கின. புறநானூறும் பதிற்றுப்பத்தும் பத்துப்பாட்டிற் புறப்பாட்டுக்களும் தமிழ்ப் பண்பாடு சீர்குலைவை நோக்கி வீழத் தொடங்கியதையும் நினைப்பூட்டுகின்றன. ஆங்கில அறிஞன் கிப்பன் எழுதிய 'உரோமப் பேரரசின் எழுச்சியும் வீழ்ச்சியும்', எனும் நூல்போல, மேற்சுட்டிய நூல்களின் அடிப்படையில், 'தமிழகப் பேரரசுகளின் எழுச்சியும் வீழ்ச்சியும்' என எழுதுமளவு சான்றுகளும் தரவுகளும் உள்ளன. அந்த வீழ்ச்சியின் தொடர்ச்சியுடன் போராடிப் போராடி ஓய்ந்ததே, இன்றைய தமிழனின் வரலாறு. அதை மாற்ற ஒரு புரட்சிப் பேரியக்கம் தேவைப்படும் காலம் இது.

## தமிழிய வள்ளுவம்

வள்ளுவக் கோட்பாட்டில் 'பொதுமை' 'இவ்வுலக வாழ்வில் அழுத்தம் வைத்தல்', 'மறுமை, முத்தி, மேலுலகப் பேரின்பம், தேவருலகம்' பற்றிக் குறிப்பிடினும்', அவை பற்றிய கருத்தும் கவலையும் அருகிக் காணப்படுதல் போல்வன, தமிழ் இலக்கிய வழி அறியப்படும் பெரும்பான்மைக் கருத்தேயாகும். அவைய இலக்கியம் (சங்க இலக்கியம்), சுட்டி ஒருவர்ப் பெயர் கூறாதது, மக்கள் நுதலியது (மக்கள் எல்லோர்க்கும் பொதுவானது), மானுட வாழ்வு அனுபவங்களையே புனைவது, ஏனைய இயற்கை இகந்த நிகழ்வுகள், தொன்மக் கதைகள், நம்பவியலாத - கண் காணாத - புராணப் புனைவுகளை, அவற்றைச் சிறப்பிக்க எனக் குறிப்பிடாமல், இவ்வுலக வாழ்வைச் சிறப்பிக்கவும் முன்னேற்றவும் அவற்றைப் புனை கருவியாக மட்டும் பயன்படுத்திக் கொள்கின்றன எனலாம். இவை அனைத்தும் திருக்குறளில் உள்ளன. எனவே தமிழியமே, வள்ளுவமாக உருப்பெற்றது. தமிழிய வள்ளுவம் இந்திய நூல்கள் அனைத்திலும் வேறுபட்டு, உலகப் பொதுமை - மக்கட் சமன்மை - மானுடமேன்மை பற்றியே அறம் கூறுவதால், இந்தியத் தேசிய நூலாகும் தகுதி பெறுகிறது. அந்நூல் இந்தியத் தேசிய நூலானால் மட்டுமே, இந்திய ஒருமைப்பாடு (National Integration)

காப்பாற்றப்படும். வேறு எந்த நூல்வழி நடந்தாலும் பாரதம் சிதறுண்டு போகும். இந்திய நூல்களில், வள்ளுவச் சிந்தனைகள் பிற சிலவற்றில் காணப்படினும், அவை சமயம் சார்ந்தவை; அச்சார்பால் பிறரால் ஒப்புக்கொள்ள முடியாதவை. திருக்குறள் ஒன்றே சமயம் சாராதது. அதுவே, அதனைப் பாரத நாட்டுத் தேசிய நூல் எனத் தூக்கி நிறுத்தப் போதுமானது.

**வள்ளுவர் காலப் பின்னணி**

வள்ளுவர் காலப் பின்னணியில் தமிழக நிலத் தெய்வ வழிபாடுகளும் தென்புலத்தார் தொடர்பான குலத்தெய்வ நோன்புச் சடங்குகளும் ஊர் நடுவே அம்பலத்தில் வைத்து வழிபட்ட சிவ வழிபாட்டு வளர்ச்சியும் இருந்தன. இச் சூழலில் வேத வைதிக வேள்விச் சமயநெறி, வடநாட்டிலிருந்து இங்கு பரவியது. தமிழ் மன்னர்கள் வேள்வி ஆசையில் மூழ்கி, அழகிற் சிறந்த சிவந்த நிற அந்தண வேடம் பூண்ட ஆரியப் பார்ப்பனரை ஏற்றனர். பிறகு அதை எதிர்த்து புத்தமும் சமணமும் மேலோங்கின. எல்லாம் புறச் சமயங்கள். அவை சமஸ்கிருத்தையும் அதன் கிளைகளான பிற மொழிகளையும் சிறுகச் சிறுகப் புகுத்தி, களப்பிர பல்லவர் காலத்தில் தமிழைத் தாழ்த்தி, தமிழ் நூல்களை அழித்து, தமிழ்ப் பண்பாட்டைச் சிதைத்தன. அதன் தொடக்க நிலையை நாம் அவைய இலக்கியப் பாடல்களிலும் திருக்குறளிலும் அவற்றிற் கெல்லாம் முற்பட்ட தொல்காப்பியத்திலும் காண்கின்றோம். தமிழன் பக்தியிலும் இறை வழிபாட்டுச் சடங்குகளிலும் தோய்ந்து கிடந்தான். எந்தப் பக்தி வழிபாடுகளில் தமிழன் அமுந்திக் கிடந்தானோ, அதனையே கருவியாக் கொண்டு, தமிழனைப் பிராமணியம் தன்வயப்படுத்திக் கீழ்மைப் படுத்தியது. பின்னர் இடைக்காலச் சோழர் காலம் தொடங்க, முன்வழித்தடம் வகுத்த பக்தி இயக்கம், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தரில் அறப்போராகவே தொடங்கி பிற மொழி ஆதிக்கம் பரவக் காரணமாகவிருந்த சமண, புத்த மதங்களை ஒழிக்கப் புறப்பட்டது. இந்தக் காலகட்டத்தில, வைதிகம் தமிழைக் காப்பதுபோல் நடித்து, தமிழர் சமயங்களைத் தன்னுள் அடக்கி, ஒரு ‘கொள்கையில்லாக் கூட்டணி’யாக அமைத்து, முற்கூறிய இரு மதங்களையும் விரட்டியடித்தது. அவ்வாறு விரட்டியபின், அதே வைதிகம் தமிழைப் புறந்தள்ளி அழித்து ஒழிக்க அனைத்தும் செய்தது. இடைக்காலத்தே களப்பிர, பல்லவர்களால் குடியேற்றப்பட்ட

பிராமணியம், முன்னரே குடியேறி, கலப்புற்றுத் தமிழராகப் பெரும் பகுதி வாழ்ந்த பிராமணரையும் நஞ்சு புகட்டி, நன்றிகொல்லும் திறத்தில் வெற்றி கண்டது. இதனால் இங்கிருந்த ஆசான்மார், கணியர், அறிவர், கலைஞர் பலரும் பூணூல் போட்டுக் கொண்டு, வடமொழி, கிரந்தம் கற்றுக்கொண்டு, தாமும் விசுவப்பிராமணரே என்று கூறிக்கொண்டு, தாம் பின்பற்றிய தமது தமிழ் நூல்களையே அழித்தனர். எல்லோரும் சேர்ந்து, எல்லாவற்றையும் சமஸ்கிருத மாக்கித் தமிழரின் அடையாளமே அழிக்கப்படலாயிற்று. இச்சூழலில் எழுந்த ‘பக்தி இயக்கம்’ தமிழுக்கு மறுமலர்ச்சி தந்தது. ஆயினும் புத்த, சமணத்திற்கு எதிராகத் தமிழரின் கோயில் வழிபாடு, ஆழ்ந்த பக்தியாகியவற்றை அவை தம் கொள்கைகளுக்கும் ஸ்மார்த்த, அத்வைத, வைதிக, வேத மார்க்கத்திற்கும் எதிரானவை யாயினும் அவற்றை வருமானம் வாழ்வு கருதி, ஏற்றுக்கொண்டு, அவற்றுட் கலந்த பிராமணியம் ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை பதுங்கியிருந்து, பிறகு அதே கோயில்களையும் பக்தி நெறிகளையுமே கருவியாகக் கொண்டு தமிழரையும் தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் சீர்குலைத்து நாளும் நஞ்சைப் புகுத்தி வருகிறது.

### பிராமணியம் வேறு; பிராமணர்கள் வேறு

இன்றைய நிலையில் பிராமணர்கள் பலர் பிராமணியத்தைப் பின்பற்றவில்லை; பிராமணரல்லாதவர்களிடமே பிராமணியம் ஊடுருவி, மேலோங்கி நிற்கிறது. இதனால் வைதிகம், பிராமணியம் என்றால், அவற்றை எப்போதோ கைவிட்டுவிட்ட அந்தணப் பெரியவர்கள் சீற்றம் கொள்ள வேண்டாம்.

சங்கராச்சாரியர்களும் கோயில் வருமானம் கருதிப் புகுந்து கொண்டவர்களும் தமிழராகப் பிறந்தும் பிராமண வேடம் பூண்ட ஆதி சைவர், குருக்கள், முப்போதும் திருமேனி தீண்டுவார், சிவாச்சாரியர், பட்டாச்சாரியர் எனப் பெயர் கொண்டவரும் மற்றும் தனிப்பட்ட முறையில், மேலே சுட்டியவர்களால் மூளைச் சலவை செய்யப்பட்டவர்களுமே பிராமணித்தைக் காத்துத் தமிழையும் தமிழரையும் நோகடித்து வருகின்றனர்.

பிராமணியம் எனும் கொள்கைவழிக் குழுவில் இசை வேளாளர் எனப்பட்ட மேளகாரர் அடங்கிப் போக நேர்ந்தது. எல்லாம் வாழ்வு தேடிய மாற்றமே. ஆடல் பாடல் இசை யாவும்

உருமாறவும், சமஸ்கிருதமயமாகவும் இவர்கள் 'கட்சி மாறியதே' அடிப்படை ஆகும். பெருந்தச்சர் (சிற்பிகள், கல்தச்சர்), மரத் தச்சர், கணியர் (வான நூல், சோதிட நூலார்), ஆசான்மார் எனச் சமுகத்தில் பெருமை தேட முனைந்தவர் அனைவரும், வாழ்தல் வேண்டி, தாங்களே 'சமஸ்கிருதமயமாகிப்' போயினர். ஸ்தபதி, சில்ப சாஸ்திரம் என எண்ணிப் பாருங்கள். கலைகள், தொழில்கள் எல்லாம் இங்கே; அவற்றை வாய்மொழி மரபாகவும் குல வித்தையாகவும் தொழில் செய்பவரெல்லாம் தமிழர்களே. ஆனால் நூல்கள், கலைச்சொற்கள் பெயர்கள் எல்லாம் சமஸ்கிருதம். இது எதைக் காட்டுகிறது? பரம்பரையாகக் குலவழியில் மட்டும்வர வாய்மொழி மரபு போதும் என ஆக்கியது ஒரு தன்னலம்; அதைக் கிரந்த எழுத்தில் சமஸ்கிருதமாக்கியது, அக்கலையும் தொழிலும் பொதுவாகிப் பலர்க்கும் பயன்பட்டால் தொழிற் போட்டி வருமென, அதைத் தடுக்கச் செய்த குருட்டுத்தனமாகும்.

### வள்ளுவரின் தொலைநோக்கு

இவற்றையெல்லாம் முன்னுணர்ந்து, தமிழ் மொழியைக் காக்கத் தொல்காப்பியர், தம் நூலை யாத்தார். அவையப் புலவர்கள் (சங்கம் - அவையமே முன்னைய பெயர்), தமிழ்ப் பண்பாட்டு அடிப்படையுள்ள பாடல்களைத் தொகுத்துக் காத்தனர். அன்றைய கபிலர், பரணர், கௌதமனார் போலும் அந்தணப் புலவர்களே செந்தமிழ்ப் பண்பாட்டைக் காக்க முன்னின்றனர். இன்றும் பரிதிமாற்கலைஞர் என்னும் வி.கோ. சூரியநாராயண சாத்திரியார், பி.டி. சீனிவாச அய்யங்கார், ரா. இராகவய்யங்கார், உ.வே. சாமிநாதய்யர் போலும் பலர் செந்தமிழ் காத்த அந்தணர்களே.

திருவள்ளுவர் அதனால் யார் மனமும் நோகாமல், வேத வைதிகம் புகுத்திய வருணாசிரமம், வேள்விக் கொலை, பிராயச்சித்தக் கழுவாய்ப் பிழைநெறி மூன்றையும் எதிர்த்தார். தமிழரிடையே காணப்பட்ட கொலை, புலால், சூது, கள், மது போன்றவற்றைக் கடிந்தார். தமிழரை அழிப்பது - அழிக்கப்போவது, அவர்களின் உயிருடனும் உணர்வுடனும் கலந்த பக்தி நெறியே என உணர்ந்த அவர், அவர்களை அதினின்றும் மடைமாற்ற முயன்றார். அவர்களின் நம்பிக்கைகளையும் அவர்களிடம் புகுந்த புராணத் தொன்மக் கற்பனை மரபுகளையும் கொண்டே அவர்களைத் திருத்த முயன்றார்.

### வள்ளுவ நெறி நடைமுறைப்படாதது ஏன்?

வள்ளுவ நெறி நாள் நடைமுறையாய் நிலைபேறடையா விடினும், வள்ளுவம், திருக்குறள், அவர் வகுத்த கோட்பாடு அப்படியே இருப்பதால், இன்னமும் வள்ளுவத்தை, நடைமுறை வாழ்வாக்க வாய்ப்புள்ளது. திருவள்ளுவர் ஒரு சமய நிறுவனத்தைத் தோற்றுவித்திருந்தால், இன்றைய சமயங்கள் பத்துடன் பதினொன்றாக அது சிலராலேனும் நடைமுறையிலிருந்திருக்கும்.

ஆனால் 'பக்திநெறியை'த் திசைதிருப்பித் தமதாக ஆக்கிக் கொண்ட, மற்றவர்களையும் தம்முள் அடக்கிக் கொண்ட வைதிகப் பிராமணியமே வள்ளுவத்தைப் பரவவிடாமல் தடுத்து விட்டது.

இன்று பிராமணியம் பிராமணர்களிடம் மட்டும் இல்லை; எல்லோரிடமும் இருக்கிறது. வடமொழியே மந்திரமென நம்பும் பலகோடித் தமிழர்களை என்ன செய்வது?

கி.பி.15,16ம் நூற்றாண்டில் குருநானக்குத் தோன்றி, 'இந்துமத மாயையை' விரட்டியடித்தார். வைதிகத்தையும் தங்களை எதிர்த்து அழித்த இசுலாமிய இந்து வைதிகப் பிராமணிய சமயப் போர்கள் யாவற்றையும் எதிர்த்துக் குரல் கொடுத்தார். தங்களைக் காக்க, தங்களை அழிக்க முனையும் எதிரிகளை எதிர்ப்பதில் தவறில்லை என்றார். ஆயுதம் ஏந்துங்கள்; இதில் அகிம்சை பேச இடமில்லை என்றார். 'தன்னைக் கொல்லவரும் பசுவைக் கொல்லலாம்' என்றார்.

தங்கள் மொழியை, பண்பாட்டை, இனத்தை அழிக்க முனையும் பகையை, மான உணர்ச்சியுடன் எதிர்க்கப் புறப்பட்டதே, தமிழ் ஈழக் கிளர்ச்சி. அது ஒரு விடுதலைப்போர்; தீவிரவாதமன்று. சீக்கிய வரலாற்றை அறிந்தோர், இதனை மறுக்க மாட்டார்கள்.

தமிழகத்திலும், ஆயுதம் ஏந்தாத நிலையில், ஒரு தீவிர அறப் புரட்சி ஏற்பட்டால்தான், வள்ளுவக் கோட்பாடுகள் வாழ்வாகும்.

### வள்ளுவர் சொல்லும் இறைமை

குருநானக்கைப் போலத் திருவள்ளுவர் நீண்ட இசைப் பாடல்களை எழுதவில்லை; பொழிவுகள், அறவுரை விளக்கங்கள் பதிவாகவில்லை. ஒன்றேமுக்காலடியில் ஒரு திரு மறையாக - உட்பொதிந்து தேடவைக்கும் அரிய கருத்துக்கள் கனிமங்கள் அடங்கிய சுரங்கமாக எழுதி வைத்துப் போனதால், அதை இந்த

வைதிக ஆதிக்க மேலதிகார வர்க்கத்தால், உரைவிளக்கப் பெயரால் மறைக்க முடிந்தது; உண்மைகளை ஏழை பாழையாகிப் போன தமிழன் அறிய வாய்ப்பின்றிப் போனது. தமிழர்களின் மேல்நிலை வர்க்கமோ, அதை உரையெழுத, மாறுபட்ட விளக்கம் தர, சொற்பொழிய, கட்டுரை எழுத, பாராட்டிவிட்டு மாறாக நடக்க, நயவஞ்சகமாக - நன்றியின்றி வாழப் பயன்படுத்திக் கொண்டது.

புரட்சிகரமாக வள்ளுவத்தைப் பின்பற்றினால் அவன் சமுதாய மக்களால் புறந்தள்ளப்படுவான். தீவிரவாதி என்று, அடக்கப் படுவான் அல்லது பழிக்கப்படுவான்.

## கடவுள் வாழ்த்தின் உட்பொருள் என்ன?

தொல்காப்பியர் குறிப்பிட்ட 'கடவுள்' எனும் சொல் (1029), 1034) திருக்குறளில் இல்லை. ஆயினும் கடவுள் தன்மை குறிக்கப்படுகிறது. அதிற் காணப்படும் புறநிலை வாழ்த்து எனும் வழிபடு தெய்வ வாழ்த்தும் மாயோன், சேயோன், வேந்தன், வருணன், கொற்றவை என்னும் நிலத் தெய்வ வழிபாடுகளும் திருவள்ளுவரால் குறிப்பாகக் குறிக்கப்படுகின்றன.

திருவள்ளுவர், தமிழன் தம் காலத்திலேயே சூழ்ந்துவிட்ட புறச்சமயப் பக்தி நெறியால் கெட்டுவிடுவான் என உணர்ந்திருக் கிறார். அதனால் அருவ வழிபாட்டில் தொடங்கி, அருவுருவ வழிபாட்டுடன் முடித்துள்ளார். இறைவனை, வழிபாடு எனும் முறையில், ஒரு சான்றோனாக - மாமனிதனாக - நம்முள் ஒருவனாக மட்டும் காட்டுகிறார். அவனைப் போல ஆவதே வழிபாடு; அவன் வழி நடப்பதே வழிப்படும் வழிபாடு.

'ஓசை ஒலியெலாம் ஆனாய்' என்பதுபோல, ஒலிவடிவான இறைமையை அறிமுகப்படுத்துகிறார் திருவள்ளுவர். ஐம்பூதங் களில் அருவுருவானது ஒலியே. இறைமையை உண்டென்பார்க்கும் இல்லையென்பார்க்கும் பொதுமை இது. நம் உடல் உருவம்; உயிர் அருவம். இந்த உலகம் உருவம்; அதன் இயக்கம் அருவம். உலகமே இறைவன், இறைவனே உலகம். உலகத்தின் வித்து; உலக உருவாக்க அணு; உலக இயற்கைப் படைப்பு இறைமை.

## இறைமைப் பண்புகள்

வால் அறிவு - தூய அறிவு

மலர்மிசை ஏகுதல் - மலரன்னைய தூய மனத்தில் சென்று அமர்தல்

வேண்டுதல் வேண்டாமை - விருப்பு வெறுப்பற்ற தன்மை,

ஐம்பொறிகளையும் பக்குவப்படுத்திய பொய்யற்ற ஒழுக்க நெறி,

ஒப்பற்ற மேன்மைக்கு மேன்மையான தன்மை.

அறக் கடலாக - அந்தண்மையுடையவனாக விளங்குதல்

நற்குணங்கள் அனைத்தும் உடைமை,

இறைமைத் தன்மை.

இவற்றை உடையவன் இறைவன்; இவற்றை நோக்கி முன்னேறுவதே வழிபாடு, இப்பண்புகளைத் தாமும் பெறுவதே கடவுள் வாழ்த்து. பிற சடங்கு முறை அனைத்தும் புற வேடங்கள்; ஆரவார நீர்மையின. அவற்றை அறவே புறக்கணித்து விட்டது வள்ளுவம்.

'சித்தமலம் அறுவித்துச் சிவமாக்குதலை' - இதனுடன் ஒப்பிடுக. மனிதன் இறைமைப் பண்புகளை நோக்கி முன்னேற வேண்டும்; வளரவேண்டும்; தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். சமையம் - மனிதனை, உணர்வை, உயிரைப் பக்குவப் படுத்துவதே. நற்றாள் தொழுதல் - வணங்கி வழிப்படுதல். மாணடி சேர்தல் - இடைவிடாது நற்பண்புகளை - நல்லதை நினைத்தல்.

பொருள் சேர் புகழ்புரிதல் - இறைமைசார் நற்பண்புகளைப் பாடிப் பாடி, இறைவனைத் தொழுதல். 'தமிழோடு இசைபாடி' வணங்கிய வரலாற்றை அறிக.

தலைவணங்குதல் - உருவ வழிபாட்டுத் தொடர்புடையது.

ஒழுக்க நெறி நிற்றல் - கோயிலில் போய்க் கும்பிடுவது மட்டுமன்று; நன்னெறியில் உறுதியாக நிற்றலே வழிபாடு.

ஓர் இறை உண்டென ஒப்புதல்; அறிதல், தொழுதல், இடைவிடாது நினைத்தல், புகழ்ந்து பாடுதல், திருமுன் வணங்குதல், ஒழுக்கநெறியில் நிற்றல் - இவையே வழிபாடு.

பயன்கள்

இவ்வகை வழிபாட்டால்

தூய அறிவு பெறலாம்

நிலமிசை நீடு வாழலாம்

இடும்பை வராது தடுக்கலாம்

இருவினை நீங்கி மன அமைதி பெறலாம்

மனக் கவலை மாற்றலாம்

துன்பக் கடல்களைக் கடக்கலாம்

ஐம்பொறிகள் நலம் பெறும்; உடல் நலம் பெறும்.

பிறவியாம் இக்கடலைக் கடந்து கரைசேரலாம்.

இன்றைய திருக்கோயில்களில் உள்ள வழிபாட்டு நெறிகள் முற்றிலும் மாற்றப்பட வேண்டும். இறைவனை அவரவர், தாம்தாம் விரும்பிய மொழியில் நேரே வழிபட வழிவிட வேண்டும். பக்தியை, புண்ணிய வாணிகமாக்கவோ, திருக்கோயில்களை எளிமைப் படுத்தாமல், செல்வம் குவியும் முதலாளித்துவக்கூடமாக்கவோ கூடாது. கோயில்களை அடுக்கிய கோடிகளை முடக்குமிடமாக மாற்றுவது தவிர்க்கப்பட வேண்டும். சிரித்துப் புரமெரித்த சிவன், தன்னை மயக்க மருந்தூட்டி நலம் பெற நாடும் இவர்களைப் பார்த்தும் சிரிக்கின்றான்.

இதற்கு ஒரு புரட்சி தேவை; மக்களை இப்புரட்சிக்கு ஆயத்தப்படுத்த வேண்டும் புதுமுறைக் கோயில்களையும் வள்ளுவ வழி வழிபாட்டு முறைகளையும் புகுத்திக் காட்டி, மக்களைத் திசை திருப்ப வேண்டும்.

## தெய்வம்

வள்ளுவர் மக்கள் நம்பும் 'தெய்வம்' பற்றி, ஆறு இடங்களில் குறிப்பிடுகிறார்.

1. தென்புலத்தார், தெய்வம் என்று - தொல்காப்பியர் குறிப்பிட்ட வழிபடு தெய்வத்தைப் போற்றச் சொல்கிறார். நிலத் தெய்வ வழிபாடுகளும் இதில் அடங்குதல் கூடும் (43).

2. 'வானுறையும் தெய்வம்' - மக்கள் நம்பிக்கை. 'இவ்வுலகி லேயே நீ தெய்வமாகலாம்' என்பது, மனிதனை நோக்கி, அவனை உயர்த்துவது. உயரலாம் என்பதற்கு, அவனுடைய நம்பிக்கையைப் பயன்படுத்திக் கொள்கிறார். (50).

3. தெய்வம் தொழாஅள் - என்பது பிறைதொழுதல், சிறு தெய்வ வழிபாடு. கணவனை அடைதற்கோ, அவனுடன் கூடி வாழ்தற்கோ வேண்டி இச்சிறு சடங்குகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கச் சொல்கிறார் (55).

4. ‘தெய்வத்தான் ஆகாது’ எனினும் - என்ற குறளில் ஒருவனது உழைப்பின் பயனைச் சிலர் சொல்வது போல், ‘விதி’ என்று கூறித் தடுக்க இயலாது. உழைப்புக்குப் பயனுண்டு என உறுதி கூறுகிறார் *(619).*

5. ‘விலங்கொடு மக்களனையர்’ *(410)* என்று மனிதன் விலங்கு நிலையில் தாழ்வதைச் சுட்டும் அவர், அவனை, உலகம் நம்பும் அத்தெய்வ நிலைக்கு உயர்க, உயரலாம், உயர முயல்க என ஊக்கப்படுத்துகிறார்.

*‘ஐயப் படாஅது அகத்த துணர் வானைத்*
*தெய்வத்தோடு ஒப்பக் கொளல்’ (702)*

மக்கள் நம்பிக்கையை வைத்து தம் கருத்தைத் திருவள்ளுவர் நிலைநிறுத்தும் இடங்களில் இதுவும் ஒன்று. பிறர் மனத்தினுள் ளிருப்பதை, ஒருவன் கண்டறிவது மிகமிகக் கடினம். அதனை ஐயமின்றித் தெளிவாக உணரவல்லனாயின் அவனைத் ‘தெய்வம்’ என்றே கூறிவிடலாம். இங்கு ‘தெய்வம்’ என்ற தொன்மப் படிமம், சொல்ல வந்ததை அழுத்தமாய் - மனத்தில் பதியும்படி செய்ய உதவுகிறது.

6. சிலர் தெய்வம் என்பதைத் தலைவிதி, ஊழ் என்றனர். தெய்வம் நினைத்தால்தான் முடியும், தெய்வம் உதவினால்தான் முடியும் என்றனர்.

திருவள்ளுவர் அவனைப் பார்த்து, ‘நீ கூறும் அத்தெய்வம் நீ முயன்று, உழைத்து அடைவதற்கு ஏற்ற அனைத்தையும் தந்துள்ளது. ஆனால் நீ நல்லதற்கு முயன்றால், அது தன் உடையைத் தாறு பாய்ச்சிக் கட்டிக் கொண்டு, நீ ஏவியதைச் செய்ய முன்வந்து நிற்கும்’ என்று கூறுகிறார். *(1023).*

ஆக, இந்த இடங்கள் அனைத்திலும், மனிதனை முன்னிறுத்தி, மனித வாழ்வை மேம்படுத்தவே ‘தெய்வப் படிமம்’ பயன்படுத்தப் படுகிறது. கடவுள், தெய்வம் உண்டா, இல்லையா என்ற விவாதத்தில் அவர் ஈடுபடவில்லை. அவை உள என, மக்கள் நம்புவதுபோல் தானும் நம்பும் அவர், அவை மக்களுக்காக, மக்களை உயர்த்த, மக்களை வாழ்விக்க மக்களுடன் கூடியே உள்ளன என்ற கருத்தை, உட்பொருளாக வைத்துள்ளார்.

வேறு விதமான தெய்வப் புனைவுகள், பத்தி, வேடங்கள், ஆசார அனுட்டான வெளிப்பகட்டுகள், ஆரவார நீர்மையின அனைத்தையும் புறந்தள்ளி விடுகிறார். இன்றைய பூசகர்கள்

வருமானந் தேடும் வணிகர்கள், இவை அனைத்தையுமே வற்புறுத்தி, உண்மையான நற்பண்பு வழிபாட்டுக்கு, வழிவிட மறுக்கிறார்கள். அவர்களின் தந்நலமே காரணம். அவர்களைக் கோயில்களை விட்டு வெளியேற்றி, வேறு தொழில்களில் வருமானம் தேடச் சட்ட மியற்றினால், உதவினால் திருக்கோயில்கள் நற்பண்பு - நற்பேற்றுத் திருத்தலங்களாகும்.

**புத்தேளிர்**

இஃது அருஞ்சொல்லாய் அவையப் பாடல்களில் வழங்குகிறது.

*1. புத்தேளிர் வாழும் உலகு (58)*

தன்னை விரும்பிப் போற்றும் கணவரைப் பெற்ற மகளிர், தேவருலகிலும் பெருஞ்சிறப்புப் பெறுவர்.

*2. புத்தேளுலகத்தும் (213)*

ஒப்புரவு போல நல்லதொன்றைத் தேவ உலகிலும் இவ் வுலகிலும் பெறுதல் அரிது.

*3. புத்தேள் உலகு (234)*

இவ்வுலகில் புகழ்பெற்று வாழ்வானாயின், தம்மிடமுள்ள தேவரையும் புத்தேள் உலகு போற்றாது. இதில் புலவர் என்று தேவர்கள் குறிக்கப்படுதல் புதுமையாய் உளது.

*4. கள்ளார்க்குப் புத்தேள் உலகு தள்ளாது (290)*

களவாடாதார்க்குத் தேவருலகமும் கிடைக்குமாம்.

*5. புத்தேள் நாட்டு உய்யாதால் (966)*

*இகழ்பவர்பின் மானங்கெட்டுச் செல்லுதல் புகழும்*
*தராது; தேவருலகத்தும் சென்று சேர்க்காது.*

*6. புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ? (1323)*

இவ்வுலகத்தில் காதலர் புலத்தலாலும் பிறகு கூடிக் கலத்தலாலும் பெறும் இன்பம் பெரிது. இதைவிட இன்பம் தரும் தேவருலகமும் உண்டோ?

இவற்றுடன்,

*தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்*
*தாமரைக் கண்ணான் உலகு.* **(1103)**

என்பதையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

தேவருலகம், திருமாலின் வைகுந்தம் பற்றிய கற்பனை எல்லாம் மக்கள் வழக்காற்றில் இருந்துள. மக்கள் இறந்தபின் அங்கு செல்வர் என்றும் அறந்தவறியார் 'நரகம்' அளறு (255, 835, 919) புகுவர் என்றும் நம்பியுள்ளனர். அவற்றை ஏற்று, துறக்கத்திற்குப் போகலாம்; சிறப்புக் கிடைக்கும் என ஊக்கப்படுத்த, இப்படிமம் பயன் படுகிறது. 'புலத்தலிற் புத்தேள் நாடுண்டோ? (1323) என வினவும் பொழுதும், 'மேலுலகம் இல்லெனினும்' (222) என்னும் பொழுதும் 'வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்' (346) என்னும் பொழுதும், வள்ளுவச் சிந்தனை நுட்பமாய் வெளிப்படுகிறது. இவ்வுலகிலேயே, இவ்வுலக வாழ்விலேயே, கண்கண்ட உண்மை களிலேயே அழுத்தம் வைத்து, அறம் உரைக்கின்றார் திருவள்ளுவர். இவை போன்ற உலக நம்பிக்கைகளைத் தம் கூற்றுக்கு வலுச்சேர்த்து, கேட்பவனின் மனநிலைக்கு ஏற்ப அறங்கூறினாலல்லது, தம் கருத்து அவன் செவியில் ஏறாது என்று இவ்வாறு கூறுகிறார்.

வைகுந்தத்திற்குப் போகச் சொர்க்கவாசல் திறக்கிறார்கள். 'அங்கென்னடா சொர்க்கம்'? தாம் விரும்பும் காதலர் ஒருவர் ஒருவரது தோள்களில் சாய்ந்து துய்க்கும் இன்பத்தைவிட, அந்த இன்பம் பெரிதாகுமா? - இவ்வாறு கேட்குமிதில் அங்கதச் சுவையும் நிழலாடுகிறதே! 'தேவர் அனையர் கயவர் அவருந்தாம் மேவன செய்தொழுகலான்' (1073) என்னும்போது வள்ளுவருள்ளம் புலனாகவில்லையா?

வானுலகம்

*ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு, வையத்தின்*
*வானம் நணிய துடைத்து.* **(353)**

*யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு*
*உயர்ந்த உலகம் புகும்.* **(346)**

*செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்*
*வானகமும் ஆற்ற லரிது.* **(101)**

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்.* **(50)**

வானுலக வருணனை அல்ல இவை. இவ்வுலகமே வானுலகு போல் பயனும் இனிமையும் உடையதாகும் என்பதும், இரண்டு உலகமும் ஈடாகாது என்பதும் மக்களுக்குச் சென்று சேருமாறு,

அவர்கள் போக்கில் கூறப்பட்டனவே யாகும். திருவள்ளுவவர் தம் கருத்தாகக் கூறுவன; பிறர் கருத்தை ஏற்றுக் கூறுவன என இருவகையில் அறம் புகல்கின்றார். துறக்கம், மேலுலகம், தெய்வம் எல்லாம் பிறர் நம்பும் கருத்துக்களென, அவற்றை ஏற்று மொழிவனவாம். இவற்றை அவர், உலகியல் வாழ்வுக்குத் துணையாகக் கூறுகிறார் என்பதை ஒவ்வொரு குறளையும் உற்று நோக்கி அறிதல் வேண்டும்.

## எழுமை, எழுபிறப்பு

இம்மைப் பிறப்பு (1315) மறுமையும் இம்மையும் (98, 1042) மறுமை (459) மறுமையிலாளன் (904) என்று வள்ளுவம் பகருவன சிந்திக்கற்பாலன. ஒருமையும் எழுமையும் என இப்பிறப்பையும் இனிவரும் ஏழுபிறப்பையும் குறிக்குமிடங்களும் சிலவுள (26, 398, 835). ஏழு பிறப்பு என இனிவரும் பிறவிகளையும் (62, 107, 538) - எழுமை எழுபிறப்பும் (107) என அதையே அழுத்தம் பெற இரட்டித்தும் கூறுவன காணலாம். ஏழுபிறவிகள் இவை என உரையாசிரியர்களே விளக்குவர். இப்பிறவியில் ஐம்புலனை அடக்கி ஆள்க, இப்பிறவியிலேயே நன்கு கற்றுப் பயனடைக என வற்புறுத்த இவை பயன்படுகின்றன. ‘ஏழு பிறவியிலும் பயன்படும் என்றதால், இப்பிறவியில் பயன்படுமென்பது கூறாமலே பெறப்பட்டது’, என்பர்.

இதிலும் உண்டா, இல்லையா என்று ஆராய்ச்சிக்குப் போகாமல், மக்களின் நம்பிக்கையை அவர்களின் சொல் நடையிலேயே கூறி, தாம் கூறவந்ததை அழுத்தம் பெறக் கூறப் பயன் படுத்திக் கொள்கிறார்.

## குருநானக்கின் சிந்தனைகளும், திருவள்ளுவர் கருத்துக்களும்

குருநானக்கின் சிந்தனைகள் ஒரு சமய வடிவம் பெற்றதால், ஒரு பிரிவினரை உருவாக்கிப் பெரும் பகுதி செயல்வடிவம் பெற்று விட்டன. திருவள்ளுவர் வாக்கு உரை கூற, விளக்கம் சொல்ல, நயம் காண மட்டுமே பயன்படுகின்றது. மக்கள் வள்ளுவத்திற்கு நேர் எதிரான, வைதிக - இந்து சமய ஆதிக்கத்திற்குட்பட்டு விட்டனர். அவர்களுடைய பக்தி நெறியே அவர்களை அடிமைப்படுத்துகிறது. வள்ளுவத்தின் தோல்விக்குத் தமிழரிடையே, பண்பாட்டு புரட்சி ஏற்பட்டு விடாமல், பிராமணியமும், வைதிகமும் அவர்களை அடக்கி, ஒடுக்கி, தாமே தம்மைத் தாழ்த்திக் கொண்டு அழியும்படி செய்து விட்டமையே காரணமாகும். இன்றும் பெருஞ்செல்வர் களும் தொழிலதிபர்களும் மேட்டுக்குடியினரும் இப்பிராமணிய வைதிகச் சடங்கு முறைப் படுகுழியில் வீழ்ந்து கிடக்கின்றனர்.

வள்ளுவ நெறி இனியேனும் காலூன்ற வேண்டுமேல் திருக் கோயில் வழிபாடு மாற்றப்பட வேண்டும்.

வள்ளுவ நெறியில் பண்புநெறி வழிபாடு மட்டுமே தழைக்க வேண்டும்.

கோயிலில் நிதியம் குவிதல் கூடாது. அவை அனைத்தையும் பிச்சைக்காரர் ஒழிப்புக்கும் குடிசை மாற்று வாரியத்திற்கும் மருத்துவத்திற்கும் கல்விக்கும் ஏழை எளிய மக்களின் வேளாண்மை, தொழில் வளர்ச்சிக்கும் பயன்படுத்த வேண்டும்.

தனிமனித வழிபாடு கூடாது. சீக்கியர்கள் குரு கிரந்த சாகிப் என்ற, தம் புனித நூலையே, அமிர்தசரசு பொற்கோயிலிலும் அனைத்துக் குருத்துவாராக்களிலும் நடுவணதாக வைத்துப் போற்றி, வணங்கி அதன்வழி வாழ்கிறார்கள். அதனையே குரு என்று அழைக்கிறார்கள். சீக்கியம் தம் புனித நூலையே - கிரந்தம் - குரு என வழிபடுகிறது. அதனால் அது செயல்வடிவம் பெறுகிறது.

## புரட்சியாலன்றி புதுமை மலராது

நமக்கும் திருக்குறளே 'குரு'; அதனையே வழிபடுதலும் உறுதியாக அதன்வழி நடத்தலும் வேண்டும்.

முதலில் இந்தியத் தேசிய நூலென்று அறிவிக்கப்படுவதற்குத் தோற்றுவாயாகத் தமிழகத் தேசிய நூல் என, சட்டமன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். குறள் வழிபாடு, குறள்வழி வாழ்வாக மாறவேண்டும். அதற்கு வைதிக நெறிகளை நீக்க வேண்டும். தமிழகத்தில் 'ஹோமம்', 'யக்ஞம்' யாவும் தடை செய்யப் படவேண்டும்.

இறைவழிப்பாட்டுக் கோயில்களில், இசை, நாட்டியம், கலைகள் வளர்க்கப்பட வேண்டும். அவை தரகுவழி அருச்சனை தவிர்க்கப்பட்டு, அவரவர் வணங்க இடங்கொடுத்து, மனித மற்றும் உயிரினத் தொண்டு நிறுவனப் பயிற்சி மையங்களாதல் வேண்டும்.

ஆதீனங்கள், திருமடங்களை மக்கள் சேவையில் திருப்பிவிட, அவற்றை அரசு கைப்பற்றி, துறவிகளை - உண்மைத் துறவிகளாக்க வேண்டும். போலிச் சாமியார்களும் அவர்களின் சுக போக வாழ்வுகளும், கட்டாயமாகத் தடை செய்யப்பட்டு, அவர்களின் பொய் வேடம் கலைக்கப்பட வேண்டும். ஏமாற்றுவோரைக் கைது செய்ய வேண்டும்.

போலிச் சாமியார்களாகத் திரியும் அனைவரையும் பிச்சை யெடுப்போரையும் தடைச் சட்டம் மூலம் கைது செய்து நல்வழிப் படுத்த வேண்டும்.

மக்களை ஏமாற்றும் இராசிபலன் விளம்பரம், வாஸ்துப் பரப்புரை யாவும் தடை செய்யப்பட வேண்டும். அவரவர் தனித் தனியே என்ன வேண்டுமானாலும் பார்த்துக் கொள்ளட்டும். இவை பொதுச் சமுதாயத்தைப் போதை மருந்து போல் கெடுத்தல் கூடாது. தனிமனித மோட்சம் - என்பதில் அதிக அழுத்தம் வேண்டாம். சமுதாய விடுதலையே வீடுபேறு. மக்களும் தாமும் முயன்று, உழைப்பால் துன்பங்களினின்றும் விடுபடுவதே வீடுபேறு, விடுதலை, முத்தி, மோட்சம் என மக்களுக்கு விளக்க வேண்டும்.

காடேகிக் கமண்டலம் ஏந்திக் கல்லாடை உடுத்தும் துறவை, குருநானக்கும் திருவள்ளுவரும் ஏற்கவில்லை.

திருவள்ளுவர் கூறிய இல்லறத் துறவு (இல்லறத்திலிருந்து கொண்டே, நெஞ்சிற் துறவு பூண்டு வாழ்தல்), இல்லறத் தவம் (தன் முயற்சித் தவம்) விருந்து எனும் வேள்வி - இவையே வள்ளுவம் வலியுறுத்துவன.

இறைவனைக் கும்பிடுவதே பக்தி, கோயிலுக்குச் செய்வதே புண்ணியம், தான் மோட்சமடைய முயல்வது மட்டுமே சமய வாழ்வு, எதனைக் கொடுத்தும் செய்த பாவங்களுக்குப் பரிகாரம் பெற்று விடலாம் என்பன தமிழரின் இறைமைக் கோட்பாட்டிற் புகுந்தன.

சித்தர்கள் இதை எதிர்த்தனர்; திருமூலர் இம்மூட பக்தியை மடைமாற்ற முயன்றார். பிராமணியம்எனும் தொற்றுநோய், தமிழரின் அனைத்துப் பிரிவினரையும் பக்திப் போதை மருந் தூட்டி, மயக்கி மடக்கி விட்டது. இதைத் தகர்த்தெறிய வேண்டும்.

**ஆயுதம் ஏந்தச் சொன்னார் அன்று; அறவழிப்போர் செய்து பார்ப்போம் இன்று!**

என்று பிராமணர்கள் திருக்கோயில்களை விட்டு வெளியேறு கிறார்களோ; என்று அவர்கள் நடத்தும் மூடச் சடங்குகளெல்லாம் தடைசெய்யப்பட்டு நிறுத்தப்படுகின்றனவோ, அன்றே திருக்குறள், நடைமுறை நூலாகும். குருநானக் இத்தீமைகளை எதிர்க்க ஆயுதம் ஏந்தச் சொன்னார்; படைப் பயிற்சி பெறச் சொன்னார்.

இன்றைய சூழலுக்கு ஏற்ப, அறப் போராட்டத்தால் திருவள்ளுவர் வழியில் வழிபாடும், சடங்கும் மாற்றப்பட வேண்டும். பொதுநலச் சேவையான பக்தி மக்களிடையே என்று கால் கொள்கின்றதோ, அன்றே தமிழுக்கும் தமிழனுக்கும் மறுமலர்ச்சி ஏற்படும்.

குருநானக் கூறிய பல உண்மைகள், தமிழர்க்கு மிகவும் பொருந்தும். தமிழரின் இன்றைய இறைமைக் கோட்பாடு, போலித் துறவியர் மடங்கள், போலிச் சாமியார்கள், இறைவனுக்கே கையூட்டு நல்கிப் பாவ விடுதலை தேடும் பல வகைச் சடங்குகள், பிராமணர் என்ற ஒரு குலத்தவரையே இன்றும் தூக்கி நிறுத்தும் போக்கு, வைதிக வழிப்பட்டதும், மனிதனை முற்றிலும் மறக்கடிப்பதுமான சமய வாழ்வு, சமஸ்கிருதமே மந்திரமொழி என்ற மாய நம்பிக்கை போலும் மூட நெறிகள் அனைத்தும் புரட்சிகரமாகத் தகர்த்து, வேரோடும், வேரடி மண்ணோடும் ஒழிக்கப்பட வேண்டும். இறைமை நெறியோடு தொடர்புடைய துறவு, தவம், வேள்வி, தானம், தனிமனிதச் சிந்தனை, புறவேடம் யாவும் தமிழ் நெறியில் புதுப்பிக்கப் பட வேண்டும். திருவள்ளுவ நெறியில், இறைமைக் கோட்பாட்டை, மாற்றியமைப்பதொன்றே, தமிழருக்கு மறுமலர்ச்சிப் புதுவாழ்வு தரும்.

க.சி. அகமுடைநம்பி தொகுத்த திருக்குறளில் இறைமை (2007)

# 4. வழிகாட்டுமா வள்ளுவப் பெண்ணியம்?

ஆணாதிக்கமா?

பெண்ணாதிக்கமா?

சமநிலைப் பாடா?

தமிழர் பண்பாடு அறநெறியா? தவறா?

வள்ளுவப் பெண்ணியத்தில் முரண்பாடா? முறை கேடா?

வள்ளுவம் தமிழர் பண்பாட்டின் பிழிவு; வள்ளுவத்திற் காணும் நிறை குறைகள் திருவள்ளுவர்க்கு மட்டும் உரியன அல்ல; தமிழர் அனைவருக்கும் உரியன.

ஏனைய சமயங்கள் வள்ளுவர் காலத்தில் என்ன கூறின? சமஸ்கிருத நூல்களில் பெண்ணைப் பற்றிக் கூறிய 'சாஸ்திரங்கள்' எவ்வாறு அவளை மதித்தன? முழுவதும் தொகுத்து நோக்க வேண்டும்.

## பெண் ஓர் இழிபிறப்பு

நான்காம் சாதியும் அவளும் ஒன்றே. அவளுக்கு வேதங்களைப் படிக்க, கேட்க உரிமை கிடையாது. பெண்ணுக்கு ஆன்மா இல்லை.

அவள் மோட்சம் அடைய முடியாது; ஒருவேளை நல்வினைப் பயனால், மறு பிறவியில் ஆணாகப் பிறந்து மோட்சம் அடையலாம்.

பெண்ணாசை கேடு. மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என அவளை ஏனைய மண், பொன்னுடன் ஒப்பிட்டன.

பெண்ணை வெறு, துற. மங்கல நிகழ்வுகளில் அவள் வருவது தீட்டு. அவளால் ஆண் நரகத்திற்கே போவான்.

இவை போல்வன பொய்யல்ல. புத்தம், சமணம், வைதிகம் மூன்றும் சிறிது கூட்டியோ, குறைத்தோ இவ்வாறு தான் போதித்தன.

இவை வடநாட்டில், பிற்காலத்தில், வைதிக சமயத்தால் மேலோங்கின. சமஸ்கிருதம் ஒன்றே இந்தியப் பண்பாட்டை விளக்கும் மொழி என்றால், பாரதநாடு போற்றப்படத்தக்கதாக ஆகாது.

திருவள்ளுவர் கால நிலை இது. அவருக்கு முன்பிருந்தே அங்கு வளர்ந்தோங்கிய நிலை இது. ஆனால் மேலே கூறியவற்றைப் போன்ற அதே வாசகங்களை, கருத்துக்களைத் திருவள்ளுவர் எந்த இடத்திலும் கூறவில்லை.

தமிழர் பண்பாடு, மேலே கூறிய 'பாரதப் பண்பாட்டினின்றும்' முற்றிலும் வேறுபட்டது; நேர் எதிரானதும் கூட. திருவனந்த புரத்தில், மனோன்மணியம் சுந்தரனார், விவேகானந்தர் இந்துமதப் பெருமை பற்றிப் பேசிக் கொண்டிருந்த கூட்டத்தில் இருந்தார். எதிர்பாராது ஒரு குரல் கேட்டது: "We are not Hindus" என்று; பேராசிரியர் குரல் அது.

இந்து சமயம் வைதிக சமயமே. அது நம் சமயம் அன்று. நாம் 'இந்துக்கள் அல்லர், தமிழர்கள்'.

வைதிக சமயத்தில் பெண்ணை அவமதிக்கும், இழிவுபடுத்தும் பகுதிகள் பலவுண்டு. தமிழர் சமயத்தில் அது இல்லை. தமிழர் சமயம் மூன்று; சிவனியம் (சைவம்), மாலியம் (வைணவம்) கொற்றவையியம் (சக்தி, அம்மன்). இவை தமிழரின் நில வழிபாட்டிலிருந்து முகிழ்த்து, காலப்போக்கில் 'நிறுவனச் சமயங்களாயின'. வைதிகம் வருமானம் கருதி, ஒரு தொற்றுநோய் போல, இன்றளவும் தமிழர் சமயத்தைக் கைப்பற்றிக் கொண்டு, 'புண்ணிய வியாபாரம்' செய்து பிழைத்து வருகிறது.

தமிழர் சமயப்படி பெண் வெறுக்கத் தக்கவள் அல்லள்; துறக்கத் தக்கவளும் அல்லள். வேத வைதிகராக இருந்து சிவ வேதியராக மாறிய திருஞானசம்பந்தர், 'பெண்ணின் நல்லா ளொடும்' 'பெருந்தகை இருந்ததையே' பாடுகிறார். திருவள்ளுவர் தமிழ்ப் பண்பாட்டையே எதிரொலிக்கின்றார்.

**வீரயுகம்**

கிரேக்கப் பாடல்களைப் போல, தமிழ்ச் சங்கப் பாடல்களும் வீரயுகத்தை எதிரொலிக்கின்றன. அது மனிதன் விலங்குகளைப் போல வாழ்ந்த காலம். எழுத்து மொழி தோன்றாத காலம். வேளாண்மையை அறியாத காலம். பெண் அவளது மென்மை காரணமாகத் துன்புறுத்தப்பட்ட காலம். ஆண் உடல் வலிமை காரணமாகப் பெண்ணை அடக்கி ஆண்ட காலம். விலங்கு களிடையே காணப்பட்ட அதே வாழ்வுநிலை, அன்று விலங்கு மனிதனிடமும் காணப்பட்டது. யாருக்கு யார் என்ற வரன்முறை இல்லை. விலங்குகளின் வாழ்வு, கண்டபோது கண்டதுடன் கலப்பது.

தே-4

### திருவள்ளுவர் காலம்

திருவள்ளுவர் காலம் பண்பட்ட காலம். ஆனாலும் முன்னதின் எச்சசொச்சம் மக்கள் வாழ்வில் தொடராமல் போய்விடவில்லை. ஆயினும் அன்றைய சூழலிலும், திருவள்ளுவர் என்ன என்ன கூறியுள்ளார் என்று தான் பார்க்க வேண்டும்.

திருவள்ளுவர் தம் கால் நிலையில், தமது கருத்தாகவும் தமது காலத்தில் இருந்த பிறர் கருத்தாகவும் இரண்டு நிலையில் பேசுகிறார். பலர் இந்நுட்பத்தை உணர்வதில்லை.

*திருவள்ளுவர் 'இல்லறவியல்' வகுக்கின்றார்.*
*அவர் கூறும் 'துறவறவியல்'* – இல்லறத் துறவு பற்றியது.

இல்லத்திலிருந்து கொண்டே, துறவு மனத்துடன் வாழ்வது; வளர்வது; மனம் பக்குவப்படுவது.

அவர் யாண்டும் காடேகச் சொல்லவில்லை; கமண்டலம் ஏந்தச் சொல்லவில்லை; காவியுடுத்தச் சொல்லவில்லை; பெண்ணைத் துற, வெறு என்று ஒரு சொல்கூடச் சொல்லவில்லை. துறவு தவம் என்பன அவர் காலத்தில் மிக உயர்வென்று பிற சமயங்களால் போதிக்கப்பட்டன. அவை 'இயல்பாக' நல்லனவாக இருப்பின் இருந்துவிட்டுப் போகட்டும் எனும் போக்கில் அவர் கூறினும் தம் கருத்தாக அவற்றுக்குப் புதிய விளக்கம் தருகிறார்.

இந்திய நூல்கள் எல்லாம் போலிச் சாமியார்களைப் போற்றும் பழக்கத்திற்கு மக்களை ஆட்படுத்தின. உண்மைத் துறவிகள் அரிதினும் அரியர். இயற்கைக்கு முரண்பட்ட அவ்வாழ்வை, திருவள்ளுவர் யாண்டும் கூறினாரல்லர். பாரத நூல்களிலேயே, வாழ்வாங்கு வாழும் இல்லறத்தானைத் தெய்வம் - வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் - என்றது, திருக்குறள் ஒன்றேயாம்.

அகம், புறம் எனும் திணை இலக்கிய ஆய்வும் இங்கு ஒப்பு நோக்கப்படவேண்டும். இல்லாள், மனைவி போலும் சொற்களுக்கு நிகராக, ஆணைக் குறிக்கச் சொற்கள் இல்லை என்பதிலும் பண்பாட்டு அடிப்படை உளது.

வீட்டைப் பொறுத்தவரை அவளே அரசி. தமிழர் சமயத் தெய்வங்கள் எல்லாம், மனைவியரைச் சேர்த்தே கூறப்படும். நித்திய கலியாணி உடனாய கைலாசநாதர் என்பது தமிழர் மரபு. வெளியுலக வாழ்வு, போர் போல்வன ஆணுக்குரிய கடமைகளாயின.

ஆணுக்குத் தலைமை தரும் பழக்கம் தொன்று தொட்டு வருவது. அதற்கு நிகராகவும் மேலாகவும் பெண் பெருமைப்படுத்தப் பட்டாள். 'மனைக்கு விளக்காகிய மடந்தை' - குடும்ப விளக்கு எனப் பட்டாள். புறத்திணைக்கு மேலாக, பல மடங்கு அகத்திணைக்கு வாழ்விலும் இலக்கியத்திலும் இடம் தந்தனர் தமிழர்.

வாழ்க்கை - என்பது இருவர்க்கும் உரியதே. ஆனால் 'அவள்' இன்றி வாழ்க்கை இல்லை. எனவே அவள் 'துணை' எனப்பட்டாள். 'இணை' பெரிது; இணைக்குத் 'துணை' அதனிலும் பெரிது.

இதுஒரு குடும்பக் கட்டமைப்பு. இருவரும் வேலைக்குப் போகும் இன்று, இக் குடும்பக் கட்டமைப்புப் பற்றிப் பேச நா எழவில்லை. பெண் சுதந்திரம் பெற்றுவிட்டாள்; தன் காலில் நிற்கப் பழகிவிட்டாள். ஆணின் சார்பு என்பது போய்விட்டது. இந்த நிலை மிக வளர்ந்துவிட்ட அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் பெண்ணின் நிலை பற்றியும், குடும்பக் கட்டமைப்புப் பற்றியும் ஆராய வேண்டும். நம் பண்பாடும் சிதையாதபடி, நாம் சில தீர்வுகள் காண வேண்டும்.

குறளில் சிக்கலுள்ள இடங்கள்

ஒருமை மகளிர் - என்று 'பெருமை'யில் கூறுகிறார். இருமனப் பெண்டிர், மாயமகளிர், பொருட்பெண்டிர் என்றும் கூறுகிறார். 'வரைவில் மகளிர்' என்று தலைப்பிடுகிறார். இன்று மேலை நாடுகளில், திருமணம் செய்து கொள்ளாதே வாழும் சுதந்திர வாழ்வு (Free Life) பெண்களிடமும் ஆண்களிடமும் பெருகி வருகிறது. திருமணமும் குழந்தைகளும் அடிமைத் தளைகள் என்று பேசப்படுகின்றன. 'பெண்வழிச் சேறல்' என்று தலைப்பிட்டு, ஆடவரை மட்டும் எச்சரிப்பானேன்? ஆண் ஏவல் செய்தொழுகும் பெண் இல்லையா? 'பெண் ஏவல்' செய்தல், 'உரோமாபுரி இராணிகள்' கதைகளைப் படிக்கும் பொழுதும் பம்மல் சம்பந்தரின் 'வசந்த சேனை'யைப் படிக்கும் பொழுதும் நன்கு விளங்கும். மயக்கும் சக்தி - பெண்ணிடம் இருப்பதால், அதைத் தவறாகப் பயன்படுத்தாதீர் என்று எச்சரிக்கின்றாரா? 'ஆண்வழிச் சேறல்' என ஓர் அதிகாரம் எழுதினால், அதன் கருத்து எவ்வாறு அமையும்?

இல்லறவியலில் 'பிறனில் விழையாமை' வருகிறது. அன்று வாணிகத்தின் பொருட்டு, ஆண்டுக் கணக்கில் ஆடவர்கள் வெளிநாடு செல்வர். இச்சூழலில், ஆணும் கற்புடையவனாக, தற்காத்து, புலனடக்கி வாழ வேண்டும் என்று எச்சரிக்கின்றார். தனித்திருக்கும் பெண்ணுக்குத் தற்காப்பு வேண்டுமே?

பேதைமை, அறன் கடை நிற்பவன், விளிந்து போனவன் (செத்துப்போனவன்) என்று திட்டுகிறார். 'பிறன் மனை நோக்காத பேராண்மை' என்பது, ஆணின் கற்பு (மனத்திண்மை) பற்றியதே. இன்றும், இருவரும் வேலை பார்க்கப் போவதால், 'பிறனில் விழையாமை' தேவைப்படுகிறது. மற்றவளின் கணவனை ஒரு பெண் விழையாமையும் இன்று தேவைப்படுகிறது. இன்று எழுதினால், திருக்குறள் இல்லறவியல் இருநூறு அதிகாரங்களிலும் அடங்காது.

திருக்குறளில் பெண்ணுக்கு அறிவுரை சொல்லுமளவு இல்லாவிட்டாலும், ஆணுக்குப் போதிய அளவு அறிவுரை சொல்வதையே காண்கின்றோம்.

முன்பு நல்ல கணவன் வாய்க்க வேண்டும் என்று, இரவில் 'பிறை' தொழுவார்கள். கன்னிப் பெண்களே கொண்டாடும் வழிபாடு இது. மாசி மாதம் மூன்றாம் பிறை தொடங்கி, முழுநிலவு நாள் வரை பத்துநாள் நடக்கும். இன்றும் சிற்றூர்களில் 'இராவாண்டை போடுதல்' என இது நடைபெறுகிறது. அகநானூற்றில், 'ஒள்ளிழை மகளிர் உயர்பிறை தொழூஉம் புல்லென் மாலை' என வருகிறது. 'பிறை தொழுக எனல்' என்பது, அகப்பாடலில் ஒரு கூற்று. ஒருவனைக் காதலித்து விட்டால், கன்னிப் பெண் பிறை தொழமாட்டாள். இதை வைத்து, தோழி தலைவியின் களவுக் காதலை அறிய முயலும் கூற்று இது. பிறை தொழ அழைத்தும் தலைவி வராவிட்டால், தோழிக்கு உண்மை தெரிந்து விடும்.

பிறை தொழுதல் பற்றி மேலும் பல பாடல்கள் உள. இக்கட்டுரையாசிரியரின் 'பிறை தொழும் பெண்கள்' நூலில், இது விரிவாக விளக்கப்பட்டுள்ளது. தெய்வம் என்பது பிறை. தெய்வம் தொழாஅள் - என்றால், இரவெல்லாம் பிறை தொழாது, ஒருவனைத் திருமணம் செய்து கொண்டு அவனைத் தொழுது வாழ் என அறிவுறுத்துவது இது.

அவர் காலச் சமுதாய அடிப்படை விளக்கக் குறள் இது. இன்றும் பெண்ணாகப் பிறந்தவள், திருமணம் செய்து கொண்டு மகப்பெற்று வாழவேண்டுமேயன்றி, கண்டபடி அலைதற்கு இடம் கொடுத்துவிடக் கூடாது என எச்சரிப்பது இது. மேலை நாடுகளில் ஆணும் பெண்ணும் இச் 'சுதந்திர வாழ்வையே', இன்று விழைகின்றனர். இக்குறள் அது தவறு என்று கூறுகிறது.

### காமத்துப்பால்

திருக்குறள் - காமத்துப்பால் பெண்ணுக்குத் தரும் பெருமை, சிறப்பு, இனிமை, தலைமை, துணைமை, அழகுணர்ச்சி எல்லாம் உலக இலக்கியத் தரம் வாய்ந்தவை.

*பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர்*
*நண்ணேன் பரத்தநின் மார்பு*

என்பாள் அவள். அவளுக்கு அவன்பாலுள்ள உரிமையும் அவனுக்கு அவள்பாலுள்ள உரிமையும் அழுத்தமாகக் கூறப்பட்டுள்ள விதம், இன்றைய காதலர் அனைவரும் சிந்திக்க வேண்டியவை. இமையளவு கூட, இவ் 'உரிமை' மீறலுக்கு இடம் தராத திருவள்ளுவரைப் பெண்ணை இழிவுபடுத்தியதாக நினைக்க இயலவில்லை.

### இயற்கையுடன் போராட்டம்

பெண், ஆண் உடலியல்பு மாற்றப்பட முடியாதது. பெண் கன்னி கழிந்தமை, கருப்பம் தரித்தலால் வெளிப்பட நேரும். ஆணுக்கு இக்குறையை வைக்காத இயற்கையை என்ன சொல்வது? இன்றும் ஓர் இளம் பெண்ணை, ஆடவருடன் நெருங்கிப் பழகாதே, இரவில் தனியே போகாதே என எச்சரிக்க வேண்டியுள்ளது. ஆண் 'கன்னித்தன்மை' கழிந்ததை மறைக்க முடிகிறது. ஆனால் பெண்ணிடம் 'தற்காத்து' என்று கூறவேண்டியுள்ளது.

### சமநிலைக் கோட்பாடு

ஆயினும் மனித வாழ்க்கையே ஒரு சமநிலைக் கோட்பாட்டின் வழி இயங்குகிறது. ஒரு குறையுள்ள இடத்தில், பிறிதொரு நிறை இருக்கிறது. ஆணுக்கு வலிமை மிகுதி; எனினும் அதனாலும் குறைகளும் உண்டு. பெண் மென்மை மிக்கவள்; ஆயினும் அதனாலும் நிறைகளும் உண்டு. இவை தீர ஆராயப்பட வேண்டியவை.

வெறுமனே ஆணாதிக்கம், பெண்ணாதிக்கம் என்று கதைப்பதில் பயனில்லை. அவை ஓரளவே உண்மை. இன்று மேடையில் பேச, கட்டுரை எழுத மிகவும் பயன்படுபவை மூன்று. ஒன்று தமிழ்ப்பற்று; இரண்டு ஏழைகள் மேம்பாடு; மூன்று ஆணாதிக்க ஒழிப்பு. இவை அலங்காரமாகப் பேச, கைதட்டுப் பெற உதவுகின்றன. இயற்கையின் கூறுபாடு அறிந்து, ஆண் பெண் இயல்பறிந்து இயற்கையே ஒரு சமனிலைப்பாடு தந்துள்ளது. அச்சமனிலைப்பாட்டை உறுதிசெய்து காக்க மிகப்பல முயற்சிகள், திட்டங்கள், நெறிமுறைகள் வகுக்க வேண்டும். பிற யாவும் காலங்கடந்தும் வெற்றுப் பேச்சாகவே முடியும்.

க.சி. அகமுடை நம்பி – தொகுத்தவர் –
திருக்குறளில் பெண்ணியம் (2006)

# 5. காமத்துப்பால்
# பாலியல் வாழ்வின் பயிற்சிக் களம்

இயற்கையின் படைப்பில் மிக விந்தையானது; வியப்புக் குரியது மனித உடலே. விஞ்ஞானியும் இந்த ஐந்து 'பூதங்களின்' வழிப்பட்ட (நிலம், நீர், காற்று, நெருப்பு, வான்), சேர்க்கை வேறுபாடுகளை வைத்துத்தான், புதிய உயிரினங்களைப் படைக்க முயல்கின்றான். இது பெருந்தீமையில் முடிதலும் கூடுமென அவர்களே அஞ்சுகின்றனர்.

இயற்கையை வெல்லலாம்; ஆனால் படைக்க முடியாது. ஒரு துளி நீரைக்கூட. உலகில் இல்லாத ஒன்றால், விஞ்ஞானி படைக்க முடியாது.

மனித உடல் இன்றேல், உயிர் எவ்வளவு உயர்ந்ததாயினும், தனித்து இயங்க இயலாது. ஆவிகள் உலவுவதாகச் சொல்வது, கண் காணாதது. அதை இங்கு விவரிக்க வேண்டாம்.

உடலோடு கூடிய உயிர்களே இங்கு மனிதம். இதில் உடல் இழிவானது அன்று. இந்த உடலுடன் உலவிக்கொண்டே, அதன் நிலையாமையைப் பாடினோர் பலர். அவர்களும் தம் உடலைக் கைவிட்டுவிட்டு, இப்படிப் பேசியிருக்க இயலாது.

உடலுக்குரிய மதிப்புக் கொடுப்பது என்பது மரியாதை நிமித்தமன்று. உடலின்றேல், உயிர் எழுமா, நிற்குமா, பேசுமா? எனவே உடலையும் உடலாசைகளையும் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டுமெனலே அறம்; அவற்றை அறவே புறக்கணிப்பது, கைவிடுவது, இழிவுபடுத்துவது என்பன அறமாகா.

திருவள்ளுவர் கண்காணும் நடைமுறைகட்கு அப்பாற் போகாதவர்; போக விரும்பாதவர்.

*'தாமரைக் கண்ணான் உலகு' – (1103)*

என்பது சொர்க்கம், துறக்கவுலகம் என்று தமிழிற் கூறுவர். ஆண்டுதோறும் சொர்க்கவாசல் திறக்கப்படுகிறது. 'அட மனிதர்களே! உங்களால் மிகவும் நேசிக்கப் படுகிற பெண்ணின் மெல்லிய தோள்மீது சாய்ந்து, இன்பம் துய்ப்பதைவிட, நீங்கள்

சொல்கிற அந்தச் சொர்க்கம் என்னடா இனிது?' என்பது இக்குறளின் சாரம். கண்காணாத கனவைப் பேசி மகிழும் மனிதரை அவர் அறிவார்.அவர்களுக்குக் கண்கண்ட இன்பம் இதுவன்றோ என்பது இதன் உட்கருத்து. இது போலவே, அவர் இவ்வுலக இயல்பான வாழ்வைச் சிறப்பிக்கவே, மக்கள் தம்மை அறியாது கனவுகாணச் செய்த சமயக் கதைகளைப் பயன்படுத்துகிறார். அவற்றைச் சிறப்பிப்பது அவர் கருத்தன்று.

அவர் நூல் உலகிலேயே தனிச்சிறப்பு நூலாவதற்கு - அவர் கூறுவன நூற்றுக்கு நூறு இவ்வுலகம் - இங்கு வாழும் மனிதன் - அவனாலான சமுதாயம், அரசு, குடிமக்கள், இல்லறம் இவை பற்றி மட்டுமே வழிகாட்டுவதுதான்.

இதனாலேதான், இல்வாழ்க்கை பற்றிப் பாடிய அவர், காமத்துப்பாலும் பாடியுள்ளார். அவர் எந்த மதத்தையும் சாரா,'மனிதச் சமயம்' என ஒன்றையே பாடினார் என்பதற்குக் கட்டியங் கூறுவது காமத்துப்பாலே.

மனிதன் இயற்கையை மீற முடியாது. காமம் - என்ற சொல்லை, ஏறத்தாழ 35 இடங்களில் ஆள்கிறார். காமம் - விருப்பம், ஆசை எனும் பொருளும் தருகிறது. காமம் - உடலில் தோன்றும் கூடுதல் வேட்கை. அஃது இயல்பானது. காமக் கடல் (1164), காமக் கடும்புனல் (1134, 1167), காமக் கணிச்சி (கணிச்சி - கோடரி போல்வது 1251) என்பன, ஒருவரை இக் காமவுணர்வு படாதபாடு படுத்தும் எனக் கூறுகின்றன. காமம் -இழிவான சொல்லன்று. உடலில் தோன்றும் இயல்பான உணர்வு. உடற்கூறு வேறுபடாத எவரும் இதனைத் தவிர்த்தல் இயலாது.

காம உணர்வு மிகக்கூடி, வெறி போல ஆவதே தவறு. எதிலும் நல்லது, கெட்டது, அளவானது உண்டுதானே? 'மிக்க காமத்து மிடல்' (காமம் மிகுந்து வலிதிற் புணர்தல்), பெருந்திணை என்பது. தொல்காப்பியம் (997).

*சுவைஒளி ஊறுஓசை நாற்றம் என்று ஐந்தின்*
*வகைதெரிவான் கட்டே உலகு.* *(27)*

*கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும்*
*ஒண்தொடி கண்ணே உள.* *(1101)*

இவ் இரண்டு குறள்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள். நம் மெய்வாய் கண் மூக்கு செவி - எனும் ஐம்பொறிகளையும் அடக்கியாள வேண்டும்; அவித்தல் - பக்குவப் படுத்தல் வேண்டும்; அவற்றின் வகை தெரிந்து பயன் படுத்த வேண்டும்.

மருத்துவ அறிஞர்கள் என்ன சொல்கிறார்கள்? "மரம் சும்மா இருந்தாலும் காற்று வீசி மரத்தை அசைப்பது போல, நாம் சும்மா இருந்தாலும் உடலில் ஹார்மோன்கள் (டெஸ்டோஸ்ட்டரான், ஈஸ்ட்ரோஜன், புரொஜெஸ்டீரான்) இந்த (காம) உணர்வை தூண்டி விடுகின்றன.இப்படி ஆவதில் தவறில்லை. ஆனால் நாம் காம உணர்வுக்கு அடிமையாகிவிடக் கூடாது. கால் போன போக்கில் போய்விடக் கூடாது. காமம் நம் வசம் இருக்க வேண்டும்" (சித்திரா, மீனாட்சி மருத்துவ மலர், சனவரி 2005, மதுரை, பக்கம். 40)

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, ஆண் பெண் உறவு பற்றிய, மெய்ப்பாடுகளை வகை தொகைப் படுத்தி, மனித இனம் உள்ளவரை மறக்க முடியாதவற்றைத் தொகுத்துரைத்த தொல் காப்பியர் என்ன சொல்லியுள்ளார்?

'கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்...' என இதனை ஒழுக்க வரிசையில் சேர்க்கிறார். (1098).

*காமம் சான்ற கடைக்கோட் காலை*
*ஏமம் சான்ற மக்களொடு துவன்றி*
*அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்*
*சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.* **(1138)**

எல்லைக்குட்பட்ட காமஉணர்வு முழுவதும் அனுபவித்துத் தீர்ந்த, முடிவான காலத்தில் தமக்குப் பாதுகாவலான மக்கள், பேரன், பேர்த்தி, சுற்றத்துடன் கூடி கணவனும் மனைவியும் சிறந்த நற்செயல்களைச் செய்வதே, அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்ததன் பயனாகும் (இறந்தது - கடந்த கால வாழ்வு). இதில் முதலடியை மீண்டும் படிக்க வேண்டும்.

இந்த உடலையும் காமத்தையும் இழிவென்றவர்கள், அவ்வாறு பாடியவர்கள் எல்லோரும் அவற்றை அளவுக்கு மீறி எல்லை கடந்து நுகர்ந்து படுகுழியில் வீழ்ந்து, அவற்றால் தாம் இழிவுபட்டவர்களே.

*'உடம்பார் அழியில் உயிரார் அழிவர்'* **(724)**

*'உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்'*
*உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்...*

*உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே.* **(725)**

*'உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்'* **(1823)**

இத்திருமந்திரத் தமிழாகம மொழிகள் செப்புவதை அறிக. திருவள்ளுவர் ‘கூடா ஒழுக்கம்’ என்ற தலைப்பில் எழுதியுள்ளவை, பொதுவான பொய் களவு கொலை குடிவகைகள் அல்ல.துறவு வேடத்தையே ‘கூடா ஒழுக்கம்’ என்கிறார் அவர். தாம் பாடிய துறவு, தவம், மெய்யுணர்தல், அவாவறுத்தல் - எதிலும் ஒரு சொல்கூட, அவர் பெண்களை இழிவுபடுத்திக் கூறவே இல்லை; அவர் கூறும் துறவு இல்லறத்தில் மகிழ்ந்திருந்து, பிறகு துறக்கும் தூய துறவு.

எனவே காதல் எனும் சொல் உயர்ந்ததென்றும் காமம் என்பது இழிந்த சொல்லென்றும் அவர் காலத்தில் கருதப்படவில்லை. தொல்காப்பியம், சங்க இலக்கியம் அனைத்தும், இயல்பான, உடம் பொடுபட்ட, காமஉணர்வை உயர்த்தியே பேசியுள்ளன. வரையறை மீறிய காமமே கடியப்படுகிறது.

ஆகவே காமத்துப் பாலைப் பெயர் மாற்றம் செய்வது, இழிவாக எண்ணுவது இடைக்கால, விளைவுகளாலும் இக்கால நினைவுகளாலும் ஏற்பட்டவை.

தூய துறவிகள் சிலர் இருக்கலாம், நூறாயிரத்தில் ஒருவராக. ஆனால், மற்றவர் எல்லாம், இவ் இயற்கைக்கு மாறுபட்ட வாழ்வை, வெளிவேடத்தால் நம்பவைத்து, உள்ளே கொடிய காமுகர்களாகவே ஆகின்றனர்.

திருவள்ளுவரின் காமத்துப்பால் 25 அதிகாரங்கள் கொண்டது. இதில் காணுதல், மனங்கலத்தல், கூடி மகிழ்தல் போல்வன ‘களவுக்கால’ நிகழ்வுகளாக, மிக நாகரிகமாக ஏழு அதிகாரங்களில் கூறப்படுகின்றன. இதில் இருவர் மனமும் ஒன்றுபடுதலை மிகமிக வற்புறுத்துகிறார். தேவைகருதி, உள்ளக் காதலால் ஒன்றாது, கண்டதைத் தின்னும் கழுதை, மாடு போல வெறும் சதை யுணர்ச்சிப் புணர்ச்சிகளை அவர் ஏற்கவில்லை. ‘குறிப்பறிதல்’ அதிகாரம் முழுவதும், மனம் ஒன்றியதை ஒருவரை ஒருவர் வெளிப் படுத்தும் பாங்கினை மட்டுமே, மிக நுட்பமாக விளக்குகிறது. இம்மெய்ப் பாடுகள் உள்ளம் ஒன்றிய காதலர்களிடம் மட்டுமே காணப்படுவன.

தெரு நாய்களும் மாடுகளும் கூடுவது போலவே, நம் திரைப் படக் காதலர்கள் காட்டப்படுகின்றனர். நம் தமிழ்ப்பட இயக்குநர் பலர், இவ்விலங்கினத்தவரே தவிர, மனிதர்களே அல்லர். கட்டிப் புரள வைப்பது காதலுமன்று; காமமுமன்று ஒருவரை ஒருவர் தொடாமலே, அளவற்ற காதற்காட்சிகளைக் காட்ட, இவ் அதிகாரங்கள் வழிகாட்டுகின்றன.

ஒருவருடன் ஒருவர் பேசி மகிழ்வதாகவும் பாடி மகிழ்வதாகவும் காட்டுவதற்குக் கூட, எத்துணை மென்மை, நாகரிகம், நாணம், மகிழ்ச்சி, இன்பம் துள்ளி எழ வழி சொல்கிறார் வள்ளுவர்.

சிவன் தன் துணைவிக்கு இடப்பாகம் தந்தான்; திருமால் மார்பைத் தந்தான் திருமகளுக்கு; நான்முகன் தன் நாவில் இருத்தினான். இவ்வாறு தொன்மங்கள் கற்பனை செய்யும். திருவள்ளுவரின் காதலனோ, தன் காதலிக்குத் தன் கண்ணை - கண்ணினுள் உள்ள கருமணியை - அக் கருமணியில் ஆடும் பாவையை இடமாகத் தர விரும்புகிறான்.

*கருமணியிற் பாவாய்!நீ போதாய் யாம் வீழும்*
*திருநுதற்கு இல்லை இடம். (1123)*

வீழும் - விரும்பும். திருநுதல் - அழகிய நெற்றியையுடைய தலைவி. திருவள்ளுவர் முன்னைய தொன்மங்களையும் விஞ்சுகிறார்.

திருமணம் முடியுமுன் காதல் வாழ்வு பற்றி, இங்ஙனம் இன்புறுதற்குத் தக்கனவற்றையே ஏழு அதிகாரங்களில் பாடியவர், அது முடிந்தபின் கூடிவாழும் இன்பநிலை எளிதேயாதலின், பிரிவு பற்றிய சூழல்களையே 15 அதிகாரங்களில் பாடுகிறார்.

'வினையே (தொழில், வணிகம்) ஆடவர்க்கு உயிரே; மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்' என்பது தமிழ்ப் பண்பாடு.

இதனால் கற்பு வாழ்க்கையில், பிரிவும் பிரிவில் பரிவுமாய், உண்மைக் காதலின் உணர்வு வெளிப்பட வாய்ப்புக் கூடுதல். இக் காதலுணர்வுகளைத் திருவள்ளுவர் புனைந்துள்ள அழகு, பல்வேறு அகநாடக நிகழ்வுகளாக விளங்குகிறது.

இறுதியிலுள்ள புலவி, புலவி நுணுக்கம், ஊடல் உவகை ஆகிய மூன்று அதிகாரங்களும் ஒப்பற்றவை. காதலுறவில் ஏற்படும் சிறுசிறு பிரச்சினைகள், மனமாற்றங்களில் எவ்வாறு 'உறவுக்குச்' சிதைவின்றிக் கலந்து பழகலாம் என்பதை இவை படம் பிடித்துக் காட்டுகின்றன.

பிரிவு பற்றி ஏன் 15 அதிகாரங்கள்? காதல் வாழ்வில் உடலுறவே முக்கியமா? அதுதான் வாழ்வா? அதைவிட்டால், வேறு காதல் உறவுகளே இல்லையா?

காதல் வாழ்வில் 'புணர்ச்சி' என்பது ஒரு முக்கியமான கூறு. ஆனால் அதுவே காதல் வாழ்வன்று.

உணவு முக்கியம்; உண்ணுதல் இன்றியமையாதது; ஆனால் அதுவே வாழ்வாகாது.

காண்டேகர் என்ற மராத்தி நாவலாசிரியர் மாந்தருக்கு மூன்று பசிகள் உண்டு என்பார். 1. உயிர்ப் பசி, 2. உடற் பசி 3. வயிற்றுப் பசி.

நம்மை ஒருவர் பாராட்டும்படி நடப்பது உயிர்ப்பசி. புகழ் வேட்கை, போட்டியில் வெற்றி, புதியன படைக்கும் முயற்சி எல்லாம் உயிர்ப்பசியின் விளைவுகள்.

*தம்இல் இருந்து தமதுபாத்து உண்டற்றால்*
*அம்மா அரிவை முயக்கு. (107)*

தான் கட்டிய வீட்டிலிருந்து, தான் சம்பாதித்ததைப் பகிர்ந்துண்ணும் போது ஏற்படும் மகிழ்ச்சி போன்றதே, யான் என் காதலியைத் தழுவிக் கொள்ளும்போது ஏற்படும் இன்பம்! முன்னது மனப்பசித் தீர்வு உயிர்ப்பசி நிறைதல். பின்னது உடற்பசித் தீர்வு.

வயிற்றுப் பசி போன்றதே உடற்பசி. உடற்பசிக்குப் பெயர்தான் காமம். அஃது இழிந்த சொல் அன்று. இன்பம், காதல் எனும் சொற்கள் அதற்கு ஈடாகா. காமமில்லா உயிர்கள் இல்லை. காமம் உடலியற்கை. வயிற்றுப் பசியை, ஒரு வேளையுண்டேனும் தீர்தலே முடியும்; காய் கனி கிழங்கு தின்பதும் அப்பசி அடங்கவே. விரத மிருப்பானும், அதை முடிப்பது வயிற்றுள் எரியும் நெருப்பை அடக்கியே தீர்வான். அவைபோல உடற்பசியும் அடக்க அடக்கக் கூடுதலாகும். அதனை ஒருவன் கைவிட வேண்டுமேல் ஒன்று உடலிற் குறையிருக்க வேண்டும்; அல்லது மறைவாக நடந்து ஒழுக்கம் குன்ற வேண்டும்.

'உறுதோறும் உயிர் தளிர்க்கும்' என்றாரே, இவ்வின்ப நுகர்வை (1106). மலரினும் மெல்லியது காமம் - ஆம் அதனை அவ்வளவு மென்மையாகக் கையாள வேண்டும். சிலர் அதன் செவ்வி தலைப்படுவார் - அதன் 'செவ்வி' குறையாது, வாடாது நுகர வல்லார் சிலரே (1289). உலகில் விலங்கினங்களோடு ஒத்தவரே மிகப் பலர்.

'அறிதோறும் அறியாமை கண்டற்றால்' என்று, அதனை நுகரும் விதத்தை, உவமைவழி விளக்குகிறார் (1110). ஒருவர் தாம் ஒருவரை விரும்ப, அவரை அவரும் அஃதேபோல முழுமையாய் விரும்ப, இரண்டுள்ளமும் இரண்டறக் கலப்பது - இரண்டுடலும் இரண்டறக் கலப்பது. அதனைக் 'காமத்துக் காழில் கனி' என்றார் (1191) விதையில்லாத கனி முழுவதும்உண்ணப்படுமல்லவா?

வயிற்றுப் பசி போன்றதே உடற் பசி எனும் உடலியற்கையை உணர்ந்த அவர், அவை இரண்டையும் இறுதி அதிகாரத்தில் உவமித்து அதன் மூலம், பாலியல் நுகர்வு பற்றிய பாடம் ஒன்றை மிக விரிவாகக் கற்பிக்கின்றார்.

*உணலினும் உண்டது அறலினிது காமம்*
*புணர்தலின் ஊடல் இனிது. (1326)*

உண்பதைவிட, உண்டது செரிமானமாவது இனிது; கூடுவதை விட ஊடுவது மிக இனிது. இங்கு ஊடுதலென்பது கலந்து பழகுவது; இன்பப் பொழுதுபோக்கு; இருவரிடையே நிகழும் 'இன்பம் முதிரப் பேசும்' உரையாடல், செய்கையின்பங்கள். 'இட்டும் தொட்டும் கவ்வியும் துழன்றும், நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்' என்பது போல, ஊடி விளையாடும் 'மயக்குறும்' இன்ப வாழ்வு நடைமுறை. எப்பொழுதும் 'புணர்ச்சி' மட்டுமே இன்பமென்று கருதுபவர் விலங்கினம். அது 'செரிமானம்' ஆவதென்பது, இரண்டு 'புணர்ச்சிகளுக்கு' இடையேயுள்ள இடைவெளி. இடைவெளி யின்றிப் புணர்தலே கதியெனக் கிடப்பார். விரைவில் கிழப்பருவம் எய்தி, பிணிவாய்ப்பட்டு, இறந்து போவர். இரண்டு முறை சாப்பிடுவதற்கிடையே, முன்னது செரிமானமாக வேண்டும்; செரிமானமாகுமளவு இடைவெளி விட வேண்டும்.

இக்குறளை 'மருந்து' அதிகாரத்துடன், ஒப்பிட்டுப்பார் எனக் கூறாமல், கூறியுள்ளார் திருவள்ளுவர். அங்கு 'உணவு' பற்றியும் 'உண்ணும் நெறிமுறை' பற்றியுமே ஏழு குறள்கள் உள. உணவே மருந்தென்பது - இயற்கை மருத்துவராம் திருவள்ளுவர் கருத்து. அது வயிற்றுப் பசி பற்றியது; இஃது உடற்பசி பற்றியது. எனவே இவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பது பொருத்த முடையதுமாகும்.

1. உணவு - சாப்பாடு மிகினும் குறையினும் நோய் செய்யும். இங்கும் புணர்ச்சி அளவுடன் அமைதல் வேண்டும். புணர்ச்சி - உடல் நலனுக்குரிய ஓர் ஊட்டச் சத்துமாகும். 'உறுதோறும் உயிர் தளிர்ப்பத் தீண்டுதல்' என்றாரல்லவா? ஒருவித உடற் பயிற்சிக்குரிய, இதனை முழுவதும் கைவிடுதலும் தீதே என்ற கருத்தும் உண்மையே.

2. உண்டது செரிமானமானதா என அறிந்து, அதன் பிறகே மீண்டும் உண்ண வேண்டும். புணர்ச்சியிலும் இடைவெளி விட்டு, பிறகு கூட வேண்டும். நன்கு பசித்தபின் புசிப்பது போன்றதே இது.

3. தன் உடல் செரிமானமாகும் அளவு மட்டும் உண்க; பசியினது அளவறிந்து உண்க. அஃது ஒருவன் நீண்ட நாள் வாழும் வழி. இங்கு 'உடம்பு பெற்றான் நெடிதுய்க்குமாறு' (943) என்பார். உடம்பு ஒரு கருவி தானே. அதனை; மறவாதே என்பதாம்.

4. செரிமானதறிதல் மட்டுமன்று; தன் உடம்புக்குச் செரிமானம் ஆகும் உணவு எது; தன் உடலுக்கு ஒத்துப் போகும் உணவு எது என்றெல்லாம் - சில இயல்புகளை (தனக்குரிய உடலுக்கேற்ற இயல்புகளை) அறிந்து, அவற்றை உறுதியுடன் கடைப்பிடித்து உண்ண வேண்டும். தனக்கு ஒவ்வாத உணவுகளைக் கைவிட்டு விட வேண்டும். துவரப் பசித்த பின்தான் உண்ண வேண்டும். புலவி, ஊடல் போல்வன பசி எடுக்கும் காலத்தை நீட்டிப்பன என அறிக இடைவெளி தருவன என உணர்க. துவர (முழுக்கப்) பசித்தபின் நன்கு உண்பதுபோல, இன்பத்தையும் நன்கு துய்க்கவும் என்பது கருத்து.

5. தன் உடலுக்கு மாறுபாடில்லாத உணவைத் தேர்ந்தெடுத்து, வேண்டாதவற்றை மறுத்துக் கைவிட்டு, உண்டால், உயிர்க்கு ஊறுபாடில்லை. நோய் நொடி வாரா. காம வாழ்விலும் இவை போல, தன் மனத்திற்கு உகந்த ஒருத்தியுடன், (பிறவாறு கண்டதை யெல்லாம் விரும்பாது தவிர்த்து,) இன்பம் துய்த்தால் நோய்நொடி வாரா. உயிருக்கும் ஊறு நேராது.

6. நமது உடலில் ஏற்படும் பசியினது அளவுக்குச் சிறிது குறைவாகவே உண்ண வேண்டும். நூறு விழுக்காடு பசியுள்ள தெனில், தொண்ணூறில் நிறுத்திக் கொள்ளுதலே தக்கது. 'முழுவதும் துய்த்தல்' - என்பது, இன்ப உணர்வில் முழுகி மகிழ்தல். அறவே தன்னை இழத்தலன்று. படிப்படியாக அளவுடன் துய்த்தால் நீண்ட காலம் இன்புற்று வாழலாம் என்பது கருத்து.

7. தன் பசிக்குக் கூடுதலாக, நாச்சுவைக்கு அடிமைப் பட்டு, கண்டபடி வயிறுபுடைக்க, மேன்மேலும் தின்பவர் தொகை கூடுதல். அவர்களைக் 'கழி பேர் இரையன்' என்பார் திருவள்ளுவர். தன் உடலாற்றலுக்கும் கூடுதலாக, இதே வேலையாக, புணர்தலே குறியாக, அதற்கே அடிமைப்பட்டு, திரும்பத் திரும்பத் 'துய்ப்பவர் களும்' கழிபேர் இரையான் போன்றவர்களே. அவர்களை நோய் விடாது பற்றிக் கொள்ளும்.

8. தனக்கு இவ்வளவுதான் நல்லது; இதுதான் நல்லது; தன் உடலியல்புக்கு இது போதும் என்றெல்லாம் சிந்தியாமல், அளவுக்கு மிக அதிகமாக உண்பதும் கெடுதி; துய்ப்பதும் கெடுதி. பல்வேறு நோய்கள் கணக்கின்றி அவனைத் தொற்றிக் கொள்ளும்.

இவை போல்வன மேன்மேலும் சிந்திக்குமாறுள்ளன. ஒவ்வொரு குறளுக்குரிய உட்கருத்து, அவ்வுரைக்கும் விளக்கத் திற்கும் அப்பாலுள்ளன. உரைவிளக்கத்தைவிட, ஆழ்ந்திருக்கும் உட் கருத்தே முக்கியம். திருவள்ளுவர் எதிர்பார்த்துச் சொல்லியது எது என்பதே வினா. இவ்வாறு ஒரு பாலியல் மருத்துவரும் உண்மைக் காதலரும், இக்காமத்துப் பாலை ஓதிஓதி உணர்வார்களாயின், இப்பாலானது ஒரு காதல் பாடப் புத்தகம், பாலியல் பயிற்சிக் களம் என்பதை முற்றும் உணர்வர். அவர்களே இந்'நிலமிசை நீடுவாழ்வார்'. இவ்வுலக இன்பந் துய்த்தலை, பிற வடதிசைச் சமய நூல்களெல்லாம் இழித்தும் பழித்தும் பேசியிருக்கவும், இந்திய நாட்டில் திருவள்ளுவர் ஒரு நெறிமுறைப்படியான, இவ்வில்லற இன்ப வாழ்வு இன்றியமையாததொன்றென அழுத்தமாகச் சொல்லி, அதற்கான பயிற்சிப் பாட வழிகாட்டிகளையும் தந்து சென்றுள்ளார்.

# 6. வடவர் சாற்றிய தவமும் வள்ளுவர் போற்றிய தவமும்

திருவள்ளுவர் வைதிகம், சமணம், பௌத்தம் போலும் சமயங்கள் ஓங்கியிருந்த காலத்தில் உயிர்த்தெழுந்தவர். ஆனால் அவற்றின் வழிச் சிந்திக்காமல், புதுமையாய்ச் சிந்தித்து, புரட்சிமிகு கருத்துகளைத் தந்த பெரியார் அவர். ஆயினும் இடைக்கால உரைகள், மீணடும் தமிழகத்தைக் கவ்விக் கொண்ட, சமய மேகங்கள் சூழ்ந்த காலத்தனவாதலின், வள்ளுவ உண்மைகள் மறைப்புண்டன. அவற்றினின்றும் திருக்குறள் இன்றளவும் முழுமையாக மீண்டபாடில்லை.

வள்ளுவரைக் காட்டும் அதே உரைகள்தான் வள்ளுவரின் உள்ளத்தையும் உள்ளவாறு காட்டத் தவறிவிடுகின்றன. அதற்கு அவற்றின் தவறு காரணமென்பதைவிடக் காலத்தை மீறிச் சிந்திக்கும் போக்கும் காணப்படாமையே காரணமெனலாம்.

திருவள்ளுவர் ‘அவி சொரிந்து ஆயிரம் வேட்டலை’க் கண்டித்தவர். ‘பார்ப்பான் பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்’ என்றவர். ‘மழித்தலும் நீட்டலும் வேண்டா’ எனத் துணிச்சலாகக் கூறியவர். அவர் தாம் கூறவரும் அடிக்கருத்தாம் அதிகாரத் தலைப்புச் சொல்லை, முதற்குறளில் விளக்கி விடுவதுண்டு. இன்சொல் யாதென்பதையும் ஈகை என்பது யாதென்பதையும் முதற்குறள்கள் விளக்கக் காணலாம். துறவு அதிகார முதற்குறள்.

*யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்*
*அதனின் அதனின் இலன்.* *(341)*

என்பது, இதுவே வள்ளுவர் கண்ட துறவின் இலக்கணமாகும். பிறவாறு காவியுடை தரித்து துறவுகளை மனங்கொண்டு, வள்ளுவத் துறவை விளக்கக் கூடாது. ‘தவம்’ அதிகார முதற் குறளும் தவத்தின் இலக்கணத்தையே கூறுகிறது.

*உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை*
*அற்றே தவத்திற்கு உரு.* *(261)*

தவத்திற்கு அவர் தந்த வேறொரு சொல் ‘நோன்றல்’, நோன்றலாவது பொறுத்தல். சுமை தாங்கி போல் வருந்துன்பங்களையெல்லாம் பொறுத்துக் கொள்வதே தவம் தான். பிற உயிர்கட்குத் துன்பம் செய்யா திருப்பதும் தவமே ஆகும்.

### புதிய பார்வையில் ‘தவ’ வள்ளுவம்

வள்ளுவர் கூறும் ஏனைய ஒன்பது ‘தவக்’ குறள்களுக்கும் இவ்விலக்கணப்படிதான் பொருள்காண வேண்டும்.

காட்டிற்குப் போய்க் கண்மூடித் தவம் செய்வது பற்றிய அனைத்தையும் அறிந்தவர் அவர். நெருப்பில் நிற்றல், நீரில் நடத்தல், பருவகாலத் துன்பங்களைத் தாங்கி, யோக நிலையிலமர்ந்து, இறைவனைத் தியானித்துத் தவம் செய்தல் பற்றிய அனைத்துச் சித்திகளையும் வித்தைகளையும் அறிந்திருந்ததுடன் ஊனும் உறக்கமும் குறைத்துத் தன்னை நலிந்து கொள்ளும் தியான பலத்தால், பேராற்றல்கள் கைவரப் பெறுதலையும் பார்த்தும் படித்தும் தெரிந்து கொண்டவர் அவர். வான்மீகர் தம்மைச் சுற்றிப் புற்று வளருமளவு தவயோகத்தில் மூழ்கிக் காலங்காலமாக இருந்தது; புத்த பகவான் போதி மரத்தடியில் ஞானம் பெற்றுக் கண்மூடித் தவம் செய்து, அகமுக நோக்கில் இறையுணர்வுற்றுப் பெருமை சேர்த்தது என யாவும் அவருக்குத் தெரிந்த அற்புதங்களே. அத்தவத்தால் ஆக்கவும் அழிக்கவும் வல்ல சாபமிடும் பேராற்றல்கள் உண்டாகின்றன என்ற புராண, இதிகாச வரலாறுகள் அவருக்குத் தெரியாதன அல்ல.

ஆனால் திருவள்ளுவர் இவ்வுலக மனிதநேய நல்வாழ்வு பற்றியே விளக்க வந்தவர். அவர் கூறும் மறுவுலகம், எழுபிறப்பு, நிரையம், துறக்கம், புராணக் கூறுகள் யாவும், மனிதனின் இவ்வுலக நல்வாழ்வுக்கு அவனைத் தூண்டுமளவிற்கே அவரால் பயன்படுத்தப் பட்டுள்ளன. அவரைப் பொறுத்த வரை ‘மேல் உலகம் இல்லெனினும் ஈதலே நன்று’.

எனவே இந்தப் பார்வையில் நோக்கும்போது, தவம் எனத் திருவள்ளுவர் கூறுவது உலகத் தவம். இல்லறத்தவம்; நாம் அன்றாடங்காணும் நடைமுறைத்தவம். நான்கு பெண்களுடன் பிறந்துவிட்ட இளைஞன், பெற்றோரை இழந்த நிலையில், அப்பெண்களைக் கரையேற்றவும் தன் வாழ்வை அமைத்துக் கொள்ளவுமென இடையறாது உழைத்து, தன்னைத்தானே நலிந்து கொண்டு, ஒரே சிந்தனையாய், ஒரே எண்ணமாய், ஒரே குறிக்கோளாய் முயல்கிறான் - முயன்றபடியே இருக்கிறான் என்றால்

- அதுதான் வள்ளுவர் கூறும் தவம். ஏனைய 'தபஸ்' எனப்படும் தவத்தை அவர் குறைகூறவில்லை; மறுக்கவில்லை. ஆயினும் தவத்திற்குப் புதிய விளக்கங்கள் தருகிறார்.

'வள்ளுவர் உள்ளம்' யாதென அறிவதற்கு; வள்ளுவத் தனிச் சிறப்புச் சித்தாந்தத்தைக் கண்டு கொள்வதற்கு; அவரது தனிப் பார்வையை விளங்கிக் கொள்வதற்குத் 'தவம்' அதிகாரம் நல்ல சான்றாக அமையும். அதனை நூலிழை நுனியாகப் பற்றிக் கொண்டு சென்றால், உண்மையான வள்ளுவர் உள்ளமென்ற கோயிலுக்குள் நாம் நுழைந்து விடலாம்.

'தவம்' அதிகாரத்திற்கு, அனைத்து உரையாசிரியர்களும் தம் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த, வடவர் போற்றிய 'தவம்' பற்றிய கருத்துக்களையே விளக்கமாகத் தந்து சென்றுள்ளனர். அது தகாது என்பதை, ஒவ்வொரு குறளும் பறைசாற்றுகிறது என்றுதான் கூறவேண்டும்.

*தவம்செய்வார் தங்கருமம் செய்வார்; மற்றல்லார்*
*அவம் செய்வார் ஆசையுட்பட்டு.*

தம் கடமையைச் செய்பவரே 'தவம்' செய்பவர் ஆவார்; அத்தகையவரல்லாதார், ஆசைக்குக் கட்டுப்பட்டுக் கேடு செய்பவர் ஆவார். ஓர் அலுவலகத்தில், எழுத்தராகப் பணி புரிபவர்க்கும் ஓர் ஆசிரியர்க்கும் என எவருக்கும் இது பொருந்தும். தம் கடமையையே தவமாகச் செய்ய வேண்டுமென்பதாம். ஒரே சிந்தனையாய், அலுவலக நேரம் முழுவதும், ஒருவர் தம் கடமையைச் செய்கிறாரெனில், நம்நாடு எவ்வளவு முன்னேறி விடும். சப்பானியர்கள் இத்தகைய தவத்தையே செய்கிறார்கள். தவம் செய்தால் வரம் பெறலாம்; அதிட்டமுண்டாகும் என்பனவெல்லாம் ஆசையுட்பட்டவையே. இக்குறளுக்கு, கண்மூடித் தியானத்திலமரும் தவத்தைச் செய்பவர்களே, தம் கருமம் செய்பவர்கள் என்ற உரை பொருந்தாது.

*தன் உயிர் தான்அறப் பெற்றானை ஏனைய*
*மன்னுயிர் எல்லாம் தொழும்.*

'தவ'த்தில் வரும் ஒப்பற்ற குறள் இது. ஒருமை, ஓர்மையே தியானம். பகவானைத் தியானிப்பதே தியானம் - ஓர்மை. ஒருவன் தன் கடமையையே நினைப்பது - தன் தொழிலையே இடையறாது நினைத்தபடி இருப்பது - இவையும் ஒரே நினைவாம் ஓர்மையே

யன்றோ? தியானமே அன்றோ? நம் உயிர் ஒரு தனிப்பண்புடன் படைக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய, தனக்கே உரித்தான உயிர்ப் பண்பை எவனொருவன் முழுமையாக வளர்த்துக் கொள்கிறானோ, அவனை ஏனைய நிலை பெற்ற உயிர்கள் எல்லாம் போற்றி வணங்கும். கொண்டாடும். உலகில் நிகரற்ற வெற்றி பெற்ற திறமைசாலிகளை ஒருதுறையில் காலூன்றி, மிக வளர்ந்து, ஈடும் எடுப்புமற்ற நிலையை அடைந்தவர்களை உலகம் போற்றி வணங்கிக் கொண்டாடுவதைக் கண் முன்னர்க் காண்கிறோ மல்லவா? முயற்சித் தவமே இங்ஙனம் கூறப்படுகிறது. 'தன்னுயிர் தானறப் பெறுதல்' என்பது 'தவமாகிய தன் கருமஞ் செய்தலை' எனவும் பிறவாறும் கூறப்பட்டுள்ள உரைகள் உண்மையை மறைக்கும் திரைகளே யன்றி உரைகளாகா.

### செல்வத்தைத் தரும் தவம்

*இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்*
*சிலர்பலர் நோலா தவர்.*

தவ அதிகாரத்தின் முதற்குறள் போல, இவ்விறுதிக் குறளும் உண்மையை வெட்டவெளிச்சமாக்கி விடுகிறது. முற்பிறவியில் தவம் செய்திருந்தால், இப்பிறவியில் செல்வம் சேரும் என்றெல்லாம் பொருள் சொல்லக் குறள் இடம் தரவில்லை. இங்கு நம் கண்ணெதிரே நோற்பாரும், நோலாதாரும் செல்வராகவும் வறியராகவும் விளங்குவதையே இக்குறள் கூறுவதால், தடுமாறும் உரையாளர்கள் மழுப்பிப் போயுள்ளனர். தங்கருமம் செய்வாராகிய, உற்ற நோய் நோற்கும் தவத்தர்களையே இக் குறள் 'நோற்பார்' என்று சுட்டுகிறது. தடைகளையெல்லாம் தாங்கித்தாங்கி, முதலில் வரும் துன்பங்களையெல்லாம் ஏற்றுப் பொறுத்து, முயல்பவனே இறுதியில் பெருவெற்றி காணுதலால் நோற்பாரே செல்வராவர் என்ற இக்குறள் மானுட மேன்மைக்கு அரிய வழிகாட்டியாகும்.

### துன்பத்தைத் தாங்கிச் சுடர்விடும் தவம்

*சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்*
*சுடச்சுட நோற்கிற் பவர்க்கு*

என்ற குறள், கண்மூடித் தவம் செய்தலால் வரும் துன்பத்தை மட்டுமா குறிக்கிறது? வாழ்வில் துன்பம் சுடச் சுடத் தாங்குபவன், ஒளிவீசுதலையன்றோ இக்குறள் விளக்குகிறது.

*உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்*
*இன்னாச் சொல் நோற்பாரின் பின்* *(160)*

என்ற குறளை இங்கு ஒப்பிட்டுப் பாருங்கள்!

**மோனத்தவமும் முயற்சித் தவமுடையார்க்கே ஆகும்**

வடவர் தவம் செய்பவர் நினைத்ததை அடையலாம் எனவும் வரங்கள் பல பெறலாம் எனவும் புனைந்துள்ளனர். திருவள்ளுவர், இங்கு இச் 'செயல் தவத்தை' முயலுதலால், 'வேண்டிய வேண்டியாங்கு எய்தலாம்' என்றும், இத்தவத்தாலும் 'கூற்றம் குதித்தலும் கை கூடும்' எனவும் ஊக்கமூட்டுகிறார். ஒன்னாரைத் தெறுதலும் உவந்தாரை ஆக்கலும் இம்முயற்சித் தவத்தாலும் முடியும் என வலியுறுத்துகிறார்.

*தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம் அதனை*
*அஃதிலார் மேற்கொள் வது.*

என்பது 'தவம்' - இரண்டாம் குறளாகும். இதில் முதலில் வருவது பிறர் கூறும் தவம்; அடுத்து வருவது வள்ளுவர் கூறும் தவம். முன்னைய தவமும், அதிலேயே இடையறாது ஈடுபடுவோர்க்கே தவமாகும்; இன்றேல் அவமே ஆகும் (வீணாகும்). 'தவத்திற்கு உரு' என்று தம் கருத்தளவில், 'கண்மூடித்தியானத்திலமரும்' உருத் தோற்றமொன்று இருப்பதால், அதை மறுக்கவே உற்ற துன்பத்தைப் பொறுப்பதும் பிறவுயிர்க்குத் துன்பம் செய்யாதிருப்பதுமே 'தவம்' என்றமையாது, 'தவத்திற்கு உரு' என்றே கூறினார், செந்நாப் போதார்.

(இ.ப.த. மன்றத் தொகுப்பு)

# 7. வள்ளுவர் செய்த புதுமையும் புரட்சியும்

திருவள்ளுவரின் சமகாலப் பின்புலமும் சங்க காலத் தமிழகச் சூழ்நிலையும் தெரிந்தால்தான், வள்ளுவர் புதுமை மட்டும் படைத்தாரல்லர்; புரட்சியும் செய்தாரென்பது விளங்கும். மேலும் திருக்குறளை, 'தோள் கண்டார் தோளே கண்டார், தொடுகழற் கமலமன்ன தாள்கண்டார் தாளே கண்டார்' என்றாற்போலப் பகுதி பகுதியாகப் படித்தவர்களைவிட, முழுவதும் பயின்றவர்களால் தான், அதன் நீரோட்டம் போன்ற உயிரோட்டமான கருத்து உணரப்படும்.

ஒரு செவிவழிச் செய்தியுண்டு. மதுரையில் திருவள்ளுவர் குறளை அரங்கேற்றியது பற்றிய கதைகள் அவை. பொற்றாமரைக் குளத்தில், திருக்குறள் ஏடுகளைப் போட, அவை மிதந்து வந்து பொன் தாமரையில் அமர்வதைக் காட்டி, ஔவையார் குறளை ஏற்குமாறு, சங்கப் புலவர்களைச் சம்மதிக்க வைத்தார் என்பது ஒரு கதை. மதுரைத் தமிழ்ச் சங்கத்தில், சங்கப் பலகை ஒன்று இருந்ததாம். அது தகுதி வாய்ந்த புலவர் வந்தால்தான், சற்றே நீண்டு அவர் அமர இடம் கொடுக்குமாம். திருவள்ளுவர்க்கு அது இடம் கொடுக்காது காலம் தாழ்த்தபோது, ஓர் 'அசரீரி' - வான்வழியாக ஒலித்ததாம். அத்தெய்வக் குரலைக் கேட்ட பிறகுதான், வள்ளுவர்க்குச் சங்கப் பலகையில் இடம் கிடைத்ததாம்!

இதில் ஓர் அடிப்படை உண்மை இருப்பதை மறுக்க முடியாது. திருவள்ளுவர் எளிதாகச் சங்கப் புலவர்களால் ஏற்கப்படவில்லை; திருக்குறளும் எளிதாக அரங்கேற்றப் படவில்லை. அதற்குக் காரணம் அவர் கூறியுள்ள புதுமைக் கருத்துக்களும் புரட்சிச் சிந்தனைகளுமேயாகும்.

அவர் காலத்தே நிறுவனச் சமயங்கள் கிளைத்துப் பல்கியிருந்தன. வைதிகம், சமணம், பௌத்தம் என்பன தலைமை வாய்ந்தவை. தமிழ்ப் பண்பாட்டுவழி அரும்பிய சிவனியமும் மாலியமும் (சைவ, வைணவம்) தனித் தன்மையுடன் விளங்கின. திருவள்ளுவர் இவற்றிலுள்ள நல்ல கருத்துக்களை ஏற்றுக் கொண்டாரே தவிர, எதனுடனும் சார்ந்து தம்மை அடையாளப் படுத்திக் கொள்ளவில்லை. தாமே தமக்கென்று ஒரு புதிய

சமயத்தைப் படைத்துக் கொள்ளவும் விரும்பவில்லை. ‘சமயக் கணக்கர் மதிவழி கூறாது, உலகியல் கூறிப் பொருளிது என்ற வள்ளுவன்’ எனக் கல்லாடர் கூறுவதுதான், பொருத்தமான மதிப்புரையாகும். இதனால் திருவள்ளுவர் யாருடைய ஆதரவு மின்றித் தனித்து நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும்.

சிவநெறி, மால்நெறி இவற்றுடன் திருக்குறள் நெருங்கிய கருத்துத் தொடர்புடன் விளங்குகிறது. சிவநெறி கூறும் வினைக் கோட்பாடும், இல்லற நெறிகளும் குறள் நூலுக்குப் பொருந்தி வருகின்றன. இவற்றுக்குக் காரணம், இவை யாவும் தமிழ்ப் பண்பாட்டில் முகிழ்த்தவையாய் இருப்பதேயாம்.

### இறை வாழ்த்து

திருவள்ளுவர் பண்புருவமான இறைவனைக் காட்டி, அவனைத் தொழுவதன் மூலம் உயிர்களும் அப்பண்புடையனவாக ஆதல் வேண்டுமென்பது புதிய பார்வையாகும். வாலறிவனைத் தொழுவது, தாமும் அத் தூய அறிவைப் பெறுவதற்கேயாம். அவ்வாறன்றிக் கற்பது மட்டும் போதாது. கல்வியால் காரறிவும், புல்லறிவும் கூட வளர வாய்ப்புண்டு. தனக்குவமை இல்லாத இறைவன், மனக் கவலையற்றவன். அவனைச் சேர்ந்தாலன்றி, நாம் நம் மனக் கவலைகளை மாற்ற இயலாது. சேர்தல், இடைவிடாது நினைத்தல் என்பார் பரிமேலழகர். அதுதான் மன ஓர்மை, தியானம் என்பது. இங்ஙனம் பண்பின் திருவுருவமாக இறைவனைக் காட்டி, அப்பண்புருவத்தையே இடைவிடாது நினைத்து, உயிர்கள் தாமும் அவற்றை அடையவேண்டுமென்பது, பகுத்தறிவுக்கும் ஒத்து வரும் இறை வழிபாடாகும். திருவள்ளுவர் முதல் அதிகாரத்தில் செய்துள்ள புதுமையே, மிகப் பெரிய மெய்யியல் தத்துவமாகத் தனிநூலில் விரிக்கத்தக்க, புதியதொரு இறைக் கோட்பாடாகும்.

### ஒழுக்கம் தவறாத நீத்தார்

நீத்தார் பெருமை, துறவு அதிகாரங்களில் குடும்பத்தை விடுதல், பெண்ணாசை தவிர்த்தல், பெண் ஒரு தளை எனல், காவி உடுத்தல், கமண்டலம் ஏந்துதல், காட்டிற்குப் போதல் என எதனையும் குறித்தாரல்லர். ஒழுக்கத்துடன் பண்பாளராய் வாழ்தலையே விளக்குகின்றார். ‘பொய்தீர் ஒழுக்க நெறி’ என்று முன்னே குறித்தார். பின்னர் ‘கூடா ஒழுக்கம்’ என்ற, காவி உடைக்குள் மறைந்து கொண்டு கயவர்களாய் வாழ்வதைக் கண்டிக்க வேண்டிய மட்டும் கண்டித்தார். நீத்தாராய் வாழ்பவர்கள் உலகப் பற்றை நீத்தல் வேண்டும்; ஒழுக்கத்தில் தவறாதவராக வாழ வேண்டும்; ஐம்புலன் அடக்க வேண்டும்; செயற்கரியன செய்ய வேண்டும்; எவ்வுயிர்க்கும்

செந்தண்மை பூண்டொழுக வேண்டும். இவை யாவும் நடத்தை பற்றியனவே. தந்நலம் நீத்தார். அறிவியலறிஞர்கள் வரலாற்றில் காண்பது போலச் செயற்கரிய கண்டுபிடிப்புகளுக்காக வாழ்க்கை வசதிகளைத் துறந்தார் யாவரும் நீத்தாராவரேயன்றி, புற வேடதாரிகளை மட்டும் நீத்தாரென ஒப்பத் திருக்குறள் இடந்தர வில்லை.

## இல்லறத்திற்குத் தலைமை

வட இந்தியச் சமயங்கள் அனைத்தும் இவ்வுலக வாழ்க்கையை வெறுப்பு நோக்கில் பார்க்க வைத்தன. துறவு, இல்லறம் என வரும்போது, துறவு நிலைகளுக்கே முதன்மையும் தலைமையும் தந்தன. இல்வாழ்வைக் கையுதறவும் பெண்ணை ஓர் ஆன்மா என்றுகூடக் கருதாது, பாவப் பிறப்பு எனக் கருத்துருவாக்கவுமே முயன்றன. இச்சூழலில், தமிழ்ப் பண்பாட்டு வழிவந்த திருவள்ளுவர், இல்லறத்திற்கே தலைமையும் முதன்மையும் தந்தார்; ஏனைய துறவு நிலைகட்கும் அந்நிலையில் இயல்பாக வாழ்பவர்கட்கு இல்லறத்தாரே துணை என்றார்; இல்லறத்தில் வாழும் நெறிப்படி வாழ்பவர் வானுறையும் தெய்வத்திற்கு நிகராவர் என்றார். இந்தியச் சிந்தனை வளர்ச்சியில், இவ்வுலக வாழ்க்கையை, விருப்பு நோக்கில் பார்க்க வைத்தார் திருவள்ளுவர் ஒருவரே எனச் செருமானியப் பேரறிஞர் ஆல்பர்ட்டு சுவைட்சர் கூறியுள்ளமை நினைவிற்கொள்ள வேண்டிய கருத்தாகும். 'அறன் எனப்பட்டது இல்வாழ்க்கையே' என்பது, வள்ளுவரின் முடிந்த முடிவாகும்.

## இல்லறத்தின் தொடர்ச்சியே துறவு

இல்லறமும் துறவறமும் சமயங்கள் கூறுவது போலத் தனித்தனி நிலைகள் அல்ல. இல்லறத்தின் தொடர்ச்சியே துறவு. இல்வாழ்வே இயற்கைக்குப் பொருந்திய வாழ்வு. அதில் காம இன்பம் துய்த்து, வேட்கை தீரப்பெற்ற ஒருவர், வாழ்க்கைப் பற்று முதலியன மனத்தளவில் நீங்கி, சிறந்தன, அரியன, பொது நலனுக்குரியன பலவும் செய்து வாழ்தலே துறவாகும்.

*'காமம் சான்ற கடைக்கோட் காலை*
*ஏமம் சான்ற மக்களொடு துவன்றி*
*அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்*
*சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே'* *(138)*

என்று, தொல்காப்பியரும் துறவு, தவம் என்றெல்லாம் கூறாது, சிறந்தன யாவையும் செய்தலே வாழ்ந்து முடிந்ததன் பயனாகும் எனக் குறிப்பதுதான், வள்ளுவத்திலும் இடம் பெற்றுள்ளது.

சில அதிகார முதற் குறள்கள், அவ்வவ் அதிகாரத் தலைப்புக் கேற்ற இலக்கணம் அல்லது புதுவிளக்கம் கூறுவனவாக அமையக் காணலாம். இனியவை கூறல் முதற் குறளும் வாய்மை அதிகார முதலிரு குறள்களும் அவை பற்றிய இலக்கணம் கூறுதல் கருதத் தக்கது. அவைபோலவே, துறவு, தவம், வேள்வி மூன்றனுக்கும் திருவள்ளுவர் புது இலக்கணம் வகுக்கின்றார்.

*'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்*
*அதனின் அதனின் இலன்'.*

*'உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை*
*அற்றே தவத்திற்கு உரு'.*

*'பரிந்துஓம்பிப் பற்றுஅற்றேம் என்பர் விருந்துஓம்பி*
*வேள்வி தலைப்படா தார்'.*

சிறுகச் சிறுகப் பற்று விடுதலே துறவு. தனக்கு நேர்ந்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுதலும் பிறவுயிர்களுக்குத் துன்பம் செய்யாமையுமே தவம். விருந்தோம்பல் ஒரு வேள்வி. இவை யாவும், திருக்குறளை முழுமை நோக்கில் பார்த்து, அதன் கருத்து நீரோட்டத்துடன் இணைத்துப் பார்க்கத்தக்கன. அன்றைய பின்புலத்தில் இவை புதுமை மட்டுமன்றிப் புரட்சிகரமானவை யுமாகும்.

### சங்க இலக்கியப் பின்புலத்தில் திருக்குறள்

தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் பற்றிய தெளிந்த அறிவுடையவர்க்கே, திருக்குறளின் 'உள்ளொளி', தெள்ளிதிற் புலனாகும். இவண் ஒரேஒரு காட்டினைக் காட்டுதல் தகும். அதியமான் நெடுமான் அஞ்சி போர்க்குணம் மிக்கவன். போர் இல்லாதபோது, வீட்டின் இறப்பிலே செருகி வைத்த தீக்கடை கோல் போல, மிக அமைதியாக இருப்பான். போரென்று வந்துவிட்டால், அத் தீக்கடை கோல்களைச் சுழற்றியதும் தோன்றும் காட்டுத்தீயைப் போல வெளிப்பட்டுக் கூவி எரியும் நெருப்பாகத் தோன்றுவான். இவ்வாறு அஞ்சியின் வீரத்தை ஒளவையார் புனைகின்றார்.

*'..... நெடுமான் அஞ்சி*
*இல்இறைச் செரீஇய ஞெலிகோல் போலத்*
*தோன்றா திருக்கவும் வல்லன் மற்று அதன்*
*கான்றுபடு கனைஎரி போலத்*
*தோன்றவும் வல்லன்தான் தோன்றுங் காலே'* *(315)*

இறை - வீட்டு இறப்பு. தாழ்வாரம். செரீஇய - செருகிவைத்த. ஞெலிகோல் - தீக்கடை கோல். கான்று படு - காட்டில் தோன்றும். கனை எரி -கூவி எரியும் நெருப்பு. இப்பாடலில் அஞ்சி 'தோன்றாது இருக்கவும் வல்லவன், தோன்ற நேரின் கனை எரிபோலத் தோன்றவும் வல்லன்' என வரும் சொல், தொடர், கருத்தமைவு, ஒரு குறளை நமக்கு நினைவூட்டுகிறது.

'தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று'

என்ற குறளுக்கான விளக்கம், முன்னைய புறநானூற்றுப் பாடலடிகளில் கிடைக்கிறது. அதாவது ஒரு முயற்சியில், செயலில் ஈடுபட்டுத் தோன்றினால் புகழோடு தோன்ற வேண்டும்; அத்திறமை இல்லாதார் தோன்றாதிருப்பதே நல்லது - ஒரு செயல் முயற்சியில் ஈடுபடாதிருப்பதே நல்லது.

புறநானூற்று ஔவை பாடலுக்கும் திருக்குறளுக்கும் நெருங்கிய ஒற்றுமையிருப்பதைக் கூர்மையாய்ப் படித்துணர வேண்டும். 'பிறந்தால் புகழுக்கேற்ற குணத்தோடு பிறக்க வேண்டும்; அக்குண நலம் இல்லாதார் மக்களாய்ப் பிறந்ததைவிட, விலங்காய்ப் பிறந்திருக்கலாம்' என்பதும் 'பிறந்ததைவிடப் பிறவாமல் இருந்திருக்கலாம்' என்பதும் பழைய உரைகள். அவை தவறு என்பதைப் புறநானூற்று ஔவை பாடல் தெளிவுபடுத்துகிறது.

திருக்குறளின் உள்ளொளி இங்ஙனம் இயல்பாகவும் முழுமையாகவும் துலங்க வேண்டும். அங்ஙனம் நாம் விளங்கிக் கொண்டு, உலக மொழிகளில் தரவேண்டும்.

# 8. 'புரைதீர் கிளவி'

தொல்காப்பியமும் திருக்குறளும் காலத் தொடர்பும் கருத்துத் தொடர்பும் உடையன. அல்லது இவை இரண்டும் ஒரே சமுதாயப் பண்பாட்டு நாகரிகப் பின்புலத்தினைப் பெற்றுத் தோன்றியுள்ளன. அஃதாவது அச்சமுதாய மரபு பெரிதும் மாறுதலடையுமுன் ஒன்றை யடுத்தொன்றெனத் தோன்றியனவாதல் வேண்டும். "தெய்வம் தொழாஅள்" என்ற குறளுக்கு, சமுதாய மரபுணர்ந்து பொருள் கூறுவோமாயின், 'பிறை தொழுகென்றல்' என்ற அகத்துறைக்கும் அதனைச் சுட்டிக்கூறும் சங்க இலக்கியத்திற்கும் இக்குறட் கருத்துக்கும் தொடர்புண்மை விளங்கும். மெய்ப்பாட்டியலில் 'தெய்வம் அஞ்சல்' எனக் கூறப்படுவது இம் மரபு வழிப் பட்டதே யாகும். 'பிறை தொழும் பெண்கள்' என்ற நூலில் இதன் விரிவான விளக்கத்தைக் காணலாம்.[1] இவண் இதனோடொத்த பிறிதொரு மெய்ம்மைச் சான்று எடுத்துக்காட்டப்படுகிறது. இவை தொல் காப்பியத் திருக்குறள்களிடையேயுள்ள கால அணிமையைக் காட்டவல்லன; அல்லது அவற்றின் மரபுத் தொடர்ச்சியை நிலை நாட்டவல்லன. அறிஞர்கள் மேலும் ஆராய்வார்களாயின் உண்மை புலப்படாமற் போகாது.

'புரை' என்ற சொல் 'மேன்மை' என்ற பொருளில் ஒரு சில விடத்தும்[2] 'குற்றம்' என்ற பொருளில் பலவிடத்தும்[3] தொல் காப்பியத்தில் ஆளப்பட்டுள்ளது.

> *"அவள்விலங் குறினும் களம் பெறக் காட்டினும்*
> *பிறன்வரை வாயினும் அவன்வரைவு மறுப்பினும்*
> *முன்னிலை அறன்எனப் படுதல் என்று இருவகைப்*
> *புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்"* **(தொல். களவு. 24)**

திருமணத்திற்குத் தலைவனால் தடையேற்பட்டாலும், தலைவி மெலிவு கண்டு களம் அமைத்து வெறியாட்டு முதலியன நிகழ நேர்ந்தாலும் மற்றவர் வரையவரினும் தலைவனுக்குத் தலைவியைத்

---

1. தமிழண்ணல், 'பிறைதொழும் பெண்கள்', மதுரை, திசம்பர் 1979 பக். 22–33.

2. தொல். மெய்ப். 24.

3. தொல். களவு. 16, 24; பொருள். 15.

தரத் தமர் மறுப்பினும் தோழி தன் திறமையால் அதனை மாற்றித் தலைவனுக்கும் தலைவிக்கும் திருமணம் நிகழ ஆவன செய்வாள். அவள் செவிலியிடம் முன்னிலை, அறத்தொடு நிலை என்ற இரு வகைகளால் தன் கருத்தை வெளியிடுவாள். யாரையேனும் முன்னிலைப்படுத்திப் பேசுவது முன்னிலை எனப்படும். செவிலிக்குக் குறிப்பால் தலைவியின் காதலை உணர்த்துவது அறத்தொடு நிலை எனப்படும். "என்றது புனல்தரு புணர்ச்சியும் பூத்தரு புணர்ச்சியும், களிறுதரு புணர்ச்சியும் போல்வன செவிலிக்குக் கூறி அவள் நற்றாய்க்குக் கூறுதலை நிகழ்த்துவித்தலாம்", என்று நச்சினார்க் கினியர் இவ்விடத்தில் உரையெழுதுவார். இவை பெரும்பாலும் படைத்து மொழியப்பட்டனவாயிருக்கும். தலைவியை ஆற்று வெள்ளம் அடித்துப்போக இருந்தபோது, தலைவன் ஆற்று வெள்ளத்தில் குதித்துக் காப்பாற்றிக் கரை சேர்த்தான். அதனால் தான் காதல் ஏற்பட்டது. எனவே தலைவியை அவனுக்குத் தருவதே முறை என இங்ஙனம் விவாதிப்பதே புனல் தருபுணர்ச்சி எனப்படும். ஏனையவும் அன்ன. தலைவன் உண்மையாகவே காப்பாற்றி யிருக்கவும் கூடும்; அல்லது தோழி பாதுகாப்புக் கருதிப் படைத்து மொழியவும் கூடும். அதனால்தான் அறத்தொடு நிலை பற்றிய நூற்பாவில்,

*"எளித்தல், ஏத்தல், வேட்கையுரைத்தல்*
*கூறுத லுசாஅதல், ஏதீடு, தலைப்பாடு,*
*உண்மை செப்பும் கிளவியொடு தொகைஇ*
*அவ்வெழு வகைய என்மனார் புலவர்"* (பொருள் – 12)

என்று தொல்காப்பியர் பொய்யும் மெய்யும் கலந்து கூறுதலைச் சுட்டிச் சொல்கிறார். இவற்றுள் 'உண்மை செப்பும் கிளவி' என்பது பட்டாங்குக் கூறுதல். ஏனையவை கற்பனையும் கலந்தவை என்பதை இது வேறுபடுத்திக் காட்டுகிறது. இவற்றைப் 'புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்' என்றும் கூறுதற்குக் காரணம் "இவை குற்றமுடையன - கற்பனையானவை - பொய் எனக் கருதற்க; திருமணம் கருதியனவாதலின் இவை புரைதீர் கிளவியாம் (குற்றமற்ற வார்த்தை)" என்று விளக்குவதற்கேயாம்.

**தோழி தலைவனிடம் வவைு கடாதல் ஒரு முறையும் துறையுமாம்:**

*"வரைதல் வேண்டித் தோழி செப்பிய*
*புரைதீர் கிளவி புல்லிய எதிரும்"* (களவு, 16)

வரைதல் வேட்கையைப் புலப்படுத்தித் தோழி கூறும் குற்றமற்ற கூற்றுகளைத் தலைவியும் உடன்பட்டு நின்றே பேசுவாள்; இங்கு தோழி வரைவு வேண்டித் தலைவனிடம் 'புரைதீர் கிளவி' செப்புவாள் என்ற தொல்காப்பியர், அவள் அங்ஙனம் கூறுவன வற்றைப் பொருளியலில் வகைப்படுத்துகிறார்.

*"பொழுதும் ஆறும் காப்புமென் றிவற்றின்*
*வழுவின் ஆகிய குற்றம் காட்டலும்*
*தன்னை அழிதலும் அவனூ றஞ்சலும்*
*இரவினும் பகலினும் நீவரல் என்றலும்*
*கிழவோன் தன்னை வாரல் என்றலும்*
*நன்மையும் தீமையும் பிறிதினைக் கூறலும்*
*புரைபட வந்த அன்னவை பிறவும்*
*வரைதல் வேட்கைப் பொருள என்ப"* *(பொருளியல், 16)*

களவு உறவு யாதோர் இடையூறுமின்றி நிகழினும் விரைவில் மணந்துகோடலே முறையாம். எனவே எவ்வகையிலேனும் தலைவனை மணம் புரிந்து கொள்ளுமாறு தூண்டுதலே அறமாம் ஆதலின் தோழி கற்பனையாகவேனும் இடையூறுகளைச் சோடித்துக் கூறுவாள். அதனால்தான் 'புரைபட வந்த அன்னவை பிறவும்' என்று கூறுகிறார். இதற்கு நச்சினார்க்கினியர். "என்றது, வழுப்படக் கூறினும் வரைவு காரணத்தாற் கூறலின் அமைக்க வென்றவாறாம்" என விளக்கம் தருவர்.

*"பொய் தலையடுத்த மடலின் கண்ணும்"* *(களவு, 21)*

*"பொய்யென மாற்றி மெய்வழிக் கொடுப்பினும்"* *(களவு 23)*

*"மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது*
*பல்வேறு கவர்பொருள் நாட்டத் தானும்"* *(களவு 23)*

இங்ஙனம் திருமணமாகிய அறநெறியில் நிறுத்தற் பொருட்டும் கற்பு வழுவாமைப் பொருட்டும் பலரும் பொய்ம்மையைக் கையாளுதல் உண்டெனஅறிகிறோம். பொய்ம்மையாயினும் இவை நன்மை பயக்கும் குறிக்கோளுடையனவாதலின் மெய்ம்மையே என ஏற்கப்பட்டன. பொய்யாதலின் 'புரையுடையனவோ' (குற்றமுடைய னவோ) என ஐயுறப்படுமாதலின், 'புரைதீர் கிளவி' என அடை புணர்த்துக் கூறப்பட்டன.

திருவள்ளுவர் வாய்மைக்குப் புது இலக்கணம் வகுத்தார். அது புரட்சிகரமானது. தீமை இல்லாததே வாய்மை எனவும் நன்மை பயக்குமேல் பொய்யும் வாய்மையே எனவும் அவர் உணர்த்துகிறார்.

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்" (291)

"பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்குமெனின்" (292)

"இவை இரண்டு பாட்டானும் தீங்கு பயவாத நிகழ்ந்தது கூறலும் நன்மை பயக்கும் நிகழாதது கூறலும் மெய்ம்மை யெனவும், நன்மை பயவாத நிகழாதது கூறலும் தீங்கு பயக்கும் நிகழ்ந்தது கூறலும் பொய்ம்மையெனவும் அவற்றதிலக்கணம் கூறப்பட்டது" என்று இங்குப் பரிமேலழகர் விளக்கம் கூறுகிறார்.

மேலும் "நிகழாதது கூறலும் நன்மை பயவாதாயிற் பொய்ம்மையாம்: பயப்பின் மெய்ம்மையாம் என்பது கருத்து", என்ற அவரது விளக்கம் 'புரை தீர்ந்த நன்மையில்' அழுத்தம் வைப்பது காண்க.

இவ்வாறு திருவள்ளுவர் கூறுவது, முற்காட்டிய தமிழர் களவு முறைத் திருமணத்துடன் ஒப்பிட்டு நோக்கத்தக்கதாகிறது. 'ஆயிரம் பொய் சொல்லியேனும் ஒரு கலியாணத்தை முடிப்பது' என்ற பழமொழிக்கு அடிப்படை போலக் களவைக் கற்பாக மாற்றுவதற்காகத் தோழி உள்ளிட்ட அகத்திணை மாந்தர் கற்பனை கலந்த படைத்துமொழி கிளவிகளைப் பயன்படுத்தியுள்ளனர். இவ்வாழ்க்கை மரபையே தொல்காப்பியப் பொருள் இலக்கணம் சுட்டுகிறது. பொதுப்படக் கூறியிருப்பினும் திருக்குறளிலும் அதன் எதிரொலியையே கேட்கிறோம்.

தொல்காப்பியர் குறிப்பிட்ட அடைமொழியையே திருவள்ளுவரும் பயன்படுத்துகிறார். 'புரை தீர்' என்ற அவ்வடைமொழி, படைத்து மொழிதலால் குற்றமாகுமா என ஐயுற்றவிடத்து, 'அஃது அங்ஙனமன்று, நன்மை பயத்தலின் ஏற்புடையதே' என எதிர் மறுத்து மொழிவதை நினைவூட்டுகிறது.

'புரை தீர்ந்த நன்மை' என்கிறார் திருவள்ளுவர். பொய்யாக வழுப்படக் கூறுவனவற்றைப் 'புரைபட வந்த அன்னவை' (பொருளியல் 16) எனவும் அது நன்மை பயத்தலால் 'புரைதீர் கிளவி' எனவும் (களவு 16, 24) தொல்காப்பியர் வேறுபடுத்திக் கூறுகிறார். அவர் சுட்டும் சொல்லானும் மொழி நடையானுமே திருவள்ளுவர் எடுத்தாள்வது இவற்றிடையேயுள்ள உணர்வியைபினை நன்கு எடுத்துக் காட்டுகின்றதன்றோ? தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள் இவற்றிடையேயுள்ள கருத்தியைபுகள் மேலும் மேலும் நுட்பமாய் நோக்கப்படுதல் வேண்டும்.

(தமிழ்வளம் – தொகுப்பு)

# 9. வள்ளுவர் வகுத்த தமிழர் இயக்கம்

திருவள்ளுவர் சமயங்கள் தலையெடுத்த காலத்தவர்; தமிழ் அரசர்கள் வேள்விகளில் ஆசைகொண்டு, வெற்றித் தூண்களிலும் பலவாக யூபத் தூண்களை நட்ட காலத்தவர். தமிழர் சமுதாயம் வைதிக நெறி, சமண நெறி, புத்த நெறி ஆகிய மூன்று நெறிகட்கும் ஆட்பட்டு, அயன் மொழிகட்கு வயப்பட்டுப் பெற்ற தீமைகளும் பலவாகும். பாலி, பிராகிருதம், சமஸ்கிருதம் என்ற அயன் மொழிகள் ஆட்சிப் பீடம் ஏறவில்லையெனினும், ஆர்வத்தைக் தூண்டித் தமிழரைக் கவர்ந்திழுத்துக் கொண்டிருந்த காலம். வைதிகமும் தமிழனுக்கு அன்னிய மதமேயாயினும், அச்சமயம் தமிழரின் நிலவழி வழிபாட்டுக்களுடன் கலந்து 'தமிழர் சமய'மாக மாறிக் கொண்டிருந்த காலம் அது. சமணமும் புத்தமும் தத்தம் 'தூய்மை' 'நேர்மை' 'விரதம்' வைதிக எதிர்ப்புக் காரணமாகத் தமிழரில் பலரைத் தம்பால் ஈர்த்துக் கொண்டிருந்த காலம் அது.

தமிழரியக்க முவர்

இச்சமயங்களில், மொழிவழிப் பண்பாடுகளில் தமிழருக்குப் புறம்பானவையும் காணப்பட்டன; தமிழரை நல்வழிப்படுத்தும் நெறிகளுமிருந்தன; தமிழர் நாகரிகக் கால்வழியை அழித்து ஒழிக்கக் கூடியனவுமிருந்தன. இதனால் தமிழினத்தையும் தமிழர் பண்பாடு நாகரிகத்தையும் காத்து, எதிர்காலத்திற்கு அளிக்கும் பொறுப்பு தமிழ்ப் புலவர்களிடம் சேர்ந்தது. தமிழ் மன்னர்கள் வடநாடு வரை படை எடுத்து, அரசியல் வெற்றி கண்டார்கள்; எனினும் பண்பாட்டில் விட்டுக்கொடுக்கும் நிலைக்குப் போனார்கள். வடநாட்டிலிருந்து அந்தணர்களை இங்கே குடியேற்றி, வேள்வி செய்யுமளவு அவர்கள் ஆர்வம் கரைகடந்து சென்றது. இச்சூழலில் தாய்மொழி 'அழிந்தொழிந்து ஆரியம்போல்' ஆகாமலும், தமிழர் நாகரிகம் பண்பாடு முழுவதும் பழுதுபடாமலும் காப்பாற்றிவர்கள் 'மூவர்' ஆவர். யார் அந்த மூவர்? இவர்களைத் தொடக்க கால மூவர் எனலாம்.

தமிழ் மொழியையும் தமிழர் பண்பாட்டையும் அன்று முதல் இன்று வரை நலங்குன்றாமல் காப்பாற்றி வருபவர்கள் - எதிர்வந்த

மொழி, பண்பாட்டுப் படையெடுப்புகளை எதிரேற்றுத் தாங்கி வெற்றி கண்டவர்கள் பன்னிருவர் ஆவர். ஆற்றுநீரின் இழுப்பில் சிக்குண்டு போகாமல், எதிர்நீச்சல் போட்டார்கள் இவர்கள். அணை கட்டி ஆற்று நீரைத் தடுத்து உலகிற்குப் பயன்படுமாறு செய்யும் அரிய செயல்போல, இவர்கள் தமிழ்மொழியையும் 'என்றுமுள தென் தமிழாக' இயம்பி இசை கொண்டார்கள். தமிழர் உலகிற்களித்த கொடையாகிய நல்நாகரிகச் சிறப்பையும் இவர்கள் நிலைபெறுமாறு செய்தார்கள்.

தொல்காப்பியர்
திருவள்ளுவர்
சங்கப்புலவர்

மூவரையும் தொடக்க காலப் 'பண்பாட்டுக் காவலர்' எனலாம். 'தொகையடியார்' என்பதுபோலச் சங்கப் புலவர்களை, ஒரு 'வழி மரபாகக்' கொண்டு, இங்கு ஒற்றை எண்ணால் சுட்டப்படுகிறது. மேலும் தொல்காப்பியர் என்று சொன்னால், அக்குறியீடு ஒருவரைச் சுட்டுகிறதென்பதைவிட, ஒரு கருத்து மரபையே (School of thought) சுட்டுகிறதெனலாம். இது இவ்வாறு குறிக்கப்படும் பன்னிருவருக்கும் பொருந்தும். இவர்கள் தமிழரை - அவர்தம் பண்பாட்டு மரபை - அவர்தம் மொழியைக் காப்பாற்றி நிலைபெறச் செய்தார்கள்.

### பன்னிரு தலைவர்கள் கண்ட தமிழரிக்கம்

காலந்தோறும் தமிழகத்தில் மொழிப் படையெடுப்புகள் - சமயப் படையெடுப்புகள் - பண்பாட்டுப் படையெடுப்புகள் நடந்த வண்ணமிருந்தன. இன்றும் அது நடைபெறுகிறது. பிற தொன்மை மிக்க கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம், பாரசீகம் எல்லாம் ஏட்டளவில் தங்கிவிட, தமிழ் இன்றைய மொழிகளிலும் ஒன்றாகக் கருதப்படும் அளவு' (Modern Indian Languages) நிலை பெற்றமைக்கு, இடையறவுபடாத இப்போராட்டம் - துன்பமே இடுக்கண்ணே காரணமாகும். இவர்கள் எதிர்வந்த பெருவெள்ளத்தைத் தடுத்தார்கள் - நம்மை அழித்து விடாமல் அணையிட்டார்கள். நல்லவற்றை எற்றுக் கொண்டார்கள். பெரும் தீங்குகளை எதிர்மறுத்து ஒழிக்கும் முயற்சியில், பலவற்றை 'மடைமாற்றியே' அவை வலுவிழக்கச் செய்தார்கள். பலவற்றுக்குப் புதிய விளக்கம் தந்து அவற்றைத் 'தமிழ்ப்படுத்தி, தமிழ்மயமாக்க' முயன்றார்கள்.

அதாவது,

தன்மயமாக்கிக் கொள்ளுதல் (Absorption)
மடைமாற்றுதல்
புதிய விளக்கம் தருதல்
பகைமையின் கூர் மழுங்கச் செய்தல்
முற்றிலும் மறக்கடித்தல் (To ignore the matter)

என்பன சில, அவர்கள் கையாண்ட உளவியல் சார்ந்த, நுண்மாண் கருவிகளாகும். தொடக்க கால மூவரைத் தவிர ஏனைய ஒன்பதின்மர் யார், யார்?

இளங்கோவும் சாத்தனாரும்
திருமூலர்
திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும்
கம்பர்
சேக்கிழார்
மெய்கண்ட தேவர்
குமரகுருபரர்
சுப்பிரமணிய பாரதியாரும் பாரதிதாசனும்
பெரியார் இராமசாமியும் அறிஞர் அண்ணாவும்

தமிழர் நெறியை, தமிழ் மொழியைக் காப்பாற்றி, எதிர் காலத்துக்குத் தந்து சென்ற இவர்கள் ஒவ்வொருவரும் தனி ஆராய்ச்சிக்குரியவர்கள். தமிழர் வரலாற்றில் 'எதிர் நீச்சல்' போட்ட, பெரும் மறவர்களாகிய, இவர்கள் 'தமிழர் விடுதலைப் போர்' வரலாற்றினைப் படைத்தவர்கள். 'தமிழர் இயக்கம்' படைத்த இவர்கள் ஒவ்வொருவரும், பெரும் பரம்பரைக்கும் பின்னணி வரலாற்றுக்கும் உரியவர்கள். இப்'புதிய பார்வையில் அணுகாததால்' இவர்களின் பெருமை இன்றளவும் முழுமை பெற அறியப் படாமலே கழிகிறது. மேலும் இவர்கள் காட்டிய வழியும் முழுவதும் அறியப்படாமல், வழிவழி காப்பாற்றப்பட்டு வந்த 'தமிழிரியக்கம்' சீர்கெடும் நிலையிலுள்ளது. தமிழ்மொழி தள்ளாடுகிறது. தமிழர் பண்பாடு சீர்குலைகிறது. இந்நிலையில் 'தமிழரியக்கம்' ஒன்றை, இப்பன்னிருவரை முன்வைத்து நாம் தொடங்க வேண்டும். தலைவராவார் இப்பன்னிருவருமேயன்றி, நிகழ்காலத் தலைவரில்லா இவ்வியக்கத்தைப் பண்பாட்டு இயக்கமாக நாம் நடத்த வேண்டும். இச்சூழ்நிலையில், இத் 'தமிழர் இயக்கத்' தலைவர்களில் ஒருவ ரெனக் கருதப்படும் திருவள்ளுவர் பற்றிய புதிய பார்வையைச் சிந்தித்தல் தக்கதாகும்.

## தமிழர் வேதம் - பொதுமறை

திருக்குறள் தமிழர் வேதமா? உலகப் பொதுமறையா? எது உண்மை? தமிழர்தம் வேதமே உலகப் பொதுமறையாகும் தகுதியும் உடையதாகும். எவ்வாறெனில், தமிழர் போற்றிய பண்பாடு நாகரிகம் யாவுமே மனிதப் பொதுமை சார்ந்தன. அவை உலகை நோக்கியன. நன்கு ஆர அமரச் சிந்திப்பார் எவருக்கும், சங்கப் பாடல்களில் காணப்படும் கருத்துமரபுகளின் தொகுப்பாகவே திருக்குறள் விளங்குதல் புலப்படும். அக்காலப் பின்னணி, சமூக மாற்றங்கள், ஏற்பும் எதிர்ப்பும் யாவும் தெற்றென விளங்கும். திருக்குறளின் உரைகளை வைத்து, மூலத்தைப் பயில்வதால் நாம் பல உண்மைகளை இழந்துவிடுகிறோம். திருக்குறளை முழுமையான பார்வையில், அது உலகிற்குச் சொல்ல வந்ததிதுவென அறிந்து கொண்டு, மூலத்தை நேரே அணுகிக் கற்க வேண்டும்.

## வள்ளுவர் கோட்பாடும் பிறர்தம் கொள்கைகளும்

ஒவ்வொரு குறளாக 'அர்த்தம்' பார்த்துப் படிப்பதால் பயன் விளையாது. பதவுரை பொழிப்புரை கருத்துரைகளால், மூலம் உணர்த்தும் உண்மை மனத்திற்கு ஆவதில்லை. திருவள்ளுவர் தமிழர் கண்ட வாழ்வியலை உலகிற்குச் சொல்ல வந்தார். அவர் காலத்தே வைதிக சமயம் (சிவநெறி, திருமால் நெறி) சமணம், பௌத்தம் ஆகிய சமயங்கள் விளங்கின. அவற்றின் கருத்துக்களில் ஏற்புடையனவற்றை மட்டுமே அவர் உலகிற்கு உணர்த்த எடுத்துக் கொண்டார். அவர் வருணாசிரம தருமத்தை ஏற்கவில்லை. 'வீடு' பேறு பற்றி அவர் விளக்கவில்லை; எனவே அதை விரிக்கவும் இல்லை. அவர் இவ்வுலக வாழ்வு பற்றியே சிந்தித்தார். மறு பிறவி, வினைத் தொடர்ச்சிகளில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார் எனினும் 'அறம் பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின் திறம் தெரிந்து தேறப்படும்' (501) என, உயிரின் இறப்புக்குப் பிந்தைய நிலையை 'அச்சம்' என்ற சொல்லாலேயே குறித்தார். 'அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும், செவ்வியான் கேடும் நினைக்கப்படும்' (169) என்றாரல்லவா? எதனையும் அறிவானாராய்ந்தே ஏற்றுக் கொண்டார் என்பதற்கு இவை தக்க சான்றுகளாகும். துறவறம் பற்றி அவர் தம் கருத்தாகக் கூறாமல், 'பிறர் தம் மதம் மேற்கொண்டு களையும்' வகையால் கூறுகிறார். இல்லறமே அறம் என்பார் அவர்; துறவறமா அஃதும் பிறன்பழிப்பதில்லையாயின் நன்று என ஒரு வரன்முறை விதியுடன் ஒப்புவார். துறவி, தவம் என்பனவற்றிற்குப் புதிய விளக்கம் தந்தவர் அவர். திருக்குறளில் 'துறவறவியல்' என ஓரியல் வகுத்தவர்கள் அது இல்லறவியலின் தொடர்ச்சி என விளக்காமல் விட்டுவிட்டனர். அருளுடைமை, புலால் மறுத்தல், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை எல்லாம்

துறவறவியலில் வருகின்றன. பரிமேலழகர் இவை துறவிகட்கே சிறப்பாக உரியன என்பார். அங்ஙனமாயின் இல்லறத்தவர் இவற்றில் வழுவினும் வழுவலாம் என ஆகிறது; இது தமிழ் மரபன்று.

நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவா அறுத்தல், ஊழ் அதிகாரங்கள் அறத்துப்பாலின் இறுதியில் வருகின்றன. உலக வாழ்விலிருந்து கொண்டே, இவற்றை உணர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என்பதே அவர் கருத்து. இல்லறத்தானுக்குத் துறவு இல்லையா? உண்மையில் இல்லறத்தானே பல வகையில் துறவியாக வாழ வேண்டியுள்ளது. ஒரு தாய் மனம் ஒப்பி, ஊண் உறக்கம் எல்லாம் துறக்கின்றாள், குழந்தைக்காக. காவி உடைத் துறவியோ, 'நெஞ்சில் துறவாது' வாழ்வதால், 'கூடா ஒழுக்கம்' எனத் தனி ஒரு அதிகாரமே வகுத்து, போலித் துறவிகளைக் கடிகின்றார் அவர். சமண, பௌத்த மதங்கள் 'உண்ணா நோன்பை' வெகுவாகப் போதித்தன. ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு உண்ணக் கற்பித்தன. திருவள்ளுவரும் 'அற்றது போற்றி யுண்ணச்' சொன்னவர்தான்! ஆனாலும் உண்ணா நோன்பை ஒரு சமய விதியாக சடங்காக - விரதமாக முன்வைக்க விரும்பவில்லை. இப்புறத் தோற்றங்கள் - மழித்தலும் நீட்டலும் - சடங்குகள், விதிகளில் அவர் நம்பிக்கை யூட்டவே இல்லை.

*உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்*
*இன்னாச்சொல் நோற்பாரின் பின். (160)*

உண்ணாவிரதமிருப்பவர்களை அவர் கடியவில்லை; மறுக்க வில்லை. அவர்களைப் 'பெரியவர்கள்' என்றும் பாராட்டுகிறார். ஆனால்... உலக வாழ்வில் - குடும்ப உறவுகளில் மாமியார் மருமகளாக, அண்ணன் தம்பிகளாக, நண்பர்களாக வாழுட சூழலில் பிறர் கூறும் இன்னாத சொற்களைப் பொறுத்துக் கொண்டு போகிறார்களே - அது என்ன சாதாரண விரதமா? ஒருவன் 'போடா' என்று சொல்லிவிட்டால், 'போடா நாய்' என்று தான் சொல்லத் தோன்றும்! அதனால் திருவள்ளுவர் பிறர் கூறும் இன்னாச் சொற்களைப் பொறுத்துக் கொள்வதையும் 'நோன்பு' என்றும் அங்ஙனம் பொறுத்துக் கொள்பவர்களை 'நோற்பார்' என்றும் அவருக்கு அடுத்தபடியாகவே உண்ணாது நோற்பவர் பெரியர் ஆகமுடியும் என்றும் கூறி, இல்லறத்தானுக்கு முதலிடம் தருகிறார்.

## நேரிய பார்வையும், முழுமை நோக்கமும்

திருவள்ளுவர் உலக வாழ்வுக்கு வழி சொன்னவர்; அன்றாட நடைமுறை வாழ்வுக்கு வழி காட்டியவர்; இன்று தன் முன்னேற்ற

6ந.6

நூல்கள் (Self-improvement) உணர்த்துவது போன்று வாழ்வில் முன்னேற - ஒவ்வொருவரும் சிறப்புற வழி கூறிப் போனவர். திருக்குறளை அறநூல் என்பதனிலும் 'வாழ்வு நூல்' என்பதே மிகப் பொருந்தும் சமய வாழ்வை சடங்கு வாழ்வை அவர் ஏற்காதது இன்றளவும் புரட்சிகரமானது. திருக்குறளை ஒட்டு மொத்தமாக வைத்துச் சிந்திக்க வேண்டியுள்ளது. அவர் உலகிற்குச் சொன்ன 'நற்செய்தி'யை, நேரிய பார்வையில் பார்த்து அறிய வேண்டும். ஒன்றைத் தவறான கோணத்தில் வைத்துப் பார்த்தால், அது தவறாகவே முழுவதும் ஆகிவிடும். நேரிய பார்வை (Proper perspective) என்பது, இன்று தமிழர்களாகிய நமக்குத் தேவை. இடைக் காலத்தில் புகுந்த ஆயிரம் ஊடுருவல்களால் நம் பார்வை திசை திரும்பி, அதனால் 'அர்த்தம் எல்லாம் அனர்த்தமாய்', நாம் எடுக்கும் முடிவுகளெல்லாம் தவறாகிக் கொண்டுள்ளன. எனவே தான் முற்கூறிய 'தமிழர் இயக்கம்' தேவைப்படுகிறது. தமிழினம் தடுமாறிய போதெல்லாம், அதை எடுத்து நிறுத்திய இவர்கள் கையாண்ட நெறிமுறைகளை இன்று தமிழரனைவரும் அறியும்படி செய்ய வேண்டியுள்ளது; திரும்ப நாம் பின்பற்ற வேண்டியுள்ளது.

## வேள்வி எது?

திருவள்ளுவர் காலத்தில் வேள்வி செய்யாத தமிழ் மன்னரே இல்லை என்னுமளவு, தமிழகமெங்கும் வேள்விச் சாலைகள் நிரம்பி வழிந்தன. திருவள்ளுவர் கேட்டார், "கண்ணுக்குத் தெரியாத தேவர்கட்கு, அக்கினியில் ஆகுதி பெய்து யாகம் செய்கிறீர்களே? கண்ணுக்குத் தெரிய வரும் விருந்தாளிகளை உபசரிப்பது அதைவிட மேலல்லவா? நீங்கள் அதில் எந்த அளவு புண்ணியம் என்று கருதுகிறீர்களோ அதே அளவு இதிலுமுண்டு" என்று ஆர்வ முண்டாக்கி, மடைமாற்ற முயலுகிறார். தமிழினம் இங்ஙனம் தனக்கு ஒவ்வாத நெறிகளில் செல்வதை, அவர் மன வேதனையோடு மாற்ற முயலும் முயற்சிகள், உலகப் பொது அறம் போலவும் விளங்குதல் காணலாம்.

*இனைத்துணைத் தென்பதொன்றில்லை விருந்தின்*
*துணைத்துணை வேள்விப் பயன்.* **(97)**

*பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி*
*வேள்வி தலைப்படா தார்.* **(98)**

*அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்*
*உயிர்செகுத் துண்ணாமை நன்று.* **(259)**

அவர் எந்தச் சூலிலில் இக் குறள்களைப் பாடினார்? இவற்றின் பதவுரை பொழிப்புரைகட்கு அப்பால் இவை உணர்த்தும் 'நற்செய்தி' யாது? விருந்தோம்பும் வேள்வியே வேள்வி என அவர்

நிறுவும் அழகைக் கவனியுங்கள்! அவிசொரிதலால் ஆயிரம் உயிர்கள் கொல்லப்படுகின்றன; அதைத் தவிர்த்து 'ஒன்றன் உயிரைக் கொல்லாதிருத்தலே சிறப்பு' என முடிக்கும்போது, எவ்வளவு அழுத்தமாக வேள்வி மறுக்கப்படுகிறது என்பதையெல்லாம் நாம் எண்ணிப் பார்ப்பதில்லை.

## தவத்தின் உருவம் யாது?

'தவம்' என்றதும் போதி மரத்தடிப் புத்தர் நம் நினைவிற்கு வருவதுண்டு. காட்டில் தன்னந்தனியே மூச்சையடக்கி, மரத்தி னடியில் கண்மூடி, விறைப்பாக பதும ஆசனமாய் அமர்ந்து தவம் செய்யும் 'உருக்காட்சி' நம் மனத்தில் பளிச்சிடுகிறது. சிவ பெருமானின் தவம், விசுவாமித்திர முனிவரின் தவம், புற்று வளர்ந்து உடம்பை மூடுமளவு தன்னை மறந்து செய்யும் வான்மீக முனிவரின் தவம் எனத் தவங்கள் பல 'உருத் தோற்றமாகக்' கண்ணெதிரே ஓடுகின்றன. திருவள்ளுவர் காலத்தில் இவை இன்னும் விரிவாக, விளக்கமாக விரைவாக ஓடின. அதனால் அவர் 'தவம்' என்பதற்கே 'மாற்றுரு'க் கொடுக்க முயன்றார். வேறு ஒரு தோற்றத்தைக் காட்சிப் படுத்த முயன்றார்.

*உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை*
*அற்றே தவத்திற்கு உரு.* *(291)*

தனக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதலும் பிற உயிர்கட்குத் துன்பம் செய்யாமையும் ஆகிய அதுவே 'தவத்திற்கு உரு' என்றார். திருவள்ளுவர். 'அற்றே' என்ற தேற்றேகாரம் மிக வலுவானது. திருவள்ளுவர் தவத்திற்குத் தந்த புதிய விளக்கம் ஓர் இயக்கமாகப் பரவவேண்டிய அடிப்படை மாற்றமாகும். இதற்குப் போய்ப் பதவுரை படித்துக் கொண்டிருந்தால் எப்படி? 'தவம்' அதிகரம் முழுவதும் இப்புதிய தவத்தையே விளக்கவும், பரிமேலழகர் அதனைப் பழைய தவமாகவே பிறழ உணர்த்தி விட்டார். திருக்குறளில் மிகப் புரட்சி வடிவான கருத்துக்களில் இதுவும் ஒன்று என நாம் உணரவுமில்லை; உணர்த்தவுமில்லை. அது நடந்திருந்தால், மீண்டும் நாகரிகச் சிதைவு ஏற்படாத நல்லநிலை நோக்கித் தமிழினம் ஓர் இயக்கமாகச் செயற்பட்டிருக்கும்.

திருக்குறள் உலகிற்குணர்த்திய செய்தி யாதென, இனியேனும் நாம் அதன் ஒட்டு மொத்தமான நேரிய பார்வையிலான - வாழ்வியல் செய்திகளைத் தொகுத்துணர்த்தி, அதன்வழிச் செற்பட இயக்கமாக

வேண்டும். அல்லாமல் கருத்தரங்கு, பட்டி மன்றங்களால் பயன் விளையாது. திருவள்ளுவர் 'பயனில சொல்லாமை' (அதி. 20) என அதிகாரம் வகுத்த நுட்பத்தையே நாம் உணர்ந்தோமில்லையே. பயன்தராத - பயனை விளைவிக்காத பேச்சுக்களை அன்றே அவர் கடிந்தார். இன்றும் பயன் விளைக்காத பேச்சுக்களிலே மட்டும் இன்பம் கண்டுவரும் நாம், எவ்வாறு திருக்குறள் பற்றிப் பேசுவதற்குத் தகுதியுடையவர்கள் ஆவோம்? எண்ணிப்பாருங்கள்!

## தன் முன்னேற்றத் திருக்குறள்

இன்று பலர் தம் முன்னேற்றம் (Self improvement) பற்றிய, பல ஆங்கில நூல்களைப் பயின்று, அவற்றைத் தமிழிலும் எழுதித் 'தன் முன்னேற்றம்' தேடி வருகின்றனர்! திருவள்ளுவர் ஒவ்வொரு தனி மனிதனின் பக்கமும் நின்று, அவனவன், தன்தன் அளவில் முன்னேற வழிகாட்டிய சிந்தனையாளர். இவ்வகையிலான திருக்குறள்கள் நூற்றுக் கணக்கில் உள. இவற்றைத் தேடித் தொகுத்து - நேரிய பார்வை விளக்கங்களோடு கல்லூரி மாணவர்கட்கும், இளைஞர் கட்கும் போதிக்க வேண்டும். தன்னம்பிக்கை ஊட்டும் குறட்பாக்கள் மிக அழுத்தமானவை; சொல்லளவிலேயே நம்மை அழுத்தித் திருத்தி முன்னேற்ற வல்லவை. ஒரே ஒரு உதாரணம் பார்ப்போம்.

## இடும்பைக்கு இடும்பை படுத்தல்

நம்மைத் தேடிவரும் 'துன்பத்திற்கு நாம் துன்பம் விளைவிக்க வேண்டும்' என்பது வள்ளுவரது வாழ்வியல் கோட்பாடுகளில் ஒன்று. துன்பம் ஒருவரைத் தேடிவந்தது. அவர் கலங்காது எதிர்நின்று அதைச் சமாளிக்க முயன்றார். துன்பம் எண்ணியதாம், "சே இவன் நமக்குச் சரிபட்டு வரமாட்டான். மேற்கொண்டு இவன் நம்மைக் கண்டதும் நகைக்கவும் செய்கிறான். அதோ ஒருவன் நம்மைக் காணுமுன்பே நடுங்குபவன் இருக்கிறான். நமக்கு அவனே சரியான ஆள்" என்று 'துன்பம்' அவனை நோக்கி ஓடுமாம்!

அதிகாலையில் எழுந்திராத மகனைப் பார்த்துத் தாய் "ஊரில் உள்ள மூதேவியெல்லாம் உன்னிடம் குடிபுகுந்துவிடும். தூங்காதே, எழுந்திரு" என எழுப்புவதை இன்றும் காணலாம். அதன் பொருளென்ன? எழுந்திருந்தவனை விட்டு ஓடி வரும் மூதேவி, இன்னும் எழுந்திராதவனைப் பற்றிக் கொள்ளும் என்பதன் உண்மையென்ன? முயன்றவனுக்குப் போக எஞ்சியதுதானே சோம்பேறிக்குக் கிடைக்கும்! துன்பமும் துன்பப்படுபவனிடம்தான்

எளிதாகப் போகுமாம்; துன்பப்படாதவனைக் கண்டால் அத்துன்பம் துன்பப்படுமாம். இந்த ‘உளவியலை’ வைத்து, வள்ளுவர் தன் முன்னேற்றத்துக்குக் காட்டும் வழிகள் பலவாகும்.

*இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு*
*இடும்பை படாஅ தவர். (623)*

இந்தக் குறளுக்குப் பதவுரை தேடுபவரை என்ன சொல்வது? குறளையே அல்லவா வேதம் ஓதுவதுபோல - மூலமந்திரம் போலத் திரும்பத் திரும்ப ஓதி மனவலிமை பெறவேண்டும்? சரியான நேரத்தில் வெற்றி வரவில்லை. பதற்றப்படாமல் உழையுங்கள், வெற்றி மெதுவாய் வரும்; தாமதித்து வரும் - வரலாம். அடுத்தடுத்து முயலும்போது, காலத்தே வெற்றி பெறுமளவு என்ன - பிறர்க்கு உதவுமளவு வளர்ந்து விடுவீர்கள். மனஉறுதி படைத்தவனிடம் வரும் துன்பம் துன்பப்படும் - ஒருமுறை வந்தாலும் மறுமுறை வாராது - வந்தாலும் நிற்காது ஓடிவிடும்! இத்தோடு இயையுபடைய பல குறள்கள் உள; பலவிடத்தும் உள. ‘இடுக்கண் இடுக்கட்படும்’, ‘இடுக்கண் இடர்ப்பாடுடைத்து’ எனவரும் தொடர்களும் காண்க. திருக்குறட் செய்தி நூல்முழுதும் விரவிக் கிடக்கிறது; பலவிடத்தும் தொகுதிகளாகப் பரந்து கிடக்கிறது. திருக்குறளை ஒட்டு மொத்தமாகப் பார்க்க வேண்டும்; நேரிய பார்வையில் வைத்துச் சிந்திக்க வேண்டும்; மூலக் குறள்களையே பொருளுணர்ச்சியோடு ஓத வேண்டும். அதனால் மனவலிமை பெறவேண்டும். அவ்வழியில் சிறப்பாக வாழ வேண்டும். திருவள்ளுவர் மனித இன இயக்கமாகத் தோற்றுவித்ததே திருக்குறள் வேதமாகும். அதை நாம் மறப்பது, திருக்குறளையே மறப்பதும் மறைப்பதுமாகி விடும்.

விருதுநகர் குறள் நெறிக்கழகமும்
ஜூனியர் சேம்பரும் – நடத்திய
‘வள்ளுவர் காட்டும் வழி’ (1991)

# 10. மாணிக்க வள்ளுவம்

தமிழில் ஒரு நூலை எவ்வாறு திட்டமிட்டு எழுத வேண்டும் என்பதற்கு 'வள்ளுவ'மும் ஓர் ஆய்வை எவ்வாறு வரன்முறை தவறாது எழுத்து வடிவில் தர வேண்டும் என்பதற்குத் 'தமிழ்க் காதலு'ம் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். இவை இரண்டும் தமிழ் இளைஞர்கட்கு நல்ல வழி காட்டியாக என்றென்றும் நின்று நிலவ வல்லன. இவ்விரு நூல்களுமே முதற்பெரும் வெளியீடுகளாக அமையத் தமிழுலகில் அறிமுகமான மாணிக்கனார் இறுதிவரை கொள்கையிலும் கருத்திலும் நடையிலும் புலப்பாட்டுத் திறனிலும் ஒரே வழிப்பட்ட தொடர்ச்சியுடையவராகக் காணப்படுகிறார். எவ்விதச் சலனமோ, அசைவோ, மாற்றமோ இவரிடம் காணல் அரிது. 'நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள், திமிர்ந்தஞானச் செருக்கும் இருப்பதால், செம்மை மாதர் திறம்புவதில்லையாம்' என்றார் மாகவிஞர் பாரதியார். மாதருக்கு மட்டுமென்ன சிலரது எழுத்துக்கும் இவை மிகப் பொருந்தி வருகின்றன. மாணிக்கனார் எழுத்துக்கு இவை மிகமிகப் பொருந்தும். நேர்கொண்ட பார்வை (Proper Perspective), திமிர்ந்த ஞானச் செருக்கு, நிமிர்ந்த நன்னடை (எழுத்து நடை) வாய்மையுடன் வாய்த்ததால் இப்பெரியவர் எழுத்து திறம்பியதே இல்லை எனலாம். இம்மூதறிஞர் எழுதிய அத்தனை எழுத்தையும் எத்தனை முறை படித்தாலும், அவை அனைத்திலும் ஒருமை இழையே ஊடாடுவதை அறியலாம். எதை எழுதினும், அது சிறுகட்டுரையே யாயினும் அதைச் செறிவாக, அழுத்தமான, சொற்செட்டுடன், ஆணித்தரமாக, தக்க சான்றுகளுடன், தம் ஆழ்ந்தகன்ற நுண்ணிய நுழைபுலந் தோன்ற, பழஞ்சொல் ஆட்சியும், புதுச் சொல் மாட்சியும் பொருந்தப் பொலிவூட்டி எழுதுவ தென்பதே இவர்தம் 'எழுத்து முறை' ஆகும்.

**வள்ளுவம்**

'வள்ளுவம்' தமிழருக்குக் கிடைத்த ஒரு பெருஞ் சிந்தனைச் செல்வமாகும். திருக்குறளை நன்கு பயின்ற, பழுதறக் கற்ற, முழுமையும் உணர்ந்த ஒருவரால்தான் வள்ளுவம் போன்ற நூலை எழுத முடியும். அதைப் படித்து விளங்கிக் கொள்ளவும் குறட்பயிற்சி முழுமையாக வேண்டுமேல், எழுதியவர் பற்றி இயம்ப வேண்டிய

தில்லை. இதன்கண் பன்னிரண்டு கட்டுரைகள் கற்பனைச் சொற்பொழிவு வடிவிலமைந்துள. இந்நூலின் நடையழகு தனித் தன்மை வாய்ந்தது. ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறள் களையும் பழுதறக் கற்ற பாங்கு சொல்தோறும் தொடர்தோறும் பக்கந்தோறும் வெளிப்படும்.

திருவள்ளுவர், நாம் செயற்பட்டு நல்வாழ்வு வாழ வேண்டு மென்று நூலெழுதினாரே தவிர, உரை காணவும் நயங்காணவும் ஆராயவும் நூல் எழுதினாரல்லர். வள்ளுவர் நெஞ்சம் நம்மைக் 'குறள் வாழ்வு வாழ' வழி வகுப்பதேயாகும். 'திருக்குறள், பலநிலை அறங்கூறும் நூல்' என இவ்வாசான் தெளிவுபடுத்துமிடங்கள் புதுமையும் பொலிவுமுடையன. 'திருக்குறள் ஒரு மருந்துக்கடை' தாமே தேர்ந்து, தேடி எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். 'திருக்குறள் ஒரு பெருஞ்சந்தை' - அதில் உள்ளன யாவும் ஒருவரால் ஒரே தடவையில் வாங்கிப் போக முடியாதவை. கைவசமுள்ள பொருளுக்கும் அற்றைத் தேவைக்கு மேற்பவே வாங்கிச் செல்ல முடியும். எனினும் ஒருவற்கு நூல் முழுதும் இவை இவை உள்ளன என முன்பே தெரிந்திருக்க வேண்டும். அவ்வாறு முழுமையும் அறிந்திருப்போரே, தேவையறிந்து பயன்படுத்த முடியும். தனியறம் வேறு: பொது அறம் வேறு. அவரவர் நிலையறிந்து அறங்கூறுதலால், சிலபோது முரண்கள் எனத் தோற்றும். உண்மையில் அவை முரண்கள் அல்ல. நிலைக்கேற்ற பன்மை அறம் பகர்தலால், சூழலறிந்து உண்மை காண வேண்டும். 'யாரையும் எந்நிலைக் கண்ணும் கை தூக்கி விடுபவர் வள்ளுவர்'.

மனித வாழ்க்கை பெரிதும் பொருட் செல்வத்தைச் சார்ந்திருத் தலால் இவ்வள்ளுவச் செல்வர் பொருள்நிலை, பொருட்பயனிலை, இன்மை நிலை என மூன்று பொழிவுகளில் செல்வ வள்ளுவங்களை அலசி ஆராய்கிறார். பொருளின் மதிப்பு அதைப் பயன்படுத்து வதில்தான் இருக்கிறது என்பதை இவர் நுணுகி உணர்ந்து எடுத்துக் காட்டுவது செல்வராவார் ஒவ்வொருவரும் சிந்திக்கத் தக்கதாகும். இத்தமிழ்ப் பெருநூல் செல்வத்தின் இன்றியமையாமை, பயன்பாடு, நிலையாமை, அறவழியில் சேர்த்தலின் சிறப்பு என எடுத்துக்கூறும் ஒவ்வோரறமும் உலக மாந்தர்க்குப் பயன்தரும் நல்வழியாகும். பிற மொழி நீதி நூல்கட்கும் தமிழ் நூல்கட்கும் உள்ள அடிப்படை வேறுபாட்டை இவர் போகிற போக்கில் சுட்டிச் செல்வர். ஆயின் அஃது அழுத்தமானதொரு பெருவேறு பாடென்பது மனங்கொளத் தக்கது. "பழம் அழுகிப்போம்; பலகாரம் ஊசிப்போம் என இயல்பு தெரிப்பது பிழையா? அழுகுவதன் முன்னும் ஊசிப் போவதன் முன்னும் தின்று பயன்படுத்த வேண்டும் என்பதே உட்கிடை. 'அற்கா

இயல்பிற்றுச் செல்வம்' என இயல்பு வரைந்த வள்ளுவர், அதே மூச்சில் 'அது பெற்றால் அற்குப ஆங்கே செயல்' எனப் பயன் வரைப. செல்வம் நிலையாது, ஈட்டற்க; இளமை நிலையாது, வளரற்க; உடல் நிலையாது, வாழற்க, என முதலறுக்கும் கருத்து தமிழ் நூலில் இல்லை''. இதனைப் போலும் தமிழ் உள்ளம் தோய்ந்து கருத்துச் செல்வங்களால், படிப்பவரை முழுமைத் தமிழராய் முறையுற வளர்க்கும் பாங்கு இவர்தம் எழுத்தில் இருக்கிறது. திருக்குறளை எவ்வாறு பயில வேண்டும்? எவ்வாறு குறுகத் தறித்த குறள்களின் பொருளை உணர வேண்டும்? எங்ஙனம் அவற்றின் வழி நடக்க வேண்டும்? ஆசான் நெஞ்சம் காண்பதெப்படி? நமக்குத் தேவையான குறளைத் தேர்வதெவ்வாறு? ஐயம் வருமிடங்களில் தெளிவு பெறுவதெங்ஙனம்? என்றினையன அனைத்தையும் 'வள்ளுவம்' வளர்த்தலால், அந்நூல் திருக்குறள் கற்றார் ஒவ்வொருவருக்கும் இன்றியமையா வாழ்வு வழிகாட்டியாய் அமைகிறது. பட்டப் படிப்புப் படித்தார் மேற்பட்டப் படிப்புக்கும் முயலுமாப் போலே, திருக்குறள் பயில்வார் யாவரும் வள்ளுவமும் கற்பாராக!

அறிவுப் பிறப்பு, அறிவுக் கல்வி என்ற இரு பொழிவுகளும் மக்கட் பிறப்பின் மேன்மையையும் கல்வியின் சிறப்பையும் குறள் வழி நுட்பமாய் விளக்குவன. 'உறுப்புக் குறை அறிவுக் குறை யாகாது' என இவர் வள்ளுவர் காட்டும் வழியை விளக்கும்போது, திருக்குறள் போலும் 'தன் முன்னேற்ற வழிகாட்டி நூல்' உலகில் அரிது எனப் போற்றத் தோன்றுகிறது. 'அறிவறிந்த மக்கட் பேறு' என்பதற்கு பரிமேலழகர் வரைந்துள்ள பொருந்தாவுரையை, இவர் நாகரிகமாக மறுக்குமிடம் அறிந்து கொள்ள வேண்டியதாகும். "அறிவறிந்த என்றதனான் மக்கள் என்னும் பெயர் பெண் ஒழித்து நின்றது. இதனால் புதல்வரைப் பெறுதலின் சிறப்பு கூறப்பட்டது'' எனப் பரிமேலழகர் வள்ளுவத்தின் அடிவேரினை விளக்கம் என்னும் வாள் கொண்டு அறுத்தார். பிற உரைகளிலும் கொளத்தகும் பேருரை கண்ட இத்தமிழ்ப் பெருமகனார் காலக்கோட்பட்டு முரணி எழுதிய இடங்கள் இன்னும் சிலவுள. இவ்விடங்கள் 'ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால் வெளிறின்மை அரிது' என்னும் 'இயல்புக்கு இலக்கியம் ஆயின' என நடுநிலை பிறழாது இவர்தம் சிந்தனை நடை பயிலக் காண்கின்றோம்.

தனி மனிதனுக்கு அடுத்துத் திருவள்ளுவர் அழுத்தமாகச் சிந்தித்தது குடும்பம். குடும்பங்களின் கூட்டணியே ஊரும் உலகமும்.

அக்குடும்பத்தை நடத்துவது எங்ஙனமென ஆசான் மொழிந்த வற்றைக் 'குடும்ப வாழ்க்கை' என ஒரு பொழிவாக்கிய மூதறிஞர் திறம் போற்றுதற்குரியது. 'இல்லறமல்லது நல்லறமன்று' என்பதுவே தமிழ் நூலின் முடிபு. 'பண்புடைய குடும்பமே பயனுடைய வாழ்வாகும்'. உலக நல்வழிப்பட அதன் சிற்றெல்லை வடிவாகிய குடும்பம் நல்வழிப்பட வேண்டும். அக்குடும்பச் சிறப்பைக் குறள் வழியுணர்ந்த இப்பேராசான் பல்வகை உருவகங்களால் அதன் பாங்கினை மனத்தின்கண் பதிய வைப்பர். "குடும்பம் என்பது ஆண் பெண்ணாகிய குடியானவர் மக்கட் பயிர் விதைத்து வளர்க்கும் மனை வயல்; குழந்தை, மழலை ஒலிக்கும் இன்பக் காடு; சமூகம், கொந்தளித்து மோதும் துன்பக் குன்று; செயலெல்லாம் நினைவெல்லாம், ஓடி விழும் பற்றுக் கடல்; அன்பு, நீரற்ற காலை சினப்பாலை; குடும்பம் என்பது உலகத்துப் பலர் எண்ணமெலாம் சிறுபேரவையாக வந்து தாக்கும் மண்தீவு; சமூக வழக்கும் புத்தறிவும், பூகலிடும் போர்க்களம்; அரசு, காக்கும் நுண்வேர்; நாட்டின் எந்நிலையும் காட்டும் அறிவுக் கண்ணாடி; முயல்க முயல்க என்று தூண்டும் முள்ளிருக்கை; அச்சமில் ஒழுக்க நிலையம்". ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் காட்டுமாப் போல, இவ்வுருவகத் தொடர்களே வள்ளுவ நூலின் கருத்துச் சிறப்பையும் நடை யழகையும் காட்டவல்லனவாம். குறள் செயல் நூலெனத் தொடங்கி, குறளமுதை ஊட்டிச் செரிக்க வைத்துக் குருதியில் கலக்க வைக்கும் இவ் ஆசானின் திறமும் அச்செயற்படுத்துந் திறத்ததாகவே அமைந்தருக்கக் கண்டு இறும்பூ தெய்துகின்றோம். 'வள்ளுவ அரசு' அரசு வள்ளுவங்களை எடுத்து வைத்து, ஞாலம் ஒரு பெருங் குடும்பமாதலின், அதற்கேற்ற பொது அறங்கள் யாவை எனப் பகுத்துணர்த்துகிறது. இற்றை நாள் அரசியலுக்கு வழி காட்டும் போக்கில் எழுதியுள்ள பாங்கு, இத் தமிழாசானின் உலகப் பொதுவறிவைக் கண்டு உவகை பூக்க வைக்கின்றது.

இறுதி மூன்று பொழிவுகள் திருக்குறள் நடை, ஆசான் கருத்துரை, வாய்மை நெஞ்சம் என்பன. இவையெல்லாம் திருக்குறளைக் கற்க விழைவார்க்கு வழிகாட்டும் போக்கினவாயே அமைந்துள. ஓர் எடுத்துக்காட்டுத்தரின் இப்போக்கினை உணரலாகும். 'திருக்குறட்கண்' வரும் அவ்வுலகக் குறிப்புகள் வாழ்வுக்குப் பயன்படுமா?' என ஒரு வினாவை எழுப்பிக் கொண்டு, பொருந்திய விடை பகர்கின்றார். மறுமை, எழு பிறப்பு, புத்தேளுலகு, அளறு என்று பேசுமிடத்தெல்லாம் அவ்வுலக வினை நுகர்ச்சி பற்றிக் குறிப்பிடக் காண்கிறோம். ஆயினும் அவ்வுலக நுகர்ச்சியைக் காட்டலேயன்றி, வற்புறுத்தல் வள்ளுவர் நோக்க

மன்று. "அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை", 'ஒருமைக்கண் கற்ற கல்வி', 'மனநலத்தின் ஆகும் மறுமை', 'யான் எனது என்னும் செருக்கறுப்பான்', 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்' என வரூஉம் பலபகுதி எல்லாம் அருள், கல்வி, மனநலம், செருக்கறுப்பு, அறிவுடை வாழ்க்கை என இவ்வுலக ஒழுக்கம் வலியுறுத்தலை உள்ளுக. இனிப்பு அளிப்பதாய்ச் சொல்லும் தாய்க்குக் குழந்தை மருந்து குடிப்பது நோக்கம் ஆமாறு போல, வள்ளுவர்தம் பிறவுலகக் குறிப்பனைத்தும் நம்மை இவ்வுலகின்கண் ஒழுக்கத்து உய்க்கும். கருத்துடையன", என இவர் விளக்குவர். இதனைக் கொண்டு, அவ்வத் திருக்குறளை ஒருவர் திரும்பத் திரும்பப் படித்துப் பார்ப்பின், வள்ளுவரின் உள்ளக் கிடக்கை தெள்ளிதிற் புலனாகும் என்பது ஒருதலை.

## நுண்மாண் நுழைபுலம்

### குறளுக்கொரு கலங்கரை விளக்கம்

'நுண்மாண் நுழைபுலந் தோன்ற' எனக் கூறுவதுண்டு. மாணிக்கனார் தம் எழுத்தில், ஒன்றை எழுதிப் போகிற வீச்சில், ஒருசில உண்மை ஒளிகள் அதனோடு தொடர்புடையவையாய் இடையிடையே வெளிப்படும். அதனைப் படிக்கும் பொழுது, நம் மனம் நம்மையுமறியாமல் 'இதுவல்லவோ நுண்புலம்' எனக் களிப்பெய்தும். ஒரு சில சான்றுகள் வழி இதனைக் காணுதல் தகும்.

### அறத்தாறு, இதுவென வேண்டா

'அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை, பொறுத்தானோடு ஊர்ந்தானிடை' என்ற குறளின் பொருள் பற்றித் தொடர்ந்து கருத்து வேறுபாடு நிலவுகிறது. பரிமேலழகர், மணக்குடவர், பரிதி, காளிங்கர், பாவாணர் முதலியோர்க்குப் பல்லக்கில் ஏறிச் செல்பவன் புண்ணியவான் எனவும் அதனைச் சுமப்பவன் பாவி எனவும் கருத்துள்ளது. 'இதனை வைத்து அறத்தின் பயனை மதிப்பிட வேண்டா' எனத் திரு.வி.க., குழந்தை, பாரதிதாசன் பொருள் செய்வர். குறளுத்தி ஒன்றைக் காட்டி, இம்மூதறிஞர் இக்குறட் கருத்தை நிறுவுவர். "உலகத்தார் நடைமுறையில் கொண்டிருக்கும் கருத்தினை மறுப்பது ஒரு குறளுத்தி" எனக் கூறி, அதற்குக் கீழ்வரும் குறள்களை இவர் எடுத்துக் காட்டுவர்.

*மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்*
*பழித்தது ஒழித்து விடின்*

*அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை*
*எண்ணி இடத்தாற் செயின்*

*புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்*
*நட்பாங் கிழமை தரும்*

*மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது*
*அற்றது போற்றி யுணின்*

இவற்றுடன்,

*அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை*
*பொறுத் தானோடு ஊர்த்தா னிடை*

என்பதை உடன் வைத்துப் பார்க்கும்போது, உலகத்தார் கொண்டிருக்கும் ஒரு கருத்துக்கு மறுதலையான கருத்தே 'வேண்டா' எனச் சுட்டப்படும் நடையுடையதாதல் வெளிப்படு கிறது. தொல்காப்பியம் கற்க அந்நூலே முதற்பெருந் துணையாகும் என வற்புறுத்தும் இப் பேராசான், இங்குத் 'திருக்குறளைக் கொண்டே அந்நூல்களில் வரும் ஐயங்களைப் போக்கிக் கொள்ளலாம்', என்பதைத் 'திருக்குறள் உத்திகள்' எனும் கட்டுரை மூலம் விளக்கிக் காட்டுகிறார். அதன் வழித் தனி ஆய்வு செய்யத் தூண்டும் ஆழமும் நுட்பமும் தெளிவும் உடையது இவ்வுரை. "ஏனைக் குறள்களுக்கும் உரிய உத்தி நெறி கொண்டு தெளி பொருள் காணும் புதிய வேட்கையை இக்கட்டுரை தூண்டுமென நம்பு கின்றேன்", என இவ்வுரையை முடிப்பதும் அன்னாரது உள்ளக் கிடக்கையைப் புலப்படுத்தும்.

## வித்தும் இடல் வேண்டுங்கொல்லோ?

'வித்தும் இடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி, மிச்சில் மிசைவான் புலம்' எனும் குறளுக்கும் உரையாசிரியர் பலரும் 'விதைக்காமலே நெல் விளையும்' என்றே உரை எழுதியுள்ளனர். வள்ளுவம் 'திருக்குறள் நடை' பற்றிய உரையில், இதனை 'அழுத்தம் பெறக் கூறக் கையாளும் இலக்கியப் பண்பு' எனவும், 'பெருநடை' எனவும் சுட்டிப் பொருந்திய சான்றுகளுடன் விளக்குவர் இவர். 'பெய்யெனப் பெய்யும் மழை', 'கரப்பவர்க்கு யாங்கு ஒளிக்கும் கொல்லோ', 'ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும்' எனவும் காமத்துப் பாலில் பெருவரவிற்றாகவும் வரும் நடையை 'வித்தும் இடல் வேண்டுங் கொல்லோ' என்பதுடன் ஒப்பிட்டால் 'விதை தூவியா விளைய வேண்டும்' என்ற பெருமித நடையே இதுவென்பது போதரும். அதற்காக விதை தூவாமலே விளையும் என்பதன்று, கருத்து. உலகிடை இவ்வாறு வருவனவற்றைக் காட்டி, 'கல்லாதாரும் கூட மொழி நயம் பேசுவது' நம் நாட்டு இயல் பென்பதைச் சுட்டி விளக்குவர். 'பெய்யெனப் பெய்யும் மழை' என்பதும் இப் 'பெருநடை' வழிப்பட்டதே என்பதை நாம் உணர்கின்றோம்.

## ஒப்புரவு, ஈகை

சிறு விளக்கம் தானே என்று புறக்கணிக்க வியலாத பேரழுத்தம் உடையது, வள்ளுவத்தில் வரும் ஒப்புரவும் ஈகையும் பற்றிய விளக்கம் (105). பல்லுயிர்க்கும் ஒத்த புரவே ஒப்புரவாம்; தனி உயிரினது துன்பம் நீக்கும் சிறப்புக் கொடையே ஈகையாம். அதாவது பொதுக் கொடை ஒப்புரவு; தனிக் கொடை ஈகை. ஒப்புரவறிதலில் வள்ளுவப் பெருமகன் 'ஊருணி நீர் நிறைந்தற்று', 'பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்று', 'மருந்தாகித் தப்பாமரத்தற்று' என பரந்து பட்ட பொது உவமைகளை எடுத்துக் காட்டி, 'கல்வி நிலையம், நூல் நிலையம், உடற்கழகம், ஏழை விடுதி, கோயில், மருந்தில்லம், தண்ணீர்ப் பந்தல், ஊருணி, பூங்கா, விளையாடுகளம் என்றின்னவை ஒப்புரவால் தோன்றியவை' என விளக்குவர் இப்பேராசான். ஈகையில் 'வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை', 'அற்றார் அழி பசி தீர்த்தல்' என வரும் நடைகளைக் காட்டி, பின் தங்கி நிற்கும் தனி ஒருவற்கு அல்லது தனியொன்றனுக்குச் செய்யப்படுவதே ஈகை என இம்மொழியறிஞர் முடிபுரைப்பர். "ஒரு தோட்டத்துச் செடி களுக்குக் கிணற்றிலிருந்து கால்வாய் வழி நீர் பாய்ச்சுகின்றோம். அதனால் செடிகள் பலவும் ஒருங்கே நீரைக் குடிக்கின்றன. இஃது ஒப்புரவுக் கொடையானது. செடி தோறும் சென்று சென்று பார்வையிடுகின்றோம். நீர் பெறாச் செடிகளுக்குத் தனித்து நீர் ஊற்றுகின்றோம். அரும்பிய இளம் பயிர்களுக்கு வேர் அறாதபடி கொள்ளளவு அறிந்து நீரைத் தெளிக்கின்றோம். இஃது ஈகை போல்வது", என இவ்வாறு தெளிந்த நீரோடை யெனத்தம் செறிவுள்ள செவ்விய நடையால் எழுதிப் போவன அறியத் தக்கன. அரிய கருத்துக்களை, எளிய இனிய நடையிலுள்ள உவமைகள், சான்றுகளின் வழி எழுதிச் செல்வதால் செறிவும் கனிவும் சேர்ந்தியலும் இவர் நடையை யாரும் வெறுப்பதில்லை. இது 'செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிப் பொலிவும் இனிமையும் பொதிந்த நடை' ஆகும்! இன்றேல் கடுநடை, விளங்கா நடை என உலகம் பழித்து ஒதுக்கவும் கூடுமன்றோ? சற்றே மன நெகிழ்வுடன் தொடங்குவார் எவரையும் தொடர்பு இடையறாமை தூண்டும் இவரது எழுத்து, கருத்துக்கு வளம் சேர்க்கும் தகையது; தமிழுக்கு உரம் சேர்க்கும் வகையது. எனவேதான் சிறப்புத் தமிழ் இலக்கிய மாணவர் அனைவரும் மாணிக்கனாரைப் பயிலச் செய்தல் தமிழுக்கு மாண்பு சேர்க்கும் என்பது எம்மனோர் பெருவிருப்பும் வேண்டு கோளுமாகும்.

### இகல், பகல்

இகல் என்பது அறியாமையால் கொள்ளும் பகையாகும். தமிழன் என்பதற்காக ஒருவன் மீது கொள்ளும் பகை பேதைமை அன்றோ? ஒருவன் தன் பிறப்பை மாற்றிக் கொள்ள இயலுமா? கருநாடகத்தார் அண்மையில் குற்றமெதுவும் செய்யாத தமிழர்களைக் காவிரி நீர் பற்றிய நடுவர் மன்றத் தீர்ப்புக்காக, அடித்து நொறுக்கி விரட்டியடித்தனரே! அதுவே 'இகல்' எனப்படும். ஒருவன் அடித்தான், சினந்தான் என்பதற்காக நாம் அவனொடு முரண்படுவது 'பகல்' எனப்படும். இங்குக் காரணம் நீங்கப் பகையும் நீங்கும். இங்ஙனம் தமிழ்ச் சொற்களுக்குரிய நுண்பொருள்களை இவர் விளக்கும் திறம் சுவையானது. பல்லாயிரம் ஆண்டுப் பண்பட்ட வளர்ச்சியால், தமிழ் திட்ப நுட்பமுடன் ஆளப்பட்டு வந்துள்ளது. இன்றைய ஆங்கில நடைகள் மிக நுட்பமுடையன; ஆழமானவை; நெளிவு சுளிவு மிக்கவை. இதனால் புலமையாளன் ஆங்கில நடையைக் கையாள்வதில் பேரார்வமும் பெருவிருப்பும் காட்டுகின்றான். சீரிய கூரிய ஆங்கில நடைகளைக் கற்கும்போது, படிப்பாளியின் உள்ளம் உள்ளுள் உவக்கின்றது. உலகளாவிய பரந்துபட்ட வளர்ச்சியால் ஆங்கில நடையுத்திகள் அளவிறந்தனவாயுள்ளன. இத்தகு திறமும் இதனிலும் மேம்பட்ட இலக்கிய வழிப்பட்ட பண்பட்ட அமைவுகளும் தமிழின்பால் உள. இதனை நாம் மறைமலையடிகள், திரு.வி.க., ரா.பி. சேதுப்பிள்ளை, கல்கி, மு.வ. போல்வாரது தமிழில் கண்டு மகிழ்கின்றோம். மாணிக்கத் தமிழிலோ இம் மாண்புகள் பலவும் அவற்றின் நிறைவும் செறிவும் முழுமையும் இனிமையும் தோன்ற வெளிப்படுகின்றன. இன்றைய தமிழ்ச் சிறுகதையாளிகள், புதினப் படைப்பாளிகள் பலரும் தமக்கென ஒரு 'தமிழ்நடை' காண மாட்டாது, புதிய தமிழ் பற்றிப் பொழிந்து தள்ளுகின்றனர். தமது கருத்துக்களால் மட்டுமே தாம் நிலை பெற்றுவிட முடியுமென இவர்கள் நம்பி ஏமாந்த வண்ணமுள்ளனர். சாகாவரம் பெற்ற உயரிய படைப்புகளைத் தந்து, தமிழ் இலக்கிய வுலகில் நிலைபெற வேண்டுமென்ற குறிக்கோள் இலராய், வெறும் கூப்பாடு போடுகின்றனர். ஒருவனை அவனது 'நடை'யை வைத்து, தனித் தன்மையை அறியுமாறு போல, ஓர் எழுத்தாளனது 'தனித்திறன்', அவனது தனிப் பண்பு காட்டும் மொழிநடையையும் பொறுத்தது என்பதை மறந்துவிடும் இவர்கள்பால் நமக்கு இரக்கமே தோன்றுகின்றது. இனி எழும் படைப்பாளிகளேனும், இத்தகைய

தமிழ் உரைநடைத் திறன்மிக்க நூல்களை விரும்பி, நம்பிப் படித்துத் தம் தனித் திறனை வளர்த்துக் கொள்வார்களாக; பண்டிதத் தமிழ், பண்டித நடை, பண்டிதர் கூட்டம் என்று கண்ணை மூடிக் கொண்டு பழிப்பதும் வெறுப்பதும் பயன்தரா என்பதை இவர்கள் நம்ப வேண்டும். அண்மையில் ஓர் இளம் தமிழ் எழுத்தாளரை நேர்முகம் கண்டவர், "நீங்கள் எவ்வாறு புதிய உத்திகளுடன் தமிழ் நாவல்களை எழுதுகிறீர்கள்" என வினவுகின்றார். அதற்கு அவர் "நான் ஆங்கில நூல்களைப் படித்து என் நாலட்ஜை இம்ப்ரூவ் பண்ணி வருகிறேன்" என்று பதில் கூறுகிறார். இத்தகைய 'பண்ணித் தமிழ்' நடை ஒன்றே இவர் பயின்றது. தமிழறிஞர்களும் தமிழார் வலர்களும் இடையறாது முயன்று செவ்விய தமிழ் நடையை இடையறவு படாது காக்க வேண்டும். மு.வ., அகிலன்., கி.வா.ஜ., கல்கி போல நடைத் திறன்படத் தமிழில் எழுதிக் குவித்து, இத் தனித்திறனற்ற மேதாவிகளைப் பின்னுக்குத் தள்ளிவிட வேண்டும். நல்ல நடையழகுள்ள தமிழ், மக்களிடையே செல்வாக்குப் பெறப் பெற, நாட்டில் நிலவும் பல்லாயிரக்கணக்கான 'புற்றீசல்கள்' இருந்த இடம் தெரியாமல் போய் ஒழியும் என்பது உறுதி. படைப்பு நூல்களாகிய கதை நூல்களிலும் தரம் மிக்க பேச்சு வழக்கே இடம் பெற வேண்டும். அவையும் மரபு வழிப்பட்ட தனி நடையழகு கொண்டு ஆசிரியனின் கற்பனையாற்றலைப் போல, மொழித் திறத்தையும் பறைசாற்ற வேண்டும். இதற்குத் தமிழ் ஆர்வலராவார் அனைவரும் வெறும் பேச்சாளிகளாய் இருந்தால் போதாது. அவர்கள், திறன் மிக்க, மக்கள் போற்றும் எழுத்தாளர்களாக வெளிவர வேண்டும். உலக இலக்கியத்துடன் போட்டியிடும் படைப்பாளிகளாக மலர வேண்டும். 'அறம் வளர வளரவே அல்லவை தேயும்'! இதை மறவாது வாழவே மாணிக்க வள்ளுவம் வழி காட்டுகிறது. எனவே வளர்ந்து வரும் 'கொச்சை நடைப் படைப்பாளிகளைப் பார்த்து' யாம் ஒன்று வேண்டுவல்: "ஐயா, பேச்சுத் தமிழில் எழுதுவதாகக் கூறிக் கொண்டு, பச்சை பச்சையாகச் சமூகத்திற்குக் கேடுதருவனவற்றைப் பொறுக்கியெடுத்து, யதார்த்தம் என்ற பெயரால் எழுதித் தமிழைக் கொச்சைப் படுத்த முயலும் செயலைக் கைவிடுங்கள்! தமிழ் இலக்கியத்தைக் கண்ணெடுத்தும் பாராமல், மரபைப் போற்றாமல், ஆகாயத்தில் பூக்கும் பூப்போலத் தலையெடுத்து விடலாம் என நம்பித் துள்ளிக் குதிக்காதீர். என் மீது பகல் கொண்டாலும் இகல் கொள்ளாதீர்! யாம் சொல்வன நன்மைக்கே என எடுத்துக் கொண்டு ஓரளவேனும் தழுவி

வாழ்ந்தால் உமக்கு உய்தி உண்டு. இன்றேல் நும் எழுத்துக்களுக்கு எதிர்காலத்தில் குப்பை மேடுகளே சரணாலயம் ஆகும் என்பதை மறவாதீர்!'' இதுவே எம் அன்பான வேண்டுகோளாகும். இதனையும் கேட்டுக் கொண்டு, தூக்கி எறிந்து பேசுவோரே பலராவர் என்பது யாம் அறியாததன்று. இவர்களை எம்மைப் போலச் செந்தமிழ் நடையிலேயே எழுதுக என்றன்று நாம் வேண்டுவது; ஒலித்திரிபும் பிழைபாடும் மிக்க கொச்சை வடிவங்களை அப்படியப்படியே எழுதி, எழுதிய பின் தம் எழுத்தே தமக்கும் விளங்காமல் தம்மைப் படிப்பவர்க்கும் ஒரு சிறிதும் விளங்காமல் எழுதுவது யானை தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளும் கதையாகு மாதலால் எல்லோர்க்கும் விளங்கும் பொதுத் தமிழில் - வடிவம் சிதையாத தமிழில் எழுதுக என்பதே நம் வேண்டுகோளாகும். "நும் வட்டார வழக்கில் காணப்படும் அரிய சொற் செல்வங்களை, நடைத் தொடர்களை, மரபுத் தொடர்களை, பழமொழிகளை எடுத் தாளுங்கள். ஆனால் ஒவ்வொருவர் உச்சரிப்பும் ஒவ்வொரு மாதிரி இருப்பதால், அப்படியப்படியே சிதைவுகளை எழுதித் தமிழைக் 'கொலை' செய்யாதீர்'' என்பதே நாம் விழிப்புணர்த்தும் அன்புரை யாகும். இதற்கு ஒரே ஒரு மருந்துதான் உண்டு. வெறுமனே எதிர்ப்பதால், முழக்க மிடுவதால் மட்டும் தமிழைக் காப்பாற்ற முடியாது. சிறந்த நடையழகுமிக்க, செந்தமிழ்ப் படைப்புகளை நாட்டில் உலவவிட்டு மக்களைக் கவர வேண்டும். மாணிக்க வள்ளுவம் அதற்கு ஏற்ற வரமும் உரமும் நல்கும்; மறமும் திறமும் படைக்கும் என்பது உறுதி.

### துறவு

'துறவு' பற்றிய தமிழ் நூற் கொள்கையை இப்பேரறிஞர் நன்கு அறிந்து, தெளிவுடன் எழுதுகின்றார். தமிழர் கண்ட அறம் உலகிற்கு ஏற்றது; உலகப் பொதுவானது. அன்றும் இன்றும் என்றும் நிலைக்கக் கூடியது. பிற நூல் கொள்கைகளில் முரண்பாடுகள் மிகுதி. அதைப் பற்றி அவர்கள் யாரும் கவலைப்படுவதில்லை. பெண்ணைத் துறப்பதை, இல்லறத்தை விடுவதை வள்ளுவர் 'துறவு' என்று யாண்டும் குறிப்பிடவில்லை. துறவு அதிகாரத்தில் "மனைவி மக்கள் சுற்றம் முதலாய குறிப்பின்மையை - உயர்திணைத் துறவின்மையை நினைவாராக! 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்ற குடும்ப நிலையைத் துறக்கச் சொல்வாரா? ஓரறம் விடுவது பிறிதோர் அறமாமா?..... மணவா நிலையும்

துறவன்று; மணந்து விடுகையும் துறவன்று. பற்று நீக்கமே வள்ளுவத் துறவாகும்", என்று பற்றுக்களின் நீங்கிய இப்பண்பாளர் வள்ளுவத்தில் மொழிகுவர். ஓர் உயர்திணை, மற்றோர் உயர் திணைக்கு உடைமையாதல் இல்லை என்பதைத் தமிழன் நன்குணர்ந்தவன். தொல்காப்பியர் உடைமை வேற்றுமைக்கு 'அது' உருபும் உறவு வேற்றுக்கு அது என் உருபு கெட 'குகரம்' வருமென்றும், விதித்ததை நினைதல் வேண்டும். 'இவன் எனக்கு மகன்'; 'இவள் எனக்கு மனைவி என உறவு காட்டிப் பேசினாரே யன்றி, தமிழர்கள் 'இவள் எனது மனைவி' என உடைமை காட்டிப் பேசியதில்லை. உடைமையைத் துறப்பதுபோல் துறப்பதற்குரியவள் அல்லள் மனைவி. பற்றறுதல் என்பது வேறு. புறவேடம் தாங்குதலால் துறவும், தவமும் ஆவதில்லை. எனவே இல்லறமும் துறவறமும் தம்முள் முரண்பட்டனவே போன்று பிறரெல்லாம் கருதியதை, வள்ளுவர் ஏற்காது அவற்றைப் படிநிலை வளர்ச்சி அறங்களாகவே கண்டார். வள்ளுவர் கண்ட துறவில் ஆணும் பெண்ணும் "ஒருவரை ஒருவர் கைவிடார். ஆள்துறவாது அவா துறப்பர்' – மணவாத் துறவு உலகியல்பு அன்று; மணந்த துறவு செய்ந் நன்றி அறிவன்று என்று கொண்ட ஆசிரியர், உலகு ஒட்டும் அறம் காண்பதே வள்ளுவ மாதலின் இல்லறம் விடாத் துறவறம் கூறினார்", என வள்ளுவ விரிவுரைஞர் வகுத்துரைப்பது நேரிய கருத்தாகும்.

**ஊழ்**

ஊழ் பற்றி வள்ளுவத்துள் ஈற்றியலாகவுள்ள 'ஆசான் கருத்துரை'ப் பொழிவில் ஒன்பது பக்கங்களில் சிந்திக்கப் பெற்றுள்ளது. புத்தம் புதிய இச்சிந்தனை ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்களால் நீள நினையவும் ஆழச் சிந்திக்கவும் அறிவொடு விளங்கிக் கொள்ளவும் உரியதாகும். சைவ சமயத்துள் வரும் வினைக் கோட்பாடு அறிவியல் சிந்தனை சான்றது; அளவை முறையான் நிறுவக் கூடியது; நடைமுறை வாழ்வில் வைத்துத் தெளியக் கூடியது. அதனோடு இயைபுபடுத்திக் கற்கத் தக்கதெனினும், இப்பேராசான், 'ஊழ்' என்பதைப் பழவினை என மயங்கிக் கொண்டது தவறென விளக்குகிறார். ஊழ் அதிகாரத்து முற்பிறப்புக் குறிப்போ, பழவினைக் குறிப்போ, அவ்வுலகக் குறிப்பு இன்மையைச் சுட்டிக் காட்டுகிறார்! ஊழ் என்பது முறை. அது ஒரு சுழற்சி. உலகிடை நிகழும் பல்வேறு செயல்கள், நிகழ்வுகள், குறுக்கீடுகளால் ஒருவிதச் சூழ்நிலை உண்டாகிறது. சில போது

அச்சூழல் நமக்குச் சாதகமாக இருக்கிறது; சில சமயம் பாதகமாக இருக்கிறது. ஏனைய உயிரினங்கள் எல்லாம் ஊழுக்குக் கட்டுப்பட்டு உயிர் வாழ்வன. அவை ஊழை மீறுவதில்லை. மக்கள் ஊழுடன் இயைந்தே - பிறவுயிர்கள் போல் - வாழ நேரிடுமெனினும், தம் அறிவால் ஊழைக் கடந்தும் வென்றும் வாழும் திறப்பாடு, வலிமை இவர்களிடம் உண்டு. எங்ஙனம் நோக்கினும் ஊழ் வள்ளுவத்தில் முன் வினைக்கோ, பழம் பிறப்புக்கோ இடமில்லை என்பது அறியத் தக்கதாகும். நுண்மாண் நுழைபுல மிக்க மாணிக்கனார் ஊழை விளக்கும் திறம் காண ஒரு பகுதியை இவண் தருதல் நலமாகும். "ஊழ் என்னும் கிளவிக்கு முறை என்பது பொருள். அம்முறையாவது உலக முறை அல்லது உலகச் சூழ்நிலை. 'உலகத்தியற்கை' என்பது சான்று. ஊழ் - முறை என்ற பெயர் தனக்கு இருத்தலின் அஃது ஓர் ஒழுங்குக்கு உட்பட்டுத்தான் உருப் பெறுகின்றது; எனினும் அதனைக் கணிப்பது நமக்கு எளிதன்று. ஏன்? ஊழின் தோற்றத்துக்குக் காரணம் பலப்பல. இடத்தானும் காலத்தானும் அரசானும் சமூகத்தானும் சுற்றுப் புறங்களானும் வரும் புறநிலைப் பாங்கனைத்தும் முடிவில் ஞாலத்தியற்கையாய் ஊழாய் மாறி நிற்கும். காரணப்பன்மை சான்ற ஊழ், நுண்ணிய பல விரிவுகளாய்க் கிளைப்பது; தூய பேரறிவு இல்லா மக்கள் பலரின் கணிப்பிற்கு அப்பாற்பட்டது" (ப. 321). இவ்வாறு ஏற்படும் ஊழ் செல்வ வரவு போக்குகளையே பெரிதும் பாதித்துப் புறத் தாக்கமே செய்யும் என்பதையும் குறள் வழி விளக்குகின்றார். உலகில் பேரறிஞர் பலரின் சிந்தனையுடன் வைத்து, ஒப்பிட்டும் உறழ்ந்தும் எண்ணிப் பார்க்குமாறு வள்ளுவம் விளங்குவதை இப்பேராசிரியர் நம் உள்ளங் கொள்ளுமாறு இங்கு எடுத்துரைத்துள்ளார்.

### இறை

ஊழ் வள்ளுவம் போலவே, மாணிக்க விளக்கத்தில், 'இறை வள்ளுவமும்' புதுமையதாய்ப் புரட்சியதாய்ப் பொலிகிறது. இறைமை என்பது உயிர்களின் பிறப்புடன் ஒட்டிய பண்பு. பிற உயிர்களிடம் அதனை வளர்க்கும் ஆறாவது அறிவென்ற மன நினைவு இன்மையின் அவ்விறைமை தோன்றிய அளவிற்றாயே இருக்கும். மனிதனிடம் அது வளர்ந்து வளர்ந்து முழுமை பெற வாய்ப்புளது. இறைமை என்பது உள்ளிருந்து வெளிப்படுவது; வெளியிலிருந்து பெறப்படுவதன்று. வெளித் தூண்டல் உண்டெனினும் உள்ளிருந்தே வளர்ந்து ஒருவனை முழுமையாக்கும் இறைமையை / உள்ளொளியைப் பெருக்கிக் கொள்ளுதல் அவரவர்தம் கடமையாகும். கடவுள் என்ற சொல்லை ஆளவில்லை. இறைவன் என்ற சொல்லை இருமுறை ஆள்கின்றார். இறைவன்

என்றால் நீங்காதிருப்பவன் - உடனாய் உறைபவன் - உள்ளே தங்கியிருப்பவன் என்று பொருள்படும். "இறைமை எனப்படுவது பிறப்பின் அகப்பொருள்; பிடித்தற்கு வாராப் புறத்தீப் போல, யாராலும் அவித்தற்கு ஒல்லா வலிய அகத்தீ. இத்தீ ஒளியை அற ஒழிக்க முடியாது எனினும் அதனை மறைக்கவோ வளர்க்கவோ மக்களால் இயலும். மடி என்னும் மூடி கவித்து, பேதைமை என்னும் வன்திரையிட்டு, பலர் இவ்விறையொளியை இருள்படுத்தக் காண்கின்றோம்..... மக்கட் பிறப்பு ஒன்றுதான், தீப்பொறியைப் பஞ்சினால் பெருக்கிக் கொள்ளுமாப் போலே, உள்ள இறைமையை நினைவால் பெருக்கிக் கொள்ளும் தனியாற்றல் சான்றது... பிறந்தார் யார்க்கும் உடம்புபோல் உள்ளாகிக் கிடப்பது இறை. உடல் நோய் தடுப்பான் மெய்வலி பெருக்குமாப் போல், மனமாசு அகற்றுவான் இறை வலியை - உள்ளொளியைப் பெருக்கல் வேண்டும் என்பது பிறப்பு வள்ளுவம்", என்ற மாணிக்க விளக்கங்கள் மனங் கொளத் தக்கன.

இறை ஒளியை உள்ளத்தே நினைந்து நினைந்து வளர்க்கும் ஒருவர், எச்சமயமேயாயினும் எத்தெய்வமேயாயினும் எவ்வழிபடு முறையாயினும் தமக்குகந்த ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அதன் வழி தன் இறைமையை வளர்த்துக் கொள்ளுதற்கு முழு உரிமையளிக்கிறார் திருவள்ளுவர். அவர் இறைவனைப் பண்புகளாலேயே சுட்டுவதன் கருத்து என்ன? 'தூய அறிவை வளர்த்துக் கொள்க, பயனில் பற்றற்று வாழ்க, புலன் அடக்கிப் பொய்யின்று வாழ்க, அறமும் அருளும் கொண்டு சிறக்க, உள்ளுறையும் முதல்வனை / இறைவனை இடையறாது நினைக' என்பனவே இறைவாழ்த்துக் குறள்களின் உட்கிடக்கை என இத் தமிழ்ச் செம்மலார் எடுத்து மொழிதலை ஒவ்வொருவரும் மனங்கொண்டு போற்றுதல் மாண்பாகும்.

### அரசு வள்ளுவம்

அரசு வள்ளுவங்களை இவர் அலசி ஆராய்வதுடன், நிகழ்கால இந்திய நிலைமை பற்றிய ஒரு தொலை நோக்கையும் வெளிப்படுத்து கின்றார். ஓர் அரசியல் நிபுணர்போல், இந்திய அரசு கைக்கொள்ள வேண்டிய பல அரிய கருத்துக்களை, வள்ளுவம் வழங்குகிறதென இவ்வாய்மையாளர் எடுத்துரைக்கின்றார். இந்தியா வல்லரசாக வளர வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். 'எங்கள் குறிக்கோள் நடுவு நிலைமையே, இன்னா செய்யாமையே, சமாதானமே, அமைதியே' எனப் பேசிப்பேசி, இந்திய நாட்டைக் கேலிக்குரியதாக்குவதைக் கண்டு வருந்துகிறார். "இலங்கைக்குக் கச்சத் தீவை விட்டுக் கொடுத்தும், நம் எல்லை நெடுக முள்வேலி போடப் பங்களா தேசம்

மறுப்பதும், பாகிஸ்தான் நம்மேல் இருமுறை படை தொடுத்ததும், நினைத்த போதெல்லாம் காஷ்மீரத்தைப் பற்றிய சிக்கலை உலக வரங்கில் கிளப்பிக் கொண்டிருப்பதும் நேப்பாளம் சீனாவொடு நெருக்கமான உறவாடுவதும், சீனா திபேத்துப் பகுதியைப் பிடித்துக் கொண்டதோடு அருணாசல மாநில வுரிமை கொண்டாடுவதும் பாகிஸ்தானும் மேலை நாடுகளும் பஞ்சாபின் கொடியவர்கட்குப் பயிற்சியளிப்பதும், இலங்கைத் தமிழினப் படுகொலையில் மேலும் மேலும் இந்திய வுறவை அலைக்கழித்து வருவதும் இன்னோரன்ன அரசு வட்டாரப் போக்குகள் பாரத நாட்டின் நிலைக்கு உகந்தனவல்ல" என்று இப்பெருந்தகை 1986இல் கூறியவை பெரிதும் இன்றளவும் மாறாதிருப்பது நமக்கு வளர்ச்சியா தளர்ச்சியா என்பதை நம் அரசியல்வாதிகள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்திய அரசும் வள்ளுவர் வழியில் நடக்க வேண்டுமென இவர் உணர்த்தும் உண்மைகளை இன்றும் நாடாள்கின்றவர்கள் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ளுதல் நலம். குறிப்பாக நாடாளு மன்றம் மாநிலங்களவை ஆகியவற்றுக்குச் செல்லும் தமிழக உறுப்பினர்கள், இவ்வள்ளுவங்களை நன்கு அறிந்து எடுத்துரைத் தால் அது இந்திய அரசை நல்வழிப்படுத்துவதோடு, நம் சார்பாளர் களின் நன்மதிப்பையும் நாடறிய உயர்த்திக் காட்டும்.

தனி அறம் வேறு அரசறம் வேறு என இவர் பகுத்துக் காட்டும் போது, வள்ளுவரின் உள்ளமறிந்து கூறும் விளக்கமென அவர் காட்டும் குறட் சான்றுகள் மெய்ப்பிக்கின்றன. திருக்குறளில் ஒரு குறட்கருத்தை விளக்கும்போது, அதற்கு நிகரான பிறிதொரு குறட் கருத்தையோ அல்லது அதனுடன் முரணுமென எண்ண வைக்கும் குறளையோ அல்லது அதனோடொத்த கருத்து, நடையுடைய குறள்களையோ இவர் மிக எளிதாக எடுத்துக் காட்டுகிறார். 'குறள் முழுதுணர்ந்த வாய்மைத் திருமகன்' எனப் போற்றுமாறு இவர்தம் குறட்கல்வி விளங்கித் தோன்றுகிறது.

புதுவைப் பல்கலைக் கழகம்
சுப்பிரமணிய பாரதி தமிழ்மொழி &
இலக்கிய உயராய்வு நிறுவனம்.
மூதறிஞர் வ.சுப. மாணிக்கம்.
பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பர்
அறக்கட்டளை – முதற்பொழிவு
(27–08–1992)

# 11. திருக்குறள் செல்வம்!

செல்வம், செல்வம் என்று உலகம் முழுவதும் அதிலேயே மூழ்கிக் கிடக்கிறது. பொருட்செல்வந்தான் இவ்வுலகிற்குத் தாயும், தந்தையும், நட்பும், உறவும், கணவனும், மனைவியும், துணையும், கடவுளுமாக இருந்து வருகின்றது. செல்வமில்லாதவனைக் கணவனாய் மதிக்க மனைவி மறுக்கிறாள். பணமில்லாத குடும்பத்தில் பிறந்த பாவை, பதிவிரதையேயானாலும் உலகம் பழிக்கிறது. தந்தையைக் கூடத் தனயன் பணத் தராசிலேதான் மதிப்பிடுகிறான். அறம் சாரா தாய்கூட மகனை அதனாலேதான் நிறுத்துப்பாக்கிறாள். கடவுளைப் போற்றும் மக்களுங்கூட பணத்தைப் பெருக்கி, மேலும் பெருக்கக் கடவுளை வேண்டிப், பணத்தாலே அவரை வழிபடுகின்றார்கள். இவையெலாம் கண்கூடு. அதுமட்டுமன்று, கைப்புண்! பணத்தை மதிக்க வேண்டுவதுதான். ஆனால் அதற்கும் அளவு வேண்டுமல்லவா? எத்தகைய செல்வத்தை எவ்வெவ்வாறு மதிப்பிட வேண்டும், முன்னோர்களின் கருத்தென்ன? நாம் கையாள வேண்டிய முறையென்ன? பார்க்கலாம்.

### செல்வமும் வள்ளுவரும்!

முதலில் செல்வம் என்பது செல்வாம், செல்வோம், செல்வேம் என்ற சொற்களைப் போல, "போவோம்" என்ற பொருளில் அமைந்த, தன்மைப்பன்மை வினைமுற்றுச் சொல். இது என்ன இலக்கண ஆராய்ச்சியோ என்று வெறுத்துவிடாதீர்கள். இதே வினைச்சொல் பெயர்ச்சொல்லாக மாறும்பொழுது பொருள், உடைமை, நிதி, பணம் முதலிய பொருள்களை உணர்த்துகின்றது. செல்வம் என்ற சொல் சென்று, சென்று சுழன்று கொண்டிருக்கும் "புல்நுனிமேல், நீர்த்துளிபோலும்" நிலையற்ற தன்மையை, அச்சொல் ஒலி, நம் காதில் கேட்ட அளவிலேயே, உணர்த்தி விடுகின்றது. பொருளுக்கும், கருத்துக்கும் ஏற்ற வகையில் தக்க காரணங்களுடன் சொற்களை அமைத்துத் தமிழ்மொழியை வளப்படுத்தி இருக்கும் நம் முன்னோர்களின் செயல், இந்நேரத்தில் நாம் நினைந்து மகிழ்ச்சி அடைய வேண்டியவற்றில் ஒன்று. சொல்லிலே மட்டும் அல்லாமல், நமது முன்னோர்கள் பல இடங்களிலும் செல்வத்தின் நிலையின்மையை மட்டும் கூறி,

விளக்கிச் சென்றுள்ளார்கள். ஆனால் உலகப் புகழ்பெற்ற வள்ளுவர் செல்வத்தைப் பற்றிய குணம், குற்றம் யாவற்றையும், நமக்கு விவரித்துக் காட்டி, அழியாச் செல்வங்கள் யாவை என்பதையும் எடுத்துக் காட்டி, தீயவழியில் செல்லாது நல்வழியில் முன்னேறும் படி நமக்கு அறிவுறுத்திச் சென்றிருக்கின்றார். எப்படி?

*நிலையற்றதாயினும்*
*நிலைநிறுத்துவது அதுதான்!*

செல்வம் நிலையற்றது! கூத்தாடும் அரங்கிலே காட்சி மாறுவது எப்படியோ, அப்படியேதான் செல்வமும் மாறுகிறது. கூத்துப் பார்க்கக் கூட்டம் வருவதும், போவதும் போலச் செல்வமும் வந்து, போகும் என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

*கூத்தாட் டவைக்குழாத்தற்றே பெருஞ்செல்வம்*
*போக்கும் அதுவிளிந்தற்று.* – என்பது வள்ளுவர் வாக்கு.

இவ்வாறு செல்வம் நிலையற்றது என்பதற்காக, அச்செல்வத்தைத் தேடாதே, மதியாதே என்று வள்ளுவர் கூறவில்லை. நிலையற்றதுதான் - அதேநேரத்தில் இன்றியமையாததும் அதுதான் என்கிறார் வள்ளுவர். செல்வம் இல்லாதவர்க்கு இவ்வுலகில் நல்வாழ்வு இல்லை. புகழ் இல்லை, சாதாரண மதிப்புக்கூட இல்லை.

*அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு*
*இவ்வுலகம் இல்லாகி யாங்கு.*

என்ற குறளில், பொருள் இவ்வுலகிற்கு வேண்டும்; அருள் அவ்வுலகிற்கு வேண்டும் என இரண்டையும சேர்த்துக் கூறுகிறார் வள்ளுவர். அறமும், இன்பமும் வளரத் துணையாக இருந்து உதவுவது செல்வந்தான். அன்பு பெற்றெடுத்த அருள் என்ற குழந்தை, செல்வம் என்ற செவிலித்தாயின்றி வாழ முடியாது என்பதும் வள்ளுவர் கருத்து. பகைவரிடத்துள்ள பகைமை உணர்ச்சியை அறவே ஒழித்து; அப்பகைவரையும் நம்முடன் நட்பு கொள்ள வைக்கும் ஆயுதம் எது என்றால் அது ஒரு கூரியவேல் - கொல்லன் பட்டறையிலே உள்ளது அன்று - நல்வழியில் ஈட்டிய செல்வமெனும் கூரியவேல் தான் அது!

*அம்பு எட்டின வரைக்கும் பாயும்;*
*பணம் பாதாளம் மட்டும் பாயும்*
*என்பது பழமொழி அல்லவா!*

இன்னும், இரப்பவர்க்கு ஈதல் வேண்டுமா? இன்பம் பெற வேண்டுமா? நினைத்த காரியத்தை முடிக்க வேண்டுமா? கனவு, நனவாக வேண்டுமா? தாழ்வாக மதிக்கப்படுபவனும், உயர்வாக மதிக்கப்பட வேண்டுமா? எது வேண்டும்? அல்லது எது வேண்டாம்? வேண்டுவனவற்றை ஆக்கவும், வேண்டாதவற்றை அழிக்கவும் வல்லது செல்வந்தான். அதற்கு ஒப்பில்லை என்கிறார் வள்ளுவர்.

செல்வம் நிலையற்றது எனினும் இன்றியமையாதது தான். சரி, அதை எந்தெந்த வழிகளில் அடையலாம். எவ்வெவ் வழிகளில் அடையவேண்டும் என்பதையும் பார்ப்போம்.

## செல்வத்தைச் சேர்க்கும் வழி?

செல்வம் சேர்க்க எத்தனையோ வழி உண்டு. கள்ள வியாபாரம், கொள்ளையடிப்பது, இலஞ்சம் பெறுவது, வஞ்சித்துவாங்குவது. இப்படி எத்தனையோ வழிகள்! ஆனால் இவை தீமை பயப்பவை. இதைச் சாதாரண மனிதத் தன்மையுள்ள யாரும் ஒப்புக் கொள்ளுவார்கள். சிலபேரிடம் மட்டும் உதடு சொன்னாலும், உள்ளம் இந்தக் கருத்தை ஒத்துக் கொள்ளாது. அவர்கள் கிடக்கட்டும். நாளை அவர்கள் மனமே அவர்களைச் சுடும். அதைப் பற்றியன்று நாம் கருதவேண்டியது. எப்படி, எப்படி முயன்று நல்வழியுடன் செல்வம் ஈட்டலாம் என்பதே நாம் அறிந்து கொள்ள வேண்டியது. வாணிகமானால், சமன் செய்து சீர்தூக்கும் தராசாக உள்ளத்தை வைத்துக் கொண்டு, பிறர் பொருளையும் தன் பொருள் போலப் பேணி வாணிகம் செய்ய வேண்டும். பிற தொழில் அனைத்திலுமே அன்போடும், அருளோடும் பொருள் ஆக்க வேண்டும். மற்ற வழிகளில் ஈட்டும் பொருள் நமக்கும் பயனற்றது, நாட்டிற்கும் தீங்கிழைப்பதாகும். இது வள்ளுவர் கருத்து.

## செலவு செய்யும் நெறி!

சரி. நேர்மையில் நின்று நீதி வழி நடந்து பொருளென்ற எல்லையை அடைந்தேன். சேர்த்த பொருளை பூட்டி வைப்பதா? செலவழிப்ப தெப்படி? என்று இத்தகைய எண்ணங்கள் நம் உள்ளத்தே எழுவது இயற்கை. இவைகளுக்கேற்ற பதிலையும் வள்ளுவர் தெள்ளத்தெளியச் சொல்லியிருக்கிறார். உண்மையை உறுதியாகச் சொல்லும் வள்ளுவரின் தன்மையை என்னென்று சொல்வது.

உன்னிடம் செல்வம் இருக்கிறதா? அப்படியானால் பூட்டி வைக்காதே. நீயும் நுகர். நன்றாக உண்டு, நன்றாக உடுத்து, நன்றாக வாழ்! அது மட்டுமன்று பிறர்க்கும் கொடு, பிறரையும் உண்ணச் செய், உடுத்தச் செய், வாழச் செய்! இது உன் கடமை என்று கட்டளையிடுகிறார். ஆனால் இலட்சம், இலட்சமாக; கோடி கோடியாக அடுக்கி வைத்திருக்கும் ஆசை நிரம்பிய உள்ளங்கள் அந்தக் கட்டளையை ஏற்பதில்லை. பூட்டி வைக்கப், பூசை செய்யப் பொன்னைப் பயன்படுத்துகின்றன. வள்ளுவர் இதை அறியாமலோ, உணராமலோ இல்லை. இத்தகைய உள்ளங்கள் இருப்பதைக் கண்டு ஆத்திரப்படுகிறார். கோபத்துடன் சொற்களைக் கொட்டுகிறார். "அட, அறிவில்லாதவனே! உன்னிடம் கோடி, கோடி என்று அடுக்கிச் சொல்ல எத்தனை கோடிகள் இருந்தால் என்ன. அதை நீயும் பயன்படுத்தாமல், பிறர்க்கும் பயன்படச் செய்யாமல் பூட்டி வைத்திருக்கிறாயா? அவ்வாறு வைத்துக்கொண்டு உன்னையே நீ செல்வன் என்று சொல்லிக் கொண்டு பிறரையும் அவ்வாறே சொல்லச் செய்து கொண்டு வாழ்கின்றாயா? சரி. அதோ, தெருவிலே போகிறானே அவனைப்பார். கையிலே திருவோடு, மெய்யிலே திருநீறு! ஆம் இந்தக் கோலத்தில் பிச்சை கேட்கிறான். "இல்லையே" என்று உன்னிடம் வந்து இரந்து கேட்கிறான். நீ - பணத்தைப் பூட்டி வைத்து பூசை பண்ணும் நீ - என்ன சொல்கிறாய்! அவனைவிட இரக்கமாகத் தாழ்வாக அவனிடம் என்னிடமும் இல்லையே, இருந்தால் தருவேனே! என்று சொல்லுகிறாய்! பொய் சொல்லு கிறாய்! நெஞ்சறிந்த பொய் சொல்லுகிறாய்! ஆனால் உங்கள் இருவரிடமும் இல்லை! செல்வமே இல்லை! சிறிதும் இல்லை. திருவோடு தூக்கித் தெருவெல்லாம் வலம் வரும் அவனுக்கும், திண்ணையிலே சாய்ந்து தினம் தினம் பணம் எண்ணி பத்திரப் படுத்தும் உனக்கும் வித்தியாசம் இல்லை! என்று.

> *"கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய*
> *கோடி உண்டாயினும் இல்"*

என்பது அக்குறள். இக் குறளைப் படித்துணரும் தன்மை பெற்றால் எத்தனை கோடீசுவரர்கள், செல்வர்கள் என்னிடம் செல்வமே இல்லையா? என்று கேள்விக்குறி எழுப்பி, அதையே ஆச்சரியக் குறியாக மாற்றிப், பின் பைத்தியம் போலச் சிரித்து உள்ளே மனம் பதைபதைப்பார்கள்? எண்ணிப் பாருங்கள்! இத்தகைய அடுக்கிய கோடிகள், நம் நாட்டில் எத்தனை இடங்களில் எவ்வளவு

மக்களிடம் இருக்கிறது? இந்தியா வறுமை நாடாக இருப்பதன் இரகசியம் எங்கே இருக்கிறது? இந்த நிலை மாற வழியில்லையா? கோடிக்கணக்கான ஏழை மக்களின், குமுறி எழுந்து அலைபோல ஓயும் நெஞ்சம் கேட்கிறது பெருமூச்சாக, சொற்களாகக்கூட அல்ல!

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துப் பார்த்து மகிழ்வதும், மேலும் மேலும் சேர்த்து மகிழ்வதும் செய்கின்ற இத்தகைய பணக்காரர்களை, வள்ளுவர் படம் பிடித்துக் காட்டுகிறார். அதையும் சிறிது பார்க்கலாம்.

பயனற்ற செல்வர்கள் "மரம்" போன்றவர்கள். அதுவும் காட்டிற்குள் நிற்கும் மரம் போல அன்று, நடுவூருக்குள்ளேயே நிற்கின்ற மரம். நடுவூருக்குள் நின்றால் நல்லதாயிற்றே என்றால், இந்தச் செல்வர்கள் நச்சு மரங்களாக இருக்கின்றார்கள். நச்சுமரம் - நன்றாகப் பழுத்த மரம், நடுவூருக்குள்ளே நிற்கிறது 'செல்வன்' என்ற பெயரில் - இது வள்ளுவரின் படப்பிடிப்பு. "நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள் நச்சு மரம் பழுத்தற்று" என்பது குறள்.

எனவே இத்தகைய நச்சு மரங்களை அழித்துவிட்டு, நல்ல மரங்கள், தோன்றி வளர சமுதாய நிலத்தையே உழுது செப்பனிட வேண்டுமே. களைகளை எல்லாம் வெட்டி வீழ்த்தி, அறிவு மழையால், அன்பு மடையால், உணர்ச்சி உழைப்பால் சீர்திருத்த வேண்டுமே. அடிமையாய் ஆட்டி வைத்த ஆங்கிலேயன்தான் நடையைக் கட்டிவிட்டானே நாட்டை நம்மிடமே தந்துவிட்டு. நாம் இனிக் கடமையைச் செய்து கருத்துடன் வாழவேண்டாமா?

### வள்ளுவர் கூறும் வேறு செல்வங்கள்!

நில்லா நிலைமைத்தாய், இன்றியமையாததாய் உள்ள செல்வத்தை அறவழியில் ஈட்டி அனைவருக்கும் பயன்படச் செய்ய வேண்டும். அத்துடன் அழியாத நிலைபெற்ற, மிகவும் இன்றியமை யாத செல்வங்களையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

பொதுவாக, வேண்டிய இடங்களிலெல்லாம் செல்வத்தைப் பற்றிக் கூறிச் செல்வதோடு அல்லாமல், அழியாச் செல்வத்துட் செல்வங்களையும் வள்ளுவர் கூறிச் சென்றிருக்கிறார். அவற்றைப் பார்த்துப் படித்துப் பயன்பெற வேண்டிய கடமை நம்முடைய தல்லவா. உரிமை பெற்றுவிட்டோம் - இனிக் கடமையைப் பற்றிக் கருதாதிருக்கக் கூடவா எமக்கு உரிமை இல்லாது போய்விடும், என்போர் இருக்கட்டும். எழுச்சிச் கதிர்கள் பழுக்கக் காய்ச்சிய இரும்பைப் போல், உடம்பிலே பாயும்போது தான் எழுவோம் என்போர் கிடக்கட்டும். நாம் கவனிப்போம்.

**கல்விச் செல்வம்!**

முதலில், தனி மனிதனுக்கு மட்டுமன்றி, ஒரு மக்கட் கூட்டத்திற்கு, இனத்திற்கு, நாட்டிற்கு இன்றியமையாத செல்வம் - அழியாச் செல்வம் எது? அழியக்கூடிய செல்வத்தையும் ஆக்கி அழிக்கும், அறவழியில் பயன்படுத்தும் அடிப்படையான செல்வம் எது? என்றும் நிலை பெற்றதாய், ஏழைக்கும் இன்பம் பயப்பதாய், அறிவைப் பெருகச் செய்து, ஆக்கத்தை உணரச் செய்வதாய் உள்ளகேடில் செல்வம் எது? மொழியை வளர்க்கவும், இழிவைப் போக்கவும், மானங்காக்கவும், ஊனம் ஒழிக்கவும் உதவும் செல்வம் - விழுச்செல்வம் எது?

> *கேடில் விழுச்செல்வம் கல்வி, ஒருவருக்கு*
> *மாடல்ல மற்றையவை.*

ஆம். கல்விச் செல்வந்தான் அது. பிறசெல்வம் - பொருள் அனைத்தும் இதனுடன் வைத்துப்பார்க்கும் போது, செல்வமாக மதிக்கத் தக்கனகூட அல்ல. இனி,

**கேள்விச் செல்வம்!**

நாம் படிக்கின்றோம், பழகுகின்றோம், காண்கின்றோம், கருதுகின்றோம், கேட்கின்றோம்! ஆனால் நம் கண்ணைப் போலக் காதும் கூர்மையாக இருக்கின்றதா? நன்றாகக் கேட்கின்றதா? அநேகமாகப் பலருக்கு இதில் சந்தேகமிராது. ஆனால் எல்லோரும் கண்ணைப் போலக் காதையும் பயன்படுத்துகிறோமா - கடுக்கன், தோடு போடுவது தவிர, கண்ணாடி மாட்டுவது தவிர? காதில் துளையுண்டு, எனினும் அது “கேள்வி”யால் துளைக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் அது கேட்கும் காதாகும். இன்றேல் பாரதி பாடுவது போல், ‘செவிடர்களாய்க் குருடர்களாய்’' - காதிருந்தும், கண்ணிருந்தும் - வாழ வேண்டியதுதான்! கேள்வியால் துளைக்கப்படாத செவி என்ன செவி? என்று கேட்கும் வள்ளுவர் மேலும் இதுபற்றி “செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம், அச்செல்வம் செல்வத்துளெல்லாம் தலை” என்கிறார். இச் செல்வமும் நாம் அடைய வேண்டியவற்றுள் ஒன்றல்லவா? நிற்க,

**அருட் செல்வம்!**

பொருட் செல்வத்தை இழந்தோர்கூட மீண்டும் அதை அடையலாம், எளிதில். ஆனால் அவர்களால் அடைய முடியாத, அழிவில்லாத செல்வம் ஒன்று இருக்கிறது. அதுதான் அருட்செல்வம் என்பது! ‘பொருளற்றார் பூப்பர் ஒருகால்’ - கையிலே பொருள் இல்லாத கபோதிகள் கூடச் சில சமயங்களில் பெருஞ் செல்வராக மாறிவிடுவதைக் காண்கின்றோம். ஆனால்

அருளில்லார் மறுபடியும் அருளுடையார் ஆவது அரிது. அருள் - மனிதனின் இயற்கைப் பண்பு. அது இல்லாத மனிதன் விலங்கினும் கேடாகிறான். எனவேதான் ‘அருட்செல்வம் செல்வத்துட் செல்வம், பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள’ என்று தமிழ் மறை கூறுகிறது.

அருட் செல்வத்தைச் செல்வத்துள் எல்லாம் சிறந்த செல்வம் என்பவர், கேள்விச் செல்வத்தைச் சிறந்தது மட்டுமன்று, தலை யானதும்கூட என்றுரைத்தார். காரணம் செவிச் செல்வமுடையா னிடமே அருட்செல்வம் தோன்றி வளரும் என்பதை உணர்த்த வாகும்.

### மன எழுச்சி மங்காத செல்வம்!

‘ஊக்கமுடைமை’ என்பது இருக்கிறதே, அதுவும் ஒரு அழியாச் செல்வம். பேடியிடம் எது இருந்துதான் என்செய்ய? ஊக்கம் நிறைந்த, உறுதி வாய்ந்த ‘உள்ளம் உடைமை தான் “உடைமை” என்கிறார் வள்ளுவர். மற்ற அழிகின்ற செல்வமாகிய ‘பொருள் உடைமையை’, ‘நில்லாது நீங்கி விடும்’ என்கிறார். எவ்வளவு உண்மை நிறைந்த சொற்கள்! கோழையின் செல்வமும், ஏழையின் வறுமையும் ஒன்றுதானே!

### படைச் செல்வம்!

இனி ஒரு அரசியலுக்குச் சிறந்த செல்வம் எது என்றால், அது எல்லா வகையிலும் - நிலம், நீர், வானம் எங்கும் - நிறைந்து துன்பங்களுக்கு அஞ்சாது எதிர் நின்று வெல்லும் படையாகும். அதுதான் அரசியலாரின் எல்லாச் செல்வங்களுக்கும் ‘தலை’யான தென்கிறார் வள்ளுவர். இது மட்டுமா!.........

### மக்கட் செல்வம்!

அரசியலின் உறுப்பாயமைந்த குடிமக்களுக்கு அழிவின்றி வழி, வழிவரும் செல்வம், அக்குடும்பத்தில் கூன், குருடு, நீங்கி ஆளுமை, அழகு, அறிவுடன் பிறக்கும் குழந்தைகளாகும். ‘தம் பொருளென்ப தம்மக்கள்’ - தம்முடைய உண்மையான செல்வம் என்று சொல்லத் தகுந்தவர்கள் தம்முடைய மக்களே, என்பது வள்ளுவர் உள்ளம். நாம்கூட ஒருவரைக் காணும் போது உங்களுக்கு எவ்வளவு செல்வம் இருக்கிறது? என்று கேட்காது, உங்களுக்கு எத்தனை குழந்தைகள்? என்று மட்டும் தாராளமாக, ஆவலோடு கேட்கிறோமே, அதன் கருத்து என்ன? குழந்தைச் செல்வத்தின்பால் நாம் கொண்ட

அவாவை, பற்றுதலைத் தானே அது எடுத்துக் காட்டுகிறது. அப்படியானால் இத்தகைய பண்பாடு வாய்ந்த நாம் குழந்தை களைக் குரங்குகளைப் போல் பெற்றெடுத்து, நாய்களைப் போல் வளர்த்து, நரிகளைப்போல் திரிய விடுகிறோமே அதன் கருத்து என்ன? அதுவும் நம் பண்பாடா, பரிதவிப்பா?

## தொண்டர்க்கு வேண்டிய செல்வம்!

இன்னும் ஒரு விழுச் செல்வம் இருக்கிறது. அது வியப்பிற்குரியது. ஆனாலும் உண்மையானது. அது என்ன? "வேண்டாமை அன்ன விழுச்செல்வம்" எதையும் விரும்பாத, போதுமென்ற மனமே பொன் என்றிருக்கின்ற 'உள்ளம்' ஒரு செல்வமாகும். இந்தச் செல்வம் எங்காவது எளிதில் கிடைக்குமா. அதுமட்டுமா, அறிஞர்கள்கூட இச்செல்வத்தையடைய அரும்பாடு படவேண்டியிருக்கிறதே! அரிதில் முயன்று அடைய வேண்டிய செல்வம் "ஆசைப்படாத உள்ளம்" என்பதுதானா? அட முட்டாளே "செல்வம்" எதற்கு, அழிந்து போகவா, ஆசையை இழக்கவா? என்று சிலர் கேட்பது என் காதில் விழுகிறது. ஆம் இது 'விசித்திரமான, 'விநோதமான' செல்வம் தான்! ஆனால் அழியாதது; தன்னை அடைந்தோரையும் அழிய விடாதது. பிறர் துயர் துடைக்கும் தொண்டர்களுக்கு இதனினும் வேறு என்ன செல்வம் வேண்டும்?

## பேதையர் நட்பில் பிரிவதே செல்வம்!

இன்னும் இதுபோலவே வேடிக்கையான செல்வம் இருக்கிறது. அது இதைவிட வேடிக்கையானது. காரணம், அச்செல்வத்தை நாம் தேடி அடைய வேண்டாம். நம்மிடமிருந்து ஒழிக்க வேண்டியதை ஒழித்து விடுவதுதான் செல்வத்தையடையும் வழி! ஒழித்ததும் ஊதியம் கிடைக்கிறது. அது என்ன? அறிவில்லா வஞ்சகரின் நட்பை அறவே ஒழித்து விடுவதுதான்அது. பேதையரின் நட்பைப் பிரியவிடுவது தான் பெருஞ்செல்வம் பெறுவதின் அறிகுறி! இது வள்ளுவர் வகுத்த வழி! "ஊதியம் என்பது ஒருவற்கு, பேதையார் கேண்மை ஒரீஇவிடல்" என்பது திருக்குறள்.

செல்வத்தைப் பற்றிய வள்ளுவரின் கருத்துக்களை முறையாகப் பார்த்தோம். கடைசியாக 'குறள்' நம் அழியாச் செல்வம் - தமிழர்களின் தனிப் பெருஞ் செல்வம்! எனவே அதைப் போற்றி, அதன் மூலம் நாம் நமது நல்வாழ்வை வகுத்துக்கொள்ள வேண்டும். சிந்திப்போமா? செய்வோமா?

**(குடி அரசு, ஈரோடு, 29-1-1949)**

# 12. திருக்குறள் - அறிவு!

"அறிவு" காலச் சக்கரத்தின் அச்சாணி! அந்த ஆணி கழன்று விட்டால் உலகம் இல்லை.அது மட்டும் அன்று, உலகிற்கு முதற் காரணமும் அதுவே! உலகை ஆக்குவதும் அது, பாதுகாப்பதும், அது, அழிப்பதுவும் அதுவே! செல்வத்தையும், அரசியலையும் ஆக்கி, நடத்திப் பயன் தருவதும் அறிவாகவே இருக்கிறது! தீயன விலக்கி, நல்லன சேர்த்து மனித குலத்தை நிலை நிறுத்துகின்றது. எல்லையற்றதாயிருக்கின்றது. உருவம் அற்றதாய், உலகை ஆட்டிப் படைப்பதாய் இருக்கின்றது. எங்கும் நிறைந்து, யாவரையும், தன்னையும், உலகையும் உணரச் செய்து நிலை பெற்றிருக்கின்றது! அறிவு மனிதனை அழிக்கும், மனிதன் அறிவை அழிக்க முடியாது! அறிவு மனிதனைப் படைக்கும் சக்தி வாய்ந்தது. மனிதன் அறிவைப் பயன்படுத்தி நல்வாழ்வு வாழ, அது அவனுக்குத் துணையாய்ப் பற்றுக்கோடாய் இருக்கிறது. மனிதன் அறிவைத் தீய வழிகளிலும் பயன்படுத்தலாம். அதற்கும் அறிவே துணை! ஆனால் அந்த அறிவு கடைசியில் அவனையே அழித்துவிடும்! எனவே அறிவின் ஆற்றலை, நம் அறிவைக் கொண்டு ஆராய்ந்து, அதை அன்புலகலந்து, அறவழியில் பயன்படுத்த நம் 'கடமை அறிவு' முனைகிறது. அதற்குத் தமிழர்களாகிய நமக்கு வள்ளுவர் துணையாக இருந்து உற்றுழி உதவி செய்கிறார். 'வள்ளுவன் தன்னை உலகினுக்குத் தந்து வான் புகழ் கொண்ட' நாம், அவ்வள்ளுவனின் உதவியால் நம் நிலையை, வாழ்வை இதுவரை உயர்த்திக் கொண்டோமில்லை. எதிரே கண்ணாடி இருந்தும், அதில் நம் சீரழிவைக் காணாது சிற்றுணர்ச்சி யிலே மூழ்கி இருந்தோம், இது நாள் வரை! இனியேனும் வள்ளுவன் காட்டும் அறிவுக் கண்ணாடியில் நம் அகக்கண்ணைச் செலுத்திச் சீர்கேட்டைப் போக்கிச் சிறந்து வாழ்வோமா? அதற்குரிய வழி வகுப்போமா?

நம் முன்னோர்களில் மதவாதிகள் என்போரும் உண்மை உணர்ந்துதான் இருந்தார்கள். "வரம் ஞானம் உற்பவ காரணன் - எல்லையற்ற அறிவே உலகின் தோற்றத்திற்குரிய முதற் காரணம்" என்றுகூடப் பாடியிருக்கிறார்கள். 'ஒரு நாமம், ஓர் உருவம் ஒன்றுமில்லாத, 'அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த' தென்று கூறியிருக்கிறார்கள். ஆனால் அதே உணர்வு, சூழ்நிலையினால் மாற

அதே வாயினால் ஆயிரந் திருநாமமும், அதற்கு மேற்பட்ட கதைகளும்பாடி கடவுளை விலைப் பொருளாக்கி, கடமையை 'பக்தி'ப் போர்வையிலே மூடி வைத்து, கருத்தை இழிவுக்கு அடகு வைத்து, மூடப் பழக்கத்தையும், முன்னேற்றமில்லாத சமுதாய பொருளாதார வாழ்வையும் ஏற்படுத்தி விட்டார்கள். இத்தகைய இருள் சூழ்ந்த நிலையை, வள்ளுவரின் வாய்மை ஒளி ஊடறுத்துச் செல்கிறது! எப்படி? ஒரு சிறிது பார்க்கலாம்.

ஒரு குலத்துக்கொரு நீதி கூறாது, எம்மதமும் நிம்மதியைக் குலைப்பதே என்ற நேர்மை வழி நிற்கும் வள்ளுவர் 'அறிவே ஆண்டவன்' என்று கூறுகிறார். அதையே நினை, போற்று, தொழு பயன்படுத்து, வாழ்! என்று அழைக்கிறார் வள்ளுவர். அதுமட்டு மன்று அறிவின் சிறப்பையும், அறிவு எது, அதன் இலக்கணம் எது என்பதையும், அதைப் பயன்படுத்த வேண்டிய முறைகளையும் கூறுகிறார். இன்னும் அறிவின் மூவகைப் பிரிவுகளையும், அவற்றின் தராதரங்களையும், தொடர்பையும் கூட எடுத்துக்காட்டி நம்மைத் திகைக்கவல்ல, - தெளிய வைக்கிறார்! எப்படி?

முதலில் அறிவின் சிறப்பைப் பார்க்கலாம். மனிதன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள எத்தனையோ வழிகளுண்டு. செல்வம், உடல் பலம், நாடு, அரசு, சட்டம் என்று எவ்வளவோ கூறலாம். ஆனால் அவற்றிலெல்லாம் சிறந்த, தலையாய அரண் அறிவுதான், எனவே எல்லாப் பாதுகாப்புக்களையும் உண்டாக்கிப் புதுக்கி, வேண்டாததை அழிக்கின்றது. நம் உடல் மறையினும், நம் புகழை மறையவிடாது பாதுகாக்கின்றது. மேலும் யாராலும் அழிக்க முடியாத உள்ளரணாக இருக்கிறது. கோட்டையும், கொத்தளமும் கூட பகைக்கும் அவன் படைக்கும் முன்னே தூள் தூளாகலாம். ஆனால் அறிவு அவ்வளவு எளிதில் உடைந்து விடுவது அன்று. அது, உடலோடு உயிரோடு ஒட்டி இருக்கும் வரை, தன்னை உடையவனை, நாட்டைப் பாதுகாக்கும். உலக, இரண்டாவது பெரும் போரின் முடிவு நமக்கு அறிவின் முக்கியத்துவத்தையும், அதன் ஆற்றலையும் எடுத்துக்காட்டி விட்டது. எனவேதான்,

> *"அறிவு அற்றங்காக்கும் கருவி; செறுவார்க்கும்*
> *உள் அழிக்கலாகா அரண்"*

என்று குறள் கூறுகின்றது. இத்தகைய அறிவு இருந்தால் வேறு எதுவும் தேவையில்லை. காரணம் தானாகவே அவை யெல்லாம்

வரும்! இந்த அறிவு இல்லாவிட்டாலோ வேறு எவை இருந்தும் பயனில்லை. 'அறிவுடையார் எல்லாம் உடையார், அறிவிலார் என்னுடையரேனும் இலர்!' என்பது பொய்யாமொழி. இத்தகைய 'நுண் மாண் நுழை புலம்' - நுணுகிய மாட்சிமைப்பட்ட யாவற்றையும் துருவி ஆராய்ந்த அறிவு இல்லாதவனுடைய, எழில் நலம் - எழுச்சிமிக்க அழகு எப்படிப்பட்ட தென்றால், மண்ணாற் செய்யப்பட்டு மாட்சிமை மிகப் புனையப்பட்ட பொம்மையின் அழகைப் போன்றதாகும் என்பது வள்ளுவர் வாக்கு.

மேலும் இத்தகைய அறிவை வளர்த்துச் சிறந்த அறிஞராக ஆகி அடக்கத்துடன் முன்னேற்றமே கண்ணும், கருத்துமாக உழைத்தால் அது நமக்குச் சிறப்புத் தரும். உலகம் நம்மைப் போற்றிப் புகழும். நம்மை அழிய விடாது பாதுகாப்பதே அன்றி மேலும் புகழும், சிறப்பும் தருமென்றால் நாம் அதைப் போற்றாது வாழ முடியுமா! வாழலாமா? "செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து, ஆற்றினடங்கப் பெறின்" என்கிறார். 'அறிவறிந்து' - அறிய வேண்டுவனவற்றை அறிந்து என்கிறார் வள்ளுவர். எல்லோரும் எல்லாவற்றையும் அறிய முடியாது. அதற்கு நம் ஆயுளும் போதாது. இன்னும் அறிய வேண்டாதன - ஒவ்வொரு மனிதனுக்கும் தனிப்பட்ட முறையில் எவ்வளவோ இருக்கின்றன. அதைப் பிறகு பார்க்கலாம். இவ்வாறு அறிய வேண்டுவனவற்றை அறிந்து நடந்தால், நம் பூதவுடல் மறையினும், புகழுடல் மறையாது. 'சாகாவரம்' பெறலாம். செத்தும் சாகாத நிலை பெறலாம். 'நத்தம் போற் கேடும், உளதாகும் சாக்காடும், வித்தகர்க்கல்லால் அரிது!' இது குறள்.

இனனும் அச்சிறந்த அறிவுடன், முற்சியும் சேர்ந்தால் - எரியும் அகல் விளக்கில் எண்ணெய் ஊற்றியது போல் - சுடர் விட்டொளிரும்! தான் மட்டுமன்றி, தன் குடியையும் உயர்த்தலாம்! பொன்றாப் புகழையடைந்த குடும்பமாக ஆகும் அவன் குடி! தான், தன் குடும்பம், உலகம் யாவும் இன்பமுற அறிவு வழி வகுக்கும்! "ஆள்வினையும், ஆன்ற அறிவும் என இரண்டின் நீள் வினையால் நீளும் குடி" என்பது குறள். குலத்தை யுயர்த்தித் தன்னைக் கொண்டவனையும் உயர்த்தும் இந்த அறிவினால் ஆகாததில்லை. அத்துடன் அவனிடம் தோற்றப் பொலிவும் இருந்தாலோ, நினைத்தது நடக்கும். "அறிவு, உரு, ஆராய்ந்த கல்வி இம்மூன்றன்

செறிவுடையான் செல்க வினைக்கு'' எனக் கூறுகிறார். இயற்கை யறிவும், அதை வளர்த்துப் பண்படுத்திய செயற்கை அறிவும், அழகும், இருந்தால் வினை முடிப்பது எளிதாகும். எவ்வளவு உண்மையான இன்றும் நாம் கண்ணாற் காணும் - கருத்து! இவ்வளவு அழகாக அறிவின் முக்கியத்துவத்தையும், சிறப்பையும் கூறிய வள்ளுவர், நாம் அத்தகைய அறிவுடன் விளங்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார். தந்தையைப் போல் தூண்டுகிறார், தாயைப் போல் அன்பு மொழி கூறுகிறார், நண்பனைப் போல் இடித்துக் கூறுகிறார், பகைவனைப் போல் கேலியும் செய்கிறார் வள்ளுவர், நாம் அறிஞர்களாக விளங்க வேண்டும் என்ற அவாவினால்! எவ்வளவு துடிப்பு, ஏக்கம் அவருடைய சொற்களிலே ஒலிக்கிறது. தெரியுமா?

முதலில் பெற்றோரைப் பார்த்துச் சொல்கிறார். பெற்றோர் களுக்கு என்ன ஆசை இருக்கும்? தம் குழந்தைகள் அறிவுடனும், அழகுடனும் விளங்க வேண்டும் என்றுதானே ஆசைப்படுவார்கள். அதையே வள்ளுவரும் கூறிப் பெற்றோரைத், தம் குழந்தைகளை அறிவு நிறைந்தவர்களாக ஆக்கும் பணியில் செலுத்த முயல்கிறார். தொடங்கும் போதே 'பெறுமவற்றுள் யாமறிவதில்லை' என்கிறார். பெறுகின்ற பேறுகளுக்குள்ளே இதைப் போன்ற பேறு வேறு எதுவுமே இல்லையா? அது எது? என்று பெற்றோர்கள் ஆவலோடு கேட்கிறார்கள். அவர்கள் ஆவலைத் தூண்டி, அறிவை வளர்க்க உடனே வள்ளுவர் கூறுகிறார். 'அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற' என்று, அறிய வேண்டுவனவற்றை அறிந்த மக்கட்பேறுதான் சிறந்தது என்றதைக் கேட்டவுடன் தந்தைக்கு ஓர் எண்ணம் தோற்றுகிறது. என் மகனைச் சிறந்த அறிஞனாக்க வேண்டிய கடமை என்னுடையதல்லவா, என்று. இதை அறிந்த வள்ளுவர் மறுபடியும் அவரைத் தூண்டுகிறார், 'உன் மக்களைப் படிக்கவை!' என்று. 'தந்தை மகற் காற்றும் நன்றி, அவையத்து முந்தியிருப்பச் செயல்' என்கிறார். உடனே தந்தை நினைப்பாரல்லவா, 'ஆம் என் மக்கள் படித்தால் எனக்கு நலந்தானே' என்று. அதற்கு வள்ளுவர் கூறுகிறார் 'உன் மக்கள் படித்தால் உனக்கு மட்டுமன்று அப்பனே! ஊருக்கும் நல்லதாக்கும்' என்று. தம்மில் - தம்மைக் காட்டிலும்; தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிதாகும் என்பது அக்குறட் கருத்து.

தாய் அன்பால் தன் தனயனைப் புகழ்வதுண்டு. தந்தையும், உற்றார் உறவினரும்கூடப் புகழ்வதுண்டு, அன்பு, உறவு காரணமாக. ஆனால் ஊரார் தன் மகனைச் 'சான்றோன்' என்று புகழ, அதை ஒரு தாய் தன் காதாற் கேட்டாளானால் அத்தாய்க்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும். 'ஈன்ற பொழுதினும் பெரிது உவப்பாள்' என்று அம்மகிழ்ச்சியின் எல்லை கூறுகிறார் வள்ளுவர். இத்தகைய தாயார் நம்நாட்டிலே பெருகவும் இதுபோல் மகிழவும் இக்குறள் வழிகாட்டியாக இதுநாள்வரை இருந்தும், நாம் 'குருடர்களாய்' வாழ்கின்றோமே இது முறையா? வேண்டாத கதையும் அதற்கு விளக்கவுரையும் கூறும் நாம் குறளை மறந்தது குற்றமல்லவா? இனியேனும் திருந்துவோமா! இவ்வளவு தூரம் தந்தைக்கும், தாய்க்கும் தன் குழந்தையைப் படிக்க வைக்க வேண்டுமென்கிற உணர்வூட்டிய வள்ளுவர், மைந்தனை மாடு போல் திரி என்று விட்டுவிடவில்லை.

அறிவுரை கூறி அவனையும் அழைத்து தந்தை உன்னைப் பெற என்ன தவம் செய்தானோ என்று உலகோர் வியக்க, நீ நான்கு பேருக்கு மேலானவனாக இரு! என்கிறார். இது உன் கடமை என்று கூறவில்லை. அதைவிட நீ உன் தந்தைக்குச் செய்யும் 'உதவி' யாகும். ஏன்? உன் தந்தை தன் மகனைச் சான்றோன் ஆக்கினான் என்று உலகம் ஒப்ப வேண்டுமல்லவா, அதற்கு உனது இந்த உதவி முக்கியம் என்றார்.

ஒரு நாட்டின் உயர்வுக்கு, அந்நாட்டின் தலைமைப் பீடத்தில் அமர்ந்திருப்பவர்களே முக்கிய காரணமென்பதை எவரும் ஒப்புக் கொள்வர். அவர்கள் சிறந்த அறிஞர்களாகவும், பொதுநலத்தில் நாட்டங் கொண்ட 'தியாகிகளாக'வும் இருக்க வேண்டும். ஆனால் தியாகப் பெயரைப் பயன்படுத்தி; அறிவிலிகளை ஆட்சிப் பீடத்தில் அமர்த்தினால் நாட்டின் நிலை என்னவாகும் என்பது 'சனநாயகம்' மலிந்துவிட்ட இந்நாளில் யாவரும் அறிந்ததே. திருவள்ளுவரும் ஒரு நாட்டை ஆட்சி செய்பவன் அறிஞனாக விளங்க வேண்டுமென்று வற்புறுத்துகின்றார். 'அஞ்சாமை, ஈகை, "அறிவு", ஊக்கம் இந் நான்கும் குறையாது வேண்டுமாம் நாட்டை ஆளும் தலைவர் களுக்கு. மேலும் நாட்டாட்சியில் பங்கு பெறும் ஒவ்வொருவருக்கும், அவர்கள் அமைச்சராயினும், தூதுவராயினும், ஒற்றராயினும், படை மறவர்களாயினும் அறிவு முக்கியமென்பதை வற்புறுத்தி யுள்ளார் வள்ளுவர்.

நாம் இதுவரை பார்த்த, அறிவு எத்தகையது, எப்படி அடைவது, யார்யாருக்கு வேண்டுவது என்பதுதான். இனி அறிவு எது? அதில் வள்ளுவர் காட்டும் மூவகைப் பிரிவுகள் யாவை? அறிவின் எல்லை எது? அதன் அழிவு எப்படி நேர்கிறது? மனிதனுக்கும் அறிவுக்கும் உள்ள தொடர்பென்ன? என்பனவற்றை வள்ளுவர் கருத்தின் மூலம் ஆராய்ந்து பார்ப்போம்.

## அறிவு எது?

அறிவு எது? என்று நாம் ஆராய்ந்து அறியவும், நமக்கு அந்த அறிவே துணையாக இருக்கிறது. மதவாதிகள் கடவுளையடையக் கடவுள் தான் வழிகாட்ட வேண்டும் என்று கூறுகிறார்களே, அவர்கள் அறிவையடைய அறிவுதான் வழிகாட்ட வேண்டும் என்றால் ஒத்துக் கொள்வார்கள். ஆனால் தங்கள் இயற்கை அறிவு திரியப் பெற்றதால், இன்னும் குருடும், குருடும் சேர்ந்து குருட்டாட்டம் ஆடும் நிலையிலேயே இருக்கிறார்கள். அவர்கள் கண்ணையும் வள்ளுவர் திறந்து விடுகிறார். அறிவு ஒளியைக் காட்டுகிறார்!

மனம் வேறு, அறிவு வேறு என்றாலும் மனத்திற்கும், அறிவிற்கும் உள்ள தொடர்பை நாம் அறிந்து கொள்ள வேண்டும். மனம், தான் விரும்புவதே நல்லது என்ற முடிவுக்கு வரும். அறிவு அப்படி அன்று. மனம் விரும்புவது எது, வேண்டுவது எது என்பதை ஆராய்ந்து, அதை நூலறிவோடும், உலக அறிவோடும் ஒப்பிட்டுச் சரிபார்த்து, குணத்தையும், குற்றத்தையும் சீர்தூக்கிப் பிறகு தான் நல்லது, கெட்டது என்ற முடிவுக்கு வரும். மருந்தை உதடு வெறுத்தாலும், உள்ளம் மறுத்தாலும், அறிவு விரும்பும். ஏன்? நல்லது என்று அறிவதால். எனவே மனத்தை அறிவின் வழிச் செலுத்துபவன் அறிஞனாகவும், அறிவை மனத்திற்கு அடகு வைத்து விட்டுப் பயந்து அதன்படி நடப்பவன் பேதையாகவும் ஆகிறான். குதிரையை இடமறிந்து, நேரமறிந்து செலுத்தும் வாதுவனைப் போல அறிவு வேலை செய்ய வேண்டும். நம்மையும், நம் மனத்தையும் "சென்ற விடத்தாற் செலவிடாது தீதொரீஇ; நன்றின் பால் உய்ப்பது அறிவு". அதுமட்டும் அன்று "அறிவு" என்றால் அது ஆவதை - வருவதை முன்கூட்டியே அறிய வேண்டும். இன்றேல் வைக்கோல் போரின் முன் வைத்த தீ, எவ்வாறு உடனே அப்போரையே அழித்து விடுமோ அதுபோல நம் வாழ்வையே அவ்வறிவின்மை அழித்து விடும் என்கிறார் வள்ளுவர். எனவே,

நே.8

*"அறிவுடையார் ஆவதறிவார், அறிவிலார்*
*அஃதறிகல்லாதவர்"*

என்பது உறுதியாகிறது. அவ்வாறு முன் நடந்த நிகழ்கால நிகழ்ச்சிகளாலும், செயல்களாலும், சூழ்நிலையாலும் வருங்காலத்தைப் பற்றி அறிந்து கொண்டால் அவர்களுக்குத் துன்பமே இல்லை. "எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை அதிரவருவதோர் நோய்", என்பது குறள். இனி அந்த அறிவு அஞ்சுவதற்கு அஞ்ச வேண்டும். அஞ்ச வேண்டாததற்கு அஞ்சக் கூடாது. பழி செய்யவோ கொலை புரியவோ, 'இலஞ்சம்' பெறவோ, வஞ்சனை செய்யவோ நாம் அஞ்சாது நடந்தால் அதற்கு அஞ்சாமை என்றோ, அறிவென்றோ பொருளில்லை. அது பேதைமை என்கிறார் வள்ளுவர்.

*அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது*
*அஞ்சல் அறிவார் தொழில்.*

இனி, ஆவது அறிவதோடு மட்டும் அன்றி உள்ளதை - உண்மையானதை - அறிய வேண்டும். நாம் கேட்கும் பேச்சிலும், நாம் காணும் பொருள்கள் அனைத்திலும் உண்மையை அறிய வேண்டும். எப்பொருளை யார் யார் சொல்லக் கேட்டாலும்; யார் யாரிடம் சொல்லக் கேட்டாலும் அந்தப் பொருளின் உண்மைத் தன்மையை நுணுகி அறிய வேண்டும். வஞ்சகன் நயமாகப் பேசலாம், நல்லவன் கடுகடுத்துப் பேசலாம், முட்டாள் சந்தர்ப்பவசத்தால் உயர்ந்த கருத்தைக் கூறலாம், அறிஞனின் செயலும், பேச்சும் சில சமயம் நமக்கு அய்யத்தை உண்டாக்கலாம். பேசுபவன் அழகனாக இருக்கலாம், அல்லது குருடனாக, செவிடனாக அழகிழந்தும் இருக்கலாம். ஆனால் 'உருவுகண்டு' இகழாது, புகழாது "எப்பொருள் யார், யார் வாய்க்கேட்பினும், அப்பொருள் - மெய்ப்பொருள் காண்பது அறிவு." பிறர் கூறும் சொற்களை மட்டும் அன்றி, நாம் ஒவ்வொரு பொருளையும் ஆராய்ந்து, அதன் உண்மையான இயல்பையும், அது பயன்படும் முறையையும் ஆழ்ந்து அறிய வேண்டும். பாம்பைப் பழுதென்றும், பழுதைப் பாம்பென்றும் மாற்றி உணர்வது ஒளி மங்கிய நேரத்திலோ, அல்லது கண் மங்கிய காலத்திலோ நேரும். அதுபோல அறிவு மங்கிய நேரத்தில் நமக்கு ஒன்று, மற்றொன்றாகத் தெரியும். அய்யம் வலுக்கும். அப்படியின்றி, நன்கு உண்மையை அறிந்து கொள்வதே 'அறிவா'கும். உலகை, நாம், காணுவது போலத் தட்டையன்று. உருண்டையென்று அறிந்ததும், பூமி தான் சூரியனைச் சுற்றுகிறது

என்பதை அறிந்ததும் உண்மை அறிவின் விளைவே. "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"

இனி இவ்வாறு நாம்நுணுகி அறிபவற்றைப் பிறர்க்கு விளங்கும்படியும், அவர் மனத்தில் பதியும்படியும் எளிய சொற்களால், தெளிவுபடச் சொல்ல வேண்டும். அவ்வாறே பிறர் சொல்லும் கருத்துக்களை, அவை நுண்பொருளவாய்க் கடினமாக இருந்தாலும், நாம் அதை எளிதில் உணர்ந்து புரிந்து கொள்ள வேண்டும். அதற்குத்தான் அறிவு என்று பெயர். 'எண் பொருளவாகச் செலச் சொல்லித் தான் பிறர்வாய் நுண் பொருள் காண்பதறிவு". இன்னும், நாம் இவ்வுலகில் தோன்றியது முதல் நமக்கு ஏற்படக்கூடிய பேதைமைகளை நீக்கி, நம் இயற்கை அறிவை உலக, நூல் அறிவுகளின் மூலம் வளர்த்து மேன்மை அடைவதையே நம் வாழ்வின் செம்மையான குறிக்கோளாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் வள்ளுவர் கூறுகின்றார்.

## இயற்கை அறிவு

இத்தகைய அறிவைப் பொதுவாக மூன்று வகையாகப் பிரிக்கலாம். ஒன்று இயற்கை அறிவு. உலகில் சிறிதும் அறிவற்ற மனிதனே ஏன் - உயிரே கிடையாது எனலாம். ஓர் அறிவு, ஈர் அறிவு என்று ஆறறிவுக்கு உட்பட்ட உயிர்களைத் தொல்காப்பியர் பிரித்துக்காட்டி இருக்கிறார். எல்லாவற்றுக்கும் மேலாக ஆறாவது பகுத்தறிவையுடைய மனிதனை தமிழ் இலக்கணம் "உயர்திணை" என்று கூறுகிறது. இந்த மனிதனுக்குரிய இயற்கையான அறிவும் எங்கிருந்தோ 'தொப்' பென்று குதித்துவிடவில்லை. மனிதன் தோன்றி வளர்ந்த காலம் முதற் கொண்டு அவ்வறிவு பரம்பரையாகப் பெற்றோர் வழியே பிள்ளைகளுக்காகி வந்திருக்கிறது, வருகிறது, வரும். இந்த அறிவு இரத்தத்திலே ஊறியது, எளிதில் மாறாது. எவ்வளவு நூல்களைப் படிப்பினும் உலகுடன் பழகினும் உண்மை அறிவு மாறாது! "நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றுந்தன் உண்மை அறிவே மிகும்." சில மனிதர்கள், மலர்ந்தும் மணம் தரா மலர்களைப் போல, கற்றும் பயன்படாதவர்களாக வாழ்கிறார்களே அதன் காரணம் இதுதான்!

## கல்வியறிவு

இனி இரண்டாவதுஅறிவு கல்வி அறிவு எனப்படும். இதைச் செயற்கை அறிவென்றும், நூலறிவென்றும் வள்ளுவர் குறிப்பிடு

கிறார். இது நம் இயற்கை அறிவை வளரச் செய்யும் கருவியேயாகும் இக்கல்வி அறிவு என்பது. இயற்கை அறிவு மண்ணுள் கிடக்கும் கழுவாத மாணிக்கம். செயற்கை - கல்வி அறிவு அம்மாணிக்கத்தை வெளியில் எடுத்துக்கழுவி, மெரு கூட்டி அழகாக்கி, ஒளியூட்டுகிறது. குடத்துள் வைத்த விளக்காகிய இயற்கை அறிவைக் குன்றின் மேலிட்ட விளக்காக்குவது செயற்கை அறிவு. மனமாகிய நிலத்திலே கல்வி என்ற கருவி கொண்டு கல்லிக், கல்லித் தோண்டத், தோண்ட அதிலுள்ள இயற்கை அறிவு ஊற்றெடுத்து வெள்ளமாகப் பெருகி விடுகிறது. ‘தொட்டனைத் தூறும் மணற்கேணி’ மணலில் தோண்டும் கேணி தோண்டிய அளவுக்கு நீர் ஊறும். எவ்வளவு ஆழம் தோண்டுகிறோமோ அவ்வளவுக்கு நீர் பெருகும். அதுபோல ‘மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு’, என்கிறார் குறளாசிரியர்.

இக்கல்வியறிவை இரண்டு வகையாக அடையலாம். ஒன்றுதான் கற்றலின் மூலம், இன்னொன்று கற்றார் வாய்க் கேட்டலின் மூலம். ‘கற்றிலனாயினும் கேட்க!’ என்று வள்ளுவர் கட்டளை இடுகிறார். கல்வியின் அவசியத்தைப் பல குறள்களில் வள்ளுவர் வகுத்துரைக்கின்றார். அவற்றைக் ‘கல்வி’ ‘கல்லாமை’ என்ற இரண்டு அதிகாரங்களாகப் பிரித்துள்ளார் என்றால், இக்கல்வியறிவின் இன்றியமையாமை எவ்வளவு என்று தெரிகிறதல்லவா! “மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம் யாவுள முன்னிற்பவை” என்று கேட்கிறார்.

கல்வி கேடற்ற செல்வம். கல்வி கற்காதவர் கண்ணில்லாத குருடர்கள். அவர்களுக்கும் விலங்குக்கும் வேறுபாடு இல்லை. படித்தவர்க்கு எல்லா நாடும், எல்லா ஊரும் தம் நாடாய்த், தம்மூராய் இருக்கும். எனவே “சாந்துணையும் கல்” என்று நமக்கு அறிவுரை கூறுகிறார். நாட்டை ஆளும் அமைச்சர்களுக்கு இக்கல்வியறிவு இன்றியமையாதது என்று வள்ளுவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அத்தகைய கல்வியைக் கற்கும் முறையையும் வள்ளுவர் கூறுகிறார் காலத்திற்கும் கருத்துக்கும் ஏற்றவற்றை, வேண்டிய வற்றைக் கற்க வேண்டும். அய்யம், திரிபு இல்லாமல் கற்க வேண்டும். கற்று, அதன்படி வாழ்விலும் நடக்க வேண்டும். இவ்வாறு கற்று அதன்படி நடக்க வேண்டும் என்பவர், முன்பு ‘கற்றதால் ஆயபயன்’ அறிவைப் போற்றி வணங்குவதுதான்” என்று கூறியதன் பொருள் என்ன? கல்வி கற்று, நம் இயற்கை அறிவை வளர்த்துச் செப்பனிட்டு, அதுகாட்டும் வழியில் நடப்பது தான் அறிவுக்கு நாம் செய்யும்

வழிபாடு ஆகும் என்றாகிறதல்லவா! இத்துடன் கற்றார்வாய்க் கேட்பதும் அறிவை வளர்க்கும் வழியாம். மேலும் கேட்பது, கற்றலைவிட மனத்தில் நன்கு பதிந்து பயன் தரும் - எனவே தான் கல்வியைக் "கேடில் விழுச்செல்வம்" என்று கூறியவர், கேள்வியை 'செல்வத்துட் செல்வம்' என்று கூறுகிறார்.

## உலக அறிவு

மூன்றாவதாக உலக அறிவு இன்றியமையாததாகிறது. முன்னைய இரண்டும் அடிப்படையே. நம் இயற்கை அறிவும், நூலறிவும் உலகில் வாழ நமக்குப் பயன்பட வேண்டும் என்றால், நாம் உலகியலை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். எவ்வளவு கற்றவனாயினும் உலகியல்புக்கேற்பத்தான் நடந்து கொள்ள வேண்டும். அதற்குத் தான் படித்த நூல்களும், இயற்கையான அறிவும் இடங்கொடாவிட்டால் அதற்காகப் பழைய முறை யிலேயே காலத்திற்கும், கருத்திற்கும் ஒவ்வாத வகையில் கிடந்து உழலக் கூடாது. இன்றைய உலகம் எத்தகையது, எவ்வாறு மாறிக் கொண்டு வருகிறது என்பதை அறிந்து நடக்க வேண்டும். பழுத்தும் பயன்தராத மரம் போல, படித்தும் உலகிற்குப் பயன்படாமல் இருக்கக் கூடாது. 'அரம் போலும் கூர்மையரேனும் மரம் போல்வர் மக்கட் பண்பிலாதவர்' என்கிறார் வள்ளுவர். மக்கட் பண்பு என்பது என்ன? தனிமரம் தோப்பாக முடியுமா? எனவே உலக இயல்பை அறிந்து நடப்பதுதான் அது. 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலாதார்'. எதை எதை எவ்வளவு கற்றிருந்தாலும், உலகைக் கண்டு பழகி, - அறிந்து நடப்பதுதான் வாழப் பயன்படும். நூலறிவு கற்பனை கலந்தது, மெருகூட்டப் பெற்றது. உலக அறிவே வாழும் வாழ்வு. முன்னது ஏட்டுச் சுரைக்காய். பின்னதே கறிக்கு உதவுவது! "எவ்வதுறைவதறிவு, உலகத்தோடு அவ்வதுறைவதறிவு". என்பதும் குறள்.

இன்னும், 'உலகந்தழீஇயதொட்பம்' - உலகை அறிந்து நடப்பதே நுண்ணிய அறிவு. அந்தஅறிவு நண்பர் உறவினர் முதலியவர்களிடம் முன் மகிழ்ந்தும், பின் கடிந்தும் மாறக்கூடாது. செல்வம் வந்தபோது ஒரு மாதிரியும், வறுமை வரும்போது ஒரு மாதிரியும் மாறக் கூடாது. நிலையாய், உறுதியாய் இருக்க வேண்டும். 'மலர்தலும் கூம்பலும்' மலருக்கு இயற்கையாக இருக்கலாம். ஆனால் 'அறிவு'க்கு அது கூடாது. உலகுடன் என்றும் ஒரே நிலையில் பழக வேண்டும். கல்வி அறிவில்லாதவனை குருடன், விலங்கு என்று கூறிய அதே வள்ளுவர், உலக அறிவில்லாதவனைச் 'செத்த பிணம்' என்கிறார். 'ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்'.

இனி, கல்வி அறிவு மட்டும் போதாதா? அதுதான் ஒப்பற்ற சிறப்புத் தரும் செல்வமாயிற்றே! என்றால் அதுவும் வேண்டியது தான், இருந்தாலும் "செயற்கை அறிந்தக் கடைத்தும்... என்கிறார். 'உலகத்தியற்கை அறிந்து செயல்' வேண்டும் என்றே வற்புறுத்து கிறார். உலக அறிவை அறியவே, அந்த நுண்ணிய நூல் அறிவைப் பயன் படுத்த வேண்டும். ஏன்எனில் நாம கற்பவை யாவும் நமக்குப் பயன்படுவன என்று கூறமுடியாது. அதனால்தான் முன்பு கற்பவை கற்க! என்றும், அதன்படி நட என்றும் கட்டளையிட்டவர், எங்கே இவன் கற்றதென்று கூறி வேண்டாதனவற்றையும் விடாது இருந்துவிடப் போகிறானோ என்று, உலகத்தியற்கையையும் அறிந்தே நடக்க வேண்டும் என்று இக்குறளில் கூறியுள்ளார்.

## குறிப்பறிதல்

இனி, இம்மூன்றுக்கும் மேலாக ஓர் அறிவு இருக்கிறது. அது இத்துடன் வைத்து எண்ணக்கூடியதன்று. தனிப்பட்ட சிறப் புடையது. பிறர் கூறாமலே, குறிப்பாலே அவர் உள்ளத்தை அறிய வேண்டும். அவ்வறிவுடையவன் உலகிற்கே ஒரு அணிகலன் ஆவான். "கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும் மாறாநீர்வை யக்கணி" அது மட்டுமன்று, அவனைக் கண்கண்ட 'தெய்வம்' என்கிறார்! குறிப்புணர்வாரின் நட்பு இன்றியமையாதது என்றும் கூறுகிறார். முகமும், கண்ணுமே உள்ளத்தைக் காட்டும் கண்ணாடி கள். அவற்றைக் கொண்டு எவர் மனத்தையும் அறிந்து கொண்டு விடுவது யாருக்கும் எளிதில் முடியக்கூடியதன்று. அது சிறப்பான இயல்பு. அக்குறிப்பறிவு இருந்தால் "அவையறிதல்" எளிமையாகும். அவையறிந்து பேசுபவன் உலகை ஆட்டிப்படைப்பவன் ஆகலாம். இன்னும் வலியறிதல், இடமறிதல், காலமறிதல் முதலியனவும் முக்கியம் என்பதையும் வள்ளுவர் தனித் தனியே வற்புறுத்திக் கூறுகின்றார். இவ்வாறு அறிவை அளவிடப்புகின். அது மிகவும் பரந்ததாய் இருக்கிறது; அதுமட்டுமன்றி எல்லையற்றதாகவும் இருக்கிறது!

## அறிவின் எல்லை!

கடவுளைப் பற்றிச் சமயவாதிகள் கூறும் கருத்துக்களை யெல்லாம், அறிவுடன் பொருத்திப் பார்த்தால் "அறிவே கடவுளென்றும், அறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால் அறிவை வளர்த்து அதன்படி அன்பு வழியில் நடந்து அறம் வளர்த்து வாழ்வதே கடவுளுக்குச் செய்யும் தொண்டு, வழிபாடு என்றும் தெரிகிறது. இத்தகைய தொண்டைச் செய்தால் நாம் அறிவாகிய இறைவனுடன் இரண்டறக் கலந்து விடலாம். எப்படி?" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்றுதான் வள்ளுவரே கூறுகின்றாரே!

மனிதனிடம் எப்பொழுதும் அறியாமை இருக்கிறது. காரணம் அவன் எவ்வளவு பரந்த அறிவுடையவனாயினும் "கற்றது கைம் மண்ணளவு, கல்லாதது உலகளவு" என்ற நிலையிலேயே இருக்கிறான். அறிவு அவ்வளவு அகன்றதும் எல்லையற்றதுமாகும். "அரிய கற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால் இன்மை அரிதே வெளிறு" என்பது குறள். இத்தகைய அறிவை அறியுந்தோறும், அறியாமை புலனாகிறது. நாம் ஒவ்வொன்றையும் தெரிந்து கொள்ளும்போது, நம்மிடம் அறியாமை மேலும், மேலும் இருப்பதையே அறிகிறோம். "அறிதோறும் அறியாமை கண்டற்றால்" என்ற வள்ளுவர், இதனை அன்றன்று (நாள்தோறும்) புதுமையாகத் தோன்றும் காதலின்பத்துடன் ஒப்பிட்டுக் காட்டுகிறார். ஒரு மேனாட்டு ஆசிரியர் "முட்டாளையே பார்க்கக் கூடாதென்றால் மனிதன் நிலைக் கண்ணாடி இல்லாத அறைக்குள் கிடக்க வேண்டும்" என்று கூறியிருப்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

### தலையாய அறிவு.

அறிய வேண்டுவனவற்றை அறிந்து, பணிவுடனும், பண்பு டனும் நடந்து சிறப்புப் பெற வேண்டுமென அறிவுறுத்திய வள்ளுவர், கெடுதல் செய்வோருக்கும் நன்மை செய்யும் பொறுமை யுடன் கூடிய அறிவையே தலையாய அறிவு என்கிறார். 'அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய செறுவார்க்கும் செய்யாவிடல்' என்கிறார். இன்னாதவற்றைச் செய்பவருக்கும், இனியவற்றைச் செய்வதுதான் "சால்பு" என்று மற்றோரிடத்திலும் வள்ளுவர் இதை வலியுறுத்தி உள்ளார்.

### புல்லறிவாண்மை

ஒருவனுக்கு வறுமை என்று சொல்லப்படுவது செல்வம் இல்லாதபோதன்று, அறிவில்லா நிலைமையில்தான் ஏற்படுகிறது. எனவே ஏழை - என்பது அறிவிலேதான் அன்றிப் பொருளிலே அதைப் பாராட்டுவது பேதைமை. செல்வன் அறிவின்றேல் நல்வாழ்வு வாழ்வது எவ்வாறு இயலும்? மன நிம்மதி எங்கிருந்து வரும்? ஆனால் அறிவுடையவன் 'நான் அறிஞன்' என்று செருக்குள்ளவனாயின் அவனே முதல்தரமான அறவிலியாவான் என்கிறார் வள்ளுவர். நில்லாத இயல்புடையவற்றை நிலையானவை என்று உணர்வதும் புல்லறிவாண்மையாகும். தன்னிடமுள்ள குற்றங்களை நீக்கும் தன்மையுடையவனிடம்தான் அறிவு சிறப்புறும். எனவே தீயன நீக்காது மனத்திற்கு அடிமைப்படும் அறிவு "பயன்படாத செல்வம் போல" ஆகும்.

## அறிவு திரிவதும் அதை இழப்பதும்;

அறிவு நண்பர்களால் திரியும், மாறுபடும்! "மனத்துளது போலக் காட்டி, ஒருவற்கு இனத்துளதாகும் அறிவு" என்பது குறள். மேலும் மழை நீர் தான் விழும் இடத்தியல்பால் மாறிவிடுவதுபோல, அறிவு - அந்த அறிவுடையவன் பழகும் நண்பர்களின் மூலம் மாறுபட்டு விடும் என்கிறார் வள்ளுவர். 'நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றதாகும் மாந்தர்க்கு இனத்தியல்பதாகும் அறிவு', என்று பொய்யாமொழி கூறுகிறது. "உன் நண்பன் யாரென்று சொல், உன்னைப் பற்றித் தெரிந்து கொள்கிறேன்" என்ற ஆங்கிலப் பழமொழி இங்கே நினைவு கூரற்பாலது.

ஒரு மனிதனிடமுள்ள அறிவு அழிந்து போவது அல்லது செயலற்றுவிடுவது அந்த மனிதனின் வாழ்க்கை நிலையைப் பொறுத்திருக்கிறது. அவன் எவ்வளவு தூரம் அறிவுடையவனாக இருந்தாலும் பிறரிடம் பிச்சை வாங்கிப் பிழைக்கும் நிலையில் இருந்தால் அவனுடைய அறிவு எத்தகையதாகும்? அறிவு பொருளைப் படைத்தாலும், தனி மனிதனிடம் உள்ள வறுமை அவன் அறிவையே அழித்துவிடும் என்ற உண்மையை வள்ளுவர் மிகவும் தெளிவுபடக் கூறுகிறார். பொருளின்றிப் பிறரிடம் இரந்து வாழ்பவன், சொந்தமான எந்தக் கருத்தையும் சொல்ல முடியாது. எல்லாவற்றுக்கும் அடிமைப்பட்டே ஆக வேண்டும். 'ஆமா' போட்டே தீரவேண்டும். தற்பெருமை எவ்வாறு ஒருவன் புகழை அழித்து விடுமோ அதுபோல அன்றாடம் இரந்து வாழும் வாழ்வு ஒருவனுடைய அறிவை அழித்துவிடும் என்கிறார் வள்ளுவர்.

*பொச்சாப்புக் கொல்லும் புகழை; அறிவினை*
*நிச்ச நிரப்புக் கொன்றாங்கு'*

என்பது குறள். அடிமைப்பட்ட நாட்டு மக்கள், பொருளாதாரச் சீர்கேட்டால் வருந்துவதும், அதன் காரணமாக அந்நாட்டு மக்களின் அறிவு மங்கி உணர்விழந்து போவதும் இயற்கைதானே!

எனவே, 'பண்புடையாளர் தொடர்பு' நமக்கு நாள்தோறும் நன்மை பயக்கும் என்பதும், இன்றேல் தீயவர் தொடர்பால் நம் நல்லறிவும் திரிந்து விடும் என்பதும், இரந்து வாழும் வாழ்வு அறிவையே அழித்து மனிதனை விலங்கினும் கேடாக்கிவிடும் என்பதும் வள்ளுவரின் கருத்துகள் என்பதைத் தெரிந்து கொண்டோம்.

## அறிஞரின் தோற்றம்!

நன்றாக அறிந்த அறிஞரின் நெற்றி கவலையைக் காட்டும். அல்லது நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடும் பண்புடைய வராக அவர்கள் இருப்பார்கள். அவர் மனத்தில் கவலை குடிகொண்டிருக்கும். அது தன்னைப் பற்றி அன்று, தன்நாடு, தன்இனம், தன்மொழி இவற்றைப் பற்றி. எனவே அத்தகைய கவலைப்படுவதிலே, அதற்காக உழைப்பதிலே மட்டும் அவர்கள் இன்பம் காணுவர். ஆனால் அறிவில்லாக் கயவரோ கவலையின்றி இருப்பர். அவர்களுக்கு ஏது நாடு, மொழி, இனம் பற்றிய கவலைகள்? தாம் வாழவே தகாத செயல்களைச் செய்து வாழ்வார்கள். எனவே தான் வள்ளுவர் 'நன்றறி வாரிற் கயவர் திருவுடையர், நெஞ்சத் தவலமிலர்' என்று கூறியுள்ளார். ஆனால் அவர்கள் உள்ளீடில்லாத பழம், உடைந்துவிடும் ஓடு. அது நிமிர்ந்து நிற்பதிலே பயனில்லை!

## தெளிவு

தெளிந்த மனப்பான்மை வேண்டும் என்றால் முதலில் அன்பு வேண்டும், அறிவை அடிப்படையாகக் கொண்டு. அய்யம் அகற்றி, ஊக்கம் பெற வேண்டும். ஆசை இன்மையும் இருக்க வேண்டும். இருந்தால் அவனும் தெளிவான நிலையில் இருப்பான், அவன் செயல்களும் தெளிவாக முடியும்.

"அன்பு அறிவு தேற்றம் அவாவின்மை, இந்நான்கும் நன்குடையான் கட்டே தெளிவு" என்பது குறளாகும். நன்கு - நன்றாக இருக்க வேண்டுமாம். எனவே அறிவு மிக இன்றியமையாத, எல்லாவற்றுக்கும் வேண்டிய, சிறந்த ஒன்று; ஒப்பற்றது என்பதை ஒத்துக் கொள்ளும் நாம் இனியேனும் நாட்டில் அறிவு வளர நற்றொண்டு புரிவோமாக!

திருக்குறள் தினையளவாயினும், அதன் கருத்துப் பனையள வாகும்! புல் நுனியில் உள்ள பனித்துளி, பெரிய சோலையையும், சூரியனையும் கூட தன்னத்தே காட்டுவது போல, குறளும் எல்லை யற்ற பரந்த அறிவை நமக்குச் சுருக்கமாகவும், விளக்கமாகவும் காட்டுகிறது. திருக்குறள் அழியாச் செல்வம், அதுபோலவே 'திருக்குறள்' அறிவும் நமக்கு இன்றியமையாதது. குறளனைத்தையும் கற்றுத் தமிழ்நாடு முன்னேறும் காலம் அருகில் வந்து விட்டது. "இருட்டறைக்குள் ஒளி விளக்காய்" இவ்வுலகை நமக்கு விளக்கி, வழிகாட்டும் குறளை இனியேனும் கையிலேந்துவோமா? கருத்தில் தாங்குவோமா?

# 13. திருக்குறள் - அறம்!

தானம், தருமம், புண்ணியம் என்று வாய் ஓயாமல் சொல்லி, அதிலேயே தங்கள் மனத்தையும் சுழலவிட்டுத் தவிக்கும் நம் மக்களுக்கு, 'அறம்' என்றதும் 'தருமம்' என்ற நினைப்புத்தான் வரும். அத்துடன் தானம் செய்வது முதலியனவே தருமமாகும் என்ற எண்ணமும் தோன்றும். அறம் பிச்சையன்று; கடமை. எனவேதான் அவ்வெண்ணத்திலேயே ஆழ்ந்து போய்விட்ட அவர்களுக்குத் தான தருமமே புண்ணியமாகத் தோன்ற, அறத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும் ஆசை ஏற்படாது போய்விட்டது. அதுமட்டும் அன்று, யாராவது ஆய்ந்து பார்த்து அதன்படி நடந்து, அதைப் பிறர்க்கும் எடுத்துச் சொன்னால், அவ்வாறு சொல்பவர்களைக் கேலி செய்யவோ, தாழ்வாகப் பேசவோ, இழிவுபடுத்தவோ தயங்குவதும் இல்லை அவர்கள்! ஆனால் எப்பொருளையும் அப்படியே உணராது, அப்பொருளின் மெய்ப் பொருள் கண்டு; குணத்தையும், குற்றத்தையும் அளந்தறிந்து; தீதுநீக்கி, நன்றின்பால் நடக்க ஆசைப்படும் நமக்கு, வள்ளுவன் வகுத்த வழியில் செல்ல ஆசை தோன்றுவது இயற்கை. அறநூலாகிய திருக்குறள் அதற்கு ஏற்றதாகவும் இருக்கிறது.

அறம் என்றால் கட்டுப்பாடு, ஒழுங்குமுறை என்பதுதான் பொதுக்கருத்து. அது நியாயம், நேர்மை, நீதி, நெறி எனப்பல பெயர்களுடன் பல பிரிவுகளாக உலகில் வழங்குகின்றது. ஒரு தனிமனிதன் உலகுடன் தொடர்பு பெற்று வாழ்வதைத்தான், உலகம் இயங்குவதன் அடிப்படையாகக் காண்கிறோம். இவ்வாறு ஒவ்வொரு உயிரும் தொடர்பு பெற்று வாழாவிட்டால் உலகம் இயங்குகிறது என்பதற்குப் பொருள் இல்லாமல் போய்விடும். எனவே பகுத்தறிவு படைத்த மனிதனுக்கும், உலகுக்கும் உள்ள தொடர்புகளை, அறிவு வழி நின்று, ஒரு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டும். அதற்கு மனிதனின் உள்ளம் நிலைக் களனாக இருக்கிறது. அறிவு வழிகாட்டியாக இருக்கிறது. இவற்றின் மூலம் 'அறவுணர்வு' என்ற கட்டுப்பாட்டை மனிதன் தனக்கு ஏற்படுத்திக் கொள்கிறான். உலகம் முழுவதும் எத்தனையோ உள்ளங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு உள்ளத்திலும் உலகமும் இருக்கிறது. அவ்வுள்ளத்தின் விரிவுக்கும், ஆழத்திற்கும் தக்கபடி குறைவாகவோ, நிறைவாகவோ, வெறும் கோடாகவோ, இத்தகைய உள்ளத்தைப் படைத்த மனிதன் அத்துடன் பகுத்தறிவையும்

பெற்றிருக்கிறான். எனவே உலகை ஆக்குகின்ற, ஆள்கின்ற, நடத்திக் காக்கின்ற, அழிக்கின்ற செயல்களுக்கெல்லாம் பெரும்பாலும் அவனே பொறுப்பாளி ஆகின்றான், இயற்கையின் குமுறல்கள் போக! தற்காலத்தில் விஞ்ஞான அறிவு மூலம் அந்த இயற்கையின் ஆற்றலையும் அடக்கியும், அடங்காதவற்றை அடக்கவும் மனிதன் முயன்று வெற்றி கண்டு வருகிறான். எனவே அவன் எவ்வாறு வாழ்கின்றான் என்பதையும், எத்தகைய ஒழுங்கைத் தனக் கேற்படுத்திக் கொள்கிறான் என்பதையும் பொறுத்துத்தான் உலகின் இயக்கம் இருக்கிறது என்பது சொல்லாமலே அமையும். இது தனி மனிதனின்வேலை அல்லவே என்று கூறலாம். ஆனால் அவனைப் போன்ற அனைவரும் கூடிச் செய்யும் செயல் என்பதை யாரும் மறுக்க முடியாது. எனவே மனித வாழ்வு ஒழுங்கு பெற, ஒழுங்கு பெற உலகம் ஒழுங்கு பெறுகின்றது; மனித வாழ்வு தேயவே உலகமும் தேய்கின்றது. இதன் காரணமாகத்தான் மனிதன் அறிவுடன் கூடிய கட்டுப்பாட்டை - அறத்தைத் - தனக்கேற்படுத்திக் கொள்ள வேண்டிய இன்றியமையாமை தோன்றிற்று. அதை அமைக்க மனிதனின் பகுத்தறிவு உதவிற்று.

இவ்வாறு 'மனிதன் செல்லும் வழி நோக்கியே உலகம் செல்கிறது, அது தீதாயினும், நன்றாயினும்' என்ற கருத்தைத்தான் 'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்று ஔவை கூறுகின்றாள். இத்தகைய கருத்து ஆண்களுக்கு மட்டு மன்றிப் பெண்களுக்கும் பொருந்துவதே என்பதைத் தற்காலத்தில் நான் சொல்ல வேண்டியதில்லை. உலகத் தோற்றத்திலும், தொடக்க வளர்ச்சியிலும் தாய்மையிலேயே ஊறிப் பின்னடைந்திருந்த பெண்கள் சமுதாயம், இப்பொழுது முன்னேறிவிட்ட, முன்னேறுகின்ற காலம் அல்லவா இது. நிற்க,

உள்ளத்திற்கும், உலகத்திற்கும் ஏற்பட வேண்டிய நேர்மையான தொடர்பையும், ஏற்படக் கூடிய நேர்மையற்ற தொடர்பையும், அதை நீக்க வேண்டிய இன்றியமையாமையையும், நீக்கும் முறை களையும் சொல்வதுதான் அற நூலின் இயல்பு. பூமி, சந்திரன், சூரியன் முதலிய கோள்களை யெல்லாம் ஒன்றுடன் ஒன்று மோதி விடாதபடி பாதுகாத்து, ஒரே இடத்தில் நிலை நிறுத்தும், ஈர்க்கும் ஆற்றல் எவ்வாறு உதவுகிறதோ அதுபோல, உலகம் அழிந்து விடாது நிலைநிற்க உள்ளத்திற்கும், உலகிற்கும் மோதுதல், சிதைவுகள் ஏற்படாதபடி தொடர்புபட, இடையே அறவுணர்ச்சி

தோன்றி தீமையின்பாற் செல்லும் உலகை, நன்மையினின்றும் நழுவவிடாது காப்பாற்றுகின்றது. எனவே இந்த அறவுணர்வாகிய - ஈர்ப்புச் சக்தியை வளர்ப்பதுதான், உலகை நல்ல நிலையில் நிறுத்தவழி என்று தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கண்டுபிடித்தார்கள். அதன் காரணமாகத் தமிழ் நாட்டில் அறவுணர்வு பற்றிய கருத்துக்கள் பெருகின. பல நூற்றாண்டுகளாக இந்நெறியிலேயே பண்பட்டு அதை - அந்த அறத்தை இலக்கியமாய், இலக்கணமாய், அகமாய், புறமாய் ஆய்ந்து ஆக்கி மகிழ்ந்த, பண்பட்ட தமிழ்நாட்டில்தான் வள்ளுவர் தோன்ற முடிந்தது. குறள் என்ற ஒப்பிலாச் செல்வத்தை ஆக்கி அளிக்க முடிந்தது.

ஆனால் பிற்காலத்தில் நம் நாட்டில் புகுந்த பிற நாட்டுக் "கலாச்சாரத்" தொடர்புகளின் காரணமாக நம் பண்பாடும் சிதைய 'அறம்' மாறுபட்டது. அறிவுக்குப் பொருந்தாத முறையில் 'தருமம்' என்ற பெயரில் மூடப்பழக்கம் வளர்ந்தது. அந்த மூடப்பழக்கங் களுக்கு முலாம்பூச இதிகாச, புராணங்கள் எழுந்தன. அதனால் நாட்டு மக்களின் கருத்திலே நஞ்சு நிறைந்தது. தானம் வாங்குவோர் நிறைந்தனர்; புண்ணியம் என்று புகுந்து பாவத்தை வளர்க்கவும் இடமேற்பட்டது. கொடிய வழிகளில் பணம் சேர்த்தவன் கும்பாபிசேகம் செய்து தருமகர்த்தா என்ற பட்டம் பெறவும்; வேறொருவனோடு கூடிக்குலவும் வீட்டுக்காரி, வேளைதவறாது கோயில் சென்று வருவது கண்டு, கணவன் நமக்கும் புண்ணிமுண்டு என்று களிப்படைய, அவள் செய்து வரும் பாவம் தீர்ந்து கொண்டே வருகிறது என்று திருப்தியடையவும்; காமத்தால் கற்பழித்தும், கண்டவருடனெல்லாம் கூடியும் திரிந்த கயவன் வேதம் ஓதினால், திருநீறு பூசினால் நோயும் போய்விடும், பாவமும் தீரும், சொர்க்கமும் எல்லோருக்கும் போலக் கிடைக்கும் என்று எண்ணவும் இடம் ஏற்பட்டது. போலி அறம் - அதுகூட அன்று அறத்திற்கு முற்றிலும் மாறுபட்ட செயல்கள் அறத்தின் பெயரால் நடந்தன. தமிழ் அறம் - குறள் காட்டும் அறம் சிதைந்தது. மேலும்மேலும் சிதைய இதிகாச, புராணங்களைப் போற்றமடமும், மானியமும் நிறைந்தன; கோயிலும், குளமும் கூடின; அதற்கென்றே ஒரு கூட்டமும் பெருகுகிறது! போதாததற்குத் தற்காலத்தில் சினிமா, நாடகக் கலைகளும் அவ்வழியிலேயே சுழன்றன! மக்கள் மனம் புண்ணியத்திற்கு இடம் கொடுத்தது! ஆனால் அதிலே அறம் சிறிதும் இல்லை! அறிவும் இல்லை! அது ஒரு மங்கிப்போன கண்போல

ஆகிவிட்டது. குழியைக் கோபுரமென்று எண்ணி ஏற முயன்று, படுகுழியிலே விழுந்து பரிதவிக்கும் நிலையிலே இருக்கிறது. இதை மாற்ற வழி இல்லையா! அறம் எங்கே?

அறம் உலகை ஏமாற்றும் செயல்களிலோ, உதவாத நம்பிக்கை களிலோ நிச்சயமாக இல்லை. ஆனால் அது ஒவ்வொருவரின் உள்ளத்திலும் இருக்கிறது. ஒவ்வொருவரின் உள்ளத்திலும் என்றால், முழுவதும் அன்று! ஏன்எனில் குற்றம் அடைதல் மன இயற்கையா தலினால், ஒவ்வொருவனும் எவ்வளவு தூரம் தன் மனத்தை குற்றமின்றிக் காப்பாற்றி வருகின்றானோ அவ்அளவிற்கு அவன் மனத்தில் அறம் இடம் பெறுகிறது. "மனத்துக்கண் மாசு இலனாதல் அனைத்து அறன்" என்கிறார் வள்ளுவர். எத்தகைய உண்மையை, எவ்வளவு எளிய முறையில் தெளிவுடன்கூறி இருக்கிறார் என்பதைப் பாருங்கள்! இந்த ஒரேவரி, குறள் அடியைக் கொண்டே குறள் 'அறநூல்' என்று தெளிவு படக் கூறலாம். அறத்தின் நிலைக்களனை உறுதியான முறையில் 'குற்றமற்ற மனமே' என்று கூறிவிட்டார்! சிலர் கோயில் கட்டுவதும், குளம் வெட்டுவதும், விழா நடத்துவதும், வேறுபல செய்வதும்தானே அறம் என்றால், அதற்கும் வள்ளுவர் பதில் கூறுகிறார். ஆகுல நீரபிற - பிறஎல்லாம் வெறும் ஆரவாரத் தன்மையை உடையனவே அன்றி உண்மையானவை அல்ல என்று மறுத்து விடுகிறார். மனத்து மாசாகத் தருமம் செய்வது "கடவுளை ஏமாற்றுவது" இத்தகைய அறத்தை அவர் தம்முடைய அறநூலில் எம்முறையில் கூறியிருக்கிறார் என்பதையும், அந்த அறத்தைப் பற்றிய அவருடைய பொதுப் படையான கருத்து என்ன என்பதையும் காண்போம்.

அறம் என்ற உலகை நிலை நிறுத்தும் ஆற்றலை அடிப்படை யாகக் கொண்டு தெளிவுற, அழகிய முறையில் குறள் எழுதப்பட் டிருக்கிறது. என்று கண்டோம். இனி அறம் என்பது எக்காலத் திற்கும் ஒரே தன்மையினதுதானா என்பதையும், அல்லது காலமாறு பாட்டிற்கு ஏற்ப 'அறம்' என்று மக்கள் நினைப்பவற்றிலும் சில மாறுபாடுகள் ஏற்படுமா என்பதையும் காண்போம்.

இலக்கணம் எவ்வாறு வரம்பின்றிச் செல்லும் மொழியைக் கட்டுப்படுத்தி அழகு செய்து நிலை நிறுத்துகின்றதோ அது போலவே அறமும் வரம்பின்றித் தீய வழிகளில் செல்ல விரும்பும் நம் மனத்தைக் கட்டுப்படுத்தி நல்ல வழியிற் செலுத்துகின்றது. மொழி மகக்ளுக்குள் ஒருவருக்கொருவர் கருத்தைப் பறிமாறிக் கொள்ளப் பயன்படுவது, ஆகையால் மக்களின் நாகரிக வளர்ச்சிக்கேற்ப மொழி

மாறுபடுவதும் இயற்கை. அவ்வாறு மாறித் திருந்தாத மொழிகள் கால வெள்ளத்தில் அழிந்து போய்விடுகின்றன. மொழி மாறுபடும் பொழுது அதனைக் கட்டுப்படுத்தும் இலக்கணமும் பொருந்திய முறையில், வரம்புக்கு உட்பட்டுச் சிறிது, சிறிதாக மாற்றமடைய வேண்டியிருக்கிறது. அதுபோலவே உலகை நிலைநிறுத்தும் அறமும் மக்களின் அறிவு வளர்ச்சிக்கும், நாகரிகச் சிறப்புக்கும் ஏற்ப மாறுபட்டே ஆகவேண்டும். பெண்பால் அறிஞர்களையும், விஞ்ஞானிகளையும் காணும் தற்காலத்தில் 'பெண்ணறிவென்பது பெரும் பேதைமைத்தே' என்பதும் 'பெண்புத்தி கேட்டல் தீது'!, என்பதும் கேலிக்குரினவாகும். ஆணும் பெண்ணும் இரு கண்களைப் போல் பாவிக்கப்பட வேண்டும் என்பதும், 'நாணமும், அச்சமும் வேண்டும் எனில் ஆணுக்கும், பெண்ணுக்கும் வேண்டும்' என்பதுமே இக்கால அறமாக இருக்க முடியும். எனவே, 'அறம்' கால, அறிவு, நாகரிக வளர்ச்சிகளுக்கேற்ப மாறுபடும்போது, அதனைப் பற்றிக் கூறும் அறநூலும் மாறுபடுவது, மாறுபட வேண்டியது இயற்கை. ஆனால் நமது குறட்செல்வம் இத்தகைய இயற்கை மாறுபாட்டை யும் கடந்து என்றும் குன்றா விளக்காய் ஒளிர்கின்றது. நாடு, இனம், சாதி, மதம் முதலிய பிரிவுகளனைத்தையும் கடந்த 'பொது'வில் நடமிடுகின்றது. காரணம் எல்லாவற்றையும் பொதுவாகவும், இறந்தகால, நிகழ்கால உலக நிலைகளின் மூலம் வருங்காலத்தை அறியும் தலை சிறந்த அறிவாலும், எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் அழுத்தமாகவும், உறுதியாகவும் எழுதப்பட்டிருப்பது தான். நிற்க,

இயற்கையான குற்றங்களை நீக்கி, ஏற்க வேண்டிய நன்மைகளைப் புகுத்தி மனநிலைக் களத்தில் தோன்றும் அறமாகிய விளக்கை அறிவுதான் பாதுகாக்கின்றது. துடைத்துத் துப்புரவு செய்கின்றது. சுடர் விட்டு ஒளிவீசச் செய்கின்றது. பொருள் அறவழிப்பட்ட மனத்திற்கு ஆக்க வழித் துணையாக உதவுகின்றது. மனம் தீதானால் பொருள் தீமைக்குப் பயன்படும். அவ்வமயம் அறம் அதுகூடாது என்று கூறும். அறிவு கண்டிக்கும். எனவே, அறவிளக்கைத் தீமைக் காற்றினால் அணையவிடாது அதைக் கூடி எரியாமலும், குறைந்து போகாமலும் சமநிலைப்படுத்தி என்றும் ஒருநிலைப்படுத்தும் அறிவு மிக இன்றியமையாததாகின்றது.

இத்தகைய அற விளக்கினின்றும் வருவதுதான் இன்ப ஒளி! அதைத்தான் வள்ளுவர் 'அறத்தான் வருவதே இன்பம்' என்று

மிகவும் வலியுறுத்திக் கூறுகிறார். உண்மையை உறுதியாகச் சொல்லிவிடும் வள்ளுவரின் திண்மைக்கு ஒப்பே இல்லை! பலருடைய நினைப்பு இல்லாவிட்டாலும் - செயல் அறமல்லாத வழியில்தான் இன்பம் திடீரென வந்து விடுகிறது என்ற முறையில் காணப்படுகிறது. ஆயின் அந்த இன்பம் எத்தகையது? அதை இன்பமன்று என்று ஏன் கூற வேண்டும்? என்றால் அவ்வின்பம் விளக்கொளியைக் கண்டு விழையும் விட்டில் பூச்சி காணும் இன்பம் போன்றது. எனவேதான் வள்ளுவர் 'மற்றெல்லாம் புறத்த' என்று கூறுகிறார். அதாவது அறத்திற்கு மாறுபட்டன என்று, மேலும் 'புகழும் இல' என்று கூறுகிறார். அவ்வழியால் வரும் இன்பத்தால் புகழும் கிடையாது, பழியே எனக் கூறுகின்றார். இதையும் வள்ளுவர் காட்டும் ஒரு சிறு எடுத்துக்காட்டின் மூலம் காணலாம். ஒருவன் பெண்ணாசை காரணமாக விலைமாதர் வழி அதைத் தீர்த்துக் கொள்ள முயல்கிறான். அவன் காண விரும்பும் இன்பம், அற வழியில் சென்றால் உண்மையில் பயனைத் தரும். ஆனால் அதற்கு மாறுபட்ட வழியில் அவன் செல்கிறான். அதுவும் உண்மையில் இன்பந்தானா? இல்லை. இன்பம் இல்லாதது மட்டும் அன்று, கேடும் ஆகும். முதலில் பொருளை இழக்கின்றான். இரண்டாவது அந்த 'இருமனப்' பெண்டிரிடம் அவன் காணும் இன்பம் 'இருட்டறையில் சொந்தமல்லாத ஒரு பிணத்தைத் தழுவிக் கொள்ளுகின்றவனின் செயல்போல பேதைமைக்கு எடுத்துக் காட்டாக இருக்கின்றது. கானலை நீரென்றெண்ணி நடந்துசென்று, மீண்டும் கடுந் தாகத்திற்கு ஆளானவனின் கதையாக ஆகிவிடு கின்றது அவன் நிலைமை. மூன்றாவதாகப் புகழையும் இழந்து உலகின் முன் தாழ்வாக மதிக்கப்படுகிறான். எனவே "அறத்தான் வருவதே இன்பம், மற்றெல்லாம் புறத்த புகழும் இல" என்பது உண்மை அறிவுக்குத் தெற்றென விளங்குகிறது. நிற்க,

அறம் என்பது இயற்கையாக, இன்றியமையாத நிலையில் அமைந்துவிட்ட, அறிவால் திருத்தி மேலும் மேலும் அமைக்க வேண்டிய சட்டம். கால வரிசையும், அறிவுச் சுழற்சியும், நாகரிக வேறுபாடும், பண்பாட்டு மாறுதலும் அதன் ஏடுகளும் பிரிவுகளு மாகும். நாடும், இனமும், அரசும் அவ்வறத்தால் உருவான, உருவாக்கப்படுகின்ற உறுப்புக்கள். தனி மனிதனிடம் உள்ள இன்சொல், அன்பு, அருள், ஒழுக்கம், மானம், என்பனவும்; நாட்டின் நல்லரசின் நல்லாட்சியும்; இனத்தின் அறிவுவழி எழுச்சியும் அந்த

அறத்தின் வெளித் தோற்றம். இந்த அடிப்படையை வைத்துக் கொண்டு, அறிவு வழிநின்று அற அடிப்படையில் பொருளீட்டி இன்பம் காணும் தமிழர் பண்பாட்டின்படி குறள் எழுதப்பட் டிருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

அதற்கு உரையாசிரியர்கள் இட்டிருக்கும் கவசங்களை எல்லாம் உடைத் தெறிந்து விட்டுப், பார்க்கும் போதுதான் குறளின் உண்மையான ஒளி நம்மை ஊடுருவிச் செல்கிறது. ஏனெனில் பெரும்பான்மையான குறள்கள் யாவருக்கும் தெற்றென விளங்கும் படியே அமைந்துள்ளன. சில குறள்களில் மட்டும் சில சொற்கள் சிலருக்குக் கடினமாக இருக்கலாம். இருந்தால் அக்கடினச் சொற்களுக்கு மட்டும் பொருள் கூறப்படுவதில் தவறு இல்லை.

அறநூலாகிய குறளின் பெருமையை உணர்ந்த சங்ககாலப் புலவர்கள் அதை "அறம்" என்றே அழைத்தனர்.

> 'நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன்
> செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
> அறம் பாடிற்றே ஆயிழை கணவ'

என்ற ஆலத்தூர்கிழார் என்ற சங்கப் புலவரின் சொற்கள் இதை நமக்குத் தெளிவுறுத்துகின்றன. எனவே வடநாட்டாரின் பிரமச்சரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்ற வாழ்வு முறைகளையும் , நான்கு வேதங்களையும் பின்பற்றியோ -அல்லது பின்பற்றாவிட்டாலும் அம்முறைகளைப் போல் தமிழ் முறை களையும் வகுக்க விரும்பியோ சிலர் குறளையும் அம்மாசுகளுக்கு உட்படுத்துகின்றனர். அறம், பொருள், இன்பத்துடன் "வீட்"டையும் இன்னற்பட்டு சுற்றி வளைத்து விலைக்கு வாங்கு கின்றனர். இம்முறை இனி மாற வேண்டும், விரைவில் மாற்றப்பட வேண்டும். குறளை 'மறை' என்று கூறாது, நம் முன்னோர் கூறியபடி 'அறம்' என்று கூறலே தகும்.

'அறம்' பற்றி வந்த குறள் அதற்கு வழிகாட்டியான அறிவை, அதை வளர்க்கும் கல்வி கேள்வியை, பெரியோர் நட்பை, துணையான பொருளை, நிலைக்களனான மனத்தை, அம்மனத்தினின்றும் நீக்க வேண்டிய பொறாமை, சினம், சோம்பல், கயமை முதலிய பலவற்றை, கைக்கொள்ள வேண்டிய முயற்சி, ஊக்கம், ஈகை, அன்பு, அருள், நட்பு, கொல்லாமை என்ற மிகப் பலவான நன்மைகளை, இவற்றை வெளிப்படுத்த, வளர்க்க

வழிவகுக்கும் வாழ்வை - இல்லறத்தை, அதைத் தோற்றி வளர்க்கும் காதலை, அதை நிலை நிறுத்தும் நாட்டை, அரசை என்று இவ்வாறு அற அடிப்படையில் நின்று பல நூறு துறைகளில் விரித்துரைக் கின்றது.

எனவே அறத்தைப் பற்றி உணர ஆசைப்படுபவர்களுக்கு “குறள் முழுவதையுமே கற்க வேண்டியது தான்” என்றே நாம் கூறமுடியும். ஆனால் முன்னைய பல கட்டுரைகளில் செல்வத் துணையையும், அறிவு வழியையும் அறிந்த நாம் “அறம்” என்ற சொல்லுடன் தொடர்புடைய ஒரு பொதுவான கருத்தைத்தான் தேசப் படத்தின் கோடுபோல இக்கட்டுரையில் வரையறுத்து உணர முடியும். இதுவரை அறம் என்றால் என்ன என்பதையும், அதற்குப் புறம்பான “தருமம்” அறத்துடன் கலந்து நம் அறிவையே மழுங்கச் செய்த வரலாற்றையும், குறள் - அற-நூல் அறத்தைப் பற்றிக் கருதி, கூறியுள்ள அமைப்பு முறைகளையும் அறிந்தோம். இனி அறத்தைப் பற்றிப் பார்ப்போம்.

குற்றமற்ற மனமே ‘அறம்’ என்றவர், பின்னர் தனித் தனியே நீக்க வேண்டிய குற்றங்களை முறைப்படி கூறுகின்றார். கைக்கொள்ள வேண்டிய அன்பு, நல் பண்பு முதலியவற்றையும் அவ்வாறே தனித் தனியே விளங்கக் கூறுபடுத்திக் கூறுகின்றார். ஆனால் ஒருவன் ‘அறம்’ உடையவன் என்பதை - அவ்வறம் நிறைந்த உள்ளத்தை வெளி உலகிற்கு உணர்த்துவன யாவை? உணர்த்துவது எப்படி? என்றால் ‘முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி, அகத்தானாம் இன் சொலினிதே அறம்’ என்கிறார் வள்ளுவர். காண இனிக்கும் இனிய முகமும், கருத்தைக் கவரும் இனிய பேச்சும் - உள்ளத்திலிருந்து வெளிப்பட வேண்டும் - அறமுடைய அறிஞனுக்கு! ‘அகத்தானாம் இன்சொல்’ என்று கூறுகிறார் வள்ளுவர். எங்கே, யாராவது இதை வைத்துக் கொண்டு ‘போலி வேடம்’ போடத் தொடங்கி விடுவார்களோ என்று!

நீக்கிவிட வேண்டிய - நெஞ்சில் ‘துறக்க’ வேண்டிய கெட்ட பண்புகளை வரிசைப்படுத்திக் கூறும் வள்ளுவர் அவற்றுள் மிகமுக்கியமான, ‘அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் (பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல்) நான்கும் இழுக்கா இயன்றது அறம்’ என்று கூறுகிறார். இந்த நான்கு தீய பண்புகளின் தொடர்பு சிறிதும் இல்லாதது தான் அறம் எனப்படும் என்கிறார். மேலும் ‘அறவினை யாதெனிற் கொல்லாமை’ என்று உயிர்களைக் கொல்லாத நோன்பையே தலை சிறந்தஅறமாகக் குறிப்பிடுகிறார்.

௬௫-௯

## அறமும், அறிஞனும்!

அறிஞன் என்றால் அவன் அறவழி நிற்பவனாக இருக்க வேண்டும். அவன் சொற்கள் தன்தன்மை, பிறர் தன்மை இவற்றையறிந்து பேசப்படுவனவாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தால் அவனிடம் பொருள் சேரும். 'அறன் அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும் திறனறிந் தாங்கே திரு', என்றும்; "திறனறிந்து சொல்லுக சொல்லை, அறனும் பொருளும் அதனினூஉங் கில்" எனவும் குறள் கூறுகின்றது. எனவே இவ்வாறு வாழ்பவன், பிறர்க்குப் பயன்படுபவனாக இருப்பான். இவன் துணையாலேதான் அறம் வளர முடியும். உலகிற்கு இவனே ஏற்ற துணைவன் என்று அவனை உயர்வுபடுத்தி உரைக்கின்றார் வள்ளுவர். 'அறன் அறிந்து ஆன்றமைந்த சொல்லான், திறனறிந்தான் தேர்ச்சித் துணை' என்பது குறள். அது மட்டுமன்றி அத்தகையவர் களையே 'துணை'யாகக் கொள்ளும்படி மக்களுக்கும் அறிவுறுத்து கின்றார் - 'அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை, திறனறிந்து தேர்ந்து கொளல் - கொள்க! என்று!'

'அறனறிந்த'வர்களைத் துணையாகக் கொள்க என்று கூறும் வள்ளுவர், முன்னர் 'அறவாழி அந்தணனின்' தாள்சேர - துணை பெற நம்மை அழைத்து, இன்றேல் பிறவாழி - துன்பச் சுழல்நிறைந்த பிறகடல்களை நீந்தல் அரிது என்று அறிவுறுத்தினார். அதன் காரணம் அறக் கடவுள் துணையாக நிற்க, நாம் அறமுடையாரைப் பேணவும், அறவழி நிற்கவும் வேண்டும் என்ற அவசியத்தை அறிவுறுத்தத்தான்!

தூய அறிவு, நல்லமனம், விருப்பு, வெறுப்பற்ற பண்பட்ட மனம், உண்மைப் புகழ், அய்ம்பொறியின் வழி மனதைச் செலுத்தாது அறிவு வழிச் செலுத்தும் போக்கு, ஒப்பற்ற நிலைமை, அறவழிப்பட்ட மனம், ஆகிய ஏழு இயல்புகளைக் கடவுளாகக் கூறி இருக்கிறார் வள்ளுவர். அதற்குத் தகுந்தபடி குறள் முழுவதிலும் நாம் இறைவனுக்குச் செய்யும் தொண்டு அந்த அறிவு, நல்மனம் முதலியவற்றைப் பெற்று வளர்த்துப் பாதுகாப்பதே என்றும்; அவ்விறைவன் தாள் சேர்வது என்பது, அவற்றை உடையாரின் துணை பெறுவதே என்றும்கூறிச் சென்றிருப்பது, உண்மை அறிய அவாவும் நம் மனத்தைக் குளிர்விக்கின்றது. ஆனால் இத்தகைய 'அறம்' தழைத்த நாட்டிலேதான் இன்று அரசமரமும், அரைத்த மஞ்சளும், அறுகம் புல்லும், ஆவின் சாணியும் "சாமிகளாக"த் தலை நிமிர்ந்து நிற்கின்றன என்றால் அதற்கு அழுவதா? சிரிப்பதா?

அறமும் - அரசும்

மனிதன் கூடிவாழும்போது தான் பிறந்த தாயகத்தினாலும், பேசும் மொழியினாலும் உடல் வண்ணம் ஒன்றுபட, பழக்க வழக்கம் முதலியவற்றால் ஒரு கூட்டத்தினனாக மாறுகிறான். இத்தகைய கூட்டங்களைக் கொண்டதே நாடு என்ற எல்லையும், அரசு என்ற ஆட்சியும்! எனவே தனி மனிதன் எவ்வாறு அறவழி ஒழுக வேண்டுமோ, அதுபோலவே அரசும் அறவழி நடக்க வேண்டும். அது மட்டுமன்றி அவ்வழி நடந்து வழிகாட்ட வேண்டும் - நாட்டு மக்களுக்கு! 'அறனிழுக்காது அல்லவை நீக்கி - அறம் மாறுபடாது, அறத்திற்குப் புறம்பானவற்றை அழிக்க வேண்டுமாம். அறத்திற்கு மாறுபட்டவற்றையும் அறவழியிலேயே நீக்கு! இது வள்ளுவரின் அறிவுரை! வீரத்தின் வழுவாது மானத்தைக் காப்பதே அரசு'' என்று அறம் தவறா அரசால் வரும் ஆக்கத்தை வலியுறுத்து கிறார்.

"அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாநின்றது மன்னவன் கோல்'' - வேதம், அறம் ஆகிய இரண்டிற்கும் முதலாவதாய், மேம்பட்டதாய் நின்றது, மன்னவன் கோல். அதாவது அறவழி அரசே ஆகும். எனவே நாட்டில், உலகில் அறத்தை நிலைநாட்டும் பொறுப்பு பெரிதும் அரசுக்கே அல்லவா? அரசைவிட, வேதம் பெரிதென் பாரை மறுப்பது இது.

'அறத்தான் வருவதே இன்பம்' என்று முன்னர் வலியுறுத்திக் கூறிய வள்ளுவர், அதனால்வரும் பிறவற்றையும் திறம்பட உரைக்கிறார்.

*சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு*
*ஆக்கம் எவனோ உயிர்க்கு?*

*என்று கேட்கிறார். புகழையும், பொருளையும் கொடுக்கும் நல்வழி அறவழிதான். பிறவழிகள் ஒருவேளை பொருளைக் கொடுக்கலாம். ஆனால் புகழைக் கொடுக்க முடியாது. மேலும், பழியையே கொடுப்பதாக இருக்கும். எனவே தான் அறவழி மறந்து பொருள் மட்டும் தேடி பழிக்கும் அஞ்சாது வாழ எண்ணும் கயவர்களுக்கு,*

*அறத்தி னூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை*
*மறத்திலி னூஉங்கில்லை கேடு.*

என்று அறிவுறுத்துகிறார். அறத்தை மறந்தாலே அதைவிடக் கேடு பிறிதொன்றில்லை என்கிறார். சரி, அறத்தால் எவ்வாறு ஆக்கம்

வருகிறது என்று கேட்டால், 'அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும், திறனறிந் தாங்கே திரு', என்று 'செல்வமும் ஈனும்' என்று பிறிதோரிடத்துக் கூறியதை வலியுறுத்துகிறார். அதுமட்டுமன்று, 'சிறப்பீனும்' என்றும் அந்தக் குறளில் சொன்னதையே மீண்டும் ஒரு குறளில் 'நயனொடு, நன்றி புரிந்த பயனுடையார் பண்பு பாராட்டும் உலகு', - நற்பண்புடன் அறத்தையும் விரும்புகின்றவரால் ஏற்படும் பயனை எண்ணி உலகு அவரைப் பாராட்டும் என்கிறார்.

'அறம்' என்றால் இல்லறத்தையே அது குறிக்கும். இது வள்ளுவர் வாய் மொழியும், தமிழ்ப் பண்பாடும் ஆகும். எவ்விடத்தும் குறளில் 'துறவறம்' என்று துறவுடன் 'அறம்' பிணைக்கப்படவில்லை. வேண்டுமானால் 'துறவு' என்று கூறுகிறார். உலகை அன்று, தங்களுக்குரிய கடமைகளை அல்ல, நல்ல பண்பு ஒழுக்கங்களை அல்ல-தீய குணங்களை 'நெஞ்சில் துற'க்க வேண்டும் என்கிறார். பலர் உலகைத் துறந்துவிட்டதாகக் கூறி, காவி உடை, சடை, முடியுடன் இவ்வுலகில் காட்சியளிக்கிறார்களே. மூக்கைப் பிடித்துக் கொண்டு தவம் செய்தால் முத்தி கிடைக்குமாமே, வேள்வி செய்தால் தாழ்வின்றி வாழவும், தருமம் தழைக்கவும், வரம் பெறவும் வாய்ப்பாகுமாமே என்றெல்லாம் கேட்க விரும்பினால் அவைகளுக்கும் வள்ளுவர் பதில் கூறிச் சென்றிருக்கிறார். காரணம் அவர் காலத்திலேயே ஆரியக் கலாச்சார அமைப்புக் கலப்பால் ஏற்படும் இத்தகைய அல்லல் களைக் கண்டு, உணர்ந்த பின்னர் அவற்றைக் கண்டித்தும் சென்றிருக்கிறார். கண்டிப்பு என்றால், மிகவும்காரமானது, உள்ளத்தினின்றும் தெரித்து விழும் தீப் பொறிபோல்! அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

"நெஞ்சில் துறவாது துறந்தார் போல் வஞ்சித்து வாழ்வாரின் வன்கணாரில்" - உண்மையிலேயே மனத்தினால் துறக்க வேண்டிய தீய பண்புகளைத் துறவாது, காவி உடைகாட்டிப் பிறர் கருத்தை ஈர்த்து அதனால் தன் வயிற்றை வளர்த்து வாழும் 'துறவி'களைப் போன்ற கொடியவர்கள் வேறு இல்லவே இல்லை, என்கிறார். "மழித்தலும், நீட்டலும் வேண்டாவாம் உலகம் பழித்தது ஒழித்து விடின்." என்று அதனையே வற்புறுத்தி மொட்டை அடிக்கவோ சடையை நீட்டவோ வேண்டியதில்லை, உலகம் 'தீது' என்று பழிக்கும் செயல்களை நீக்கிவிடு, துற! அவ்வாறு செய்தாலே

போதுமப்பா என்கிறார். 'உற்றநோய் நோன்றல், உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு,' என்று கூறுகிறார். தான் செய்ய வேண்டிய கடமைகளைத் தவறுதல் இன்றிச் செய்வதும், பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாதிருத்தலுமே 'தவம்' என்கிறார். 'தவத்திற்கு உரு'' என்று வடிவமாக்கித் தெளிவுபடுத்துகிறார், மூக்கைப்பிடித்து முணு, முணுக்கும் வடிவம் நம் மனத்துள் புகுந்து விடாதிருக்க! ''உயிர்க்கு உறுகண் செய்யாமை'' என்று சொல்லியவர் ''அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று'' எனவும் அதனையே வலியுறுத்தி அவர் காலத்திலேயே புகுந்து, வளர்ந்து, இன்றளவும்கூட நம்மை விடாது இன்னற் படுத்தி வரும் 'யாகங்களை'க் காட்டிலும் ஒரு உயிரைக் கொல்லாதிருத்தல் நன்று என்கிறார். ஓராயிரம் உயிர்களைக் கொன்று ஓர் யாகம் செய்வதைவிட, ஓர் உயிரையும் கொல்லா திருத்தலே அறம் என்கிறார். ''அறவினையாதெனிற் கொல்லாமை'' என்றே கூறுகிறார். அர்த்தமற்ற முறையில் தடை, தடை என்று ''தடை'' பல செய்யும் நம் அரசு இந்த யாகங்களைத் தடை செய்தால், என்ன? தமிழ்ப் பண்பாட்டுக்கும் 'அறத்'திற்கும் மாறுபட்ட யாகங்களைத் தடை செய்யும் எண்ணமாவது ஏற்படுமா?

எனவே, கூடிய வரையிலும் முற்றிலும் தீமையை, தீய பண்புகளை, அதற்கு அடிப்படையான ஆசையை அதனினிறும் தோன்றி வளரும் போட்டி, பொறாமை, வஞ்சகத்தைத், 'துறக்க' வேண்டும் என்று 'துறவு' என்ற அளவிலே வள்ளுவர் கூறியுள்ளார். மேலும் 'அறம் என்று இல்லறத்தையே குறித்துள்ளார். அந்த அறத்தின் இன்றியமையாமையையும், நன்மையானவற்றையும் விவரித் துள்ளார். வாழ்க்கைத் துணை நலத்தின் பெருமையை எடுத்தியம்பி உள்ளார். ''பிறன் மனைவியை'' நயப்பது ஒரு கேடாகும் என்றும் அதை நீக்க வேண்டும் என்றும் கூறி உள்ளார். ''அறன் கடை நின்றாருள் எல்லாம் பிறன் கடை நின்றாரில் பேதையார் இல்'' என்று கூறுகின்றார். பேதைமையால் அறத்தைக் கைவிட்ட வருக்குள் எல்லாம் பிறன் மனைவியை விரும்பியவரே பெரும் பேதையர்என்று கூறுகிறார். அறத்தோடு இல்வாழ்வு நடத்த வேண்டும் என்றால், பிறன் மனைவியைக் கருத்தில் இருத்தாதே என்றும், அவ்வாறு மனத்தை அடக்கி வாழ்வதே ''பேராண்மை'' ஆகும் என்றும் கூறுகிறார். பிற இன்பங்களை வேண்டுபவர் பிறன் மனையாளை விரும்பும் பேதைமையைக் கைவிட்டுவிட வேண்டும் என்றும் அடுக்கடுக்காக அறிவுரை கூறுகின்றார். வேறுபல அறத்திற்கு மாறுபட்ட செயல்கள் புரிந்தாலும்கூட இதைச் செய்யாதே என்று நயந்தும் பேசுகிறார். அவ்வாறு பிறன்

மனைவியை விரும்பாது தன் துணைவியுடன் நலமுற வாழும் சான்றோர்க்கு அவ்வாறு வாழ்வது சிறந்த ஒழுக்கமும் ஆகும் என்று பாராட்டுகிறார்.

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்று அறமே, இல்லறம் என்றவர் இஃது பிறன் ஒருவனால் பழிக்கப்படாத முறையில் நடந்தால் மிகவும் நன்று! என்று உற்சாகமூட்டுகிறார். மற்ற வழிகளில் "பேரின்பம் கிட்டுமே, இதனால் சிற்றின்பம் தானே கிட்டும்" என்றால் "அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவதெவன்?" என்று கேட்கிறார். இல்வாழ்வை அறவழியில் நடத்தினால், வேறு வழிகளினால் எதுவுமே பயனில்லை என்று மறுத்து விடுகிறார் ஒரே கேள்விக் குறியில்! மேலும் "ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை நோற்பாரின் நோன்மை உடைத்து" என்று இந்த இல்வாழ்க்கை - அறன் தவறாத வாழ்க்கை - தவம் செய்பவரை விடச் சிறப்புடைய தாகுமாம். அதன் பெருமை மிகப் பெரிது என்பதை விளக்க இவ்விதம் கூறுகிறார். "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும், பயனும் அது" என்று அன்பே பண்பாகும் என்றும், அறமே பயனாகும் என்றும் அவ்வாழ்வின் இயல்பை எடுத்துக்காட்டுகிறார்.

இத்தகைய அற வாழ்வையும், அந்த அடிப்படையினின்றும் எழும் அறச் செயல்களையும் எப்படி, எப்பொழுது செய்ய வேண்டும் என்பதையும் விவரிக்கிறார் வள்ளுவர். "செயற்பால தோரும் அறனே ஒருவர்க்கு உயற்பால தோரும் பழி" - ஒருவன் செய்ய வேண்டியது எல்லாம் அறமே, ஆனால் அவன் ஒழிக்க வேண்டியதெல்லாம் பழி, என்று கூறுகிறார். "ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே செல்லும் வாய் எல்லாம் செயல்" - முடிந்த வரையில், முடிந்த இடத்தில் எல்லாம் இடைவிடாது அறத்தைச் செய்க என்று கூறுகிறார். மேலும் நிலையாமையை உணர்ந்து சாவு வருமுன்பே அதாவது, "நாச்செற்று விக்குள் மேல் வாரா முன் நல் வினை மேற்சென்று செய்யப்படும்" என்று நல்வினையைச் செய்ய முற்படவேண்டிய இன்றியமையாமையைக் கூறி, வீணான நாளின்றிப் பயன் தரும் நாளாக வாழ்நாளை நடத்த வேண்டுமெனக் கூறுகிறார். நிற்க

அறத்தின் ஆக்கத்தைப் பொறாமை அழிக்கும். எனவே, பொறாமையைத் துறந்துவிடு என்கிறார். பிறர் அறம் அல்லாத வற்றைத் தன்பாற் செய்தாலும் தான் அறமல்லாதவற்றை அவரிடம் செய்தல் கூடாது என்று ஏசுவைப் போல், புத்தரைப் போல்

இயம்புகிறார். "திறனல்ல தற்பிறர் செய்யினும் நோ நொந்து அறனல்ல செய்யாமை நன்று" என்பது அக்குறள். அறவழி தவறியதால் ஒருவன் வறியவனானால் அவனைப் பார்த்துப் பெற்ற தாயும் இரக்கப்படமாட்டாள் என்கிறார், அறம் கூறும் வள்ளுவர். எனவே நாளை, நாளை என்று கூறாது உடனே அறம் செய்க என்று கூறுகிறார். "அன்றறிவாம் என்னாதறம் செய்க மற்றது பொன்றுங்காற் பொன்றாத் துணை" என்பது குறள்.

இனி அறம் - அதை நாம் மறந்தால், அதற்கு மாறுபட்ட வழியில் நடந்தால் நம்மைத் தண்டிக்கும். அதன் வழி நடந்தால் நன்மை பயக்கும் என்றும் கூறுகிறார். 'என்பிலதனை வெயில் போலக் காயுமே அன்பிலதனை அறம்' என்று கூறுகிறார். அறத்திற்கு எவ்வளவு ஆற்றல் என்று பாருங்கள்! அதுமட்டுமா? 'மறந்தும் பிறன்கேடு சூழற்க! (நினைக்காதே!) சூழின் அறம் சூழும், சூழ்ந்தவன்கேடு' என்று அறம் பிறன்கேடு சூழ்பவனுக்குத்தான் கேடு நினைக்கும் என்கிறார். எனவே 'அஞ்சுவதோரும் அறனே, ஒருவனை வஞ்சிப்பதோரும் அவா' என்று அறத்திற்கு அஞ்ச வேண்டும், ஏனென்றால் ஆசை வஞ்சித்து அறத்தைக் கெடுத்துவிடும் என்கிறார். என்ன! என்று ஏளனமாக நினைத்தால் 'பிறர் நாணத்தக்கது, தான் நாணானாயின் அறம் நாணத்தக்கதுடைத்து' அதாவது பிறர் வெட்கப் படத்தக்க செயல்களைச் செய்து விட்டுத் தான்மட்டும் வெட்கப்படாதிருந்தால் அவனைக் கண்டு 'அறம்' வெட்கப்படும் என்கிறார். எனவே அத்தகையவன் "அன்பு ஒரீஇத் (நீக்கி) தற்செற்று அறம் நோக்காது, ஈட்டிய ஒண்பொருள் கொள்வார் பிறர்" என்று கூறுகிறார். இத்தகையவன் அறவழி நடவாது அன்பின்றி, தன்னையும் அழித்துக் கொண்டு சிக்கனமாய்ச் சேர்த்து வைக்கும் பொருளைப் பிறர் கொள்ள அது சிதறிப்போய் விடும்! என்கிறார் வள்ளுவர்.

எனவேதான் 'அஞ்சுவதோரும் அறனே' என்றார். ஏன்? அறவழி தவறாமல் நடக்கவே! அதற்கு அறநூல் தேவை! இதோ என்றும் நின்று நிலவும் 'அறநூல்' குறள் நம்மிடம் இருக்கிறது என்றால் அதைக் கருத்திற்பதிய வைக்கக் கறையை அகற்ற எண்ணற்ற இளைஞர் தேவை! அவர்களின் இதயத்திலே 'குறள் அறத்திற்கும்' - வாய்மை ஒளிக்கும் ஓர் இடம் தேவை! நாட்டின் பிற்கால நல்வாழ்வுக்காக! ஏற்படுமா?

## 14. குறள்நெறி : 'பொருள் செயல்வகை'

திருக்குறளுக்குத் தருமர் மணக்குடவர் தாமத்தர் பரிதி பரிமேலழகர் எனப் பத்துப் பேர் முன்பே உரை கண்டுள்ளனர். இன்றும் பலர் உரை எழுதி வருகின்றனர். திருக்குறள் ஏதோ உரையெழுதுவதற்கு என எழுதப்பட்ட நூல் என்பது போன்ற கருத்து நிலவுகிறது. உண்மையில் திருக்குறள் ஒரு குறளுக்குப் பலவுரை கண்டு மகிழ்வதற்கோ, நயங்கண்டு எடுத்துக்கூறி இன்பம் நுகர்வதற்கோ எழுதப்பட்ட நூலன்று. அன்றாட வாழ்வில் பின்பற்றி, உய்வதற்கு என எழுதப்பட்டது.

திருக்குறளுக்குப் பதவுரை, பொழிப்புரை, விருத்தியுரை, என எந்த உரை எழுதினால் நலம் என ஒருவர் கேட்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அவருக்கு "இந்த உரைகள் எல்லாம் இப்போது வேண்டாம் ஐயா. குறளை விளங்கிக் கொள்ளும் அளவு வேண்டிய உரைகள் இருக்கின்றன. திருக்குறளுக்கு வாழ்க்கையுரைதான் மிக இன்றியமையாதது. திருக்குறளை அன்றாட வாழ்க்கையோடு பொருத்திப் பாருங்கள்" என்றுதான் விடை கூறவேண்டும். வாழ்க்கை என்ற உரைகல்லில் வைத்துக் திருக்குறள் என்ற பொன்னை உரைத்துப்பார்க்குந்தோறும், அதன் பத்தரைமாற்றுப் பசும்பொன் நீர்மை சுடர்விடும். இத்தகைய வாழ்க்கையுரைச் சிந்தனைகள் பெருகப்பெருகத் திருக்குறள் ஒரு குறிக்கோள் நூல் என்ற நிலைமை மாறி, அஃதொரு வாழ்க்கை நடைமுறை நூல் என்ற உண்மை நிலை பெறும்.

பொருள் செயல்வகை என்பது செல்வம் சேர்த்தலின் திறத்தை விளக்குகிறது. அவ்வாறெனில் செல்வத்தை இன்னது செய்தால், இவ்வாறு முயன்றால் சேரும் எனச் செல்வம் சேர்க்கும் வழிமுறை களையா அது கூறுகின்றது. அன்று, அது நீதி நூலேயன்றித் தொழில் துறை பற்றியதன்று. எனவே செல்வத்தின் இன்றியமையாமையை, பொருளைச் சேர்த்தலின் முக்கியத்துவத்தை, அறநெறியில் பொருளைச் சேர்க்க வேண்டும் என்பதை வற்புறுத்துகிறது. அவ்வதிகாரத்தில் முதற்குறள் வருமாறு:

*பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்*
*பொருளல்லது இல்லை பொருள்.*

ஒரு பொருளாக மதிக்கப்படாதவர்களையும் ஒரு பொருட்டாக்கி மதிக்க வைக்கும் பொருளல்லது, சிறந்த பொருள் பிறிதில்லை என இது விளக்கப்படுகிறது. பள்ளியிற் படித்தபோது, என் ஆசிரியர் இவ்வாறு பலமுறை விளக்கிக் கூறினார். எனினும் என் மனத்தில் ஓரளவே பதிந்தது. பிற்காலத்தில் வாழ்க்கை அனுபவத்தில் யான் இக்குறளை விளங்கிக் கொண்டபோதுதான், இதன் உட்கருத்து என் அடிமனத்தில் ஆழப் பதிந்தது. அந்த அனுபவத்தை உங்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று கருதுகிறேன்.

தொடக்கப் பள்ளியிலும் நடுநிலைப் பள்ளியிலும் எங்கள் சொந்தவூரில் நானும் என் நண்பனும் எட்டாம் வகுப்புவரை ஒன்றாகப் படித்தோம். அவன் படிப்பதில்லை; படித்தாலும் எதுவும் மண்டையில் ஏறாது. இதனால் அவனை 'மக்கு' என்று கேலி பேசுவோம். ஆசிரியர் கேள்வி கேட்கும்போது ஆந்தைபோல விழிப்பான்; நல்ல அடி வாங்குவான். வகுப்பில் எல்லோரும் அவனைப் பார்த்துச் சிரிப்போம்; ஓரக்கண்ணால் அவன் முட்டாள்தனத்தைச் சுட்டி, நகையாடி இழிவுபடுத்துவோம். சில சமயம் அவன் அழுது விடுவான். எட்டாம் வகுப்புவரை தடுமாறி வந்தவன், எட்டாவதில் தேர்ச்சி பெறவே இல்லை.

நாங்கள் சிலர் நன்கு படித்து நல்ல மதிப்பெண் பெற்றோம். மேல்படிப்புக்கு வெளியூர் சென்றோம். யான் முதுகலைக் கல்வி வரை பயின்றேன். கல்லூரி ஆசிரியன் ஆனேன். கருத்தரங்கு, பட்டிமன்றம், வழக்காடு மன்றம் பலவற்றிலும் கலந்து கொண்டு, நாவன்மையோடு பேசினேன். எனக்குக் கற்றவரிடையே பேரும் புகழும் ஏற்பட்டன.

ஒருமுறை பெருநகரமொன்றில் மாபெரும் பட்டி மன்றம் ஒன்று நடைபெற்றது. அதில் நான் ஒரு கட்சிக்குத் தலைமை தாங்கிப் பேசினேன். "கோவலன் வீழ்ச்சிக்கு அவன் கலையுணர்வே காரணம்" என்று எதிர்த்தரப்பினர் பேசினர். "அன்று; அவன் தலைவிதியே காரணம்" என்று நானும் என் கட்சியினரும் வாதாடினோம். எங்களுக்கு வெற்றி கிடைத்தது. நன்றி கூறுவதற்கு முன்னால் எங்கட்குக் கைத்தறி ஆடையைப் பொன்னாடையாகப் போர்த்தி, பை ஒன்றில் பணம் வைத்து அன்பளிப்புத் தருகின்ற கட்டம், வந்தது. அங்கு என்னுடன் படித்து, எட்டாம் வகுப்பிற்கு மேல் எட்ட முடியாமல் சென்றானே அந்த நண்பன்தான் வியாபாரிகள் சங்கத் தலைவர். பெரும்பெரும் தொழிற்கூடங்களை நடத்தினான். அவனுடைய கடையில் ஒரு நாளைக்குப் பல ஆயிரம் ரூபாய்கட்கு

வியாபாரம் நடந்தது. வணிகர் சங்கத் தலைவர் வந்ததும் எல்லோரும் பய பக்தியோடு எழுந்து நின்றார்கள்; கும்பிட்டார்கள். எனக்கும் அந்நண்பன் பொன்னாடை போர்த்தினான்; ரூ. 101 வைத்து அன்பளிப்புப் பையைத் தந்தான். மக்கள் கையொலி விண்ணைப் பிளந்தது. இரவு அவன் வீட்டில் மிகச் சிறந்த விருந்து நடைபெற்றது. அந் நண்பன் என்னிடம் அப்போது சென்ற காலத்தை நினைவு கூர்ந்தான். அவன் படிக்க முடியாது திண்டாடியபோதும், படிப்பில் ஐயங்கள் ஏற்பட்டுத் தடுமாறியபோதும் நான் முன் வந்து உதவியதை நன்றியோடு எடுத்துக் கூறினான். "நீங்கள் விடாமுயற்சியாகப் படித்து, டாக்டர் பட்டம் எல்லாம் பெற்று, கல்லூரி ஆசிரியராகத் திகழ்வது போற்றத் தக்கது" என்று அவன் என்னைப் பாராட்டி னான். உடனே என் அருகிலிருந்த பட்டி மன்றத்திற்குப் பேச வந்த மற்றொரு நண்பர். "அதனாலேதான் தாங்கள் நினைவோடு பட்டி மன்றத்திற்குப் பேச அழைத்திருக்கிறீர்கள். தங்கள் நெஞ்சில் இடம் பெற்றிருப்பதே பெரும் பேறு அல்லவா? எங்களைப் போன்றவர்கள் மீது, தங்களைப் போன்ற பெருஞ்செல்வர்களின் கருணை இருக்கும்போது எங்களுக்கென்ன கவலை" என்றார். யான் பதில் பேசாது நன்றி - உணர்வோடு என் நண்பனைப் பார்த்துப் புன்னகை பூத்தேன். கண்களை நிமிரவைக்கும் மிகப் பெரிய மாளிகை; அலுங்காமல் ஊரும் புத்தம் புதிய கார்கள்; வேலையாட்கள் - எங்கும் பளபளவென்று மினுமினுக்கும் ஒரு தோற்றம். பள்ளிக்கூட நாளையும் இன்றைய நிலையையும் என் மனம் ஒரு கணம் ஒப்பிட்டுப் பார்த்தது. இன்று அவன் எங்கட்கு அன்பளிப்பு நல்கிக் காக்கும் புரவலன்; நாங்கள் அதைப் பெற்று மகிழும் புலவர்கள். என் இதழ்கள் வெளிக் கேட்காவாறு அசைந்தன.

*"பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்*
*பொருளல்லது இல்லை பொருள்"*

ஆசிரியர் விளக்கிச் சொல்லியபோது அரைகுறையாக விளங்கிய குறள், இப்போது எனக்கு மிக நன்றாக விளங்கியது.

உலகியல் என்பதும் நீதி நியாயம் என்பதும் முரண்பட்டவை அல்ல; வேறுபட்டவை. இவை இரண்டையும் அறிந்து அறங்கூறும் நூலே வாழ்க்கை நூலாதல் கூடும். திருவள்ளுவர் இவ்விரண்டிற் குமிடையே ஒரு சமனிலைப்பாட்டை அமைத்து அறங் கூறுகிறார். "சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருளிது வென்ற திருவள்ளுவன்" எனக் கல்லாடம் பாராட்டுவது இதனாலே தான்.

உலகியல் சில சமயம் நீதி நெறியை விட்டு விலகிச் செல்வது போல் தோன்றும். அங்ஙனம் நீண்ட நெடுந்தூரம் விலகிச் சென்றுவிடாமல், ஒருங்கு கொணர்ந்து உலகியலில் நீதியை நிலைநிறுத்துவதுதான் வாழ்க்கை. உலகியலையே பற்றாத நீதி காட்டிற்குத் செல்ல வேண்டும். உலகியலையே பின்பற்றினாலும் நிலைத்த நீதிகள் பொருளற்றுப் போய் வாழ்க்கை பயனற்றதாய் விடும். கொலை செய்தவனுக்குக் கொலைத் தண்டனை தரவேண்டும் என்பது நீதி. அவன்பால் கண்ணோட்டம் செலுத்தித் திருத்த முயலுதற்கு வழியுளதேல் அங்ஙனம் கருணை காட்ட வேண்டும் என்பது உலகியல். இந்த இடத்தில்தான் கருமம் சிதையாது கண்ணோட வேண்டும் என்பார் திருவள்ளுவர்.

வகுப்பில் யான் திருக்குறள் பாடம் நடத்திக் கொண்டிருந்தேன்.

*"இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை*
*எல்லாரும் செய்வர் சிறப்பு"*

எல்லா நலமும் உடையவரானாலும் - அறிவுடைமை பேச்சாற்றல், நற்பண்பு என அனைத்தும் உடையவரானாலும் கைப்பொருள் இல்லையேல் யாவரும் இகழ்வர்; பிறபல குற்றங்குறையெல்லாம் உடையராயினும் செல்வரை எல்லோரும் சிறப்புச் செய்வர்; பகைவரும் பாராட்டுவர் என்று யான் இக்குறளை விளக்கிக் கொண்டிருந்தேன். மணக்குடவர், பரிமேலழகர், காளிங்கர் உரைகளையெல்லாம் மிக்க திறமையோடுவிளக்கிக் கொண்டிருந்தேன். ஒவ்வொரு தேர்விலும் முதன்மாணவனாகத் தேர்ச்சி பெறும், திறமைமிக்க 'செழியன்' என்ற மாணவன் என்னைத் தடுத்து நிறுத்தினான். "இல்லாரேயாயினும் அவர் திறனறிந்து போற்ற வேண்டும்; உடையாரேயாயினும் குறை உடையராயின் குறையைச் சுட்டிக்காட்டத் தயங்கக்கூடாது." அதுவே நீதி" என்ற செழியன், திருக்குறள் நெறியல்லா நெறிச் செல்லும் உலகியலை ஏற்றுக் கொள்கிறதா என்ற ஐயத்தைக் கிளப்பினான். அன்றைக்கு எவ்வளவு முயன்றும் என்னால் அவனைத் தெளிவுபடுத்த முடியவில்லை.

சில ஆண்டுகள் கழிந்தன. செழியன் ஒரு பெரிய நிறுவனத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். அதன் ஆண்டுவிழா ஒன்றிற்கு என்னை அழைத்தான். அங்கு நிறுவனர் தலைமையேற்றுப் பேசினார். மற்றொரு பேராசிரியர் சிறப்புரை ஆற்றினார். நிறுவனர்

பெரிய தொழில் மேதையே தவிரச் சிறந்த பேச்சாளர் அல்லர். அதனால் ஒன்றுகிடக்க ஒன்றைச் சொல்லி உளறினார் என்றுதான் சொல்ல வேண்டும். பேராசிரியரோ மிக அழகாகப் பேசினார்.

செழியன் கூட்ட முடிவில் நிறுவனரை மிகவும் பாராட்டினான். "அடடா உங்கள் பேச்சு இல்லையென்றால் ஆண்டு விழாவே சிறந்திருக்காது. நல்ல வேளையாக ஒப்புக் கொண்டு வந்து பேசினீர்கள். நம் நாடு 1947இல் சுதந்திரம் பெற்றது. நீங்கள் ஏதோ நினைவில் 1949இல் என்று கூறிவிட்டீர்கள். அதில்கூட ஒரு பொருத்தம் என்னவென்றால், காந்தியடிகளைச் சுட்டுக் கொன்றது 1949இல். எந்த நேரமும் காந்தியடிகள் நினைவாக இருக்கும் நீங்கள் அப்படி மாற்றிச் சொல்லியதில் வியப்பில்லை. நானும் பார்த்துக் கொண்டு வருகிறேன். ஆண்டுக்கு ஆண்டு உங்கள் பேச்சு நலமாகிக் கொண்டு வருகிறது" என்று செழியன் நிறுவனரை வானளாவப் புகழ்ந்து கொண்டிருந்தான். கல்லூரி நாட்களில் மிகவும் வரன் முறையாக இருக்க முயலும் செழியனா இப்படிப் பேசுகிறான் என எனக்கே வியப்பாக இருந்தது. இறுதியில் நிறுவனர் விடை பெற்றுப் போனபிறகு, சிறப்புரையாற்றிய பேராசிரியரிடம் செழியன் காதோடு காதாக -அவருக்கு மட்டும் கேட்கும்படி "உங்கள் பேச்சு மிக அருமையாக இருந்தது" என்றான்.

கூட்டம் முடிந்து இருவரும் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது, நான் செழியனைப் பார்த்துப் புன்னகை செய்தேன். என் குறிப்பைப் புரிந்து கொண்ட அவன், "என்ன செய்வது? எங்கள் நிறுவனருக்குப் பேசவே வராது. ஆனாலும் தாம் ஒரு சிறந்த சொற் பொழிவாளர் என்று போற்றப்படவேண்டுமென்று அவருக்கொரு ஆசை. எவ்வளவோ செலவழித்து இந்த நிறுவனங்களையெல்லாம் நடத்துகிறார். அவரளவில் இன்று நல்ல முன்னேற்றம்தான். முன்பு இதுகூடப் பேசமாட்டார். பாதி நேரம் இருமிக் கொண்டே இருப்பார். அதனால்தான் அவர் போன பிறகு பேராசிரியரைப் பாராட்டி, அவர் சொற்பொழிவாற்றியதற்குரிய தொகையும் தந்தனுப்பினேன். மற்றவர்களைவிடத் தாம் சிறப்பாகப் பேசி விடவேண்டும் - பேச முடியும் என்று எங்கள் நிறுவனர் முயல்கிறார். நம் சிறு பாராட்டு அவருக்கு மேலும் ஊக்கம் தரும்" என்று ஏதேதோ சமாதானம் கூறிச் சென்றான். நான்

*"இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை*
*எல்லாரும் செய்வர் சிறப்பு"*

என்ற குறளை நினைவூட்டினேன். "ஆமாம் ஐயா, அந்தக் குறளுக்கெல்லாம் இப்போதுதான் நன்கு பொருள் விளங்குகிறது.

நீங்கள் திருப்பித் திருப்பி அதை விளக்குவீர்க்ள். இருந்தாலும் வாழ்க்கை அனுபவத்தோடு இணைத்துப் பார்க்கும்போதுதான் திருக்குறள் முழுமையாக விளங்குகிறது" என்றான் செழியன். மேலும் ஒரு கருத்தைச் சொல்ல வேண்டும் என்று என் மனம் விழைந்தது; "இந்தக் குறளில் உலகியல் இப்படி இருககிறது என்று மட்டும் திருவள்ளுவர் உணர்த்த வரவில்லை. உலகியல் இப்படி இருத்தலால், நீ வேறு பல திறமைகள் உடையவனாயினும் பொருட் செல்வத்தையும் நன்கு தேடிக்கொள். அப்போதுதான் உலகம் போற்றும். பொருட் செல்வம் இல்லாமல், வேறு பல திறமையெல்லாம் பெற்றிருந்தாலும் உலகம் உன்னைக் கவனிக்காது" என்பதுதான் அவர் உணர்த்த வந்தது" என்றேன். "ஆம். நமக்குத் தாயினும் சாலப் பரிந்து அறம் சொல்பவர் திருவள்ளுவர்தான்" என்று கூறிப் பெருமூச்சுவிட்டான் செழியன்.

இவ்வுலகத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்குச் செல்வம் மிகமிக இன்றியமையாதது. மாந்தனது அறிவுடைமை, திறமையெல்லாம் நோக்கச் செல்வம் துணைக் கருவிதான். எனினும் செல்வமின்றி வாழ்க்கை நடத்துவது கலமின்றிக் கடலில் வீழ்ந்ததற்கு ஒப்பாகும். ஒருவனுடைய அறிவுடைமை கூட அவனது பொருள் வசதி என்ற அளவு கோலைவைத்துத்தான் மதிக்கப்படுகிறது. சங்கீத வித்துவான் ஒரு கச்சேரிக்குப் பத்தாயிரம் வாங்கலாம்; அடுத்தவர் ஐயாயிரம் வாங்கலாம்; மற்றொருவனுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்தாலே ஓடோடி வரலாம். இசையறிவையும் நுட்பத்தையும் வைத்து அவர்களை மதிப்பிடக்கூடியவர்கள் மிகக் குறைவே. அவர்கள் வாங்கும் பணத்தை வைத்து மதிப்பவர்களே பெரும்பான்மையினர் ஆவர்.

செல்வத்தை வைத்து நாம் சாதிக்கும் காரியங்கள் இருக்கட்டும். நம்மிடம் செல்வம் இருக்கிறதென்பதே மிகப் பெரிய பாதுகாப்பு. ஒருவரிடம் செல்வம் இருக்கிறதென்பதை வைத்தே பகைவர்கள் அஞ்சி ஒடுங்குகிறார்கள்; செல்வமுடையவனைப் பார்த்தவுடனேயே பலர் அவனுக்கு வேண்டியதைச் செய்து கொடுக்கிறார்கள். பலர் எதிர்கால் நம்பிக்கையின் பேரில் அவனைக் காக்கை பிடிக்கிறார்கள். அவனைக் கண்டதும் பணிந்து நடக்கிறார்கள். அதைப் பார்த்தே பலர் அச்செல்வனைக் கண்டதும் கும்பிடுகிறார்கள். இவையெல்லாம் இன்றுதான் என்று நினைக்கிறீர்களா? நேற்றும், அதற்கு முதல்நாளும் என்றும் இதே கதைதான். அழுக்கடைந்த மேனியுடன், கந்தலாடையுடுத்து ஒருவன்

வந்தால், அவனைப் பெரும்புலவன் என ஒப்புக் கொள்ள உலகம் தயங்கும். அதனால் புலவனும் எப்படி வரவேண்டுமாம். ஔவையார் கூறுகிறார் கேளுங்கள்;

*விரகர் இருவர் புகழ்ந்திடவே வேண்டும்;*
*விரல் நிறைய மோதிரங்கள் வேண்டும் – அரையதனில்*
*பஞ்சேனும் பட்டேனும் வேண்டும் அவர் கவிதை*
*நஞ்சேனும் வேம்பேனும் நன்று.*

பட்டாடை புனைந்துகொண்டு, விரல் நிறைய மோதிரங்கள் போட்டுக் கொண்டு, இரண்டு துணைப்புலவர்கள் பக்கத்தில் புகழ்ந்து கொண்டே வர ஒருவர் பாட்டுப்பாடி வருவாரானால் அவர் கவிதை நஞ்சாகவும் வேம்பாகவும் இருந்தாலும் மிக நல்ல கவிதை என்று மன்னர்களாலும் போற்றப்படும். கூழுக்கும் கீரைக்கும் பாடிய ஔவையே இங்ஙனம் கூறுவாரானால் அக்கால நிலையை எண்ணிப் பாருங்கள்.

செல்வம் பகையை எவ்வாறு ஒழிக்கும் என்பதை திருவள்ளுவர் அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார்.

*"பொருள் என்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்*
*எண்ணிய தேயத்துச் சென்று"*

ஈட்டி எட்டின மட்டும்தான் பாயும்; பணம் பாதாளம் மட்டும் பாயும் என்பது உலகியலைப் படம் பிடித்துக் காட்டும் பழமொழி யாகும். இந்த இடத்தில் திருவள்ளுவர் கூறும் உவமைப் பொருத் தத்தை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒளிவந்தவுடன் இருள் விலகுகிறது. இருளை விலக்குவதற்காக ஒளி எவ்வித முயற்சியையும் மேற்கொள்வதில்லை. இயல்பான ஒளியின் தோற்றமே இருளை ஓட்டி விடுகிறது. செல்வமுடைமையும் அங்ஙனம் பகை என்ற இருளை எளிதாக ஓட்டிவிடும். அதுமட்டுமன்று, ஒளி தானிருக் குமிடத்தேதான் இருளை ஓட்டும். பொருளோ எட்டாத இடங்கட்கும் சென்று - செல்வமுடையவன் எண்ணிய இடத்திலே சென்று பகையாகிய இருளை ஓட்டும். இங்கு 'பொருளென்னும் பொய்யா விளக்கம்' என்று சிறப்பிக்கிறார் திருவள்ளுவர். என்றும் எங்கும் தன் ஆற்றலை விளைவிப்பதால் 'பொய்யா விளக்கு' என்று போற்று கின்றார். பகையை அறவே ஒழிக்கும் என்பதை வற்புறத்தவே 'இருள் அறுக்கும்' என்று கூறுகிறார்.

ஒருவன் துறவியானாலும் நிறையச் செல்வமிருந்து, அதைத் துறந்தானென்றால் பலராலும் போற்றப்படுகின்றான். அரச போகத்தையே துறந்த புத்தரை உலகம் தலைவணங்கிப் போற்று கிறது. ஒன்றுமில்லாதவன் 'துறவியானான்' என்றால் உலகம் சிரிக்கிறது. வல்லரசுகள் தத்தம் பணபலத்தை வெளிப்படுத்தியே, மற்றவர்களை அடக்கி வைக்கின்றன. நாம் இருக்கிற இடத்தில் இருந்து கொண்டே எல்லோரையும் ஆட்டிப் படைக்கலாம்; நாம் போகாமல், நாம் எண்ணிய இடத்திலே சென்று நம் செல்வம் நமக்காகப் போராடும். அத்தகைய செல்வத்தைச் சேர்க்க வேண்டாமா என்று நம் மனத்தில் ஆர்வத்தைத் தூண்டுகிறார், திருவள்ளுவர். "காயமே இது பொய்யடா; காற்றடைத்த பையடா" என்று வறட்டு வேதாந்தம் பேச அவர் விரும்பவில்லை. உயிர்த் துடிப்புடைய நல்வாழ்வு வாழ வேண்டும் என்று அவர் கருதுகிறார். அதனால்தான் செல்வத்தின் சீர்மையையும் நீர்மையையும் அவர் இவ்வளவு துல்லியமாக எடுத்துக்காட்டுகிறார். பிற்காலத்தில் வந்த நாலடியார் போன்றவை சமயச் சார்பு மிக்கன. அதனாலேதான் நாலடியாரில் செல்வ நிலையாமை, நன்றியில் செல்வம் போன்ற அதிகாரங்கள் காணப்படுகின்றனவே தவிர, பொருள் செயல்வகை போன்ற அதிகாரம் காணப்படவில்லை.

பொருள் செயல்வகை என்ற அதிகாரத் தலைப்பே சிந்தித்தற் குரியதாகும். அறிவுடைமை, ஊக்கமுடைமை, பண்புடைமை என்ற அதிகாரத் தலைப்புக்களை நோக்கும் பொழுது பொருளுடைமை என்ற தலைப்பே இங்கு பொருத்தமானது. ஆனால் திருவள்ளுவர் அங்ஙனம் வற்புறுத்தாது, பொருள் செய்யும் நெறிமுறையையே வற்புறுத்த விரும்பினார் என்பது அதிகாரத் தலைப்பாக விளங்கு கிறது.

தொல்காப்பியர், திருவள்ளுவர் போன்றோரின் நூல்களில் அச்சான்றோர்கள் உடனிருந்து போதிப்பதுபோல் தம் கருத்துக் களை நிரல்படுத்தி விளக்கியுள்ளனர். இதனை அந்நூல்களை நுட்பமாய் ஓதியுணர்வார் அறிதல் கூடும். ஒன்றைச் சொல்லிக் கொண்டே வருகிற பொழுது, அதில் ஏதும் ஐயம் ஏற்படும் என்று தெரிந்தால், அதைத் தீர்ப்பதற்காக அடுத்த கருத்துக்கு மாறுவர். நல்லாசிரியர்களின் இயல்பு அதுவேயாகும். திருவள்ளுவர் பொருள் செயல்வகை அதிகாரத்தில் முதல் மூன்று குறள்களிலும் செல்வத்தின் சிறப்பை, பெருமையை எடுத்துக் கூறினார்.

பொருளற்ற வரையும் பொருளாகச் செய்யும்; எல்லோரையும் சிறப்புச் செய்யுமாறு தூண்டும்; எண்ணிய தேயத்துச் சென்று பகையாகிய இருளை அறுக்கும் என்றெல்லாம் அவர் கூறிக் கொண்டே வந்தார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவன் "அப்படியா, பொருள் அவ்வளவு இன்றியமையாததா? அப்படி யென்றால், எவ்விதமாவது பொருளைச் சேர்த்தேயாக வேண்டும். பழிபாவங்களைப் பற்றிக் கூட எண்ண வேண்டியதில்லை. பொருளைச் சேர்த்து விட்டால் அவற்றையும் மறைத்து விடலாம். திருவள்ளுவர்தான் பொருள் எண்ணியதேயத்துச் சென்று காரியத்தை முடிக்கும் என்று கூறிவிட்டாரே" எனப் புறப்பட்டு விட்டால் என்னாவது? அதனால்தான் அடுத்த குறளில் திருவள்ளுவர் கூறுகிறார்:-

"அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்"

என்று பொருள் சேர்க்கும் திறமை தனித்தன்மை வாய்ந்தது. எளிய முயற்சியால் சிலர் அரிய பொருளைச் சேர்த்துவிடுவர். சிலர் இடையறா முயற்சியால் பொருளைக் குவிப்பர். செல்வத்திற்கு ஒரு சிறப்புண்டு. குறிப்பிட்ட அளவுவரை நாம் செல்வத்தைத் தேடி விட்டால் பிறகு செல்வம் தானே செல்வத்தைத் தேடிக் கொள்ளத் தொடங்கிவிடும். நூற்பாலையைத் தொடங்கும் ஒருவர் நாட்டின் தேவையை அறிந்து, மக்களின் வாங்கும் சக்தியை அளவிட்டு அதற்கேற்ற நூல்களை உற்பத்தி செய்கிறார். அவர் விரைவில் பெரும் செல்வராகிவிடுகிறார். அவ்வாறன்றி, உலகத்திலேயே இல்லாத மிகவுயர்ந்த பட்டு நூலைப் தயாரிப்பேன் என்று ஒருவர் புறப்பட்டால் அவர் திறமை உயர்வாக மதிக்கப்படக்கூடும். ஆனால் செல்வம் சேராது. நாம் செல்வம் சேர்த்தவர்களை "அதிட்டக்காரர்கள்" என்று ஒரே சொல்லால் அடக்கி விடுகிறோம். அவர் திறமையை எல்லாம், வாணிக நுட்பங்களை யெல்லாம் வெளிக்கூறாது மண்ணில் போட்டுப் புதைத்து விடுகிறோம். இதனால் தொழில் செய்யும் திறம் - திறனறிந்து பொருள் சேரத்தல் என்பது நம் நாட்டில் மங்கிப் போய்விட்டது.

செய்யும் திறமையறிந்து சேர்த்த பொருள் என்கிறார் திருவள்ளுவர். கல்வி கேள்வியினால் அறிவை வளர்க்கிறோம். அதுபோலத் தொழில் வாணிகத்தால் பொருளைச் சேர்க்கிறோம்.

அதற்கெனப் பயிற்சி பெறுவதை, திறமையுடையவராவதைத் திருவள்ளுவர் விரும்புகிறார். அதனால்தான் 'திறனறிந்து வந்த பொருள்' என்கிறார்.

மேலும் அவர் 'தீதின்றி வந்த பொருள்' என்றும் சுட்டுகிறார். அரசன் என்றால் குடிமக்களை வருத்தியும் செல்வம் சேர்க்கலாமே. தனிப்பட்டவன் கொள்ளையடித்தும் கொலை செய்தும் பொருள் சேர்க்க எண்ணலாமே. அவையெல்லாம் தீய வழிகள், திறமை யுடையவன் தீயவழியில் பொருள் சேர்க்க வேண்டுமென்பதில்லை; நல்ல வழியிலேயே அவன் பொருளைக் குவித்துவிடுவான். திறமை யற்றவன்தான் தீயவழிகளை நாடுவான். திறனறிந்து, தீதின்றி வந்த பொருள் என்று திருவள்ளுவர் அடுக்கிச் சொல்வதன் நுட்பம் அதுதான்.

தண்ணீரை அதிகமாகச் சிந்துபவனைப் பார்த்து, இவன் ஊதாரியாகச் செலவழிப்பான் என்று உலகோர் கூறுவர். "தண்ணீரை நிறையச் செலவழிக்காதே; பணம் செலவழியும்" என்பார்கள். அஃது எங்ஙனமாயினும் தண்ணீருக்கும் செல்வத் திற்கும் ஓர் ஒற்றுமை இருக்கிறது. தண்ணீர் தானும் உணவாகிப் பிற உணவுகளையும் விளைவித்துத் தரும். அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும் மனிதன் அடைய வேண்டிய உறுதிப் பொருள்கள். இவற்றுள் பொருட்செல்வம் உடையரானால் மேன்மேலும் செல்வராதற்கு அஃது உதவுவதுடன், ஏனைய அறத்தை அடைதற்கும் இன்பத்தை நுகர்தற்கும் அதுவே உதவும். சங்க காலச் சான்றோர்கள் "சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும் அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல" என்று அறநெறியை வற்புறுத்திப் பேசினார்கள். இடைக்காலச் சான்றோர்கள் "நடுவணது எய்த இருதலையும் எய்தும்" என்று, பொருளை அடைந்தால் ஏனைய அறமும் இன்பமும் எளிதிற் கைகூடும் என்றார்கள். திருவள்ளுவர் இவ்விரு கருத்துக்களையும் எதிரொலிக்கின்றார். பொருளும் தீதின்றி வரவேண்டும். அங்ஙனம் வந்த பொருள் அறத்தையும் இன்பத்தையும் தரும் என்பது அவரது அடிப்படைக் கருத்தாகும்.

பகைமை நீக்குதற்கு, பொறாமையைப் போக்குதற்கு, தீங்கு செய்வாரை அடக்குதற்கு, மாறானவர்களை வெல்வதற்குச் செல்வம் வேண்டும். அதுமட்டுமன்றி அறத்தை ஆக்குதற்கும், இன்பத்தை நுகர்தற்கும் அச்செல்வமே துணையாகும். முன்னைய நிலையில்

செல்வத்தை ஆயுதமாகவும் ஒளிவிளக்காகவும் உருவகிக்கும் திருவள்ளுவர், பின்னைய நிலையில் ‘செல்வச் செவிலி’ எனத் தாயாகப் போற்றுகிறார்.

திருக்குறள் பொருட்பால் அரசியல் அங்கவியல் பகுதிகளை நாம் மிகவும் உற்று நோக்குதல் வேண்டும். இங்கெல்லாம் அரசர்கட்கு அறம் சொல்கிறாரா? தனி மனிதர்கட்கு, குடிமக்கட்கு அறம் சொல்கிறாரா? என வேறுபாடறியவொண்ணாதபடி பொதுவாக அறம் கூறுகிறார். நாடென்றும் அரசனென்றும் படைச் செருக்கு என்றும் அவர் பேசுமிடங்களில் அரசனுக்குக் கூறப் பட்டவை என விதந்து எண்ணக்கூடிய இடங்கள் பலவுள. கல்வி, கேள்வி, அறிவுடைமை, இடுக்கணழியாமை, வினைசெயல்வகை என அறங்கூறுமிடங்களில் அவர் சாதாரணக் குடிமகனுக்கே கூறுகிறார் என எண்ணப் பெரிதும் இடமேற்படுகிறது. அரசனுக்கு எனக்கொண்டு மற்றவர்கட்கும் பொருந்தும் என எண்ணக்கூடிய இடங்கள் பலவுள. அல்லாமல் எல்லோருக்கும் பொருந்தும், உலகிற் பிறந்த மாந்தர் யாவருக்கும் பொருந்தும் - தேவையேல் அரசனுக்கு எனச் சிறப்பாக எடுத்துக் கொள்ளலாம் என எண்ணுமாறு அவர் அறங்கூறிய இடங்களே மிகப் பல வுள. இன்றையக் குடியாட்சித் தத்துவத்தில் ஆள்பவரை மக்களோடு மக்களாகவே மதிக்கிறோம். மன்னனையும் மக்களோடு மக்களாக வைத்து அறங்கூறும் இயல்பை இவ்வதிகாரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. இவை மறைமுகமாகக் குடியாட்சித் தத்துவத்தைத் திருவள்ளுவர் ஏற்றுக்கொண்டு சிந்திக்கிறார். என்ற பிரமிப்பை - மருட்கையை ஏற்படுத்துகின்றன. திருவள்ளுவரின் தீர்க்கமான - தெளிவான சிந்தனை அந்தஅளவு காலவெள்ளத்தைக் கடந்தும் எதிரொலிக் கின்றது என்று கொள்ளலாம். அரசனாயினும் பிற குடிமகனாயினும் அருளையும் அன்பையும் நீக்கிவிட்டுத் தவறான வழியில் பொருள் வந்து சேர்ந்தால் அதை ஏற்கக் கூடாது; தன்னைச் சாராது கழியுமாறு தட்டிவிட்டுவிட வேண்டும்.

*அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாகக்ம்*
*புல்லார் புரளவிடல்.*

ஓர் அரசன் குடிகளிடத்தில் அருளுடையவனாக வேண்டும்; குடிமக்களிடம் அவன் ‘ஆறில் ஒன்று’ என வரி பெறவேண்டும். அப்போதுதான் குடிமக்கள் அவனிடம் அன்புடைவராக இருப்பர்.

அங்ஙனமன்றி அக்குடிகளை வருத்தி, அவ்வழியில் மன்னன் செல்வம் சேர்க்கலாமா என்றால், திருவள்ளுவர் "கூடாது; அதனைப் பொருந்தாது போகவிடுக" என்று அரசனுக்கு அறிவுரை கூறுகிறார்.

மேலைக் குறளில் திருவள்ளுவர் 'தீதின்றி வந்த பொருள்' என்றார். இங்கு அருளுடனும் அன்புடனும் கூடி வாராத - அல்லது அவற்றுடன் கூடாது வருகின்ற பொருளாக்கம் என்கிறார். நாம் தீய வழியில் பொருள் தேடக்கூடாது என்பது மட்டுமன்று; தவறான வழியில் பொருள் தானே வந்து சேர்கிறது என வைத்துக் கொள்ளுங்கள். அப்பொருளாக்கத்தை, நல்லது என வைத்துக் கொள்ளலாமா என்றால் திருவள்ளுவர் அதனைத் தொடாதே பொருந்தாதே - உன்னை விட்டுக் கழிந்து போகட்டும் - அதை விட்டுவிடு என வற்புறுத்துவார் போல 'புல்லார், புரளவிடல்' என்று இருமுறை கூறுகிறார்.

திருவள்ளுவர் செல்வத்தைச் சிறப்பித்துப் பேசுகிறார். செல்வத்தின் இன்றியமையாமையை உணர்த்துகிறார். அதனால் தான் பிறபல நற்பண்புகளையும் அவர் செல்வம் என்றே சுட்டக் காண்கிறோம். 'கேடில் விழுச்செல்வம் கல்வி' என்கிறார். 'செவிச்செல்வம் செல்வத்துட்செல்வம்' என்கிறார். 'அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்' என்றும் கூறுகிறார். 'வேண்டாமை அன்ன விழுச் செல்வம்' எனவும் நுட்பமாய்க் கூறுகின்றார். அதனால்தான் பொருட்செல்வம் என்று இதனை வேறுபடுத்திப் பேசுகிறார் கல்விச் செல்வமானால் 'உடையார்முன் இல்லார்போல் ஆசையால் தாழ்ந்தும் கற்க வேண்டும்' எனக் கூறும் திருவள்ளுவர் பொருட் செல்வம் சேர்ப்பதற்கு மட்டும் பல கடுமையான விதிமுறைகளை முன் வைக்கின்றார். திறமையறிந்து செயற்பட்டு ஈட்டவேண்டும்; தீதல்லாத வழிகளில் ஈட்ட வேண்டும்; அவ்வாறன்றி அன்பு. அருளையெல்லாம் கைவிட்டு, அந்நிலையில் பொருட்செல்வம் தானே வந்து சேருமாயினும் அதனைப் பொருந்தாராய்க் கழிய விட வேண்டும் என்ற இத்தனை அறிவுரைகள் கூறுகிறார்.

கலப்படம் செய்பவன் என்ன செய்கிறான்? எவன் எக்கேடு கெட்டாலென்ன என்று உணவுப் பொருட்களிலேயே கலப்படம்

செய்பவன் அருளுடையவனாதல் கூடுமா? அருளொடு வாராப் பொருளாக்கம் அவனுடையது. தான் இருக்கும் தொழில் நிறுவனத்தில் அன்பு காட்டாது, நன்றியின்றிச் சோம்பேறியாய்ப் பொழுது போக்கிவிட்டு? பிறகு அந்நிறுவனத்தையும் தன்னை ஆதரித்தவனையுமே காட்டிக் கொடுத்துப் பொருள் சேர்ப்பவனை என்ன சொல்வது? அன்பொடு வாராப் பொருளாக்கம் அவனுடையது. ஒரு பாலம் கட்டுவதாய் அரசிடம் பல ஆயிரம் ரூபாய்க்கு ஒப்பந்தம் எடுத்துவிட்டு, அத்தொகையில் பெரும் பகுதியைத் தான் எடுத்துக் கொண்டு பாலத்தைப் போலியாய்க் கட்டி ஒப்படைத்தால், ஒருநாள் அப்பாலம் உடையும்போது பொதுமக்கள் அல்லவா உயிரிழப்பர்? கள்ளச் சாராயம் காய்ச்சிப் பலர் தம் உயிரை மாய்த்துக் கொள்ளக் காரணமானவர்கள் பணம் எப்படிச் சேர்ந்தால் என்ன என்றுதானே கருதுகிறார்கள். 'நாய் விற்ற காசு குரைக்குமா?' என்று கேட்கிறார்கள். குரைப்பது மட்டுமன்று கடிக்கவும் செய்யும் என்கிறார் திருவள்ளுவர்.

(மதுரை வானொலி – ஒலிபரப்பியதன் திருந்தியவடிவம், 1984)

# 15. குறள்நெறி : ஒற்றாடல்

பிறர்பால் நிகழ்வதை அவரறியாமல் மறைவாகத் தெரிந்து கொள்வதே ஒற்றாகும். இவ்வதிகாரத்தில் பத்துக் குறள்களுள் நான்கு குறள்கள் மட்டும் ஒற்றின் இலக்கணம் கூறுகின்றன; எஞ்சிய ஆறும் அரசன் எவ்வாறு ஒற்றரைக் கையாளுதல் வேண்டும் என்பது பற்றியன. எனவேதான் ஒற்று என்னாது ஒற்றாடல் என்று தலைப்பிட்டுள்ளார்.

ஒட்டுக் கேட்டல் என்று உலக வழக்கில் ஒரு தொடருளது. பக்கத்தே அருகில் சென்று ஒன்றி நின்று கேட்டலை அது சுட்டும். ஒற்று என்பதும் ஒன்றுதல் - ஒருவரோடு ஒன்றிச் சார்ந்து உண்மை அறிதல் எனப் பொருள்படும் உளவறிதல், வேவு பார்த்தல், துப்பறிதல் என்பனவும் இப்பொருளவேயாம்.

அக்காலத்தும் நாடுகளிடையே ஒற்றறியும் தந்திரம் அரசியல் வெற்றிக்கு அடிப்படையாக எங்கும் நிலவியது. சிலப்பதிகாரத்தால் இவ்வுண்மையை நன்கறியலாம். கண்ணகிக்குப் படிமம் செய்யக் கல் எடுக்கும் முகத்தான் வடநாட்டின் மீது படையெடுத்துச் செல்ல வேண்டும் எனச் சேரன் செங்குட்டுவன் தன் அரசவையில் கூறினான். உடனே வில்லவன் கோதை எனும் அமைச்சன் இதுபற்றி வடபுரி மன்னர்க்குக் முடங்கல் வரைக என்கிறான். அதைக் கேட்ட அழும்பில் வேள் கூறுவதைக் காண்போம்.

*நாவலம் தண்பொழில் நண்ணார் ஒற்றுறம்*
*காவல் வஞ்சிக் கடைமுகம் பிரியா;*
*வம்பணி யனை வேந்தர் ஒற்றே*
*தம்செவிப் படுக்கும் தகைமைய அன்றோ?*
*அறைபறை என்றே அழும்பில்வேள் உரைப்ப.....*

பகைவரின் ஒற்றர்கள் வஞ்சி நகரத்தில் உறுதியாக இருப்பார்கள். எனவே இங்கு முரசறைந்து, ஊர் முழுதும் அறிவித்தால் போதும். அவ்வவ் ஒற்றர்களே தத்தம் மன்னர்களுக்குச் செய்தி அறிவித்துவிடுவர். இவ்வாறு அழும்பில் வேள் கூறுவது கொண்டு, அன்று ஓர் அரசனின் ஒற்றர்கள் அடுத்தவனின் தலை நகரிலும் நாட்டிலும் புகுந்து, நிலையாகத் தங்கி, உளவறிந்து தம் அரசர்க்குக் கூறுவர் என்பது நன்கறியப்படுகிறதன்றோ?

ஆகவே ஒற்றாளுதல் அரச தந்திரங்களுள் தலைமையான தாகவும் நிருவாகம் எனப்படும் ஆள்வினைக்கு இன்றியமையாத தாகவும் கருதப்பெற்றது.

ஒவ்வொரு துறைக்கும் அன்று நூலிருந்தமையும் அறியத் தக்கது. களவு செய்வார்க்குக்கூடக் கரவடநூல் இருந்தமையும் அதில் தந்திர கரணங்கள் பல கூறப்பட்டிருந்தமையும் பொற் கொல்லன் வாயிலாகச் சிலப்பதிகாரத்தில் கேள்விப்படுகிறோம். அரசாள்வார்க்கு அரசியல் நூல்கள் இருந்தன. வேள்வி செய்தற்கும் இறைவழிபாட்டிற்கு மான வேத, உபநிடத நூல்கள் பல 'அந்தணர் நூல்' எனப்பட்டன. 'ஓவியச் செந்நூல்; 'நாட்டிய நன்னூல்' எனப் பல நூல்கள் பற்றிப் பழம் பெருங் காப்பியங்கள் பேசுகின்றன. அரசர்கள் அரசியல் நீதி நூல்களை நன்கு கற்றிருக்க வேண்டும். ஒரு மன்னவன் ஒற்றினை ஆள்வதிலும் அரசியல் நீதி நூல்களைப் பயின்று அவற்றின்வழி ஆட்சி செய்வதிலும் வல்லவனாக இருக்க வேண்டும். பகைவர் நாட்டில் என்ன நடக்கிறதென்பதை உடனுக்குடன் தெரிந்து கொள்ளவேண்டும். தன் நாட்டில் நடப்பதும் தெரிய வேண்டும். இன்றேல் புறப்பகையும் அகப்பகையும் உட்புகைவதுபோல் உருவாகிப் பெருகி ஆட்சியை அழித்துவிடும் அதனால்தான் திருவள்ளுவர்.

*"ஒற்றும் உரைசான்ற நூலும் இவைஇரண்டும்*
*தெற்றென்க மன்னவன் கண்"* **(581)**

என்று குறிப்பிடுகிறார். ஒற்று மூலம் நாட்டின் நிலைமையை அறியலாம். பகைவர்களோ, உற்றார் போல உடனிருப்பவர்களோ மறைமுகமாகச் சூழ்ச்சி செய்வதைக் கண்டுபிடிக்கலாம். அதனால் என்ன பயன்? அவற்றை முளையிலேயே கிள்ளி; வேரொடும் களைய; முற்றிலும் அழிக்க வினைத்திறம் வேண்டாமா? அவற்றைக் கற்றுத் தருவனவே அரசியல் நூல்கள். ஆகவேதான் ஒற்றும் உரைசான்ற நூலும் என்றாலே போதுமானதாயிருக்கவும் இவையிரண்டும் எனச் சுட்டும் எண்ணும் முற்றும்மையும் கொடுத்து வற்புறுத்துகிறார் திருவள்ளுவர்.

இவற்றை மன்னவன் தன் கண் இரண்டுமாகத் தெளிக என்பது வள்ளுவம். 'இதனால் ஒற்றினது சிறப்புக் கூறப்பட்டது' என்று கூறும் பரிமேலழகர் "ஒற்றுத் தன்கண் செல்லமாட்டாத பரப் பெலாம் சென்று கண்டு ஆண்டு நிகழ்ந்தனவெல்லாம் உணர்த்த லானும், நூல் அந்நிகழ்ந்தவற்றிற்குத் தன்னுணர்வு செல்ல மாட்டாத

வினைகளையெல்லாம் சொல்லி உணர்த்தலானும் இவ்விரண்டனை யுமே தனக்கு ஊனக்கண்ணும் ஞானக் கண்ணுமாகத் துணிந்து கொண்டு ஒழுகுக என்பதாம்'', என்று விளக்கம் தருகிறார்.

'உரைசான்ற நூல்' என்பதால் புகழ் பெற்ற அரசியற்கலை நூல்கள் என்பது பெறப்படுகிறது. மன்னவன்கண் தெற்றென்க என்றால் மன்னவனிடத்தில் சாலத் தெளிவுற்றுநிற்க என்று பொருள் படும். மன்னவன் கண் தெற்றென்க எனப் பிரித்துக் கொண்டால் மன்னவன் தன் கண்களெனத் தெளிவாக அறிக என்று பொருள் படும். இவ்வாறு ஆட்சி செய்ய வழிகாட்டும் வள்ளுவரின் சொல்லாட்சி, நவில் தொறும் நூல் நயமாய், மாட்சியுடையதாய்த் திகழ்கிறது.

நாட்டினை ஆள்வது எளிய செயலன்று. வெளிநாட்டு உறவு அதில் முக்கியமான ஒன்று. உள்நாட்டிலும் பல்குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் இல்லாமல் காக்க வேண்டும். அண்டை நாடுகளே முக்கியமானவை. பகைநாடுகள், நட்பு நாடுகள், நொதுமலர் என்னும் பொதுவான அயல்நாடுகள் ஆகிய முத்திறமாக இயங்கும் அனைத்துடனும் மிகக் கவனமாக உறவு வைத்துக் கொள்ள வேண்டும். நட்புடையவர்கள் எதிர்பாராமல் பகைவருடன் கூடி மாறலாம். நொதுமலர் என நினைத்திருந்த அரசு பகையாக மாறலாம். இதனால் காற்றுப் புகாதஇடத்திலும் ஒற்றர்கள் புகுந்து, உளவறிந்து நாடுகளின் நிலைமையைத் தனக்கு உடனுக்குடன் அறிவிக்குமாறு செய்ய வேண்டும். நாடு முழுவதும் பரந்து, ஒற்றர்கள் முழு வலைப்பின்னல் போலப் படர்ந்து தங்கியிருக்க வேண்டும். அவர்கள் எப்பொழுதும் சுறுசுறுப்பாய் இயங்கவும் வேண்டும். உடனிருந்து கொண்டே சிலர் கீழறுத்தல் செய்து ஆட்சியைக் கவிழ்க்கலாம். மன்னவன் உறங்குமாயினும் அவன் ஒற்றுக்கண்கள் விழித்திருக்க வேண்டும். இதையெல்லாம் உணர்ந்து அரிய குறள் ஒன்றைத் தருகிறார் திருவள்ளுவர்.

*எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்*
*வல்லறிதல் வேந்தன் தொழில்.* **(582)**

வேந்தனுடைய கடமை ஒற்றறிதல் அதை எவ்வாறு எப்பொது அறிய வேண்டும் என இக்குறள் விளக்குகிறது. எல்லார்க்கும் நிகழ்பவை அறிய வேண்டும். பகை, நண்பர், நொதுமலர் என்ற மூன்று திறத்தாரையும் எனப் பரிமேலழகரும் பகைவராகியும் நட்டாராகியும் மத்திமராகியும் உதாசீனராகியும் இருக்கின்ற நால்வரையும் என மணக்குடவரும் சத்துருவும் மித்துருவும் எனப் பரிதியாரும் அகத்தோரும் புறத்தோரும் அருகலரும் ஆகிய

அனைவர்க்கும் என்று காலிங்கரும் கூறுவர். எல்லாரிடத்திலும் நிகழ்பவை எல்லாம் அறிய வேண்டும். அதனையும் எப்பொழுதும் அறிய வேண்டும். நிகழ்பவற்றை உடனுக்குடன் விரைந்து அறிய வேண்டும். இங்ஙனம் இக்குறளில் ஒவ்வொரு சொல்லும் பொருள் பொதிய அமைக்கப்பட்டுள்ளது.

நல்லனவும் நடைபெறலாம்; தீயனவும் நிகழலாம். அவர்களுடைய சொல்லையும் செயலையும் வைத்துஉண்மையறிய வேண்டும். நல்லன தோன்றுமிடத்தில் அன்பு காட்ட வேண்டும்; தீயன தோன்றுமிடத்தில் தண்டிக்க வேண்டும். எங்கேனும் ஓரிடத்தில் 'கலகம்' தோன்றி, சில குழுவினர் தம்முள் தாம் சண்டையிட்டுப் பொதுநலத்திற்கும் கேடு விளைவித்துத் தாமும் மாய்கின்றனர் என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே உலகத்தவர் "என்ன மன்னவன் உறங்குகிறானா?" என்று பேசத் தொடங்குவார்கள். முன்கூட்டி அதை அறிந்து, அக்கலகம் தோன்றாவாறு செய்தால் மீட்டும் அவ்வாறு ஒரு செயல் செய்ய நினைப்பவர்களும் அதைச் செய்ய அஞ்சுவார்கள். "இதை அரசன் தெரிந்து கொண்டு விடுவான்; பிறகு நமக்கு ஆபத்து" என்று, அவர்களை அஞ்சச் செய்வது எது? அதனால்தான் ஒற்றினை மன்னவனுக்குக் கண் என்றார். இங்கு அது எப்பொழுதும் விழித்திருக்க வேண்டும்; எல்லோரையும் கண்காணிக்க வேண்டும் என்கிறார்.

ஆள்பவன் எப்பொழுதும் விழித்துக் கொண்டிருக்கிறான் என்று உலகிற்கு உணர்த்துவது எது? அது ஒற்றினால்தான் கைகூடும். நிருவாகத் திறனுக்கு இதுமிக இன்றியமையாதது. ஒரு வகுப்பறையில் கூட நாற்பது மாணவர்கள் என்றாலும் நூறுபேர் என்றாலும் அனைவரையும் கண்காணிக்கும் திறமை ஆசிரியர்க்குத் தேவைப்படுகிறது. ஓர் ஆலையின்கண் அலுவலகத்தில், தொழிற்காலையில், வணிகக் கூடத்தில், உணவு விடுதியில், விளையாட்டிடத்தில் எல்லாம் என்ன நிகழ்கிறது என்ற செய்தி, அதன் ஆட்சித் தலைமையர்க்குத் தெரிந்திருக்க வேண்டும். அரசனுக்கோ தன் நாட்டகத்தும் தொடர்புடைய பிற நாட்டகத்தும் நடைபெறுவன எல்லாம் தெரிந்திருக்க வேண்டும். அதன் முக்கியத்துவத்தை உணர்ந்ததால்தான் திருவள்ளுவர் எல்லார்க்கும், எல்லாம், எஞ்ஞான்றும் என்று அனைத்தையும் உள்ளடக்கிக் காட்டும் அடைமொழிகளைப் பெய்கின்றார்.

அறிவியல் நுட்பங்களைக்கூட ஒரு நாட்டினர், பிற நாட்டினறிடமிருந்து அவர்கள் அறியாமல் தெரிந்து கொண்டு விடுகின்றனர். அதன்மூலம் அவர்கள் செய்யும் படைக்கலன்களால்

தம் நாட்டிற்கு அழிவு வாராதிருக்கவே அவர்கள் அவ்வாறு செய்கின்றனர். பகைவரின் முன்னேற்பாடுகள், சூழ்ச்சித் திட்டங்கள், தந்திரங்கள் அனைத்தையும் முன் கூட்டியறிந்து, பயனற்ற தாக்கிவிடுவதால் இவ்வொற்று நான்கு வகைப் படைகளிலும் மேம்பட்டதாகக் கருதப்படுகிறது.

தனிமனிதருக்காயின் பிறர் கடிதத்தைப் படிப்பதுகூடத் தவறென்பர். ஆனால் ஆட்சிக்கு உளவறிதல் குற்றமன்று. 'ஒற்றாமையே பெரிதும் குற்றம்' என்பர் காலிங்கர். இருவகையில் பயன் தருகிறது ஒற்று. முதற்கண் அரசனுடைய ஒற்று எங்கு மிருக்கும் என்ற உணர்விருந்தால், மக்களும் மாற்றாரும் மறைவாகக் கூடத் தீங்குசெய்ய அஞ்சுவர். அடுத்துத் தீங்கு செய்ய நினைப்பாரை எளிதில் இனங்கண்டு தண்டிக்க அஃது உதவும்.

ஒற்றாடலை 'வேந்தன் தொழில்' என்றே குறித்த சிறப்பு நினைக்கற்பாலது. தூது, படை அனைத்தும் இடமும் காலமும் நோக்கிப் பயன்படுவன. ஒற்றோ எப்பொழுதும் செயற்படுவதாகலின் அதன் சிறப்பை வலியுறுத்துவதற்காகவே தொழில் என்ற சொல்லால் அதைச் சுட்டுகிறார் திருவள்ளுவர்.

ஒற்றாடல் என்பதுநிலைத்த ஒரு தொழிற்பாடாக அன்றே அமைந்திருந்தது. மன்னர்கள் தம் ஒற்றர்களை ஏவி பிறநாட்டுச் செய்திகளையும் தம் நாட்டு நிகழ்வுகளையும் அறிய முயல்வர். மற்றவர்கள் அதைத் தடுக்க முயல்வர். 'ஒற்றர்' என்று ஐயப் பட்டாலே தண்டிப்பர்; கொன்றும் விடுவர். தம்மைப் பிறர் ஒற்றறிய விடாமல் தடுத்தாலும், பிற நாட்டகத்தே உள்நுழைந்து ஆங்கு நடைபெறும் அனைத்தையும் ஒன்றுவிடாமல் அறிய முயலுதலு மாகிய போராட்டம் அன்று நடந்து கொண்டேயிருந்தது.

சோழன் நலங்கிள்ளிக்கும் காரியாற்றுத் துஞ்சிய நெடுங் கிள்ளிக்கும் பகைமை. தங்களுக்குள் பகைத்துச் சண்டையிட்டுக் கொண்ட அவர்கள் ஒருவர்மீது ஒருவர் மிகுந்த பொறாமை கொண்டிருந்தனர். ஒருமுறை இளந்தத்தன் என்னும் புலவர் நலங்கிள்ளியிடமிருந்து புறப்பட்டு நெடுங்கிள்ளியின் உறை யூருக்குள் புகுந்தார். இதைக் கண்ட நெடுங்கிள்ளி 'ஒற்றுவந்தார்' என்று கருதி, அப்புலவரைக் கொல்லப் புகுந்தான். இதைக் கண்ட கோவூர்கிழார் மிகவும் வருந்தி, 'புலவர்கள் பழமரம் நாடும் பறவைகளைப் போன்றவர்கள்; பெற்றதைக் கொண்டு சுற்றம் அருத்தி வாழ்பவர்கள்; அவர்கள் பிறர்க்குத் தீங்கு எண்ணாத மனமுடையவர்கள். அவர்களை ஒற்றர்கள் என்று ஐயப்படலாமா? அவர்கள் எங்கும் போகும் உரிமையுடையவர்கள். அவர்களை

அரசர்கள் தமக்குச் சமமாக மதிக்க வேண்டும்; ஒற்றர்கள் என்று தாழ்வாக எண்ணுதல் கூடாது'', என்று மனத்தில் பதியுமாறு கடிந்து கூறித் திருத்தினார். புலவர் இளந்தத்தனாரின் உயிரைக் காப்பாற்றினார்.

> *“''வள்ளியோர்ப் படர்ந்து புள்ளின்போகி*
> *நெடிய என்னாது சுரம்பல கடந்து*
> *வடியா நாவின் வல்லாங்குப் பாடி*
> *பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருந்தி*
> *ஓம்பாது உண்டு கூம்பாது வீசி*
> *வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கை*
> *பிறர்க்குத் தீதறிந் தன்றோ இன்றே; திறப்பட*
> *நண்ணார் நாண அண்ணாந்து ஏகி*
> *ஆங்கு இனிது ஒழுகின் அல்லது ஓங்குபுகழ்*
> *மண்ஆள் செல்வம் எய்திய*
> *நும்மோரன்ன செம்மலு முடைத்தே''        (47)*

என்பது கோவூர்கிழாரின் சிறந்த புறப்பாட்டு.

சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் கோவலனின் பழம் பிறப்புக் கதை இடம் பெறுகிறது. சிங்கபுரத்திலும் கபிலபுரத்திலும் வாழ்ந்த, ஒரு குடிப் பிறந்த தாய வேந்தர் தம்முள் பகை கொண்டனர். அப்போது சிங்கபுரத்தில் சங்கமன் என்பான் பண்டம் விற்றுத் திரியும்போது, பரதன் என்பவன் பிடித்துக் கொண்டுபோய், மன்னனிடம் ‘கபிலபுரத்து ஒற்றன் இவன்' என்று காட்டிக் கொல்வித்தான். அச்சங்கமன் மனைவி இட்ட சாபத்தினால்தான் மறுபிறப்பில் கோவலன் கொலைப்படுகிறான்.

இதனைச் சிலப்பதிகாரம் கூறுவதுபோலவே மணிமேகலையும் கூறுகிறது.

> *“பல்கலன் கொண்டு பலர் அறியாமல்*
> *எவ்வளை யானோடு அரிபுரம் எய்தி*
> *பண்டக் கலம்பகர் சங்கமன் தன்னைக்*
> *கண்டனர் கூறத் தையல் நின்கணவன்*
> *பார்த்திபன் தொழில்செயும் பரதன் என்னும்*
> *தீத்தொழிலாளன் தெற்றெனப் பற்றி*
> *ஒற்றன் இவன்என உரைத்து மன்னற்கு*
> *குற்றம் இலோனைக் கொலை புரிந்திட்டனன்''*

இவற்றால் அன்று ஒற்றாடல் நிகழ்வும் ஒற்றர் நிலையும் பற்றி அறிகிறோம். ஒற்றின் இன்றியமையாமையை ஒவ்வொருவரும் உணர்ந்து, அதற்கு அஞ்சியமையையே இச்செய்திகள் - வரலாறாயினும் கதையாயினும் -உணர்த்துகின்றன. இதனால் திருவள்ளுவர், மன்னவன் வெற்றிக்கு ஒற்றே அடிப்படை என்று ஓராற்றான் வற்புறுத்திப் பேசுகிறார்.

*"ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்*
*கொற்றங் கொளக்கிடந்தது இல்"*

ஒற்றர்களைக் கொண்டு, ஒற்றுக் கேட்ட மன்னன் தான் கேட்டவற்றின் விளைவை அறிந்து அதற்கேற்பச் செயற்பட வல்லவனாகவும் இருக்கவேண்டும். ஓரிடத்தில் பகைவர்கள் உட்புகுந்து செல்வத்தைக் கொள்ளையிடத் திட்டமிட்டிருப்பதாக ஒற்றுக் கிடைக்கிறது என்று வைத்துக் கொள்வோம். உடனே மன்னவன் என்ன செய்ய வேண்டும்? ஒற்றுக்கேட்ட செய்திகளின் பயனை ஆராய வேண்டும். அதனைத் தீர விசாரித்து உண்மை, வன்மை அறிய வேண்டும். அதற்குத் தக்க பாதுகாப்புச் செய்ய வேண்டும். காலிங்கர் கருத்துப்படி "தனது நாட்டகத்து வாழ்வாரது வன்மை மென்மையும் வேற்றரசர் மாட்டுள்ள வன்மையும் மென்மையும் ஒற்றாளரை உழலவிட்டு மற்று அவர்களான் ஒற்றுவித்துப் பின்னும் அவர் உகுப்பதன்கண் பொருட்கருத்தும் தெரிந்து உணரவல்லாத மன்னனானவன், அரசியல் திறமை கோடற்கு இயைபாவது யாதும் இல்லை" எனலாம்.

ஒற்றின் இன்றியமையாமையைச் சுட்டி அதனைக் கண் என்றவர், எப்பொழுதும் அக்கண் எல்லாவற்றையும் அறிய வேண்டும் என்றார். ஈண்டு அங்ஙனம் அறிந்தவற்றின் பொருளைப் புரிந்துகொண்டு, அதைப் பயன்படுத்திக் கொள்வதே ஆள்வினைத் திறன் என்கிறார். பரிமேலழகர் சொல்வதைப் போல், 'அரசன் வெற்றியடையப் பிறிதொரு சிறந்த வழி இல்லை என்பது மட்டுமல்லாமல், அவன் அடையக் கூடிய வெற்றி பிறிதொன்றில்லை' எனினும் பொருந்துமன்றோ?

'எல்லார்க்கும் நிகழ்பவை எல்லாம் ஒற்று அறிய வேண்டும் என்ற திருவள்ளுவர் அவர்களுள் இன்றியமையாதவர்களை ஒரு குறளில் குறிப்பிடுகிறார்.

*"வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு*
*அனைவரையும் ஆராய்வது ஒற்று"*

இஃது உள்நாட்டிற்குள் உளவு பார்த்தலைப் பற்றிப் பேசுகிறது எனலாம். 'வினை செய்வார்' என்பவர் அரசகாரியம் செய்பவர்கள்; அதிகாரிகள்; அலுவலர்கள் என்று விளக்கலாம். 'தம் சுற்றம்' ஆவார் அரசனுடைய சுற்றத்தார். மந்திரிபிரதானியர் எனப்படுவாரையும் 'சுற்றம்' என்பர். வேண்டாதார் - உள்நாட்டிலேயே அரசனை விரும்பாதவர்கள், வேண்டாதவர்கள் இருப்பார்கள் அல்லவா? இங்ஙனம் அனைவரையும் சொல், செயல்களான் ஆராய்வதே ஒற்றாகும்.

வெளிநாட்டிற்குள் இங்ஙனம் வேவு பார்த்தல் எனில், அங்கும் அரசனுக்கு உடனிருந்து அரசகாரியம் செய்பவர்களையும் அவனுடைய சுற்றத்தவர்களையும் அவனுக்கு வேண்டாதவர் களையும் ஆராய்தல் வேண்டுமெனக் கொள்ள வேண்டும்.

எல்லோரையும் ஆராய வேண்டும் அவர்பால் நிகழ்பவை யெல்லாம் ஆராய வேண்டும் என்று கூறிய பிறகு, இங்கு சிலரை மட்டும் விதந்து கூறவேண்டியதேன்? சிறப்பாக இவர்களிடமிருந்தே, ஓர் அரசனுக்கு வேண்டிய செய்திகள் அகப்படும். உளவறிகிறோம் என்று ஒவ்வொருவரும் உண்ணுவதையும் உடுத்துவதையும் கண்டு வந்து பயனென்ன? அரசனுக்கு ஊறாகும் சொல், செயல்கள் நடைபெறுகின்றவா என்றல்லவா அறிய வேண்டும்? அத்தகைய செயல்கள் பற்றிய விவரங்கள் இவ்விடங்களில்தான் நன்கு கிடைக்கும். அரசனுக்குரிய காரியம் செய்பவர்கள், அதிகாரிகள், அரசனின் சுற்றத்தார், அமைச்சர் முதலியோர், அவனை விரும்பாதவர்கள் எனத் தேடிக் கண்டு, உளவறிந்தால் உண்மை கிடைக்கும் அரசனுக்குச் சுற்றமாயிருப்பாரும் அவனை வேண்டாதிருப்பாருமாகிய அனைவரையும் என மணக்குடவர் கூறுவது பொருத்தமுடையது. ஏனெனில் முன்னையவர் உடன்பட்டுப் பேசுவன, செய்வனவற்றிலிருந்தும் பின்னையவர் எதிர்த்துப் பேசும் பேச்சு, செய்யும் செயல் ஆகியவற்றிலிருந்தும் உளவு கிடைக்க வாய்ப்புண்டு.

சுக்கிர நீதியும் இதுபற்றிப் பேசுகிறது. "அரசன் அம்பு, வாள் முதலிய படைப் பயிற்சியில் திறமையையும் சோர்விலா மனத்தினையும் உடையனாகி, தனக்குக் கேடு விளையுங்காலத்தில் குடிகளுடையவும் அரசியல் தொழில் புரிவோருடையவும் அமைச்சர் முதலிய தலைவர்களுடையவுமாகிய உள்ளக் குறிப்புக் களையும் செயல்களையும் பகைவர், படைவீரர், நீதிபதிகள்,

சுற்றத்தாரர் உவளகத்து மகளிராகிய இவர்களின் எண்ணங்களையும் மறைவிற் கண்டு கூறும் ஒற்றர்கள் முகமாக நாடோறும் இரவில் முயன்று கேட்டல் வேண்டும். அக்கேட்டவற்றை நன்றாக எழுதிக் கொள்ளவும் வேண்டும்."

ஒற்றினை இரவு நேரத்தில் கேட்டு, எழுதிக் கொள்ள வேண்டும் என்ற சுக்கிர நீதிக் கருத்துச் சிந்திக்கற்பாலது. எல்லாக் காலத்தும் உளவு பார்க்க வேண்டுமென்றாலும் அரசன் தனக்குக் கேடு வருமென்றறியுங் காலத்தில் அதை முடுக்க வேண்டுமெனச் சுக்கிரநீதி வற்புறுத்துகிறது. தம் அரண்மனை மகளிரையும் வேவு பார்க்க வேண்டுமென்பதன் குறிப்புச் சிந்திக்கற்பாலது.

திருவள்ளுவர் நீதி நூல் என்பதற்கொப்பப் பொது அடிப்படைகளை மட்டுமே கூறிச் செல்கிறார். சுக்கிர நீதி போல்வன அரசியல் நூல்களாகவும் மிளிர்தலின், நடைமுறைப் போக்கிலும் அவை விரித்து விளக்குகின்றன. அரசு குரு எனப்படும் சுக்கிரன் பெயரான் அமைந்த சுக்கிரநீதி, நடைமுறைச் செயற்பாடுகள் பலவற்றைத் தொகுத்துக் கூறுகிறது. இடம் பொருள் ஏவல் அறிதல் ஒற்றின் திறமையேயாதலால், திருவள்ளுவர் 'அனைவரையும் ஆராய்வது ஒற்று' என ஒற்றரின் இலக்கணமாக இதை எடுத்துக் கூறுகிறார்.

நாட்டுப் பற்றும் சமுதாயப் பற்றுமே ஓர் ஒற்றனின் செயற் பாட்டுக்கு அடித்தளமாகின்றன. படைகளுடன் உடன் நின்று போர் செய்வதில் ஒரு கூட்டுணர்ச்சியுளது. ஆனால் ஒற்றாய்வதில் தனிமையும் திறமையுமே துணையாகின்றன. தூதுவர் போல் ஒற்றரும் பல்வேறு திறனுடையராகவும் கல்வி அறிவுடையராகவும் அமைய வேண்டும். சமயத்தில் ஒரு முடிவெடுக்க வேண்டும்; கணப்பொழுதில் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும் என்ற நிலைமைகள் ஏற்படும். அப்போதெல்லாம் அரசனை எதிர் பார்த்தோ, யாரிடத்தும் உசாவியோ முடிவெடுத்தல் இயலாது. அரண்மனைப் பணியாளாகக் குற்றேவல் செய்து, அங்கு உறையும் மகளிரின் சொல், செயல்களால் நல்லனவோ, தீயனவோ நிகழ்வனவற்றை அறிய வேண்டும். அரசனுடைய சுற்றத்தை, அமைச்சரை, அதிகாரிகளை, வினை செய்வாரை உளவறிவது மிகக் கடினமே. அவர்கள் அறிவுடையோராதலின் அகப்பட்டுக் கொள்ள நேரலாம். அதற்கெல்லாம் அஞ்சித் தயங்குதல் கூடாது. சுக்கிரநீதியில், "அமைச்சர் முதலியோரும் மற்றை அரசியல் தொழில்

புரிவோரும் தீங்கு செய்யா வண்ணம் ஒற்றனை நன்கு காத்தல் வேண்டும்'' என்று கூறப்பட்டுள்ளது. ஏனெனில் தம்மையும் உளவறிவார் இவரென உட்கொண்டு அவர்கள் ஒற்றர்க்குத் தீங்கு செய்ய முந்துவாரயின், ஒற்றர் மனந்தளர்வர் அன்றோ? சுருங்கக் கூறின் அரசனின் 'கண்' என ஒற்றினை ஒப்புக்கொண்டால், அவ்வொற் றனைக் 'காணும் புலனாகிய விழி' என்றே கூறலா மன்றோ?

''பிரமசாரி, வானப்பிரத்தன், சந்நியாசி, போலிச் சித்தன் ஆகிய இவர்களின் வேடத்தைத் தாங்கித் திரியும் ஒற்றர்களின் நிலையை அரசன் காட்சியளவையானும் மறைவானும் சோதித்தறிதல் வேண்டும்'' என்று சுக்கிரநீதி கூறுகிறது.

''பாலை நிலத்துக் காக்கைகள், வழியிடையே கள்வரின் கணை பாய்ந்து இறந்து கிடக்கும் பிணங்களின் காயாத புண்ணிலிருந்து வடியும் குருதியை மாந்தி, ஒற்றுப் பார்க்கச் செல்லுவோர் ஒடுங்கிய குரலில் பேசுவதுபோலச் சத்தமிடும்'' என்று அகநானூற்றில் பாலை பாடிய பெருங்கடுங்கோ கூறுகிறார்.

*நீங்கா வம்பலர் கணையிடத் தொலைந்தோர்*
*வழிபடு புண்ணின் குருதி மாந்தி*
*ஒற்றுச்செல் மாக்களின் ஒடுங்கிய குரல*
*இல்வழிப் படூஉம் காக்கைக்*
*கல்லுயர் பிறங்கல் மலைஇறந் தோரே.* *(313)*

என்பது அகப்பாட்டு. சிலபோது மறைந்து, தாழ்ந்த குரலில் கிசுகிசுத்து, இரகசியமாக ஒற்றுப் பார்க்க வேண்டிய சூழலை இஃதுணர்த்துகிறது.

இராமகாதையின் அணிவகுப்புப் படலத்தில் சார்த்தூலன் என்னும் ஒற்றனை இராவணன் ஏவியறிந்த ஒற்றுச் செய்தி பற்றிக் காண்கிறோம். இராவணன் 'சார்த்தூலனாம் ஒற்றனை அழைக்க' எனக் கட்டளையிட்டதும் அவன் வந்து முன்னிற்கிறான்.

*''தாயினும் பழகினார்க்கும் தன்நிலை தெரிக்க லாகா*
*மாயவல் உருவத்தான்''*

என்று கம்பர் கூறுகிறார். தாயைப் போல் உடன் பழகியவர்களும் கண்டு கொள்ள முடியாத வேடத்துடன் சார்த்தூலன் இருந்த காட்சி வியப்பைத் தருகிறது. இலங்கைக் கோட்டையின் நான்கு வாயில்களிலும் இராமனுடைய படைகள் முற்றுகையிட்டு நிற்கும்

அளவையும் வலிமையையும் வேவறிந்து வந்து அளவிட்டுக் கூறும் அவனைக் கம்பர் மிகச் சிறப்பாக அறிமுகப்படுத்துகிறார். 'அறிஞன்' என்றும் 'முழையுறு சீயம் அன்னான்' என்றும் 'முகத்தினால் அகத்தை நோக்கி, குழையுறு மெய்யுடன் வரன்முறை கூறலுற்றான்' என்றும் கூறும் செய்திகள் ஒற்றனுக்கே இலக்கணம் வகுக்கின்றன.

*"'அழை'என எய்திப் பாதம் வணங்கிய அறிஞன் தன்னை*
*பிழையற அறிந்த எல்லாம் உரைத்திஎன்று அரக்கன்பேச*
*முழையுறு சீயம் அன்னான் முகத்தினால் அகத்தை நோக்கிக்*
*குழையுறு மெய்யன் பைய வரன்முறை கூறல் உற்றான்"*

ஒற்றுக் கேள்விப் படலத்தில் இராவணனுடைய அரக்க ஒற்றர்கள் வானர வடிவமுடன், வானரப் படைகளினிடையே மறைந்து திரிந்து, ஒற்றறிய முயன்றமையை வீடணன் கண்டு பிடிக்கிறான். இதைக் கூறவந்த கம்பர்,

*"இற்றிது காலம் ஆக இலங்கையர் வேந்தன் ஏவ*
*ஒற்றர் வந்து அளவு நோக்கிக் குரங்கென உழல்கின்றாரை"*

என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு ஒற்றர்கள் ஐயத்திற்குட்படாத வடிவமெடுத்து வேடமிட்டுக் கொண்டு ஊடாடி உளவறிய வேண்டும் என்பதைத் திருவள்ளுவர் மிக அழகாக - ஒற்றர்க்கே இலக்கணம் கூறுமுகத்தான் விளக்குகிறார்.

*கடாஅ உருவொரு கண்ணஞ்சாது யாண்டும்*
*உகாஅமை வல்லதே ஒற்று.*

ஒற்றுச் செய்யுமிடத்தில் யாரும் ஐயப்படாத வேடத்துடன் உலவ வேண்டும். ஐயுறாத வடிவான பார்ப்பார், வணிகர் முதலாயினார் வடிவென்பர் பரிமேலழகர். 'அறவோர் வேடமும் துறவோர் வேடமும் வறியோர் வேடமும் பிறவுமாகிய நல்லுருவு கொண்டு' என்பார் காலிங்கர். ஒருக்கால் அவர் ஐயுற்று அறியலுற்றுவிட்டால், அதற்கு அஞ்சலாமா? 'செயிர்த்து நோக்கிய அவர் கண்ணிற்கு அஞ்சாது நின்று' என்பர். சாமபேததான தண்டம் என்ற நான்கு உபாயமும் செய்து முயன்றாலும் மனத்துக் கொண்ட கருத்தை உமிழாமை வல்லவனே ஒற்றனாவான். உளவறியப்போய், தம் உளவைக் கூறிவருதல் மேற்கொண்டு தீதல்லவா? எனவேதான் ஒற்றக்கு மூன்று இலக்கணம் வகுத்தார்:-

*கடாஅ உருவுடன் போதல் வேண்டும்*
*கண்ணஞ் சாதிருக்க வேண்டும்*
*யாண்டும் உளக்கருத்தை உகாஅமை வேண்டும்.*

ஐயப்படாத வடிவமுடன் திரிதல்; ஐயுற்றாலும் அஞ்சாது நின்று மறை வெளிப்படாது காத்தல். சிலர் நடுங்குவதையும் அசைவதையும் முகம்மாறுவதையும் வைத்தே உண்மையறிந்து விடுவர். அதற்கே 'கண்ணஞ்சாது' என்றார். அதையும் மீறி அகப்பட நேர்ந்தால் - நான்கு வகை உபாயத்தாலும் முயன்றாலும் - மனத்திலுள்ளதைச் சிறிதும் நழுவவிடவோ - தம்மையறியாமல் கொட்டிவிடவோ கூடாது. "மற்றும் தனது தந்தை, தாயார், நட்டோர், சுற்றம் என்னும் இவர் மாட்டும் சோரவிடாமை ஒற்று என அறிக" என்பார் காலிங்கர்.

ஒற்றனாவானுக்கு அறிவுடைமையும் அஞ்சாமையும் தந்திரமும் தேவைப்படுகின்றன. ஏனைய படையாளனைவிட அவன் அறிஞனாகப் போற்றப்படுகிறான். படைகள் நுழையாத இடத்திலும் அவன் நுழைந்து பகைவருக்கு நடுவிலேயே வாழ்கிறான். அவர்களை உய்த்தறிகிறான். அவனுடைய பணி மிகவும் அடிப்படையானது. கத்தியின்றி, இரத்தமின்றி வெற்றி கொண்டுவரக் கூடியது. ஒற்றுக்குத் தேர்ந்தெடுக்கக் கூடியவன் எத்தகையவனாக இருக்க வேண்டும் என்பதை இக்குறள் துல்லியமாக எடுத்துக் கூறுகிறது.

(மதுரை வானொலி – ஒலிபரப்பியதன் திருந்திய வடிவம் – 1982)

❖ ❖ ❖



**தமிழண்ணல்**

✧ சிவகங்கை மாவட்டம், நெற் குப்பையில் 12.8.1928 இல் பிறந்த இவர், உயர்பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகத்தில் 42 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றிய, ஒரு தமிழ் மாணவர்.

✧ சங்க இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்ற இவர், முப்பது ஆண்டு களுக்கு முன்பிருந்தே, செவ்வியல் இலக்கியத் தொடர்பான நூல்கள் பல எழுதியவர்.

✧ பேரா. மு.வ. மூலம் 'அறிவுருவும்', அறிஞர் அண்ணா மூலம் 'உணர்வுருவும்' இளம் அகவையிலேயே இவரிடம் பதிவாயின.

✧ மழலையர் முதல் ஐந்தாம் வகுப்புவரை, தாய் மொழியாம் தமிழ் ஒன்றே பாடமொழியும் பயிற்று மொழியும் ஆதல் வேண்டும்; பல்கலைக்கழக உயராய்வுப் பட்டங்கள் வரை– மருத்துவம், பொறியியலுட்பட – தமிழுக்கு, ஆங்கிலத்திற்கு நிகரான, 'மொழிச் சமநீதி' தரப்படவேண்டும்; தமிழை முழுமைபெறக் 'கல்வி மொழி' ஆக்க வேண்டுமெனப் போராடி வருபவர்.

✧ தமிழக அரசின் பொற்கிழிப் பரிசு, திரு. வி.க. விருது, சிறந்த நூற் பரிசு, நல்லாசிரியர் விருதுடன், தமிழ் இலக்கியச் சங்கப் பலகைக் குறள்பீடத்தின் துணைத் தலைவர் – என்பதையும் பெற்றவர். தமிழக முதல்வர் கலைஞரின் 'தொல்காப்பியப் பூங்கா' – நூலை வெளியிடும் வாய்ப்புப் பெற்றவர்.

✧ குன்றக்குடித் திருமடம்: கணக்காயர் பட்டம், மதுரைத் திருவள்ளுவர் கழகம்: தொல்காப்பியச் செம்மல், கோவிலூர்த் திருமடம்: அருந்தவச் செம்மல், ம.கா. பல்கலைக் கழகம்: தமிழ்ச் செம்மல், ச. மெய்யப்பர் பவள விழா விருது: தமிழியக்கச் செம்மல் என்பன சில இவர் பெற்றவை.

✧ 'நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை உடையவர். நிலத்தில் யார்க்கும், தம் கொள்கையை, உணர்வை, உறுதியை விட்டுக்கொடுக்க விரும்பாத நெறியை விரும்பிப் போற்றி வாழ்பவர்.

✧ இதனால் இவர் இழந்தவை பல; எனினும் மனத் தளர்ச்சிகள் கடுகளவும் இல! ஒவ்வொரு கணமும் இளமையையும் வலிமையையும் தந்து கொண்டிருப்பது இவர் கற்ற தமிழ்!